www.tamilarangam.net

NEW DEMOCRATIC PARTY OF THAMILE ELAM (NDPT) NEW DEMOCRATIC PARTY OF THAMILE ELAM (NDPT) NEW DEMO- CRAT… …IC PART… …TY OF T… …OF THA… …OF THAM… …LE ELAM… …AM (NDPT… …OF THAMIL EELAM (NDPT) NEW DEMOCRATIC PARTY OF THAMIL EELAM (NDPT) NEW DEMOCRATIC PARTY NEW DEMOCRATIC

# தேசபக்தன்

தமிழீழ புதிய சனநாயக கட்சி  தி.பி. 2031 (2000)

## தமிழீழ அகதிகள் வாழும் நாடுகளும், எண்ணிக்கையும்

| | | | |
|---|---|---|---|
| ★ இந்தியா – முகாம்களில் | 60.185 | ★ அமெரிக்கா | 15.000 |
| – முகாமுக்கு வெளியில் | 37.000 | ★ ஒஸ்திரேலியா | 8.000 |
| – 96 ஆடிக்கு பின் வந்தவர்கள் | 8.750 | ★ பின்லாந்து | .200 |
| – நிரந்தரமாக வாழ தயாராகிவிட்டவர்கள் | 1.500 | ★ ஜெர்மனி | 60.000 |
| | | ★ இலண்டன் | 35.000 |
| ★ பிரான்சு | 40.000 | ★ நெதர்லாந்து | 15.000 |
| ★ நோர்வே–சுவிடன் | 6.000 | ★ நியூசிலாந்து | 1.000 |
| ★ பெல்ஜியம் | 1.000 | ★ சுவிச்சர்லாந்து | 36.000 |
| ★ டென்மார்க் | 8.000 | ★ கனடா | 125.000 |

**2.13.000 தமிழ் மக்கள் இலங்கையில் அகதிகளாக உள்ளனர்**

| | | | |
|---|---|---|---|
| ★ தாய்லாந்து | 5.000 | ★ மெக்சிகோ | .300 |
| ★ கம்போடியா | .500 | ★ சிலி | .200 |
| ★ வியட்னாம் | 1.000 | ★ பெரு | .300 |
| ★ இந்தோனிசியா | 3.000 | ★ ருமேனியா | .750 |
| ★ போர்ச்சுவானா | 2.000 | ★ பல்கேரியா | .800 |
| ★ கென்யா | 1.200 | ★ ரசியா, உக்ரேன் | 8.000 |

**NEW DEMOCRATIC PARTY OF THAMIZLEELAM (N.D.P.T.)**

RGSD. ISSN - 07647 2262  RNI 04512 / 1999  CANADA

தமிழத தேசிய ஆவணச சுவடிகள்

www.tamilarangam.net

# தேசபக்தன்

''சிறு துளி பெரு வெள்ளம்'' அன்பளிப்பு 25 உரூபா / வெளிநாடு 10 டொலர்

மடல் தொடர்புகளுக்கு மட்டும்

A. JAYARATNA
67, PARKWOOD
VILLEGE DR
# 308 DONMILLS
ONTARIO
M 34 2x4
CANADA

T. NAZEERATAF
POST BOOKS-10
5125 BOVAGEN
NORWAY

இலக்கம்


- தமிழீழ புதிய சனநாயக கட்சி 01
- யுத்தமா? சமாதானமா? 07
- பேச்சு வார்த்தைக்கான நமது தீர்வுப் பொதி 10
- போரின் முகங்கள் 12
- தமிழீழ மக்கள் கட்சித் திட்டம் - ஒரு பார்வை 18
- தியாகிகளை நினைவில் நிறுத்துவோம் 44
- தொடரும் தனிநபர் அழித்தொழிப்பு 47
- நேற்று கிருஷாந்தி, இன்று சாரதா, நாளை... 48
- விளம்பரங்களில் பெண்கள் 50
- கனடாவில் இருந்து... 55
- அரசியல் தீர்வின் எதிர்காலம் 57
- புலம் பெயர்ந்த தமிழர்கள் 61
- சிறீலங்காவில் இருந்து... 66
- நோபல் பரிசு 1999 68
- 'சார்க்' பயங்கரவாதத்திற்கு எதிராக 77


*அன்பார்ந்த வாசகர்களே!*

சிறீலங்கா அரசினதும் - தமிழீழ அராஜக இயக்கத் தலைமைகளினதும் கெடுபிடிகளைக் கடந்து; அகதி முகாம்களில் கையெழுத்துப் பிரதியாக உருவான **தேசபக்தன்** பின் உருட்டச்சிலும் தொடர்ந்து அச்சுக் கோர்ப்பிலும் தற்போது மின்கணனிப் பதிப்பாகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. உங்களுடைய ஆதரவினாலும், பொருளாதார உதவிகளினாலும் படிப்படியாக உயர்ந்த **தேசபக்தன்** இன்று சர்வதேச இணைவலையிலும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. எமது தாய்நாட்டின் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடும் **தேசபக்தன்** தொடர்ந்தும் உங்கள் ஆதரவையும் விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றது. தமிழீழ மக்களின விடுதலையில் அக்கறையுள்ள வெளியீட்டாளர்களே! **தேசபக்தனை** விளம்பரப்படுத்தி உதவுங்கள்.

htt:/home.c2i.net.thesam | patriot_editor @Yahoo.com

NEW DEMOCRATIC PARTY OF THAMIZL EELAM (N.D.P.T.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ புதிய சனநாயக கட்சி
# NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM (N.D.P.T)

தமிழீழ மக்களின் 25 ஆண்டு கால தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தேசிய சுதந்திரம், மக்கள் விடுதலை என்ற இலட்சியத்துடன் பல இயக்கங்கள், சில கட்சிகள் உருவாகின. இந்த இலட்சியங்களை எவ்வளவு ஆழமாக புரிந்து கொண்டு அவற்றுக்கு நேர்மையாக இருந்து உறுதியுடன் இயக்க தலைமைகள் போராடினார்கள், என்பதை இன்று வரலாறு காட்டுகிறது. நாம் கண்டு கொள்ள முடிகிறது.

புலிகள் இயக்கம் மட்டுமே தேசிய விடுதலை யுத்தத்தை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றது. மற்றய இயக்கங்கள் எல்லாம் ஒன்றில் அரசுடன் சமரசம் அடைந்து விட்டன. அல்லது சிதைந்து செயற்பாடு இழந்துவிட்டன. சிறீலங்கா அரசின் **''தேசிய சனநாயக''** நீரோட்டத்தில் நேரடியாக கலந்து விட்டனர். அல்லது சமாதான இயக்கங்களில், மனிதவுரிமை அமைப்புக்களில் கரைந்து விட்டனர்.

இவ்இயக்க - கட்சித் தலைமைகளை, கொள்கைகளை, திட்டங்களை நம்பி தமிழீழ மண்ணுக்கு மட்டுமல்ல மக்களுக்கும் விடுதலை வேண்டும் என்ற உத்வேகத்துடன் இணைந்த ஆயிரமாயிரம் போராளிகளை (ஆண்களும் - பெண்களும்) போராட்டத்தில் இருந்தே அப்புறப்படுத்தி விட்டார்கள். இத்தலைமைகள், இவற்றுக்குப் பின்னால் இன்னமும் சில நூறு இளைஞர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்களது வாழ்க்கைக்கு, உயிருக்கு உத்தரவாதம் இல்லாத சூழ்நிலைமை நாட்டில் நிலவுகிறது.

தமிழீழப் போராட்டத்தில் இருந்து சொந்த தலைமைகளால் அந்நியப்படுத்தப்பட்ட — புலிகளின் அழித்தொழிப்பில் தப்பிய போராளிகள் உலகம் முழுவதும் சிதறுண்டுள்ளார்கள். சிதறுண்டுள்ள போராளிகள் மத்தியில் இருந்து பல குரல்கள், பல நாடுகளிலிருந்து வெளிப்பப்பட்டது. மீண்டும் ஒரு புரட்சிகர கட்சி வேண்டும், பழைய அரசியல் திட்டம், அமைப்பு, நடைமுறை பட்டறிவுகளில் இருந்து புதிய பாதையில் கட்சி உருவாக வேண்டும் என பல முன்முயற்சிகள் வெளி வந்தது.

இத்தகைய பல குரல்களில் - முயற்சிகளில் ஒன்றுதான் 1986-இன், நடுப்பகுதியில் வெளிவந்தது ''புதுக்குரல்'' வெளியீடு, அன்று இயக்கங்களின் அராஜகம் இயக்கத்துள்ளும் மக்கள் முன்பும் கூட தலைவிரித்தாடியது. தேசியத்துக்கும் - மக்கள் சனநாயகத்துக்குமாக நின்ற உண்மையான போராளிகளை, தலைவர்களை புலிகள் உள்ளடங்க எல்லா அராஜக தலைமைகளின், உளவுப் பிரிவுகள் கொலைப்பட்டியலின் அடிப்படையில் தேடி நாயாக அலைந்தன. கைதுகள், கடத்தல்கள், சிறைகள், உரிமை கோரப்படாத கொலைகள் எனத் தொடர்ந்தன. இந்நிலையில் அனைத்து இயக்கங்களிலுமுள்ள **''அராஜக எதிர்ப்பு சக்திகளை ஒன்றிணைப்பது''** என்ற குறிக்கோளுடன் **'புதுக்குரல்'** வெளி வந்தது. பல புதிய சக்திகளை ஒன்றிணைத்தது.

1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழீழப் போராட்டத்தில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியது. **'புதுக்குரல்', 'இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு, 'இந்திய - இலங்கை ஒப்பந்த நிராகரிப்பு', 'திம்புக் கோரிக்கை முன்னணி'** என்ற நிலைப்பாட்டுடன் - இருந்த ஆக்கிரமிப்பு எதிர்ப்பு புதிய சக்திகளையும் இணைத்துக் கொண்டு **''தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம்''**, (PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMILEELAM - P.V.O.T) என்ற பெயரில் **''தேசபக்தன்''** வெளியீடு மூலம் அமைப்பாக வெளிவந்தது. பல நாடுகளில் சிதறுண்டுள்ள தமிழீழ தேசபக்த சன நாயக சக்திகள், பத்திரிகை, சஞ்சிகை, குழுக்களை புரட்சிகர அரசியல் பாதையில் அய்க்கியப்படுத்த பல முன்முயற்சிகளை மேற்கொண்டது. பழைய இயக்கத் தலைமைகளின் துரோகங்கள், தவறுகளால் பல நாடுகளில் சிதறுண்ட போராளிகள் **''மூன்றாவது பாதை''**க்கான முயற்சிகளின் போக்கில் தேசியப் போராட்டம் பற்றிய புதிய புதிய கோட்பாடுகளை உள்வாங்கி பிளவுண்டார்கள். தேசியப் போராட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் உருவான அரசியல் திட்டங்கள் மேல் அணி சேர்க்கை நடந்து கொண்டிருந்தது. அதன் ஒரு

www.tamilarangam.net



வெளிப்பாடே 1998-இல் **தேசபக்தன் - சுமைகள், ERRO** ஒன்றிணைந்தன. '**தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம்**', புரட்சிகர சனநாயக சக்திகளை ஒன்றிணைக்கும் பாதையில் மேலும் நடந்தது.

புலிகளின் தலைமையிலான தேசியப் போராட்ட வழியே இன்று தீர்மானகரமான தமிழீழப் போராட்ட வழியாக இயங்குகிறது. வெளிப்படையாக இப்போராட்ட வழி யாருடைய வழி எனப் பிரகடனப்படுத்தாது செயற்பட்டாலும், இது தமிழீழ முதலாளி வர்க்க ஆதிக்க சக்திகளின் வழிதான் என்பது அரசியல் அரிச்சுவடி தெரிந்தவர்களுக்கு மட்டுமல்ல, போராட்ட வரலாற்றை உற்று நோக்கி வந்த தமிழீழ மக்களுக்கும் தெளிவான ஒன்று. ஆனால் மாற்று வழி, ஒன்று போராட்ட களத்தில் இல்லையே என்ன செய்ய முடியும்? புலிகளின் தனி இராட்சிய வழி அதற்கு அனுமதிக்காது என்பதை தமிழீழ வரலாறு தெளிவாக காட்டுகிறது. **மாற்று வழிப் போராட்டம்** ஒன்று களத்தில் உருவாக வேண்டும் எனில் முதலில் புரட்சிகர தேசிய போராட்ட **மாற்று அரசியல் வழி** ஒன்று முதலில் தன்னை திடப்படுத்த வேண்டும். ஆனால் முதலாளித்துவ தேசியவாத வழி புதிய புதிய கோட்பாடுகளை முன் வைத்து முளைத்தெழுகின்ற அளவுக்கு புரட்சிகர தேசியப் போராட்ட வழி உருவாகி தன்னை திடப்படுத்திக் கொள்ள முடியாமல் இருந்தது. இதற்கு புற நிலையில் தேசிய, சர்வதேசிய சூழ்நிலைமைகளும் முக்கிய பங்காற்றுகின்றன.

இலங்கையில் தேசிய போராட்டம் குறித்து புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள் மத்தியில் நடக்கின்ற கோட்பாட்டு போராட்டத்தை, நடைமுறை முரண்பாடு-களை, திசை விலகலை, தேசபக்தன் எதிர் கொண்டு வந்திருக்கின்றது. பிரித்தானிய கொலனி எதிர்ப்பு இலங்கை தேசிய இயக்கத்தில் முதலாளித்துவ - நிலப் பிரபுத்துவ பாதைக்குப் பின் தொழிலாள வர்க்கமும், புரட்சிகர வர்க்கங்களும் ஏன் வால் பிடித்தது? கலைந்து போனது? நவகொலனிய இலங்கையில் SLFP-இன் ''தேசிய வாத - கலப்புப் பொருளாதாரப்'' பாதைக்கு பின் தொழிலாள வர்க்க கட்சிகள் ஏன் இழுபட்டு சென்றன? சிறீலங்காவில் 1970 J.V.P.-இன் தேசிய சோசலிச எழுச்சிக்கு பின் சிறீலங்கா புரட்சிகர வர்க்கம் ஏன் திரண்டது? 1980-களில் தமிழீழ தேசிய எழுச்சிக்குப் பின் தொடங்கி இன்று புலிகளின் தேசியப் போரின் பின் தமிழீழ தொழிலாளர் வர்க்கமும், புரட்சிகர வர்க்கங்களும் ஏன் பின் நிற்கிறது? வல்லரசிய எதிர்ப்பு, சோசலிசம் எனப் பேசிய தலைமைகள் ஏன் திசைமாறின. நவீன தேசியக் கோட்பாடுகள் என்ற பெயரில் மீண்டும் திசைவிலகல் வெளிப்படுவது ஏன்? ரசியாவிலும் சீனாவிலும் நடந்த முதலாளித்துவ மீட்சிகளை முன்னிறுத்தியும், உலகளவில் குட்டி முதலாளிய தேசிய இனவிடுதலை இயக்கங்களின் அராஜகங்-களை, தோல்விகளைக் காட்டியும் ஓர் ஒட்டு மொத்த உலகப் புரட்சிக் கோட்பாட்டை ட்ரொஸ்கிய **நான்காவது அகிலம்** துடிப்புடன், மீண்டும் முன்னிறுத்துகிறது. ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளின் தொழிலாளி வர்க்கம் தனது சமூக விடுதலைக்காகவும் வல்லரசியத்துக்கு எதிராகவும் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது. ஆனால் நான்காவது அகிலம், முதலாளித்துவ வல்லரசு நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் சோசலிச புரட்சித் திட்டத்தை முன்வைத்து 'தேசிய இன விடுதலை எதிர்ப்பு' கோட்பாட்டை, புதிய சனநாயக எதிர்ப்பு கோட்பாட்டை முன்னிறுத்தி நவகொலனிய நாடுகளின் தொழிலாளர் வர்க்கத்தை, ஒட்டு மொத்த உலக சோசலிசப் புரட்சி திட்டத்தை நோக்கித் திசை திருப்புவது ஏன்?

நவகொலனிய கட்ட தேசிய இனப் பிரச்சனை, புதிய சனநாயகப் புரட்சி பற்றிய கோட்பாடு, அரசியல், அமைப்பாக்கல் பிரச்சனைகளை குறிப்பாக ஆழமாகப் புரிந்து கொள்ளவும், வளர்க்கவும், கோட்பாட்டு ரீதியில் தன்னை திடப்படுத்தவும் போராட்டங்-களை முன்னெடுக்கவும் இலங்கைத் தொழிலாள வர்க்க இயக்கமும் கட்சிகளும் கவனத்தை ஏன் குவிக்கவில்லை? இத்தகைய கோட்பாட்டு, அரசியல் அமைப்பு பிரச்சனை-கள் மேல் அக்கறை கொண்டு முன்முயற்சி எடுத்து தேசபக்தனுடன் விவாதித்து வந்த புரட்சிகர சக்திகள் தங்களுக்குள் எடுத்துக் கொண்ட தீர்மானங்களின் அடிப்படையில் ஒன்றுபடுதலின் வெளிப்பாடு தான் தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம், '**தமிழீழ புதிய சனநாயக கட்சி**'யாக (NEW DEMOCRACTIC PARTY OF THAMILEELAM - N.D.P.T) பரிணமித்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளின் அய்க்கியத்துக்கு 15 அடிப்படைக் கொள்கைகள்

1. நவகொலனிய இலங்கை ஒரு நாடு என்பதை அங்கீகரிப்பது, இலங்கையில் இரண்டு தேசிய இனங்கள் சிங்களத் தேசிய இனம், தமிழ்த் தேசிய இனம் இருப்பதை அங்கிகரிப்பது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய அரசு அமைப்பதற்கான உரிமையை அங்கீகரிப்பது, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு குறிப்பான தீர்வாக தமிழ்த் தேசிய இனம் பிரிந்து சென்று தனியாக, தமீழீழ புதிய சனநாயக அரசு அமைக்கும் போராட்டத்தை தொழிலாளி வர்க்க அரசியல் சக்திகள் தமது தலைமையில் முன்னெடுப்பது. சிறீலங்காவை சிங்களத் தேசிய இனத்தின் தாய் நிலமாகவும், தமிழீழத்தை தமிழ்த் தேசிய இனத்தின் தாய் நிலமாகவும் அங்கீகரிப்பது.

2. நவகொலனிய இலங்கையில், சிறீலங்கா சிங்கள பௌத்த பேரினவாத அரசின் தேசிய இன ஒடுக்குமுறைக்கும் - யுத்தத்துக்கும் எதிரான தமிழீழ மக்களின் 25 வருட தேசிய விடுதலைப் போராட்டத்தை தொழிலாளி வர்க்க அரசியல் வழியில், தரகு, அதிகார வர்க்க முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்க சிறீலங்கா அரசை தூக்கி எறிந்து தமிழீழ புதிய சனநாயக அரசு அமைப்பதற்கான போராட்டமாக இறுதி வெற்றிவரை முன்னெடுப்பது.

3. தமிழீழ தரகு முதலாளிகளும், அதிகார வர்க்க முதலாளிகளும் (தமிழீழத்திலும் சிறீலங்காவிலும் அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும் உள்ள) பெரும் நிலவுடமையாளர்களும், அவர்களுக்கான அரசியல் கட்சிகளும். தமிழீழ மக்களின் தேசியக் கோரிக்கைகளை தங்களின் ஆளும் வர்க்க நலனுக்காக சிறீலங்கா அரசுடன், வல்லரசுகளுடன், பேரம் பேசுவதற்காக பாராளுமன்றத்தையும், ஆயுதப் போராட்ட வழியையும் பயன்படுத்தி வருகின்றன.

தமிழீழ தேசிய முதலாளிகளும், பணக்கார விவசாயிகள், நடுத்தர மேல்தட்டு வர்க்கத்தின் ஒரு பிரிவும், புலிகளும் **தமிழீழ தேசியத்தில், தமிழீழ தாகத்தில்** உறுதியாக நின்று சிறீலங்கா அரசுக்கு எதிராகப் போராடுகின்றன. அதேவேளை வல்லரசிய. நவகொலனிய பொருளாதார கூட்டுக்களின் மூலதனங்களின் செல்வாக்குக்குள் நுழைய விரும்புகின்றன. தமிழீழ அரசை ஒரு நவகொலனிய தேசிய அரசாகவே நிறுவ முற்படுகிறது.

தேசிய முதலாளிகள், பணக்கார விவசாயிகள், இன்னோர் பிரிவு வல்லரசிய எதிர்ப்பு தேசியப் போராட்டத்தில் ஊசலாடுகின்றது. இவர்களையும் புரட்சிகர தேசியப் போராட்டத்தில் புதிய சனநாயகப் புரட்சியின் பக்கம் வென்றெடுக்க வேண்டும்.

4. தமிழீழ புதிய சனநாயகப் புரட்சியை புரட்சிகர தொழிலாளி வர்க்கம், தொழிலாளி - விவசாயி வர்க்கத்தின் கூட்டுச் சக்தியை அடிப்படையாக கொண்டு, குட்டி முதலாளி வர்க்கத்தையும் புரட்சிகர அறிவு ஜீவிகளையும் நம்பகமான கூட்டணிச் சக்திகளாக இணைத்து; நவகொலனிய தேசிய விடுதலைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட்டத்தில் உறுதியாகவுள்ள அனைத்து சமூக சக்திகளையும் தொழிலாளி வர்க்க அரசியலில் புதிய சனநாயகத் திட்டத்தில் அய்க்கியப்படுத்தி போராட்டத்தை நடத்துவது.

5. தமிழீழ மக்கள் அனைவரும் நவகொலனிய சிறீலங்கா அரசின் சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைக்கு இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அதேவேளை தமிழீழ மக்களில் அரைவாசி எண்ணிக்கை கொண்ட பெண்கள் ஆணாதிக்கத்திற்கும், ஆணாதிக்க கருத்தியல் ஒடுக்குமுறைகளுக்கும் முகங்கொடுக்கின்றனர்; சிறுபான்மை மத மக்கள், சைவ ஆதிக்க சக்திகளதும், மத மூட நம்பிக்கை கருத்துக்களின் ஒடுக்குமுறைக்கும் முகங்கொடுக்கின்றனர். ஒடுக்கப்பட்ட சாதி மக்கள் வேளாள சாதிய சக்திகளின் சாதி ஒடுக்குமுறை கருத்துக்களுக்கும் முகங்கொடுக்கின்றனர். யாழ் பிரதேச ஆதிக்க சக்திகளின், பிரதேச வேறுபாடு பற்றிய கருத்துக்கள், புறக்கணிப்புகளுக்கு வன்னி, கிழக்கு பிரதேச மக்கள் உள்ளாகின்றனர்.

அடக்கப்பட்ட பெண்களும், சிறுபான்மை மத மக்களும், ஒடுக்கப்பட்ட சாதி மக்களும், புறக்கணிப்புக்குள்ளான பிரதேச மக்களும் அனைத்து நிலைகளிலும் சமத்துவ உரிமை பெறுவதற்கான போராட்டங்களை தமிழீழ தேசியப் போராட்டத்துடன் ஒன்றிணைத்து கட்சி முன்னெடுப்பது. இவ்வொடுக்கப்பட்ட மக்களின் தனித்துவமான போராட்டங்களுடன் கூட்டிணைந்து போராடுவது.

6. தமிழீழ மக்களின் தேசிய விடுதலை என்ற இலட்சியத்தில் இருந்து சிறீலங்கா இனவாத அரசுக்கு எதிராகப் போராடும் புலிகள் உட்பட அனைத்து கட்சிகளையும், எல்லா வர்க்க அரசியல் போராட்ட சக்திகளையும் நமது சகோதர போராட்ட சக்திகளாக அங்கீகரிப்பது. பொது எதிரிகளுக்கு எதிராக எந்த அரங்கிலும் கூட்டிணைந்து போராடத் தயாராக இருப்பது. தமிழீழப் பகுதியில் உள்ள தொழிலாளி வர்க்க புரட்சிகர தேசபக்த சனநாயகக் குழுக்கள், அமைப்புக்கள் எல்லாம் ஒரே அமைப்பாக அய்க்கியப்பட்டு செயற்படுவதற்கு எப்போதும் முன் முயற்சியாளர்களாக இருப்பது.

7. தமிழீழப் பகுதியில் உள்ள முசுலீம் மக்கள் மீது சிங்கள பௌத்தப் பேரினவாத அரசு நடத்தும் இன ஒடுக்குமுறைக்கும், தமிழ் குறுந்தேசியவாத வெறி (புலிகள் உள்ளிட்ட இயக்கங்கள்) நடத்தும் அராஜக ஒடுக்குமுறைக்கும் எதிராகப் போராடுவது, தமிழீழத்தின் தேசியச் சிறுபான்மையினரான முசுலீம் மக்கள், செறிந்து வாழும் கிழக்கில் அவர்களுக்கான 'சுயாட்சி' பகுதிக்காக போராடுவது - புலிகளால் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முசுலீம் மக்கள் தங்களின் சொந்த இடங்களுக்கு திரும்பும் உரிமைக்காக போராடுவது, முசுலீம் மக்களின் மத மற்றும் கலாச்சார தனித்துவங்களை அங்கீகரிப்பதுடன், கிழக்கில் சுயாட்சிப் பகுதிக்கான கோரிக்கையை திம்புக் கோரிக்கை திட்டத்தில் சேர்த்துக் கொள்வது.

8. அரசியல் தீர்வு, யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை, அமைதி - சமதானம் இவற்றை நாம் உறுதியாக முன்னிறுத்துகிறோம். இந்த 15 ஆண்டு யுத்தத்துக்கு காரணமான இன

www.tamilarangam.net



ஒடுக்குமுறை முடிவுக்கு வர வேண்டும். தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கைகளான **புதிய அரசியல் கோரிக்கைகள் தீர்க்கப்பட வேண்டும்.** சிறீலங்கா அரசுடனான பேச்சு வார்த்தைக்கு அடிப்படையாக புதிய கோரிக்கைகளை முன்னிறுத்துகிறோம். திம்புக் கோரிக்கைகளை முன்னிறுத்தும் அனைத்து தமிழீழ அரசியல் மற்றும் ஆயுதப் போராட்ட சக்திகளையும், உள்நாட்டிலும் - வெளி நாடுகளிலும் **''திம்புக் கோரிக்கை முன்னணிக்குள்''** ஒன்றுபடுத்த முன் முயற்சி எடுப்பது, திம்புக் கோரிக்கைகளை கூட கைவிட்ட அனைத்து தமிழீழ அரசியல் கட்சிகளையும், ஆயுத இயக்கங்களையும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் துரோகிகளாக அடையாளம் காண்பது, மக்கள் முன் அம்பலப்படுத்துவது.

9. சிறீலங்காவிலுள்ள மலையகத் தமிழ் மக்கள் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இன ஒடுக்கு முறைக்கும், தமிழீழ இயக்கங்களின் சந்தர்ப்பவாத இன அய்க்கியப்படுத்தலுக்கும் எதிரான, மலையகத் தமிழ் மக்களின் போராட்டங்களை நிபந்தனை இன்றி ஆதரிப்பது சிறீலங்காவின் தேசியச் சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் சிறீலங்காவில் மலையக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் 'சுயாட்சி பகுதிக்கான அவர்களின் கோரிக்கையை அங்கிகரிப்பது, தமிழீழப் போராட்டத்தை அங்கீகரிக்கும் மக்கள் அமைப்புக்களுடன் பொது எதிரிகளுக்கு எதிரான போராட்டத்தில் பரஸ்பர நல் உறவை வளர்த்தெடுப்பது. கூட்டிணைந்து போராடுவது.

10. நவகொலனிய இலங்கையில் சிறீலங்கா அரசுக்கு எதிரான **சிறீலங்கா** (சிங்கள, மலையக) **மக்களின் சிறீலங்கா புதிய சனநாயக அரசு** நிறுவுவதற்கான போராட்டங்களை நிபந்தனை இன்றி ஆதரிப்பது, தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கும் சிறீலங்காவின் மக்கள் அமைப்புக்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்துவது. சிறீலங்கா அரசு எதிர்ப்பு, இந்திய விரிவாதிக்க எதிர்ப்பு, வல்லரசு எதிர்ப்பு போராட்டங்களில் கூட்டிணைந்து போராடுவது.

11. கொலனிய கட்டத்தை போன்று - நவகொலனிய கட்டத்திய தேசிய விடுதலைப் போராட்டங்களின் உட்சாரத்தை குறிப்பான நாட்டில், குறிப்பாக புரிந்து கொள்வதும், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அனைத்து வல்லரசுகளுக்கும் எதிரான போராட்டமாகவும், பிராந்திய விரிவாதிக்கத்துக்கு எதிரான போராட்டமாகவும் முன்னெடுப்பது, I.M.F., W.B., A.D.B., தமிழீழ மக்களின் தலையில் சுமத்தியுள்ள அனைத்துக் கடன்களையும் இரத்து செய்ய வைப்பது. W.T.O., SAARC, SAFTA, இன் தேசவிரோத - மக்கள் விரோத ஒப்பந்தங்களை நிராகரிப்பது.

12. இலங்கைக்கு (தமிழீழம் - சிறீலங்கா) வெளியே வெளிநாடுகளில் உள்ள தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள், தாங்கள் வாழும் நாடுகளில் அந்நாடுகளின் சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்து உட்பட்டு நடப்பது; தமிழீழ மக்களின் தேசிய போராட்டத்துக்கான அரசியல் ஆதரவு

www.tamilarangam.net



கோரும் நடவடிக்கைகளில், சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறைக்கு - யுத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அரசியல் நடவடிக்கைகளில், ஈடுபடுவது. அகதி உரிமை, வேலை வாய்ப்பு உரிமை, சம்பள உயர்வு, தொழில் உரிமைக்கான போராட்டங்களிலும் கட்டாயம் ஈடுபட வேண்டும். அந்நாட்டிலுள்ள தமிழீழ மக்கள் (அகதிகள்) மத்தியிலும், தேசிய, நிற, மதவெறிக்கு எதிராகவும் வல்லரசுகளுக்கு எதிராகவும் சகோதர நாட்டு மக்கள் உடன் இணைந்து செயற்பட வேண்டும், அந்நாடுகளிலுள்ள சட்ட விரோத மற்றும் தடை செய்யப்பட்ட இயக்கங்களுடன் மற்றும் NGO's, VA's-களுடனும் எத்தகைய உறவும் வைத்துக் கொள்ளாது இருப்பது, ''தேசபக்தன் ஆதரவுக் குழுவை'' அமைத்து செயற்படுவது.

13. உலகளவில் தேசிய இன விடுதலைக்கான போராட்டங்களையும், புதிய சனநாயகப் புரட்சி மற்றும் சோசலிசப் புரட்சிக்காக மக்கள் நடத்தும் அனைத்துப் போராட்டங்களையும் நிபந்தனையின்றி ஆதரிப்பது, விரிவாதிக்க எதிர்ப்பு, வல்லரசு எதிர்ப்புக் கொண்ட மக்கள் போராட்டங்களுடன் பொது எதிரிக்கு எதிராக உலகளவில் கூட்டிணைந்து போராடுவது.

*14.* தமிழீழ புதிய சனநாயக அரசானது மத சார்பற்ற, சாதி, பிரதேச வேறுபாடற்ற, ஆணாதிக்க சார்பற்ற புதிய சனநாயக அரசாக இருக்கும். இவ்வாதிக்க கருத்தியல்களுக்கு எதிராக மனித சமத்துவ விழுமியங்களுக்காகத் தொடர்ந்து போராடும். வல்லரசிய, நவகொலனிய, முதலாளித்துவ எதிர்புரட்சி நடவடிக்கைகளுக்கு எதிராக புதிய சனநாயக அரசு அதிகாரம் பயன்படுத்தப்படும். தமிழீழப் போராட்டத்தின் இறுதி வெற்றி வரை போராடும் இயக்கங்கள், கட்சிகளுடன் இணைந்து கூட்டரசாங்கத்தை நிறுவவும் தயாராக இருக்கும்.

*15.* தமிழீழ புதிய சனநாயக அரசு; வல்லரசியங்களின், பல் தேசிய நிறுவனங்களின் (M.N.C.'S) அந்நிய நாடுகளின் மூலதனங்களையும் உள்நாட்டின் தரகு, அதிகார வர்க்க, பெரும் நிலவுடமை வர்க்கங்களின் மூலதனங்களையும் பறிமுதல் செய்து தமிழீழ தேசியவுடமையாக மாற்றும், தமிழீழ பொருளாதாரத்தை, மக்களின் உழைப்பைச் சுரண்டிச் செல்லும் அனைத்து தொழில், வணிக, அறிவியல் ஒப்பந்தங்களும் இரத்துச் செய்யப்படும். அந்நிய நாடுகளின் நிதியில் இயங்கும் அரசு சாரா நிறுவனங்கள் (NGO's) மத நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் தடை செய்யப்படும். தேசிய அரசுகளின், நாடுகளின் இறையாண்மையை மீறிய ஐ.நா. (U.N.) சபையின் அதன் துணை நிறுவனங்களின் நடவடிக்கைகளை எதிர்ப்பது. மூன்றாவது நாடு அல்லது சர்வதேச நிறுவனங்களின் படைகள் (U.N.) (NATO) எக்காரணத்தை முன்னிட்டும் உள்நாட்டு விவகாரங்களில் மறைமுகமாகவும் - நேரடியாகவும் தலையிடுவதை எதிர்த்துப் போராடும் சமாதான சகவாழ்வு கொள்கை வழியில் சர்வதேச உறவுகளை பேணுவது.

மத்திய குழு
தமிழீழ புதிய சனநாயக கட்சி
(N.D.P.T.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தமா — சமாதானமா

புலிகளின் தலைவர் பிரபாகரன் 1999 மாவீரர்தின உரையில் ஒரு முக்கிய செய்தியை வெளிப்படுத்தியுள்ளார். **3-வது நாட்டின் முன்னிலையில் பேச்சு வார்த்தைக்கு சமாதானத்துக்கு தயார்** என அறிவித்தார். 98 மாவீரர் தின உரையில் **பேச்சு வார்த்தைக்கு திம்புக் கோரிக்கைகளை அடிப்படை** என்றார். இவ்வாண்டு அதுபற்றி பேச வில்லை, அன்டன் பாலசிங்கம் சந்திரிகா அரசு மூன்றாவது தரப்பு ஊடாக வெளி-நாட்டில், இரகசியமமாக புலிகளுடன் 3 முறை பேசமுயன்றது என்பதை அம்பலப்-படுத்தினார். அந்த மூன்றாவது தரப்பு ''நோர்வே அரசு'', ''பொதுநல வாய அமைப்பு'' எனவும் வெளிப்படுத்தினார். புலிகள் இரகசியமாக சந்திரிகாவுடன் பேச ஒப்புக் கொள்ளவில்லை எனவும்; மக்களுக்கு மறைத்து பேச வேண்டியதில்லை என்றும் தெரிவித்தார் (ஓயாத அலை 3-இன் வெற்றிக்கு பின்புதான் புலிகள் இதை வெளிப்படுத்தி-யுள்ளனர்)

சனாதிபதி தேர்தலின் போது புலிகள் பொய் சொல்வதாக தெரிவித்த சந்திரிகா வெற்றிக்கு பின் இலண்டலில், **நோர்வே, பொதுநலவாய அமைப்புகளின்** முயற்சி-களை ஒப்புக் கொண்டார். தனி ஈழத்தை தவிர எதையும் பேசத் தயார் என்றார். ''யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது, சமாதானத்தை ஏற்படுத்துவது சனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து பாராளுமன்ற ஆட்சியை பலப்-படுத்துவது'' என்ற கோசங்களுடன் 94-ல் சந்திரிகா அமோக வெற்றி ஈட்டினார். பதவி ஏற்ற சந்திரிகாவும் மக்கள் கூட்டணி அரசும், முதல் மூன்று ஆண்டுகளில் **மூன்று அரசியல் பொதிகளை** மாறி மாறி முன்னிறுத்தியது. கடைசி இரண்டு ஆண்டுகளும் **சமாதானத்-துக்கான யுத்த பொதியை** முன்னிறுத்தின.

1995-இல் **'சூரிய ஒளி'** இராணுவ நடவடிக்கை மூலம் யாழை ஆக்கிரமித்தது. புலிகள் வன்னிப் பெருநிலப் பரப்புக்கு பின்வாங்கினர். யாழ் பிரதான பாதை திறப்புக்கான **'வெற்றி நிட்சயம்'** 2½ ஆண்டுகளாக நடத்தப்பட்டது. (உலகில் மிக அதிக காலம் எடுத்த ஒரு இராணுவ நடவடிக்கை) தோல்வியில் முடிந்தது. வன்னியுத்தம் **''ரிவிபல, எடிபல, பலவேகய, ரணகோச, நீர்ச்சிந்தல்''** என இராணுவ நடவடிக்கை நடந்தது. அரசு யுத்தத்தில் ''கேக்வோர்'' என்றது தமிழ்ப் பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழிக்கும் **'சமாதான யுத்தம்'** என பெயர் சூட்டியது. 'கிழக்கு திமோரை' அய்நா அங்கீகரித்தபின், நடந்த அய்நா சபையின் கூட இனப் பிரச்சனையை தீர்க்க மூன்றாவது தரப்பு தலையீட்டை நிராகரிப்பதாக வெளிப்படுத்-தினார் வெளியுறவு அமைச்சர் கதிர்காமர்.

பாராளுமன்றத்தில் 2/3 பங்கு பெரும்-பான்மை பலம் இருந்தால் **அரசியல் சாசன திருத்தத்தை ஏற்படுத்தி, அதிகார பரவலை உருவாக்கி** 2000 ஆண்டில் இனப்பிரச்-சனையை தீர்க்கப் போவதாக சூழுரைத்தார் சந்திரிகா. சனாதிபதி தேர்தலில் தான் மீண்டும் வென்றால் இதைச் செய்ய முடியும் என நவீன கோசத்தை முன்வைத்தார். தேர்தலை நடத்தினார். (1987 ஒப்பந்தப்படி மாகாண அரசின் கீழ்த்தான் அரசாங்க அதிபர் பதவி இருந்தது. 2000 ஆண்டிலிருந்து அரசாங்க அதிபர் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வந்து விட்டார். இதுதான் சந்திரிகா அரசின் அதிகார பரவல் முறை) 94-ஐ போன்று அமோக வெற்றி இல்லை என்றாலும் இராணுவ ஆட்சி கவிழ்ப்பு கொலைக்கு தப்பி, ஒரு கண்ணை பறி கொடுத்து புலிகளும் - U.N.P கொல்ல முயல்வதாக இனவாதத்தை கிளப்பி தேர்தலில் வென்று விட்டார். தமிழர்களின் பெரும் ஆதரவு இல்லாமலும் சனாதிபதி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என்ற வரலாறும் எழுதப்பட்டுவிட்டது.

தேர்தலுக்கு முந்திய புலிகளின் **ஓயாத அலை 3** இராணுவ வெற்றியானது. தேர்தல் அரசியலில், கட்சிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது உண்மை. U.N.P.க் கட்சிகூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை பற்றி பேசியது. மக்கள் கூட்டணி அரசில் இருந்த தமிழ்க் கட்சிகள் கூட யாரை ஆதரிப்பது என்பதில் பிளவுபட்டு நின்றன. 'வாக்குகள் பிளவுபடுவது, அதிகாரத்தை பிடிப்பது' பற்றிய குறுகிய அரசியல் பார்வையில்தான் எல்லாரும் கவனம் செலுத்தினர்.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை தொடர்ந்து அங்கீகரித்து வரும் கட்சியின் வேட்பாளரான **'வாசுதேவநாணயக்கார'** வை ஆதரிக்க கூட தமிழ்த் தலைமைகள் தயாரில்லை. சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை மக்களின் கோரிக்கையாக மாற்ற எந்தத் தலைமைகளும் முன்வரவில்லை; சந்திரிகாவை மாற்றுவதில் மட்டும் EPDP தவிர மற்றவை குறியாக இருந்தன. தேர்தல் தில்லு முல்லுகளும், வன்முறைகளும், அனுதாப அலையும் சந்திரிகாவை மீண்டும் அரியணை ஏற்றியுள்ளது. தேர்தல் தில்லு-முல்லுப் பற்றிய சர்ச்சையில் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களும், உள்நாட்டு கண்காணிப்பாளர்களும் கூட பிளவுபட்டே அறிக்கை வெளியிட்டதுதான் மிச்சம்.

புலிகள் ஓயாத அலை 3 இராணுவ நடவடிக்கையை தொடர்கின்றனர். வெற்றி கண்ட பகுதியை பலப்படுத்துகின்றனர். இராணுவ வெற்றி, பேச்சு வார்த்தைக்கு புலிகளுக்கு ஒரு சாதகமான அம்சம், சந்திரிகா அரசு இராணுவ தோல்விக்கான காரணிகளை கண்டறிந்து மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. படைப்பிரிவுகளின் கட்டளைத் தளபதிகள் மாற்றப்படுகின்றனர். இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் பின்புலம் ஆராயப்படுகிறது. சுற்றி வளைப்புக்கள் மூலம் கட்டுப்பாட்டு பகுதியின் ஊடுருவல்கள் களையப்படுகிறது. கிழக்கு தமிழீழத்தில் மட்டும் 13 தேடுதல் சுற்றி வளைப்புக்கள் நடந்துள்ளன. வன்னியில் முன்னேறாத தற்காப்பு தாக்குதல்கள் தொடக்கியுள்ளது.

பொது நலவாய அமைப்பின் தலைவரும், நோர்வே வெளியுறவு அமைச்சரும் தெற்காசிய பயணத்தின் முடிவில் சிறீலங்கா வந்து புலிகளுக்கும் - அரசுக்கும் இடையில் பேச்சு வார்த்தைக்கான ஏற்பாடுகளை கண்டறியவுள்ளார். பிரச்சாரமாகியுள்ளது. ஆனால் மதநிறுவனங்களும், சர்வோதயமும், சிங்கள படையினரை இழந்த பெற்றோர் சங்கமும் முன்னேடுத்த பேச்சு வார்த்தை முயற்சிகள் மீண்டும் முளைக்கிறது. சிங்கள பௌத்த இனவெறி அமைப்புக்கள் வழமை போல் எதிர்ப்புப் பிரச்சாரத்தை தொடக்கியுள்ளன.

உலகில் தேசிய இனவிடுதலைப் போராட்டங்களை, இயக்கங்களை திசை திருப்பி சமரசம் செய்து வைப்பதில் **நோர்வே அரசு** முதலிடம் வகிக்கிறது. மத்திய கிழக்கிலும் ஆபிரிக்காவிலும் வெற்றிவாகை சூடி இருக்கிறது. தேசிய இனப் போராட்டங்களை, இயக்கங்களை பயன்படுத்தி, நவகொலனிய முறையை பேணுவதில் ஏகாதிபத்தியமும், முதலாளித்துவ நாடுகளும் பெரும் வெற்றி கண்டு வருகிறார்கள். தேசியப் போராட்டங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாக, சோசலிசத்தை படைக்கும் வழியில் செல்லாது தடுப்பதில் முழுக்கவனம் செலுத்துகின்றன. சோவியத்தும், மக்கள் சீனமும், சோசலிச அரசுகளாக இருந்த வரையிலான தேசிய இன விடுதலைப் போராட்டங்களின் போக்கும், இன்றைய போக்குகளும் நேர் எதிராக வெளிப்படுகின்றன. நீண்ட நெடிய போராட்டமான தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டம், அயர்லாந்துப் போராட்டம் அதிகாரப் பங்கீடு, பங்கெடுப்புடன் திசை திருப்பப்பட்டுள்ளது. பாலஸ்தீனமும், எரித்திரியாவும் தேசிய அரசுகளாக வெளிப்பட்டது, கிழக்கு திமோர் அய்நாவின் கண்காணிப்பில் தேசிய அரசானது எல்லாம் ஏகாதிபத்திய நவீன கொலனிய முறைக்குள் சமரசப்படுத்தப்பட்டு விட்டது.

மறுபுறம் அமெரிக்காவுக்கும், ரசியாவுக்கும், இந்தியாவுக்கும் எதிரானது என்ற பெயரில் முசுலீம் மத அடிப்படைத் தேசிய வாதம் ஒன்று சர்வதேசரீதியாக கட்டமைக்கப்பட்டு வருகிறது. இதுவும் சோசலிசத்துக்கு எதிராகவே வெளிவருகிறது. அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் உலகப் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்த, சுரண்ட, ஆதிக்கம் செலுத்த, உலக அமைதியை சமாதனத்தை முன்னிறுத்துகின்றன. வேடிக்கை என்னவெனில், **நெல்சன் மண்டேலாவும், யாசர் அராபத்தும்** கூட தேசிய இன விடுதலைப் போராட்டங்களை

www.tamilarangam.net



சமரசப்படுத்தும் ஏகாதிபத்திய தரகர்களாக மாறிவிட்டனர். உலாவருகின்றனர். நாடுகளுக்கு இடையிலான எல்லைப் பிரச்சனை மோதல்களை நேரடியாக அமெரிக்க வெளியுறவுத்துறை கையாள்கிறது. உ+ம் சிரியா - இசுரேல், உள்நாட்டு யுத்தங்களை மோதல்களை அய்நாவும், அய்ரோப்பிய ஒன்றியம், பொது நலவாய அமைப்பு, நோர்வே, அவுஸ்ரேலியா, சுவிடன் போன்ற நலன்புரி முதலாளித்துவ அரசுகளும் கையாழ்கிறது. இந்த ஏகாதிபத்திய சூழ்ச்சி இன்னோர் வகையிலும் வெளிப்படுகிறது. மூன்றாவது நாடு, படை தலையிடுவதை எதிர்ப்போம், **மூன்றாவது சர்வதேச நிறுவனம், சர்வதேசப் படை தலையிடுவதை ஆதரிப்போம்** என்ற போக்கும் வெளிவருகிறது. கோசாவோவையும், கிழக்கு திமோரையும் உ+ம் காட்டுகிறது.

**''தமிழீழ தாகம், சோசலிச தமிழீழம்''** எனப் பேசி, போராடிவரும் புலிகள் சோசலிசத்தை படைக்க மாட்டார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

ஆனால் பேச்சு வார்த்தைக்கு, சமாதானத்துக்கு தயார், மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தத்துக்கு தயார். இரகசிய பேச்சு வார்த்தைக்கு தயார் இல்லை என மாவீரர் நாளில் உறுதி எடுத்த புலிகளின் தலைமை. அரசியல் பேச்சு வார்த்தைக்கு அடிப்படையாக முன்னிறுத்தும் **அரசியல் கோரிக்கைகளை மக்கள் முன் வெளிப்படையாக முன்வைக்க வேண்டும்.** அதை தமிழீழ மக்களின் கோரிக்கையாக மாற்ற வேண்டும். உலக மக்களின் ஆதரவைப் பெற வேண்டும். அப்போதுதான் எதிரிகள் தாங்கள் நினைத்த முறையில் சமாதானத்தை திணிக்கும் வேளை, தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கைகளை உயர்த்தி பிடித்த வண்ணம் யுத்த நிறுத்தத்தை மீறி மக்களின் விடுதலைக்கான, தமிழீழ சுதந்திரத்துக்கான, சமாதானத்துக்கான யுத்தத்தை தொடர முடியும். தமிழீழ மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைக்கு - யுத்தத்துக்கு உலக மக்கள் ஆதரவளிப்பார்கள். சந்திரிகாவின் சமாதான (?) ஆக்கிரமிப்பு யுத்தத்தை முறியடிக்க முடியும்.

**—திலீபன்**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேச்சு வார்த்தைக்கு, நமது அரசியல் தீர்வுப் பொதி

***புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளே! மக்களே!***

25 வருட தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் 15 வருட தேசிய விடுதலை யுத்தத்தில் தமிழீழ இயக்கத்திற்காக தமிழீழ மக்களும், போராளிகளும் செய்த தியாகங்கள் எண்ணில் அடங்காது. தமிழீழ புதிய சனநாயக அரசு அமைப்பதே எமது இறுதி இலட்சியம் தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் தொடங்கியதில் இருந்து இனப்பிரச்சனைக்கு **அரசியல் தீர்வா? இராணுவத் தீர்வா?** என்ற விவாதம் நடந்து வருகிறது. ஆரம்பத்தில் ''யுத்தம் என்றால் யுத்தம்'', ''சமாதானம் என்றால் சமாதானம்'' என முழங்கி தமிழ் இன ஒடுக்குமுறை யுத்தத்துக்கு U.N.P. தலைமை தாங்கியது. 1985-ல் இந்திய அரசு முன்னிலையில் போராளிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடந்தது. எல்லா இயக்கங்களும் **'திம்புக் கோரிக்கையில்'** உறுதியாக இருந்ததால் சிறீலங்கா அரசின் முகம் கிழிந்தது. இந்திய அரசின் நெருக்குதல் தளர்ந்தது. 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழீழப் போராட்டத்தில் போராளி இயக்கங்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. ஒப்பந்தத்தை அமுல்படுத்த கண்காணிக்க வந்த இந்தியப் படைகளுக்கும் - புலிகளுக்கும் இடையில் நடந்த யுத்தம் கூட தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தமாக மாறியது. 1987 முதல் இன்றுவரை புலிகளே தேசிய விடுதலைப் போராட்டத்தின் யுத்தத்தின் தீர்மானகரமான சக்தியாக இருக்கிறார்கள்.

1991-ல் பிறேமதாச அரசுடன், 95-ல் சந்திரிகா அரசுடன் புலிகள் யுத்த நிறுத்தம் செய்து அரசியல் பேச்சு வார்த்தை நடத்திய போதும் புலிகளின் கோரிக்கைகள் ஏற்கப் படாததால் தேசிய விடுதலை யுத்தம் தொடர்ந்து நடக்கிறது. 98-ல்தான் புலிகள் பேச்சு வார்த்தைக்கு அடிப்படையாக மீண்டும் **திம்புக் கோரிக்கையை** முன்னிறுத்தினர். அன்று புலிகள் யாழ் கட்டுப்பாட்டு பகுதியை இழந்திருந்தனர். இன்று வன்னிப் பெருநிலப்பரப்பில் **ஓயாத அலை 3** மூலம் தமது கட்டுப்பாட்டு பகுதியை விஸ்தரித்துள்ளனர்.

சிறீலங்காவின் பொருளாதாரம் எதிர் கொள்ளும் நெருக்கடியும் சிறீலங்கா அரசுக்கு கடன் வழங்கும் நாடுகளும், நிறுவனங்களும் சந்திரிகா அரசை பேச்சு வார்த்தைக்கு அரசியல் தீர்வுக்கு நிர்ப்பந்திக்கின்றன. ஏகாதிபத்தியங்களும், இந்தியரசும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை திசை திருப்ப எத்தனிக்கின்றன. புலிகளும் மூன்றாவது தரப்பு முன்னிலையில் பேச்சு வார்த்தைக்கு தயாராகியுள்ளனர். புலிகள் எடுக்கின்ற முடிவு போராட்டத்தில் மீண்டும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவு.

புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளும், இயக்கமும் மிக மிக பலயீனமான நிலையில் இருக்கிறோம். நமது அரசியல் கோரிக்கைகளின் பலம் மட்டுமே எதிர்காலத்தில் போராட்டத்தின் திசை வழியை தீர்மானிக்கவல்லது. நாம் பேச்சு வார்த்தைகளை அரசியல் தீர்வை, சமாதானத்தை எதிர்ப்பவர்கள் அல்ல என்பது தமிழீழ மக்களுக்கு உணர்த்தப்பட வேண்டும். நமது அரசியல் கோரிக்கைகள் மக்களின் கோரிக்கைகளாக மாற வேண்டும். இதுவரை காலம் சிந்திய இரத்தத்துக்கும், செய்த தியாகங்களுக்கும் உயர்ந்த பட்ச பலனை பெறுவதாக பேச்சு வார்த்தைக்கான அடிப்படைகள் இருக்க வேண்டும் புலிகள் தொடர்ந்து போர் புரிந்தாலும், அதிகார பங்கீட்டில் சமரசப்பட்டாலும் தமிழீழ மக்களின் புதிய சனநாயகப் போராட்டம் தொடர்ந்து புலப்படக்கூடிய முறையில் நமது கோரிக்கைகள், மக்கள் நலன். தேசநலன் சார்ந்திருக்க வேண்டும். எதிரிகளை அன்னியப்படுத்தவும் மக்களை அய்க்கியப் படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



★ திம்புக் கோரிக்கைகளை அங்கீகரிக்க வேண்டும்.

★ வடக்கில் இருந்து வெளியேற்றப் பட்ட முசுலீம் மக்களை உடனடியாக மீளக்குடிய-மர்த்த வேண்டும். கிழக்கு தமிழீழத்தில் முசுலீம் மக்களுக்கு ஒரு சுயாட்சி பகுதி ஏற்படுத்த வேண்டும், சுயாட்சி பகுதியின் பொலிசு நிர்வாகத்தில் முசுலீம்களின், வீதப் பிரதிநிதித்துவம் அப்படியே பேணப்பட வேண்டும்.

★ தமிழீழ மாநிலத்தின் (வடக்கு கிழக்கு இணைந்த) பொலிசு அமைப்பு முழுவதும் தமிழர்களிடம் ஒப்படைக்க படவேண்டும்.

★ தமிழீழ மாநிலத்தில் இருந்து இராணுவம், கடற்படை முற்றாக வெளியேற வேண்டும். இராணுவத்தில், கடற்படையில் ஒரு தமிழ்ப்படை உருவாக்கப்பட வேண்டும். எல்லா இயக்கங்களின் போராளிகளும் (ஆண் - பெண்) படைப்பிரிவில் இணைக்கப்பட வேண்டும்.

★ நாட்டின் பாதுகாப்பு துறை வெளியுறவுத் துறை தவிர அனைத்தும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். மாநில அரசை எக்காரணத்தையிட்டும் மத்தியரசு கலைக்க முடியாது.

★ தமிழீழ மாநில அரசியல் - அதிகார அமைப்புக்களில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்.

★ தமிழீழ மக்கள் அனைவருக்கும் கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம், வீடு அடிப்படை அரசியல் சாசன உரிமை-யாக்கப்பட வேண்டும். வீடு இல்லாத குடும்பங்களுக்கு வீடும், நிலம் அற்றவர்-களுக்கு விவசாயக் காணியும் அரசால் உடனடியாக கண்டிப்பாக வழங்க வேண்டும்.

★ தொடக்கக் கல்வி, உயர்கல்வி, தொழில் நுட்பக் கல்வி, வேலைவாய்ப்புக் (அரசு - தனியார்) களில் இலங்கை, இந்திய அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு முன்னுரி-மையும் 50% ஒதுக்கீடும் (ஆண்களுக்கு 25% பெண்களுக்கு 25%) கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்.

★ தமிழீழ மாநிலத்தில் 1970-களுக்கு பிற்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் திரும்பப் பெறப்பட வேண்டும்.

★ சிறையிலும் தடுப்புக் காவலிலும் உள்ள தமிழ், மலையக முசுலீம் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

★ யுத்தத்தால் இடம் பெயர்ந்து இலங்கைக்குள்ளும், இந்தியாவிலும் அகதிகளாக முகாம்களில் வாழும் தமிழ், முசுலீம், மலையக மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர அடிப்படை வசதிகள் உடனடியாக செய்து கொடுக்க வேண்டும்.

★ மூன்றாவது தரப்பின் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடப்பது கண்காணிப் பதற்கு அப்பால்; எந்த மூன்றாவது நாடும், சர்வதேச நிறுவனமும், படைகளும் உள்நாட்டுக்குள் அனுமதிக்கப்படக் கூடாது.

★ போராளிகளின் ஆயுதங்கள், சிறீலங்கா அரசிடமோ, சர்வதேச இராஜதந்திர கண்காணிப்பாளர்களிடமோ நேரடியாக தனியாக ஒப்படைக்கப்படமாட்டாது, பொலிசிலும், இராணுவத்திலும், கடற்-படையிலும் நேரடியாக இணைக்கப்-படுவதன் மூலம் மாற்றப்பட வேண்டும்.

★ அனைத்து மலையக தமிழ் மக்களுக்கும் குடியுரிமை, வாக்குரிமை வழங்கப்பட வேண்டும். சிறீலங்காவில் மலையக மக்களுக்கு சுயாட்சிப் பகுதி ஏற்படுத்த வேண்டும்.

*புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளே. இக்கோரிக்கைகளை எட்டு திக்கும் பரப்புக்கள். மக்களை அணி திரட்டுங்கள்.*

— ஆசிரியர் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போரின் முகங்கள்

வாழ்வின் மீதான ஆசை
மண்ணைவிட்டு விரட்டியது
இரவின் முகத்தைச் சூடிக்
கொழும்புக்கு ஓடினான்
இரவின் முகத்தை அணிந்த சீருடைகள்
அவனை இழுத்துச் சென்றன

அடையாள அட்டையில் இருந்த முகம்
தனதென்றான் அவன்
இல்லையென்றார்கள் அவர்கள்
அட்டை பத்து வருடம் பழையது
ஆயினும்
முகம் தனதென்று வாதாடினான்
அவனது உடல் வாவியில் மிதந்த போது
முகம் அவனுடையதாக இருக்கவில்லை.

போராளியின் முகத்தை அணிந்த சிறுவனும்
சிறுவனின் முகத்தை அணிந்த போராளியும்
சந்தித்த போது
முகங்களைப் பரிமாறிக்கொள்ள இயலவில்லை
நொறுங்கிய நிலைக் கண்ணாடியில் மரித்த சிறுவனுக்காகப்
போராளி சிறுவனைப் போற் கதறினாள்

அவன் வாளோ துவக்கோ ஏந்தியவனில்லை
ஆயினும்
புறமுதுகிடாமையின் மேன்மையும்
போர்க்களச் சாவின் உன்னதமும்
பாடும் புலவன் அவன்

அவனது சிறுவன் ஆயுதந் தரித்தபோது
முறுவல் முகத்தை அணிந்து
வென்று வா என வாழ்த்தி வழியனுப்பினான்
வென்றான் என்றனர்
வரவில்லை
எல்லாரும் வீர அஞ்சலி செலுத்திய போது
முறுவல் அற்ற முகத்தைக் கழுவிய கண்ணீர்
அவனது வாயை அடைத்தது.

எப்பொழுதோ
இரகசியமாகக் கழற்றிவைத்த முகத்தைக்
கண்டிருக்கக்கூடிய முகங்களை எல்லாம்
கவனமாகக் குழிதோண்டிப் புதைத்தான்
கழற்றிவைத்த முகம்
ஒவ்வொரு குழியினின்றும் முளைத்தது.

அவளுடைய முகம்
அம்மாவினது என்றார்கள்
இல்லை அம்மம்மாவினது என்றார்கள்
அம்மாவின் முகமும் அம்மம்மாவின் முகமும் அணிந்திருந்த
புகையின் நெருப்பை
அவள் முகம் அணிந்திருந்தது.

**சிறுவர்களின் தந்தையரைக் கொன்றார்கள்**
**தமையன்மாரை ஊரினின்று விரட்டினார்கள்**
**சிறுவர்கள் ஆயுதந்தரித்தபோது**
**மனிதாபிமானத்தின் முகத்தைச் சூடிச்**
**சிறுவர்கட்காக அழுதார்கள்.**

www.tamilarangam.net


அவன் ஒரு வியாபாரி
ஆட்சேர்ப்பு அதிகாரியின் முகத்தை அணிந்திருக்கிறான்
அவன் பண்டங்களை வாங்கி விற்பதில்லை
மனிதர்களை வாங்கி மரணத்தை விற்கிறான்

**அரசாங்கத்துக்கு இரண்டு முகங்கள்**
**போரின் முகம்** சமாதானத்துக்கு முன் போரென்கிறது
***சமாதானத்தின் முகம்*** போருக்குப்பின் சமாதானமென்கிறது.

கற்சுவர்களும் கம்பிக் கதவுகளுமாய் ஒரு சிறைச்சாலை
சட்டத்தின் பேரால் மனிதர்களை மறித்து வைக்கிறது
வேளை தவறாமல் உணவளிக்கிறது
வெய்யிலைக் காணவும் அனுமதிக்கிறது
கம்பி வேலிகளும் மரக் கதவுகளுமாய் ஒரு சிறைச்சாலை
மனிதாபிமானத்தின் பேரால் மனிதர்களை மறித்து வைக்கிறது
அகதிமுகாமெனத் தன்னை அழைத்துக் கொள்கிறது.

பயிர் செய்பவர்கள் அகதிகளின் முகங்களைச் சூடியபின்
பற்றைகளின் முகங்களைச் சூடிய வயல் வெளிகளில்
போர் விதைக்கப்படுகிறது அழிவு அறுவடையாகிறது.

இந்த முகத்தின் கோடுகள்
தோலின் சுருக்கங்களல்ல
வறுமை உழுத கோடுகளைப்
போர் இன்னும் ஆழமாக்குகிறது.

பசியாலும் நோயாலும் மரித்தோரின் புள்ளி விவரங்கள்
தரும (நிறுஜ) நிறுவனங்களின் மனிதாபிமானமிக்க
அலுவலர்களைக்
குளிரூட்டப்பட்ட வண்டிகளில் வைத்து
விருந்து வைபவங்கட்கு இழுத்துச் செல்கின்றன.

விமானங்கள் வருகின்றன
மரண பயம் தொடர்கிறது
சாதித்தடிப்பு மனித நேயமுகத்தைச் சூடிக்கொள்கிறது
பதுங்கு குழிகளிலும் பாதுகாப்பிடங்களிலும் பல் தெரிய
முறுவலிக்கிறது.

விமானங்கள் போகின்றன
மரண பயம் தொடர்கிறது
ஒரு வாளி கிணற்று நீர்
மனித நேயத்தைக் கழுவிக்
கழற்றிய வேட்டிய நனைக்கிறது

பெட்டியைத் திறந்து
ஒவ்வொரு பொருளாகச் சோதிக்கிறான்
பட்டாளத்தானின் தோளில் உள்ள துவக்காற் பயனேது
உள்ளே
நானும் நடுங்குகிறேன், அவனும் நடுங்குகிறான்.

கடல்மீதும் முற்றுகை
கடலில் நீராட விரியும் வலைகள்
மணலிற் துவண்டு
மழையில் நனைகின்றன
வள்ளங்களைச் சுமக்கும் அலை முதுகைப்
போர்க் கப்பல்களும் பீரங்கிப் படகுகளும் முறிக்கின்றன
அமைதிக்காகக் காத்திருக்கும் நெஞ்சுக்குள்
கடல் குமுறுகிறது
காற்று
மணவால்வாரித் தூற்றுகிறது.

***புத்தரைக் காண விஹாரைக்குப் போனேன்***
***கண்களை ஏன் தாழ்த்தியிருக்கிறீர் எனக் கேட்டேன்***


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**என்போரால் நடக்கும் எதையுமே காண மனமில்லை என்றார்**
**கைகளைக் கட்டியிருந்தால் ஆகுமோ என்றேன்**
**விரித்த கைகளில்**
**அரசாங்கம் துவக்கை வைத்துவிடுமே என்றார்.**

அங்கே தொழுத பள்ளிவாசல் போலவே
இங்கே தொழுகிற பள்ளிவாசலும்
அங்கே தொழுதது போல
அவர்களால் இங்கே தொழ இயலவில்லை.

சமாதானத் தீர்வை நிறைவேற்றும் பொறுப்பு
ஆயுதப் படைகளிடம் ஒப்படைக்கப்பட்டது
குண்டுகளின் சமாதான வார்த்தைகளை விளங்காத மனிதர்களின்
குருதி
மண்ணை நனைக்கிறது

**போரின் காரணமாக மீறப்படும் மனித உரிமைகள் பற்றிப்**
**பேசுவோரிடம்**
**போருக்குக் காரணமான மனித உரிமை மீறல்கள் பற்றிப்**
**பேசுவீர்களா**
**எனக் கேட்டேன்**
**அவர்கள் வாய் திறந்த போது**
**மனிதாபிமானத்தின் முகம் மறைந்தது**
**அரசியல்வாதிகளின் குரல் கேட்டது.**

**எவருடைய போரென்ற கேள்விக்கு எவருடைய சமாதானமென்று**
**பதில் வந்தது.**

சிவப்பும் மஞ்சளும் கறுப்புமாக
இம்மண்ணின் முகத்தைத் தீட்டும் ஓவியனே
உன்னிடம் வேறு நிறங்களே இல்லையா எனக் கேட்டேன்

கவிதைகள் போரையும் சாவையுமே கூறுகின்றன
இசைக்கருவிகளிற் போர் முழக்கம் கேளாதபோது
சாவீட்டில் ஒப்பாரி கேட்கிறது
எரிந்ததற்கும் எரிவதற்கும் இடையிலுள்ள என்னிடம்
எந்த நிறங்களை வேண்டுகிறாயென்றான்
வண்ணங் குழைத்த தூரிகை தீண்டிய திரை
தீக்கொண்டு எரிந்தது.

**போர் தனது விதிகளை இழந்து விட்டது**
**போர்க்களங்கள் தமது எல்லைகளை இழந்து விட்டன**
**போர்க்கலன்கள் தமது குறிகளை இழந்துவிட்டன**
**போர்த்தொழிலோர் தமது முகங்களை இழந்து விட்டனர்**
**ஆயுத வியாபாரிகள் காசை எண்ணுகின்றனர்**
**புள்ளி விவரங்கள் மனிதரைப் புதைக்கின்றன.**

படையினர் அடிமைசெய்ய வந்தபோது
மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறினர்
படையினர் விடுதலை செய்ய வந்தபோதும்
மக்கள் மூட்டைமுடிச்சுகளுடன் வெளியேறினர்

விதிப் பயனால்
வழிவேறு இல்லாமலே
இந்தப் பிழைப்பு என்றாள் விபசாரி
வயிற்றுப் பசியால்
வழிவேறு இல்லாமலே
இந்தக் களவு என்றான் திருடன்
தேச நலனுக்காய்
வழிவேறு இல்லாமலே
இந்தப் போர் என்றது அரசு
விபசாரியின் மொழியிலும் திருடனின் மொழியிலும்
தொனித்த துயரம்
அரசின் மொழியில் ஏன் தொனிக்கவில்லை.

www.tamilarangam.net

போரிடச் சென்றவரது மீளலைக் காத்திருக்கும்
அதேயளவு நிச்சயத்துடன்
பாடசாலைக்குப் போனோரதும்
பணிமனைக்குப் போனோரதும்
சந்தைக்குப் போனோரதும்
கோயிலுக்குப் போனோரதும்
மீளலைக் காத்திருக்கிறார்கள்
போரென்ற பெருமதிலின் இம்மருங்கும் அம்மருங்கும்
அன்னையரது முகங்களில்
ஒரேயளவு உறுதி
ஒரேயளவு அச்சத்தை
மூடி நிற்கிறது

அதே போர்
அதே மனிதர்கள்
நேற்று எதிர்த்தவர்கள்
இன்று ஆதரிக்கிறார்கள்
மந்திர நாற்காலியில் அமர்ந்ததும்
போரின் முகம் மாறித் தெரிகிறது

போரின் முகங்கள் அடிக்கடி இடம் மாறுகின்றன
வெற்றியும் தோல்வியும் முன்னேறலும் பின்னடைவும், உறுதியும்
தடுமாற்றமும்
நோக்குகிற திசைகள் மாறுகினறன
அழிவு மட்டும்
எல்லாத் திசைகளிலும் நோக்குகிறது

கே. மரித்தோரின் முகங்கள்
எப்போதுமே
போராளிகளினதாயும்
பயங்கரவாதிகளினதாயும்
எதிரிகளினதாயும்
அயைடாளங் காணப்படுவது
எவ்வாறு?

ப. குண்டுகளும் வெடியோடுகளும்
குறிதவறக் கூடாது
என்பதால்.

எங்கள் யுகத்தின் போர்க்களங்களிற்
குருதி அருந்தப் பேய்கள் வருவதில்லை
தசையை உண்ணப் பிசாசுகள் வருவதில்லை
எட்ட இருந்து எங்களைத் தின்னும்
பேய்கட்கும் பிசாசுகட்கும்
எங்களைப் போலவே முகங்களும் உடல்களும்

அமைதி பற்றிப் பேசலாம்
போர் பற்றிப் பேசலாம்
அமைதி பற்றிப் பேசிக்கொண்டே
போர் பற்றிப் பேசுவோரிடம்
அமைதியாக ஆயுதங்களை விற்கலாம்

அவர்களது வெடிகுண்டுகள் ஆகாயத்தினின்று இறங்குகின்றன
இவர்களது வெடிகுண்டுகள் தெருவழியே உலாவுகின்றன
போரின் அறநெறிகள் பற்றிப் போதிக்க
இதென்ன மற்போரா சதுரங்கமா

**என்னால்**
**இந்தப் போர்**
**எப்போது முடியுமென்று சொல்லமுடியாது**
**எப்போதேன் முடிந்தாலும்**
**அப்போது**
**இன்னொரு போர் தொடங்குமென்று மட்டும்**
**இப்போதே சொல்லமுடியும்**

www.tamilarangam.net

ஊரோடு இருக்கமாட்டாமற் போனவன்
ஊர் திரும்ப நினைத்தபோது
ஊரே இல்லாது போய் விட்டது

எப்போதும் மதில் மேல் அமரும் இப்பூனை
எல்லா மதில்களும் போரில் இடிந்தபின்
எங்கே அமருமெனப் பார்த்தேன்
போரின் மீது அமர்ந்திருந்தது பூனை

இரவோடு இரவாக வந்தார்கள்
வீடுவீடாகப் புகுந்தார்கள்
கண்ட அனைவரையுமே கொன்றார்கள்
தனது குடும்பத்தையே இழந்த அவனுக்குத்
தன்மீது பகைமை
எதென்றுந் தெரியவில்லை
எனென்றுந் தெரியவில்லை

கூரைகள் இருந்தாலும்
குண்டுகள் விழும்போது
குழிகட்குள் ஒதுங்கித்தான் வாழ்ந்தார்கள்
போர்
கூரைகளையும் குழிகளையும் பறித்துவிட்டு போதிலும்
குண்டுகள் விழுவது மட்டும் நிச்சயம்

**போர்க்குதிரையை என்னிடம் தாருங்கள்**
**சமாதானத்தை நோக்கிச் செலுத்துகிறேன்**
என்றவரைக்
குதிரை முதுகில் அமர்த்தினோம்
குதிரை போரை நோக்கியே பயணமாகியது
குதிரை முதுகில் அமர்ந்தபின்
குதிரை எங்கே போகிறது என்பதை விடக்
குதிரை முதுகிற் குந்தியிருப்பது முக்கியமானது

விடுதலைக்கானது இப்போர் எனின் நாம் மனம் திறந்து பேசுவது
எப்போது?

**என் முகத்தில் எதைக் காண்கிறாய் என்று வினவியது போர்?**
இடிபாடுகளை என்றான் **ஒரு கிழவன்**
இழவு வீடுகளை என்றாள் **ஒரு கிழவி**
குருதிக் கோலங்களை என்றான் **ஒரு ஓவியன்**
போர்ப் பறைகளை எனச் சொன்ன **இளைஞனைத்** தொடர்ந்து

ஒப்பாரியை என முனகிறல் **ஒரு பாடகி**
கண்ணி வெடிகளை எனக் கூவினான் **ஒரு முடவன்**
முடமான காவியங்களை என்றான் **ஒரு கவிஞன்**
உடன் ஊனமானோரை என்றாள் **ஒரு தாதி**
மருந்துகளின் போதாமையை என்ற **வைத்தியனை** முந்தி
இறக்குமதி வாய்ப்புக்களை என்றான் ஒரு **விநியோகஸ்தன்**
விலைவாசி உயர்வை என்றான் **ஒரு குடும்பஸ்தன்**
மேலதிக வருமானத்தை என்றான் **ஒரு வியாபாரி**
பொருட்களின் தட்டுப்பாட்டை என்றாள் **ஒரு குமரி**
பெரும் வருமானத்தை என மகிழ்ந்தான் **ஒரு கடத்[illegible]காரன்**
தரவேண்டிய என் பங்கை என நினைவூட்டினான் ஒரு சோதனைச்
**சாவடி அதிகாரி**
இன்னும் விற்றுமுடியாத ஆயுதங்களை என்றான் **ஒரு**
**விற்பனையாளன்**
என்னுடைய கமிஷனை என்றான் **ஒரு தரகன்**
குண்டெறியும் விமானங்களை என நடுங்கினான் **ஒரு சிறுவன்**
மேலெழும் எவுகணைகளை எனக் குழறினான் **ஒரு விமானி**
ரத்துச் செய்யப்படும் விடுமுறையை என வாடினான் **ஒரு சிப்பாய்**
போர்க்கால மிகை ஊதியத்தை என்றான் **அவனது மேலதிகாரி**
மரித்த படையினர்க்கான உபகார நிதியை எனப்

www.tamilarangam.net


வவுனியாவில் உள்ள அகதி முகாம்

பொறாமைப்பட்டான் **அவனது அயலான்**
என் தலைவிதியை என நொந்தாள் **அவனது மனைவி**
என் நண்பனின் பிரிவை என வருந்தினான் **அவனது தோழன்**
வீர மரணங்களை என்றான் **ஒரு பிரசாரகன்**
விடுதலையை என அடித்துரைத்தாள் **ஒரு பெண் போராளி**
பயங்கரவாதத்தின் முடிவை எனக் கொக்கரித்தான் **ஒரு அமைச்சன்**
பைத்தியக்காரத்தனத்தை என்று சிரித்தான் **ஒரு ஞானி**
பசியில் வாடும் குழந்தைகளை எனப் பதறினாள் **ஒரு தாய்**
பாணுக்கான கியூ வரிசையை என்றாள் **ஒரு சிறுமி**
போக முடியாத சாலைகளை என முறையிட்டான் **ஒரு வாடகை**
**வண்டியோடி**
வெறிதான தேவாலயங்களை என ஏங்கினான் **ஒரு பூசகன்**
திறவாத பாடசாலைகளை எனக் குறுக்கிட்டாள் **ஒரு ஆசிரியை**
நிறைய விடுமுறை நாட்களை என்று கத்தினான் **ஒரு மாணவன்**
நடத்த முடியாத நடன நிகழ்ச்சிகளை என்றாள் **ஒரு நர்த்தகி**
மேடையில்லாத நாடகங்களை என்றான் **ஒரு நடிகன்**
மேலும் பல அறிக்கைகளை என்றான் **ஒரு என்.ஜி.ஓ. ஊழியன்**
ஏராளமான போர்ச் செய்திகளை என்றான் **ஒரு பத்திரிகையாளன்**
பெரும் பொய்களையும் என்றான் **ஒரு வாசகன்**
என்னை என்ற குரல் வந்த திசையிற்
கவனிப்பாரற்றுக் கிடந்தது

**ஒரு அகதியின் பிணம்**

**— சிவசேகரம்**

www.tamilarangam.net



# 'தமிழீழ மக்கள் கட்சி' திட்டத்தின் மீது ஒரு பார்வை

புரட்சிகரதத்துவம் இல்லாமல், புரட்சிகர திட்டமும், கட்சியும் தலைமையும் இல்லை, புரட்சிகரகட்சி இல்லாமல், புரட்சியை நடத்த முடியாது.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் புரட்சி வெற்றி பெற வேண்டும் எனில் புரட்சிகர திட்டம், அதன் வழி கட்டப்படுகின்ற புரட்சிகட்சியும் அடிப்படையானது. 1970களின் பிற்பகுதியில் தமிழீழ விடுதலைப் போராட்டம் என்ற அரசியல் இலக்குடன் ஒரு சில இயக்கங்கள் உருவாகின. சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறை, இனஒழிப்பு இதற்கு எதிரான தமிழ் முதலாளித்துவ பாராளுமன்ற கட்சிகளின் அகிம்சைப் போராட்டங்கள் வெற்றியளிக்காது. இனி ஆயுதப் போராட்ட பாதைதான் ஒரே வழி என்ற பார்வையுடன் இவ்வியக்கங்கள் உருவாகின. பாராளுமன்ற பாதையை நிராகரித்த அளவுக்கு தேசிய விடுதலைப் போராட்டத்தின் முதலாளித்துவ பாதை இன்று வரை நிராகரிக்கப்படவில்லை. சனநாயகம், சோசலிசம், கம்யூனிசம் என இலட்சியங்கள் பேசப்பட்டன. எழுதப்பட்டன.

தன்னெழுச்சியான போராட்ட முறைகளில், சிறீலங்கா அரசு எதிர்ப்பு, தனித் தமிழீழம், ஆயுதப் போராட்டம் என்ற இலக்குகளுடன் கட்டப்பட்ட இயக்கங்கள், இயக்க தலைமைக்குள் ஏற்பட்ட சிறு சிறு முரண்பாடுகளால், தனி நபர் நடவடிக்கை முரண்பாடுகளால் பிளவுபட்டுச் சென்றன. ஒன்று இரண்டானது. இரண்டு நான்கானது. ஒரு இயக்கத்துக்கும் இன்னோர் இயக்கத்துக்கும் இடையிலான வேறுபாடு என்ன? ஏன் பல இயக்கங்களாக இருக்கிறீர்கள். ஒன்று பட்டு போராடினால் என்ன? என்ற கேள்விகளுக்கு தேசிய விடுதலை இயக்கத்தின் தேசிய சர்வதேசிய கொள்கைகள், திட்ட இலட்சிய வேறுபாடுகள் பதிலாக வரவில்லை (பாரிய அரசியல் வேறுபாடுகள் இருக்க வில்லை)

தனிநபர் பயங்கரவாதம், கொரில்லா குழுக்களை கட்டுவது, மக்கள் இயக்கம் கட்டுவது பற்றிய நடைமுறைப் பிரச்சனைகள், கூட்டணியுடன் தொடர்பு, தலைவர்களின் தனி விசேட ஆளுமைகள், உமாமகேஸ்வரன் - ஊர்மிளா உறவு - இப்படியான காரணங்கள் தான் முன் வைத்து தனித்தனி இயக்கத்தை கட்டினர். பின்னர், இயக்கத்துக்காக தனித்தனியான கொள்ளை அறிக்கை, திட்டங்களை வெளியிட்டனர். அவற்றை எடுத்து நோக்கின் அடிப்படையில் பெரிய முரண்பாடுகளை காண முடியாது. ஒரு இயக்கம் மற்றய இயக்கத்தின் கொள்கை அறிக்கை, திட்டத்துடன் ஏன் தாங்கள் முரண்படுகிறோம், என்பதை கொள்கை ரீதியாக விளக்கி இருக்க மாட்டார்கள். தலைவர்களின் மேலான அதீத விசுவாசமும், தனி மனித முரண்பாடுகளும், அதீத வெறுப்புகளுமே இயக்க தோழர்களிடம் விதைக்கப்பட்டது. இயக்கத்தை வளர்த்தனர்.

1980 களில் உருவான NLFT, TMPP வேறு நிலைப்பாடுகளில் இருந்து அரசியல் திட்டத்தை முன்வைத்து இயங்கத் தொடங்கினர், தங்களுக்கு இடையிலான வேறுபாட்டை கொள்கைவழி வேறுபடுத்தி காட்டினர். NLFT-க்குள், இராணுவம் கட்டுவது, கட்சி தலைமை தாங்குவது பற்றிய முரண்பட்ட பார்வைகள் வெளிப்பட்டன. அவற்றை ஆரோக்கியமான அரசியல் அமைப்பு அணுகு முறைகளூடாக அணுகி சரியான, நடைமுறையும் வெற்றி கொள்ளப் படவில்லை. முன்னோடிகளின் அரசியல் பலம் சிதைந்து, இயக்கத்தின் அரசியல் பலம் அமைப்பு பலமாக, தலைமைப் பலமாக மாற்றப்படவில்லை, ஒரு சில தலைவர்களின் பலத்தில் இயங்கிக் கொண்டிருந்த செயல்கள் தலைவர்கள் சிறை சென்றவுடன், அழிக்கப்பட்டவுடன் இயக்கமும் தேங்கி போனது, புலிகளின் தடையை அழித்தொழிப்பை மீறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்கத்தை நடத்த முடியாத தலைமைச் சக்திகள் தாங்கள் ஒதுங்கிக் கொண்டன. அதற்கு பல காரணங்களை தனிப்பட தெரிவிக்கின்றனர்.

புலிகளின் அழித்தொழிப்பை உருவாக்கத்திலேயே முகங்கொடுத்த பல பத்து குழுக்கள் அழிந்தொழிந்தன. அல்லது சிதைந்தன.

(5) அய்ம்பெரும் இயக்கங்களே போராட்டத்தின் குறியீடுகளாக பார்க்கப்படுகிறது. இவ்வியக்கங்களின் தலைமைக்குள் இருந்து வந்த இயக்க நடைமுறை கொள்கை அணுகுமுறை தொடர்பான பிரச்சனைகள். 1984-களில் வெளிப்பட தொடங்கியது. 1983 யூலைக்கு பின், இந்திய அரசின் நேரடியான இயக்க ஊக்குவிப்பு நடவடிக்கைகள், இயக்கத்துள்ளும் இயக்கங்களுக்கு இடையிலும் முரண்பாடுகளை கூர்மைப்படுத்தின. ஒவ்வொரு தலைமையும் ஒவ்வொரு தலைவர்களும் தாங்கள் நினைத்த வழிகளில், இயக்கத்தின் வழியை தீர்மானிக்க தொடங்கினர். தலைமைக்குள்ளும், இயக்கத்துள்ளும் முரண்பாடுகள் கொழுந்து விட்டு எரியத் தொடங்கின. இங்கும் தலைவர்கள் தீர்மானித்த வழிகளில் முரண்பாடுகள் அணுகப்பட்டது, உள்அமைப்பு கருத்து முரண்பாடுகள் (வெட்டி ஓட்டம், மற்றும் பழைய பாணியில் பெண்கள் தொடர்பு, சதிமுயற்சி, ஆள்சேர்ப்பு) பழிவாங்கல் முறையில் வெளிப்படுத்தப்பட்டது. அதே போல் இப்படி கூறி நசுக்கவும் பட்டது.

திட்டவட்டமான சில அரசியல், இராணுவ கோரிக்கைகளுடன் எழுந்த உட்போராட்டம் சிறை, சித்திரவாதை படுகொலை மூலம் நசுக்கப்பட்டது. சிறீலங்கா அரசு படைகள் செய்த அத்தனை கொடுமைகளும் இயக்கத்திலும் வெளிப்பட்டது, பலர் மௌனிகளாக்கப்பட்டார்கள். சிலர் ஒதுங்கிக் கொண்டனர். இது தலைமட்டத்தில் இருந்து கீழ் அணி வரை வெளிப்பட்டது.

இயக்க தலைமையை எதிர்த்து வெளியேறுபவர்கள் தலைமறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டது. தலைமையின் கைகளில் மாட்டியவர்கள் அழிக்கப் பட்டார்கள்.

இயக்க தலைமைகள் தடுமாறின. தாம் கொண்ட கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் எழுந்த முரண்பாடுகளால் சீர்குலைந்த தலைமைகள், கொள்கை வழியில் கூட 1987 உடன் திசைமாறத் தொடங்கின, புலிகளின் தடையை, அழிப்பை எதிர்கொள்ள முடியாது சிதைந்தன. புலிகள், இயக்கத்துள் எழுந்த முரண்பாடுகளையும் போர் முனையில் நசுக்கினர். தங்களை நிலைநிறுத்தினர்.

EPRLF இல் இருந்து வெளியேறி உருவான EPDP, PLOT இல் இருந்து உடைந்த ENDLF ஒரு திட்டத்தையும், கொள்கை அறிக்கையையும் முன் வைத்தனர். தாங்கள் தனி இயக்கமாக இருப்பதால் திட்டம் வைத்தார்கள். பழைய இயக்க திட்டத்தில், கொள்கை அறிக்கையில் இருந்து மற்றைய இயக்க திட்டத்தில் இருந்து எப்படி வேறுபடுகிறோம் என்பதை முன் வைக்கவில்லை; தலைவர்களுக்கு ஒரு திட்டம், இயக்கம் தேவைப்பட்டது. மக்களுக்காகவும், தேச விடுதலைக்காகவும் திட்டம் உருவாகவில்லை.

எல்லா இயக்கங்களில் இருந்து வெளியேறிய சக்திகளில் அரசியல் விழிப்புணர்வும், மாற்று இயக்கம் ஒன்றின் அவசியத்தை புரிந்து செயற்பட விரும்பிய சக்திகள் **'மூன்றாவது பாதை'** ஒன்றை உருவாக்க முனைந்தார்கள். பல வெளியீடுகளை தாங்கள் வாழும் நாடுகளில் இருந்து வெளியிட்டனர்.

PLOT இல் இருந்து வெளியேறிய தலைமை குழு உறுப்பினர்கள் சிலர் 'தீப்பொறி' என்ற பத்திரிகையை தமிழீழத்தில் இருந்து வெளியிட்டனர். புரட்சிகர இயக்கத்தை கட்ட முயன்றனர். புலிகளின் தடை, கைது, அழிப்புக்கு முகங்கொடுத்து நின்றனர். ஒரு புரட்சிகர இயக்கம் வேண்டும் என விரும்பிய அனைத்து சக்திகளையும் ஒன்றிணைப்பதற்கான புரட்சிகர திட்டம் ஒன்று வெளிவரவில்லை. இதனால் வெளியீடுகள் தங்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள், நம்பிக்கையீனங்களால் பெரும்பாலானவை நின்று போயின.

ஒரு மாற்று புரட்சிகர இயக்கம் வேண்டும் என்பதில் யாருக்கும் முரண்பாடு இல்லை. முன்னைய இயக்க திட்டங்கள், கடந்தகால தவறுகள், தோல்விகள், வெற்றிகளை சொந்த அனுபவங்களினை (நடைமுறை அனுபவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாற்று தேவையில் இருந்ததல்ல) கோட்பாட்டு ரீதியில், அரசியல் அமைப்பு மார்க்கத்தில் புரிந்து கொள்வதில், ஒவ்வொரு வெளியீடும், குழுவும் முரண்பாடுகளை கொண்டிருந்ததால் ஒன்றுபடவில்லை. தமது புரிதலை ஒரு திட்டமாக முன் வைக்க முடியாது இருந்தனர். ஆனால் திட்டம், திட்டம் என சம்பிரதாயமான திட்டத்தை பற்றி பேசிக் கொண்டிருந்தனர். திட்ட விவகாரங்கள் மேல் ஆழமான தங்கள் நிலைப்பாட்டை முன் வைக்க அக்கறை எடுக்காதவர்கள், தங்களின் சொந்த அணுகுமுறைத் தவறுகளை திருத்திக் கொண்டு சுயமாக செயற்பட தயாரில்லாதவர்கள். புரட்சிகர அரசியலில் நம்பிக்கை வைக்காமல், தனி நபர்களில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள், தனி நபர்களுடன் முரண்பாடு கூர்மையடைந்ததும், அணுகுமுறைகளை காரணம் காட்டி புரட்சிகர அரசியலைவிட்டு ஒதுங்குகிறார்கள்.

ஒரு கட்சிக்கு, ஒரு திட்டம் வேண்டும் என்பது முதல் பிரச்சினை மட்டுமே, அது விஞ்ஞானபூர்வமான புரட்சிகர திட்டமாக இருக்கிறதா இல்லையா என்பது முக்கிய பிரச்சினை. பல நாடுகளில் திட்டத்தின் அடிப்படையில் இயங்குகின்ற பல புரட்சிகர இயக்கங்கள், தாங்கள் புரட்சியை நோக்கி முன்னேற தங்களது திட்டம் மேலும் மேலும் விஞ்ஞானபூர்வமானதாக்கப்பட வேண்டும் என முயன்று கொண்டிருக்கிறார்கள், 30 ஆண்டுகள் திட்டத்தின் அடிப்படையில் போராடியும் முன்னேற முடியாமல் இருப்பதற்கான திட்டப் பிரச்சினைகள் பற்றி அக்கறைப்படுகிறார்கள், சில கட்சிகள் திட்டங்களிலேயே மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இத்தகு சூழ்நிலையில்

**'தமிழீழ மக்கள் கட்சி'** முன் வைத்துள்ள திட்ட முயற்சியை நாம் வரவேற்கிறோம். திட்டத்துடனான அய்க்கியத்தைதான் நாம் முதன்மையானதாக அடிப்படையானதாக பார்க்கிறோம். அபிலாசைகள் மேலான அய்க்கியத்தையும், தனிநபர் நடவடிக்கையின் முரண்பாட்டில் இருந்து எழும் தனிமைவாதத்தையும், குழுவாதத்தையும் தனிநபர் உடன்பாட்டில் இருந்து எழும் ஒன்று கலத்தலையும் நாம் திட்டவட்டமாக புறக்கணிக்கிறோம். நாம் தமிழீழ தேசத்தின், பெரும்பான்மை மக்களின் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கும், நலனுக்காகவும் மட்டுமே நிற்கின்றோம்.

'தமிழீழ மக்கள் கட்சியின்' திட்டத்தின் மீதான நமது கண்ணோட்டம் முதலில் 'நமது கட்சியை, திட்டத்தை பலப்படுத்தும், தமிழீழ மக்கள் கட்சியின் புரட்சிகர சக்திகளை பலப்படுத்தும், இரண்டு கட்சிகளுக்கும் வெளியில் உள்ள தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளுக்கு வேறுபாடுகளை தெளிவுபடுத்தும் என நம்புகிறோம்.

**''கடந்த கால தவறுகளை திட்டத்தில் களையாமல் ஒருபடி முன்னேற முடியாது''**

**''ஆசிரியர் குழு''**

தமிழீழ மக்கள் கட்சியின் திட்டம் தேவைப்படுவோர் தேசபக்தன் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

திட்டத்தின் (அ) பகுதியில் அய்ரோப்பியர் வருகைக்கு முன் தமிழ் மன்னர்களின், சிங்கள மன்னர்களின் தனித்தனியான இராட்சியங்கள், சிற்றரசுகள் இருந்ததை குறிப்பிட்டு பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்கள் பலவந்தமாக இணைத்து தனியரசுக் கட்டமைவுக்குள் கொண்டு வந்தனர் என்றும் இத்தனியரசு கட்டமைவுக்குள் நடந்த வேகமான சமூக, பொருளாதார, அரசியல் கலாச்சார மாற்றங்களால் நான்கு தனித்தனியான இனங்கள் நிலைபெற்றது எனக் கூறுகிறது.

முதலாவது பிரித்தானியர்கள் மட்டும் தமிழ், சிங்கள இராச்சியங்களை கைப்பற்றவில்லை. அதற்கு முன் ஒல்லாந்தர்களும், போர்த்துக்கேயர்களும் பகுதி பகுதியாக பலவந்தமாக கைப்பற்றி, பகுதி, பகுதியாக கொலனிய ஆட்சியை நடத்தினார்கள். யாழ்ப்பாணத்தை, மட்டக்கிளப்பை சிங்கள கரையோர, தாழ்நிலப் பகுதிகளை கொலனிய அரசுகளே மாறி மாறி கைப்பற்றின 16, 17-ம், 18-ம் நூற்றாண்டு வரலாறு இப்படி இருந்தது. 19-ம் நூற்றாண்டில் பிரித்தானியர்கள் முழு நாட்டையும் பலவந்தமாக கைப்பற்றியதுடன் **'இலங்கை'** என்ற தனியரசுக் கட்டமைப்பையும் ஏற்படுத்தினர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்களின் 2½ நூற்றாண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலத்தையும், பிரித்தானியாவின் 1½ நூற்றாண்டுகால கொலனித்துவ ஆக்கிரமிப்பை, ஆட்சியை புரிந்து கொள்வதும், கொலனிய எதிர்ப்பு தேசியப் போராட்டங்களையும், கவனிக்க வேண்டும். அப்போதுதான்

கண்டிப் புரட்சி உட்பட, தமிழ் சிங்கள பகுதியில் நடந்த தமிழ், சிங்கள, மலையக, முசுலீம் மக்களின் சமூக உருவாக்கங்களில் நடந்த மாற்றங்களையும் ½ நூற்றாண்டு நவகொலனித்துவ இலங்கை மக்களின் தேசிய இனங்களின் தேசியப் போராட்டத்தின் அடிப்படையையும் நாம் நன்கு பரிந்து கொள்ள முடியும்.

(அ) பகுதி தமிழர்களும், சிங்களவர்களும் தங்களை தாங்களே ஆண்டு கொண்டிருந்தனர். அய்ரோப்பியர் வருகைக்கு முன்பாக என கூறிவிட்டு பிரித்தானிய தனியரசு கட்டமைப்பில் புதிய சூழலில் **நான்கு தனியான இனங்கள்** நிலை பெற்றன என்கிறது. பூர்வகுடிகள் கொலனிய ஆட்சியில் இனங்களாக பரிணமித்தார்கள் என்பது சரி. மற்றய இரண்டு இனங்களும் எங்கிருந்து உருவானவர்கள் என்பதை திட்டம் காட்டவில்லை. கொலனிய ஆட்சியில் நடந்த வேகமான மாற்றங்களால் பூர்வகுடிகளின் பின்னணியில் இருந்து உருவானவர்களா? இல்லை, மதமாற்றங்கள், இன ஒன்று கலப்புக்கள் மூலம் உருவானவர்களா? இல்லை. நிச்சயமாக இல்லை.

முசுலீம் மக்கள் 9-ம் நூற்றாண்டில் மலாயா, அரபு நாடுகளில் இருந்தும், பிற்காலங்களில் இந்தியாவில் இருந்தும் வந்தவர்கள் 'ஷாபி' குருகுலத்தை சேர்ந்த **'சுன்னி'** முஸ்லீம் மக்கள், இவர்கள் பெரும்பாலும் வியாபார நோக்கில் வந்தவர்கள், தமிழ், சிங்கள மன்னராட்சி காலங்களிலும் சரி, அய்ரோப்பியர் வருகைக்கு பின்பும் சரி. முசுலீம் மக்கள் நாடு முழுவதும் பரவலாக குடியேறி வாழ்ந்து வருபவர்கள் 1981-இன் குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரங்கள் கூட அவர்கள் நாடு முழுவதும் பரவலாக தமிழ், சிங்கள பூர்வ குடிகளுடன் மண்ணுடன் இணைக்கப்பட்டிருப்பதை காட்டுகிறது.

10 நூற்றாண்டுகளுக்கு மேலாக இலங்கை மண்ணில் வேரூன்றி விட்ட முசுலீம் மக்களின் வாழ்வும், சாவும் ஒரு நீடித்த நிலையான சமூக உருவாக்க தன்மை பெற்று விளங்குகிறது.

மலையக தமிழ் மக்கள் (1823-களுக்கு பின்) 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, சாலை அமைத்தல் போன்ற வேலைகளுக்காக தென் இந்தியாவில் இருந்து பிரித்தானியாரால் இறக்குமதி செய்யப்பட்ட , கூலித் தொழிலாளர்கள். (வணிக நோக்கத்திற்காக இந்தியாவில் இருந்து வந்த செட்டியார்கள், பனியாக்கள், முசுலீம்கள் இங்கு உள்ளடக்கப் படவில்லை) ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலேயே இலங்கை என்ற தனியரசு கட்டமைப்பு ஏற்பட முன்பு வாசனைத் திரவிய தோட்டங்களில் வேலை செய்வதற்காக 10,000 வரையிலான தமிழ்த் தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டதாக வும் சில ஆவணங்கள் கூறுகின்றன. மலையக தமிழ் மக்களை பொறுத்தவரை சிங்கள பூர்வ குடிகளின் மண்ணின் மத்தியில், மலையில் பிரித்தானியரின் நலனுக்காக குடியேற்றப்பட்ட மக்கள், கொலனித்துவ ஆட்சியில் அவர்கள் பெற்றிருந்த சில உரிமைகள் கூட அம்மக்களை மண்ணுடன் அய்க்கியப்படுத்தவில்லை. நவ கொலனித்துவ இலங்கையில் வாக்கு உரிமையும், குடியுரிமையும் கூட பறிக்கப்பட்டு **'லயன்களில்'** அடிமைக் கூலிகளாக நடத்தப்பட்டார்கள்.

சுதந்திர இலங்கையில் (?) தமது எதிர்காலம் இலங்கையா? இந்தியாவா? என்ற கேள்வியில் தங்கள் வாழ்வையும், சாவையும், நிலையற்ற ஒப்பந்தங்களில் பிணைத்து இருந்தவர்கள். ஆனால் இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகு எலும்பாக இருப்பவர்கள் இவர்களின் சமூக உருவாக்கம் என்பது மற்றய மக்கள் சமூகத்திடம் இருந்து முற்றிலும் வேறுபட்டு நிற்கிறது.

இவ்வாறு வேறுபட்ட இன, மத, மொழி மற்றும் வரலாற்றுத் தொடர்ச்சியில், சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுள்ள மக்கள் சமூகத்தை நோக்குவதில், கொலனிய ஒற்றை ஆட்சி முறையை வைத்து **''இப்புதிய சூழலில் நான்கு சமூகங்களும் தனித்தனியான இனங்களாக நிலை பெற்றுள்ள.''** இனங்களின் வளர்ச்சியை இப்படி சமப்படுத்தி பார்க்கும் ஆய்வு முறை

www.tamilarangam.net



இச்சமூகங்களின் அக புறநிலை எதார்த்தத்தை மறுத்து விடுகிறது

திட்டம் (ஆ) பகுதி முதல் பத்தியில் ''அரசியல் அதிகாரம் சிங்களத் தலைமையிடம் ஒப்படைக்கப்பட்டது. பல இன, மொழி, மத, கலாச்சார வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் பிரிவை சமத்துவமாக இணைத்து இலங்கையர் என்ற ஒரு தேசமாக கட்டமைக்கும் அரசியல் கடமை இத்தலைமைக்கு இருந்தது.'' அரசியல் அதிகாரம் சிங்கள தலைமையிடம் மட்டும் ஒப்படைக்கப்படவில்லை, பிரித்தானிய கொலனித்துவத்துக்கு எதிராக **''எமது அரசியல் தேவைகள்''** என்ற பேருரையை நிகழ்த்தி இலங்கை தேசிய காங்கிரசை உருவாக்கி அதற்கு முதற் தலைமை தாங்கியது **அருணாசலம்** என்கிற தமிழர். தேசிய இயக்கத்தில் தமிழர்களும், சிங்களர்களும் முக்கிய பங்காற்றினர். பிரித்தானியரின் பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்கு சிங்களத் தலைவர்களை பெருமளவு பயன்படுத்திக் கொண்டனர் என்ற உண்மை, தமிழ்த் தலைமை பிரித்தானிய சூழ்ச்சிக்கு பலியாகவில்லை என வரலாற்று அர்த்தம் ஆகிவிடாது. அரசியல் யாப்பில் சிறுபான்மையினருக்கு இருந்த பிரதிநிதித்துவ விகிதாச்சார உரிமை இரத்து செய்யப்பட்டு 1931-இல் டொனமூர் அரசியல் யாப்புக்கு அமைய நடத்தப்பட்ட சட்டசபை தேர்தலை, யாழ்ப்பாண கொங்கிரஸ் பகிஷ் கரித்தது. ஆனால் மன்னார், முல்லைத் தீவு, மட்டக்கிளப்பு திருகோணமலை கொழும்பு தமிழ்த் தலைமைகள் தேர்தலில் போட்டியிட்டனர்.

தமிழ்க் கொங்கிரஸ் சோல்பரிக் கொமிசனிடம் சிறுபான்மை விகிதாச்சார பிரதிநிதித்துவத்தையும், சமபிரதிநிதித்துவ கோட்பாட்டையும் இன அடிப்படைக் கோட்பாட்டையும் என மாற்றுக்களை முன்வைத்தபோதும் சோல்பரி கொமிசன் ஏற்கவில்லை. சிறுபான்மையினர்க்கு பாதுகாப்பு அளித்த சரத்துக்கள் இரத்து செய்யப்பட்டு டொனமூர் சீர்திருத்தம் சட்டசபைக்கு வந்தபோது 1 வாக்கால் மட்டுமே வெற்றி பெற்றது. அந்த வாக்கு ஒரு **தமிழ் பிரதிநிதியின் வாக்கு** என்பது வரலாற்றில் தமிழ்த் தலைமைக்குள்ளும் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு உடந்தையானவர்கள் இருந்தனர் என்பதை சுட்டிக் காட்டுகிறது. தமிழீழ தேசிய போராட்ட இயக்கத்திலும், வல்லரசுகளின், சிறீலங்கா அரசின், இந்திய அரசின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு தமிழ்த் தலைமைகள் பலியாகி இருக்கின்றன. சூழ்ச்சிகளுக்கு பலியாவதும் சூழ்ச்சிகளை நடத்துவதும் சிங்களத் தலைமைதான், என்ற பார்வையைவிட்டு ஒவ்வொரு அரசியல் இயக்கத்தையும் அதன் கொள்கை அதன் சமூகப் பிண்ணி, நடைமுறை இவற்றின் மூலத்தை மனிதர்கள் தமிழர்கள் பார்க்க வேண்டும்.

அரசியல் யாப்பு மூலம் நடந்த அதிகார மாற்றத்தில் சிறுபான்மைமையினரின் உரிமைகளும், அதிகாரங்களும் அன்றைய தமிழ்த் தலைமைகள் கோரியளவுக்கு கிடைக்கவில்லை. *1931*-ல் தேர்தலை பகிஷ்கரித்த யாழ் கொங்கிரஸ் 1936 தேர்தலில் தீவிரமாக பங்கு கொண்டது. *1947* தேர்தலில் எல்லாத் தமிழ்த் தலைமைகளும் பங்கு கொண்டன. மலையகத் தமிழரின் வாக்குரிமை பாராளுமன்றத்தில் பறிக்கப்பட்டு, சிறுபான்மையினரின் பாராளுமன்ற பிரதிநிதித்துவ உரிமை *28.42*-இல் இருந்து *21.03%*-ம் குறைந்த போதும், தமிழ்த் தலைமைகள் பாராளுமன்றத் தேர்தலையும், அதிகாரத்தையும் கைவிட்டு வெளியே வரவில்லை. (கட்சி மட்டும் உடைந்தது)

எனவே, பிரித்தானிய கொலனித்துவ அரசியல் அதிகாரம், நவ கொலனித்துவ அரசியல் அதிகாரமாக கைமாற்றப்பட்டது. கைமாறிய அரசியல் அதிகாரத்தில் அன்றைய சிங்கள, தமிழ்த் தலைமைகள் (*1944*-ல் உருவான தமிழ் கொங்கிரஸ்) பங்கு கொண்டன. அரசியல் யாப்பில் அதன் வழியான அதிகாரத்தில் சிங்களத் தலைமை தீர்மானகரமான அதிகாரத்தை பெற்றிருந்தது என்பதே சரியானது. பிரித்தானிய எதிர்ப்பு 'இலங்கைத் தேசிய இயக்கம்' சிங்கள தேசிய இயக்கமாக சிங்கள தலைமைகளால் மாற்றியமைக்கப்பட்டது, அதிகார மாற்றத்திற்கு முன்பே கொலனிய எதிர்ப்பு இயக்கத்தில் சிங்கள இன பௌத்த மத வெறிப்போக்கு கையோங்கியது. சிறுபான்மையினரின் உரிமைகள், அதிகாரங்களுக்கு எதிரான சிங்களத் தலைமை பலம் பெற்று விட்டது. திட்டத்தின் கூற்றுப் பிரகாரம் **''அரசியல் அதிகாரம் சிங்களத் தலைமையிடம்''** ஒப்படைக்கப்பட்டது. இத்தலைமை-

www.tamilarangam.net



யிடம் பல மக்கள் பிரிவை சமத்துவமாக ஒன்றிணைத்து **'இலங்கையர்'** என்ற ஒரு தேசமாக கட்டமைக்கும். அரசியல் கடமை பற்றி திட்டம் எதிர்பார்ப்பது, சிந்திப்பது 50 ஆண்டு வரலாற்று படிப்பினைகளுக்கு பின்பும் எந்த வகையில் சரியானது. அதிகார மாற்றத்துக்கு முன்பே கொலனிய எதிர்ப்பு தேசிய இயக்கத்துக்குள் நடந்த மாற்றங்களை, அரசியல் யாப்பின் அடிப்படையை, அதில் பங்கு வகித்த அரசியல் சக்திகளின் சமூகப் பின்னணிகளை, நடைமுறைகளை பார்க்க தவறுவதன் விளைவு **இலங்கை ஒரு தேசமாக** பரிணமித்து இருக்க முடியும் என எதிர்பார்க்க வைக்கிறது.

திட்டத்தின் (ஆ) 2-ம், 3-ம் பத்திகள் **இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி இதுவரை நிலவி வந்த கண்ணோட்டம், தீர்வுகளில் இருந்து ஒரு முக்கிய மாற்றத்தை திட்டம் வெளிப்படுத்தி இருக்கின்றது.** இதை ஆழ்ந்து கவனிப்போம்.

கொலனித்துவ கட்டத்தில் சிங்கள மக்களை அரசியல் ரீதியில் ஒன்றிணைத்த சிங்கள தலைமையிடம், பிரித்தானியர் அரசு அதிகாரத்தை கொடுத்துவிட்டு சென்றதால் மட்டும் சிங்களத் தேசம் கட்டியமைக்கப்-படவில்லை. சிங்கள இனம் தன்னை தேசிய இனமாக புரிந்து தேசிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சிங்கள தேசத்தை கட்ட-வில்லை. கொலனித்துவ எதிர்ப்பு தேசிய இயக்கத்தை கட்டியமைக்க, கொலனிய எதிர்ப்பு அரசியலுடன் சிங்கள இன, பௌத்த மத கருத்தாக்கங்களை, வரலாற்றுப் பெரு-மிதங்களை மையப்படுத்தி முன்னிறுத்தியது. சிங்களத் தலைமை, பிரித்தானிய எதிர்ப்பு **கண்டிப் புரட்சி (1888)** யின் கனவுகளை எதிரொலித்தனர். கண்டிச் சிங்களவர்-களுக்கும், கரையோர சிங்களவர்களுக்கும் இடையிலான பிரதேச, சாதி உள் முரண்பாடு-களை தற்காலிகமாக மூடிமறைத்து சிங்கள இனம் முழுவதையும் அய்க்கியப்படுத்தும் வகையில் கொலனிய எதிர்ப்பு சிங்களத் தேசிய அரசியலை முன்னிறுத்தினர். மறுபக்கம் மலையகத் தமிழர்கள், முசுலீம்கள் வரவு, வாழ்வு பற்றி அச்சுறுத்தி காட்டியபடி சிறுபான்மை எதிர்ப்பு அல்லது தமிழ் இன எதிர்ப்பு அரசியலை முன் வைத்து செயற்பட்டனர். இலங்கை மக்களின் கொலனித்துவ எதிர்ப்பு தேசிய இயக்கத்தின் ஒவ்வொரு அரசியல் நிகழ்வுகளிலும், அசைவுகளிலும் அதிகாரம் பற்றிய பிரச்சனையில் விட்டுக் கொடுப்பின்றி **சிங்களத் தலைமை,** சிறுபான்மை தமிழ்த் தலைமைகளுடன் போட்டி போட்டு வெற்றி பெற்று வந்தது. பிரித்தானிய எதிர்ப்பு அரசியலில் அதிகாரத்தில் விட்டுக் கொடுப்பும் சமரசமும் செய்து கொள்ள தயாராக இருந்தது. எனவே கொலனிய எதிர்ப்பு தேசிய இயக்கத்தை கட்டியமைக்கப் புறப்பட்ட சிங்களத் தலைமை, சிங்கள தேசிய இயக்கத்தை பலப்படுத்தியது. **1948 ஆட்சி அதிகார மாற்றத்துக்கு முன்பே உள்நாட்டில் தனது அரசியல் அதிகாரத்தை உறுதிப்- படுத்திக் கொண்டது.** 1936 தேர்தலின் பின் அமைந்த **'முழுச் சிங்கள அமைச்சரவை'** நல்ல உ+ம், அதிகார மாற்றத்தின்பின் சட்டரீதியாக சிறுபான்மை இன மக்களை நசுக்க தொடங்கியது. எனவே அரசியலையும் அதிகாரத்தையும் தனித் தனியாக பார்க்க முடியாது. இலங்கை மக்களின், ஏன் சிங்கள பெரும்பான்மை மக்களின் கொலனிய எதிர்ப்பு தேசிய விடுதலை இலட்சியத்துக்கு துரோகம் இழைத்துவிட்டு, காட்டிக் கொடுத்து விட்டு சிங்கள நிலப்பிரபுத்துவ வர்க்கமும், தரகு முதலாளிய வர்க்கமும் அதன் அரசியல் இயக்கங்களும் பிரித்தானியாவுடன் சமரசம் செய்து கொண்டன. தேசிய இயக்கத்தை கட்டியமைக்க சிங்கள மக்களை ஒன்றுதிரட்ட பயன்படுத்திய இன, மத உணர்வுகள், கலாச்சார பெருமிதங்கள், தேசிய உணர்வுகளை அதிகார மாற்றத்தின் பின், நவகொலனித்துவ ஆட்சியை தொடர, தக்க வைக்க சிங்கள இன, பௌத்த மத வெறியாக, பேரின தேசிய வெறியாக சிங்கள மக்களுக்கு ஊட்டினர். சிங்களத் தலைமை சிங்களப் பெரும்பான்மை மக்களின் 'மாபெரும் எதிர்ப்பு இன்றி' சிறுபான்மை மக்களை நசுக்கினர். 'இலங்கை அரசுக்கு' பதிலாக **'சிறீலங்கா அரசை'** நிறுவியவர்.

பிரித்தானிய கொலனிய எதிர்ப்பு தேசிய விடுதலை இயக்கம், சிங்கள நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ அரசியல் தலைமை-களால் சமரசப்படுத்தப்பட்ட போதும், நவகொலனித்துவ சிறீலங்கா அரசு. சிறு-பான்மை மக்களை நசுக்கி சிங்களத் தேசிய வெறியை கட்டியமைத்த போதும், இன்று

www.tamilarangam.net



பெரும்பான்மை சிங்கள மக்கள் வல்லரசுகளையும் சிறீலங்கா அரசையும் ஒன்று சேர எதிர்த்து மீண்டும் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை கட்டவேண்டிய வரலாற்று சூழலில் இருக்கிறார்கள்.

தமிழ்த் தலைமைகள் கொலனித்துவ எதிர்ப்பு அரசியலை முன் வைத்தனர். அதேவேளை சிறுபான்மை இன மக்களின் நலன்கள், உரிமைகளுக்கு எதிராக சிங்களத் தலைமை முன்நிறுத்திய தேசிய அரசியலுக்கான சிங்கள இன, மத, கலாச்சார அடிப்படையை கண்டு கொண்டது. ஆனால் தமிழ் மக்களை ஏனைய சிறுபான்மை மக்களை அரசியல் ரீதியில் ஒன்றிணைக்க தமிழ்த் தலைமையும் தன்னிடம் இருந்த இன, மத, கலாச்சார ஆயுதங்களைத்தான் பயன் படுத்தியது. **'யாழ், சைவ, வேளாள ஆதிக்க கருத்தமைவு,'** முசுலீம் மக்களையும், மலையகத் தமிழ் மக்களையும் இணைக்கவும் சிறுபான்மையினர் அய்க்கியத்துக்கு தடை-யாகவும் விளக்கியது. ஏன் வடக்கு கிழக்கு பூர்வீகத் தமிழர்களிடம் கூட ஒன்றிணைந்த பலமான கொலனிய எதிர்ப்பு தேசிய இயக்கம் கட்டியமைக்கப்படவில்லை. மொழி ஒன்றாக இருந்த போதும் சிறுபான்மை இனங்களுக்கு இடையில் வரலாற்று ரீதியில் மண்ணுடனான நிலை கொள்ளலில் இருந்த இடைவெளிகள், மற்றும் மத வேறுபாடுகள், சமூக உருவாக்கத்தில் இருந்த அடிப்படை வேறுபாடுகள், கலாச்சார பெருமிதங்கள், இழிவுபடுத்தல்கள் இவற்றை வெற்றி கொள்ளும் வழியில் கொலனிய எதிர்ப்பு தேசிய அரசியல் வழி, தமிழ்த் தலைமை-களிடம் இருக்கவில்லை. பூர்வீக தமிழர்-களதும், முசுலீம்களதும் அரசியல் தலைமை என்பது, அன்று நிலப்பிரபுத்துவ, முதலாளி வர்க்க தலைமைகளாகவே இருந்தது. மலைய மக்களிடம் தொழிற்சங்க தலைமையே இருந்தது. **இம்மூன்று இனப்பிரிவுகளின் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார வளர்ச்சி என்பது மிக ஆழமான ஏற்றத் தாழ்வுகளை கொண்டிருந்தது.** இம்மக்கள் மத்தியில் இருந்து அரசியல் தலைமை வழங்கிய சுரண்டும் வர்க்கம், சிறுபான்மை இனங்களுக்கு இடையில் அய்க்கியம் ஏற்படுத்துவதை, உளப்பூர்வமாக முன்னெ-டுக்க வில்லை, (தடுத்தனர்) முன்னெடுக்காது. அதேவேளை சிங்களத் தலைமையுடன் சிறுபான்மையினர் உரிமை, அதிகாரம் தொடர்பான முரண்பாடுகள் ஏற்பட்ட போது சமரசத்துக்கான போராட்ட வழிமுறை-களைத்தான் முன்னெடுத்தார்கள், இலங்கை கொலனிய எதிர்ப்பு தேசிய இயக்கத்துள் சிங்களத் தலைமையுடனும், பிரித்தானியத் தலைமையுடனும் சமரசப்பட்டார்கள். சிறு-பான்மைத் தலைமைகள் தங்களுக்குள்ளும் தேவையான போது சமரசம் கண்டனர். ஒருக்காலும் கொலனிய எதிர்ப்பு தேசிய இயக்கத்துள் தமிழ் தேசிய இயக்கத்தை உருவாக்குவது பற்றி தமிழ்த் தலைமை சிந்திக்கவில்லை. ஏன் முசுலீம், மலையக தலைமைகள் கூட அப்படி முசுலீம், மலைய தேசிய இயக்கத்தை முன்னிறுத்தியதாக வரலாற்று குறிப்புக்களை நாம் பார்க்க வில்லை.

சம பிரதிநிதித்துவ, இன அடிப்படைக் கோட்பாடு பற்றி பேசுவதற்கும், முன்னிறுத்துவதற்கும், தேசிய சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை பேசுவது முன்னி-றுத்துவதற்கும் இடையில் வேறுபாடு உண்டு என்பதை கவனிக்க வேண்டும், தமிழ்த் தலைமை அல்லது சிறுபான்மை இனங்களின் தலைமை, சிங்கள தலைமையுடன் சேர்ந்து, கொலனிய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்து, துரோகம் இழைத்து, பிரித்தானியருடன் சமரசப்பட்டு, நவகொலனித்துவ அரசியல் அதிகார மாற்றத்தில் பங்கு கொண்டது. சிறுபான்மை-யினர் உரிமை அதிகாரத்தை விட்டுக் கொடுத்து சிங்களத் தலைமையுடனும் சமரசப்பட்டு சிறுபான்மை மக்களுக்கு துரோகம் இழைத்தது தமிழ்த் தலைமை. **ஆனால்** சிங்களத் தலைமை பிரித்தானி-யருடன் மட்டும் சமரசப்பட்டது. கொலனிய எதிர்ப்பு இலங்கை தேசிய விடுதலை இயக்கத்துக்கு இரண்டு பக்க சுரண்டு வர்க்க தலைமைகளும் துரோகம் இழைத்தனர். (இலங்கைத் தொழிலாளி வர்க்க தலைமைகளின் தவறுகள், துரோகங்களை தனியாக பார்க்க வேண்டும்)

அதிகார மாற்றத்தின் பின்பு இலங்கை அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராக சிறுபான்மை இனமக்களும், அவர்கள் மத்தியில் இருந்த அரசியல் இயக்கங்களும். சிறுபான்மை இனங்களின் சனநாயக

www.tamilarangam.net



உரிமைகளுக்காக, இன, மத, மொழி, பிரதேச சமத்துவ உரிமைகளுக்கு போராடினர். சிங்கள இனவாத தலைமைகள் இலங்கை அரசை **'சிறீலங்கா பேரினவாத அரசாக'** மாற்றினர். இதன் தொடர்ச்சியில் தமிழ் மக்கள் குறிப்பாக பூர்வகுடி தமிழர்கள் தங்களை ஒரு தேசிய இனமாக அடையாளம் கண்டு தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தேசிய அரசு அமைப்பதற்கான தேசியப் போராட்டத்தை 70-களின் நடுப்பகுதியில் உருவாக்கினர். பாராளுமன்றப் பாதையை தூக்கி எறிந்துவிட்டு, ஆயுதப் போராட்டப் பாதையை முன்னிறுத்திய தமிழ்த் தலைமைகள் கூட தேசிய இனம், சுயநிர்ணய உரிமை, தேசிய அரசு, ஆயுதப் போராட்ட பாதை இவற்றில் மட்டும்தான் பழைய பாராளுமன்ற தலைமைகளில் இருந்து வேறுபட்டு நின்றார்கள். மொழியால் ஒன்றாக இருக்கும் சிறுபான்மை மக்களை (முசுலீம், மலையக) அவர்களது சுய அடையாளங்களுடன் சனநாயக பூர்வமாக தமிழீழ தேசிய இயக்க அரசியலில், போராட்டத்தில் மக்களை ஒன்றிணைக்க முடியவில்லை. (முசுலீம், மலையக மக்கள் மத்தியில் இருந்த அரசியல் தலைமைகள் மேல் வெறுப்புற்றிருந்த தமிழீழ தேசிய இயக்கம் இளைஞர் சக்தியை இணைத்தது) ஏன் வடக்குக்கும், கிழக்குக்கும் இடையிலான இடைவெளியை சனநாயக பூர்வமாக அகற்றி ஒன்றிணைக்க முடியவில்லை. **யாழ் சைவ வேளாள ஆதிக்கம்** புதிய வடிவில் தன்னை மறு உருவாக்கம் செய்யப்பட்டது. இது **தமிழீழ இயக்க தலைவர்களின் அறியாமை, தவறு அல்லது தமிழீழ குட்டி முதலாளிய அரசியலின் வெளிப்பாடு.**

சிங்களத் தலைமையிடம் இருந்து; சிறீலங்கா அரசிடம் இருந்து பிரிந்து தமிழீழ தேசம். தேசிய அரசு அமைப்பதற்கான 20 ஆண்டு ஆயுதப் போராட்டம்; பிரித்தானியரிடம் இருந்தும்; எல்லா வல்லரசுகளிடம் இருந்தும் தமிழீழ தேசமும், மக்களும் விடுதலை அடைவதற்கான அரசியலை முன்னிறுத்த போராட மறுப்பதன் மர்மம் என்ன? புலிகளிடம் (LTTE) கூட இத்தகைய உண்மையான பெரும்பான்மை மக்களின் நலனுக்கான விடிவுக்கான **தமிழீழ தாகம்** ஏன் இல்லை? இங்கேதான் நவகொலனியத்துவத்தில் தமிழீழச் சுரண்டும் வர்க்கங்களின் நவீன பரிமாணம் கொண்ட தேசிய அரசியல் மாறி, மாறி வெளிப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சனையும், இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களும், தமிழீழ தேசியப் போராட்டமும் 1985-களின் பின் மிகவும் கடுமையான இடியாப்பச் சிக்கலாக மாறிவிட்டது. இச்சிக்கலை எவ்வாறு புரிவது? இச்சிக்கலை தீர்க்கும் வகையில் எக்கணம் புரிந்து தீர்வை முன்வைப்பது? போராடுவது என்பதில் புரட்சிகர தேசபக்த சக்திகளிடம் கூட எதிரும் புதிருமான பார்வைகள், தீர்வுகள் வெளிவரத் தொடங்கியுள்ளது.

**'தமிழீழ மக்கள் கட்சி'** கொலனித்துவ காலத்தில் **நான்கு இனங்கள்** உருவாகிவிட்டதாக (சிங்களவர், ஈழத்தமிழர், முசுலீம்கள், மலையகத் தமிழர்) ஒரு சமநிலைப் பார்வையை முன்வைத்துள்ளது, அதிகார மாற்றத்தின் பின் சிங்களவர் அதிகாரத்தை கைப்பற்றி தேசமாக உருவாகிவிட்டனர். சிங்களத் தேசத்தின் அடக்கு முறைக்கு எதிரான போராட்டத்தின் மூலம் ஏனைய இனங்களும் **தனித்தனி தேசங்களாக** உருப்பெற்றனர் என அடுத்த கட்ட சமநிலைப் பார்வையை எட்டியுள்ளது.

**''சமூகளவில் நடந்தேறிவிட்ட பிளவு அரசியல் ரீதியாக முற்றுப் பெறாமையே (அரசியல் அதிகாரத்தை நிறுவாத நிலைமை) இன்றைய தேசிய ஒடுக்கு முறையின் சாராம்சம்''** என்கிறது. இலங்கையின் இனப்பிரச்சனைக்கு மட்டு மல்ல. நவகொலனித்துவ நாடுகளின் தேசிய இனப்பிரச்சனைக்கும், ஏன உலகளவில் கொழுந்து விட்டு எரியும் தேசிய இன பிரச்சனைகளுக்கு கூட இலகுவாக தீர்வு கொடுக்கும் கோட்பாடு முன்வந்துவிட்டது.

இக்கோட்பாட்டின் பின்புலம் பற்றி ஆராய்வதற்கு முன் ஒரு தீர்மானம் செய்வோம். இலங்கையில் பூர்வீகத் தமிழர், பூர்வீகச் சிங்களவர், 9-ம் நூற்றாண்டில் இருந்து இணைந்துவிட்ட முசுலீம்கள், 19-ம் நூற்றாண்டில் இருந்து இணைந்துவிட்ட மலையகத் தமிழர்கள் உள்ளனர். சிங்களவர்களை ஒரே சமூகமாக இன ரீதியில் மட்டும் அடையாளம் காணலாம். (சிங்கள இனத்திலும் பௌத்த மதத்தவர்களும், கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். சுரண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வர்க்கமும் சுரண்டப்படும் வர்க்கமும் சாதிகளும், இருக்கின்றன. பிரதேச வேறுபாடுகளும் இருக்கின்றன.)

தமிழர்களை ஒரே சமூகமாக மொழி ரீதியில் மட்டும் அடையாளம் காணலாம். (மண்ணுடன் பிணைக்கப்பட்ட வரலாற்றுக் காலம், பிரதேச வேறுபாடுகள், சுரண்டும். சுரண்டப்படும் வர்க்க வேறுபாடுகளும் இருக்கின்றன. தமிழ் மொழியை பேசுபவர்களுக்குள் இந்து, கிறிஸ்தவ, முசுலீம் மதத்தவர்களும், மதக் கலாச்சார வேறுபாடுகளும், சாதிவேறுபாடுகளும் உள்ளன.) தமிழர்கள் அனைவரும் சிறீலங்கா அரசின் இன, மத, மொழி ஒடுக்குமுறைகளை பிரதேச ஆக்கிரமிப்புக்களை, பொருளியல் சுரண்டல்களை வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு முறைகளில் தனியாகவும் கூட்டாகவும் எதிர்கொண்டனர். தமிழீழத் தேசிய இயக்கம் வடக்கு, கிழக்கு பூர்வீக தமிழர்களின் நிலங்களை ஒன்றிணைத்து தேசிய அரசு அமைக்கும் நோக்கில்தான் வெளிப்பட்டது. இதற்குள் இருந்த மலையக, முசுலீம் மக்கள் நேரடியாக தமிழீழத் தேசிய இயக்கத்தில் இனைய முடிந்தது, வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற (இலங்கையின் முசுலீம்களில் அரைப் பங்கினர் சிங்கள மொழி பேசுபவர்களும் உள்ளனர்) முசுலீம்களும், மலையகத்தில் வாழ்கின்ற 90% மலையகத் தமிழர்களும், தமிழீழத் தேசிய இயக்க அரசியலை, போராட்டத்தை பல வழிகளில் ஆதரித்தனர். பல வழிகளில் பங்கு கொண்டனர் தமிழீழத் தேசிய இயக்கத்தில், தமிழீழத் தேசியப் போராட்டமும், தேசிய அரசும் உருவானால். தாங்கள் முகம் கொண்டிருக்கின்ற சிறீலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டுள்ள ஒடுக்கு முறைகள் நேரடியாகவோ - மறைமுகமாகவோ முடிவுக்கு வரும் என நம்பினர். முசுலீம், மலையக மக்கள் மத்தியில் இருந்த விழிப்படைந்த அரசியல் சக்திகள் தமிழீழ தேசிய இயக்கத்தில் உணர்வுபூர்வமாக இணைந்து கொண்டனர். தங்கள், தங்கள் பகுதிகளில் சுயமான **தனித் தேசிய இயக்கத்தை பற்றி** 1985-களுக்கு முன் அவர்கள் நினைத்து பார்த்ததாகக் கூடத் தெரியவில்லை.

தமிழீழப் போராட்டத்தின் தொடக்கத்திலேயே மொழியின் அடிப்படையில் தனிநாடு கோருவதா, இல்லையா என்ற விவாதம் நடந்தது. இதில்தான் **ஈழம், தமிழீழம்** என்ற கருத்தாக்கங்கள் எதிர் எதிர் நிலையில் நின்று, இயக்கங்களாகவும் வெளிப்பட்டது. இன்று புலிகள் போராட்டத்தின் தீர்மானகரமான சக்தியாக தொடர்வதால் **'தமிழீழம்'** என்ற பெயர் மையக் கருத்தாகி விட்டது. நமது நாடு **'ஈழம்'** என்ற பார்வை பலவீனப்பட்டுள்ளது.

தேசியப் போரை தொடரவும், புலிகள் வடக்கு கிழக்கு தமிழீழ நிலப்பகுதிக்குள் உள்ள முசுலீம் மக்களை, தமிழீழ தேசிய இயக்கத்தின் போக்கில் சனநாயக பூர்வமாக இணைக்க தவறியது மட்டுமல்ல. முசுலீம் மக்களுக்க எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதால், தமிழீழம் என்பது பூர்வீகத் தமிழரின் இயக்கமாக பார்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. முசுலீம் மக்கள், புரட்சிகர தேசபக்த சக்திகள் கூட புலிகளின் தமிழீழத்தின் மேல் நம்பிக்கையை இழந்து செல்கின்றனர்.

**பூர்வீகத் தமிழர்கள்** என்ற வார்த்தை முசுலீம் மக்களை, மலையக மக்களை குடியேறிகளாக பார்க்கவும், கருதவும் வழி சமைக்கின்றது. எனவே **'தமிழீழ'** தேசியப் போராட்டம் தீர்மானமான அரசியல் இயக்கமாக இருக்கையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் (பூர்வீக தமிழர், முசுலீம்கள், மயைலக) நாடு ஈழம் என்று முன்னிறுத்துவதை விட்டு - விட்டு. **பூர்வீகத் தமிழர்** என்பதற்கு பதிலாக **ஈழத்தமிழர்** என்ற வார்த்தையை பயன்படுத்தலாம் என தீர்மானம் கொள்வோம்.

வடக்கு, கிழக்கு இணைந்த தமிழீழத்தில், ஈழத்தமிழர்கள், நிரந்தரமாக வாழ்கின்ற மலையகத் தமிழர்கள், (வாழ்நிலையில் அனைத்து துறைகளிலும் சனநாயக பூர்வமாக இணைக்கப்படும் நிகழ்ச்சிப் போக்கு தொடர்ந்து இருந்தால் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முசுலீம்களை தமிழீழ மக்களாக பரிணமிப்பார்கள்) முசுலீம் மக்கள் உள்ளனர். தமிழீழத் தேசிய இயக்க அரசியல், போராட்டம், தேசிய அரசு இம்மூன்று சமூகப் பின்னணி கொண்ட மக்களையும் சனநாயக பூர்வமாக இணைக்கும் முயற்சியில் வெற்றி காணும்போது ஈழத்தமிழர்களின், தேசிய இயக்கமாக மட்டும் **தமிழீழம்** பார்க்கப் படுவது தோல்வியுறும், இல்லையெனில்



தமிழத தேசிய ஆவணச சுவடிகள்

www.tamilarangam.net



புதிய, புதிய போக்கில் தேசிய இயக்க அரசியல் வெளிப்படும். இன்றைய நிலையில் இம்மூன்று சமூகப் பின்னணிகளிலும் உள்ள தொழிலாளி வர்க்க அரசியல் சக்திகள், தமிழீழ தேசிய இயக்கத்தை சனநாயக பூர்வமாக பலப்படுத்தும் முயற்சியை இலக்காக கொள்ள வேண்டும், சனநாயக பூர்வ வழிமுறைக்கு எதிராக நிற்கும். தமிழீழக் கோரிக்கைக்காக போராடிக் கொண்டே தமிழீழ தேசிய இயக்கத்தை பலவீனப்படுத்தும் புலிகளின் நடவடிக்கைகள் உட்பட, எல்லா அரசியல் இயக்கங்களின் குறுந்தேசிய பிளவு நடவடிக்கைகளையும் எதிர்த்து அம்பலப்படுத்தி செயற்பட வேண்டும். வல்லரசு எதிர்ப்பு இல்லாத, தொழிலாளி வர்க்க அய்க்கியத்தை கோராத, இன, மத, மொழி பிரதேச, சாதி, ஆண் - பெண் முரண்பாடுகளை சனநாயக பூர்வமான வழிமுறைகளில் தீர்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்காத, நடைமுறையில் போராடாத, தனித்தனி கூட்டை முன்வைத்து தமிழீழ தேசிய இயக்கத்தை மறைமுகமாகவேனும் பலவீனப்படுத்தும் அரசியல் கருத்துக்கள் இயக்கங்களை, தமிழீழத் தொழிலாளி வர்க்கமும், (ஈழத்தமிழ் மக்கள், முசுலீம் மக்கள், மலையக மக்கள்) புரட்சிகர சக்திகளும் அன்னியப்படுத்த வேண்டும்.

தமிழீழ ஆயுதப் போராட்ட தலைமைகள் கூட முசுலீம் மக்களை, மலையக மக்களை ஈழத்தமிழர்களை தமிழீழத் தேசிய அரசியல் திட்டத்தில் எவ்வாறு சனநாயக பூர்வமாக இணைப்பது என்பதை தெளிவாக முன் வைக்கவில்லை, தமிழீழத் தேசிய இயக்கங்களில் இணைந்த முசுலீம், மலையகப் போராளிகளை இயக்கத்தில், போரில் அணுகுவதிலும் யாழ், சைவ வேளாள சித்தாந்தமே நடைமுறையில் வெளிப்பட்டது. பாராளுமன்ற தமிழ்த் தலைமைகளின் அணுகுமுறையை விட ஆயுதப் போராட்ட தலைமைகளின் அணுகு முறை மிக மூர்க்கத் தனமாக இருந்தது உ+ம் புலிகள் வடக்கில் இருந்து முசுலீம் மக்களை வெளியேற்றிய அணுகுமுறை, EPRLF, EROS, PLOT மலையக போராளிகளை கையாண்ட முறை ......... மற்றைய இயக்கங்களும் வேறு வழிகளில் அணுகின.

**ஒரு கையால்** சிறீலங்கா அரசுக்கு எதிராக உக்கிரமாக போராடிக் கொண்டு **மறுகையால்** சக இயக்கங்களை மூர்க்கமாக அழித்து வந்த புலிகள் மக்கள் மீதும் தங்கள் இயக்க அராஜகத்தை தேசிய நலன், இயக்க நலன் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தி வந்தனர், 87 ஒப்பந்தத்துடன் மற்றைய தலைமைகள் சிறீலங்கா அரசுடன் சமரசமாகி விட, புலிகளின் பழைய சக இயக்க அழிப்பு **தேசிய நியமாக** உருவெடுத்துள்ளது. புரட்சிகர தேசிய இயக்கத்தை கட்டுவதில் நடந்த தவறுகள் பற்றி மறுபரிசீலனை செய்து கொண்டிருந்தவர்களுக்கு; புலிகளின், முசுலீம் மக்கள் மிதான 91 வெளியேற்றும் நடவடிக்கை. முசுலீம், மலையக மக்கள் மத்தியிலும், தமிழீழ தேசிய இயக்கத்தின் எதிர்காலம் பற்றி அக்கறை கொண்ட முசுலீம், மலையக, ஈழத்தின் விழிப்படைந்த அரசியல் சக்திகள் முன், **தேசிய இனப்பிரச்சனை. தேசிய இனவரையறை, தேசிய சுய நிர்ணயம், தேசிய அரசு** பற்றிய புதிய பார்வைகள், உள்நாட்டு, உலக நடப்புக்களுடன் வெளிவந்தது.

உ+ம் — முசுலீம், மலையக மக்கள் தேசிய இனம், தேசிய சுயநிர்ணயம் உரிமை உண்டு.

— முசுலீம், மலையக மக்கள் தேசிய இனம், சுயாட்சி உரிமை உண்டு.

— முசுலீம், மலையக மக்கள் தேசிய இனமாக வளர்பவர்கள் அதை ஆதரித்து சுயாட்சி உரிமை கொடுத்தல்.

— முசுலீம், மலையக மக்கள் இனம், தேசமாக உருவாகிவிட்டார்கள். தனித் தேசிய அரசுக்காகப் போராடுவது.

— முசுலீம் மக்கள் மதச் சிறுபான்மை, மலையக மக்கள் மொழிச் சிறுபான்மை சுயாட்சிக்காகப் போராடுதல்.

— முசுலீம், மலையக மக்கள் தேசியச் சிறுபான்மை சுயாட்சிக்குப் போராடுதல். தமிழீழ மக்கள் கட்சி இனம், தேசம், தேசிய அரசு பற்றிய நிலைப்பாட்டை முன் வைத்துள்ளது.

20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடந்த சோவியத் சோலிசப் புரட்சி, நடுப்பகுதியில் நடந்த சீனப் புதிய சனநாயகப் புரட்சி, இவற்றின் வெற்றி - தோல்வி பற்றிய கணிப்பீட்டில், அடிப்படையான கோட்பாட்டு, அரசியல் மாற்றங்களில் கவனத்தை குவித்து மதிப்பிடுவர்களும், நடைமுறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெற்றி தோல்விகளின் மாற்றத்தில் கவனத்தை குவித்து மதிப்பிடுபவர்களும் உண்டு. இரண்டு வித மதிப்பீடுகளும் முடிவுகளும், மலைக்கும் - மடுவுக்குமான வேறுபாட்டை கொண்டிருக்கிறது.

தேசிய இனப்பிரச்சனையை இவ்இரண்டு சமூகப் புரட்சிகளும் அணுகிய முறைகளில் இருந்து மட்டும் பொதுச் சாரத்தையும் அதன் முடிவுகளையும் அப்படியே எடுத்து பிரயோகித்தவர்களை தங்கள் தங்கள் நாடுகளில் நடந்து வரும் தேசிய இனப் பிரச்சனை மற்றும் போராட்டங்களின் வெளிப்பாடு மீண்டும் நவீன மார்க்கங்களை நோக்கி இழுத்து செல்வது நடக்கிறது.

கொலனித்துவ கால தேசிய இனப்பிரச்சனைக்கும், நவ கொலனித்துவ கால தேசிய இனப்பிரச்சனைக்குமான அடிப்படையை சிறிது கவனிப்போம். தேசிய ஒடுக்குமுறையின் சாரத்தை புரிந்து கொள்வோம்.

மனிதகுல வரலாற்றில் முதன்முதலில் நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பை உடைத்து முதலாளித்துவம் உருவான போது வெளிவந்த **தேசியப் பிரச்சனை** முதலாளித்துவத்தின் தலைமையில் தீர்க்கப்பட்டது. ஒரு வகையானது. மாபெரும் பேரரசுகளில் தேசிய இனங்கள் நசுக்கப்பட்டது. (முதலாளித்துவ தலைமைக்கு பதிலாக தொழிலாளிவர்க்க தலைமையில் **தேசியப் பிரச்சனை** சமூக புரட்சி மாற்றத்துடன் தீர்க்கப்பட்டது ஒரு வகை.) முதலாளித்துவம் வல்லரசியமாக மாறிய பின் கொலனிய காலகட்ட தேசியப் பிரச்சனை இன்னோர் வகையானது.

வல்லரசிய கொலனிய முறைக்கு எதிரான **தேசியப் பிரச்சனையை,** புதிய சனநாயகப் புரட்சியின் கடமையாக எடுத்துக் கொண்டு தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் சமூக புரட்சியுடன் கொலனிய எதிர்ப்பு தேசியப் பிரச்சனையும், கொலனிக்குள் இருந்த தேசிய இனங்களின் சுயநிர்ணயப் பிரச்சனையும் தீர்க்கப்பட்டது ஒரு முறை.

கொலனிய முறைக்கு எதிரான **தேசியப் பிரச்சனை** நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ தலைமை சமூக மாற்றம் இன்றி கொலனிய சமரசத்துடன், நவகொலனித்துவ ஆட்சி அதிகார மாற்றத்துடன் திசை திருப்பப்பட்டது ஒரு வகை. நவகொலனிய நாடுகளுக்குள் அதிகார மாற்றத்தின் பின் தொடங்கி கொழுந்து விட்டு எரியும். **தேசிய இனங்களின் பிரச்சனையும்** தீர்வுக்காண முறைகளும் வேறு முறையில் வெளிப்படுகிறது.

ஒன்று வல்லரசிய நவகொலனித்துவ சமூக அமைப்புடன் சமரசம் செய்து கொண்டு. தேசிய அரசுகளை நிறுவுவது. உ+ம் பாலஸ்தீனம், எரித்திரியா, தென் ஆபிரிக்கா, பங்காளதேஷ், தென் ஆபிரிக்கா, அயர்லாந்து.

இரண்டு. வல்லரசிய நவகொலனித்துவச் சமூக அமைப்பை மாற்றும் பேராட்டத்துடன் தேசிய அரசுகளை நிறுவுவதற்கான போராட்டம் தொடர்வது (உ+ம்) குர்திஸ்தான், பிலிப்பைன்ஸ், உலகின் நிலவிய முதிலாளித்துவ வல்லரசிய சித்தாந்தமும் கோட்பாடுகளும் அரசியலும், அதிகார கட்டமைப்பும் ஒரு பார்வையும், மனிதகுல வரலாற்றில் முதலில் தோன்றிய வெற்றி கண்ட சோசலிச, புதிய சனநாயக புரட்சிகளும் சித்தாந்தமும் கோட்பாடுகளும் அரசியலும், அதிகார கட்டமைப்பும் புதிய ஒரு பார்வையையும் மனிதகுலத்துக்கு வழங்கியது. கொலனிய எதிர்ப்பு தேசியப் போராட்டத்திலும், நவகொலனிய நாடுகளில் நடக்கும் தேசியப் போராட்டங்களிலும் மேற்கண்ட இரண்டு மார்க்கங்களும் வெளிப்பட்டு நின்றது. நிற்கிறது.

கொலனிய எதிர்ப்பு தேசியப் போராட்டத்தையும், சமூகப் புரட்சியையும் சரியாகப் புரிந்து இணைத்து தலைமை தாங்கி வெற்றி கொள்ள முடியாத நாடுகளின் தொழிலாளி வர்க்க அரசியல் இயக்கம் (கொலனிய எதிர்ப்பு முதலாளித்துவ இயக்கத்தின் வாலாக மாறியது) கொலனிய எதிர்ப்பு தேசியப் போராட்டத்தின் திசை திருப்பத்தையும், நவகொலனிய ஆட்சி அதிகார மாற்றத்தையும் புரிந்து கொள்ள வில்லை, இந்நிலையில் நவகொலனிய நாட்டுக்குள் எழுந்த தேசிய இனப் பிரச்சனைகளை சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை, விளைவு நவகொலனிய நாடுகளின் தேசிய இனப்பிரச்சனையில், போராட்டத்தில் குட்டி முதலாளிய முதலாளிய தேசிய பார்வைகளுக்கு தொழிலாளி வர்க்கம் பலியாகின்றது. வால் பிடிக்கிறது அல்லது தூய்மையான வர்க்கப் புரட்சி பற்றி பேசிக் கொண்டிருக்கிறது. (இலங்கையில் தேசியப் போராட்டங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏதோ ஒரு வகையில் முடிவுக்கு வரட்டும் அப்புறம் சமூகப் புரட்சியை நடத்தலாம் அதுவரை ஆபத்து இல்லாமல் பேசுவது, எழுதுவதுடன் நிறுத்துவது என்ற பார்வையில் தொழிலாளி வர்க்க அரசியல் இயக்கம் இரண்டு வழிகளில் கலைப்பு வாதத்துக்குள் மூழ்குகிறது) இன்று கலைப்பு வாதத்துக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டத்தில் புரட்சிகர கட்சி வளர வேண்டியுள்ளது.

சோவியத், சீனப் புரட்சிகளின் பின் அந்நாடுகளின் நடந்த முதலாளித்துவ பாதையின் எதிர்ப்புரட்சி வெற்றியானது. இன்று உலக தொழிலாளி வர்க்க இயக்கத்தில், தேக்கத்தை, புதிய கோட்பாட்டு போக்கு-களை முன்னிறுத்தியுள்ளது. தேசிய இனப்பிரச்சனையிலும் இது வெளிப்-படுகிறது. **நவகொலனிய கட்ட தேசியப் பிரச்சனைகளை,** முதலாளித்துவ வல்லரசிய சித்தாந்தமும் அரசியலும், அரசுகளும் புதிய போக்குகளில் கையாழ்கிறது, தேசியப் போராட்டத்தை முன்னெடுக்கும் குட்டி முதலாளித்துவ வர்க்க சித்தாந்தமும் அரசியலும் தமக்கான புதிய போக்குகளை வெளிப்படுத்துகிறது. இப்போக்குகளுக்கு வால் பிடிக்காமல், பலியாகாமல் தொழிலாளி வர்க்கம் தேசியப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்கு தொழிலாளி வர்க்கம் தனது வர்க்க சித்தாந்தத்தை, அரசியலை ஆழமாக புரிந்து கொள்வது நிபந்தனையாகிறது, புதிய நிலைமைகளில் தேசியத்தையும் சர்வ தேசியத்தையும் தொழிலாளி வர்க்க சமூகப் புரட்சி வழியிலிருந்து இணைக்க வேண்டியுள்ளது.

கொலனியல் கட்டத்தில் வல்லரசு நாடுகள் ஒவ்வொரு கொலனிய நாடுகளையும் ஆக்கிரமித்த முறையும், ஒருங்கிணைத்த வழியும், அந்நாடுகளின் பகுதிகளின் குறிப்பான தன்மைகளுடன் வெளிப்பட்டது பலவந்தமாக ஆக்கிரமித்து ஒருங்கிணைத்த மன்னர் ஆட்சிகளும், நிலப்பிரபுத்துவ முறையில் கூட ஒரே சமச்சீரான வளர்ச்சியை கொண்டிருக்கவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட இன, மத, மொழி, பின்னணி கொண்ட மக்கள் பூர்வீக சமூகங்களை, கொலனிய அரசுளால் நாடு விட்டு நாடு குடியேற்றப்பட்ட மக்களையும் ஒன்றாக ஒரே நாடாக பலாத்கார முறையில் ஒன்றிணைத்தது. கொலனிய நாடுகளில் பூர்வீக சமூகங்களோ குடியேறிய, குடியேற்றப்பட்ட மக்கள் சமூகமோ அவற்றின் அக சமூக வளர்ச்சியில் - இன வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வான சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டு நிலைகளில் இருந்தன. அவற்றின் அக சமூக வளர்ச்சி இன வளர்ச்சி சமச்சீராக இருக்க வில்லை. கொலனிய ஆக்கிரமிப்புக்கு முன் மன்னர் ஆட்சிகளுக்கு இடையில் நடந்த மோதல்களில், வேறு இன, மத, மொழி கொண்ட மன்னர் ஆட்சிகளால் வென்றதும் - தோற்கடிக்கப்பட்டதுமான சமூகங்களும் கொலனிய நாட்டு எல்லைக்குள் இணைக்கப் பட்டன. ஒரே நிலத் தொடர்ச்சி கொண்ட இன, மத, மொழி பின்னணி கொண்ட மக்கள் சமூகத்தை வேறு வேறு வல்லரசுகள் தனித்தனியாக பிரித்து ஆட்சியும் செய்து வந்தன. அக்கம் பக்கமாக மன்னர் ஆட்சியும், கொலனிய ஆட்சியும் கூட நிலவியது. கொலனிய நாடுகளில், வல்லரசிய நாடுகள் தனித்தனியாக கொலனிய நாடுகளை அல்லது பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்தன.

கொலனிய அடக்குமுறைக்கும், சுரண்ட-லுக்கும் எதிரான தேசிய இயக்கங்கள் கூட, கொலனிய நாட்டுக்குள் இருந்த ஏற்றத் தாழ்வான சமூக வளர்ச்சி - இன வளர்ச்சிக்கு ஏற்பவே வெளிவந்தது. படிப்படியாக கொலனிய எதிர்ப்பு தேசிய இயக்கம் நாடு முழுவதும் பரவியது. கொலனிய எதிர்ப்பு தேசிய இயக்கத்தில் முன் கை எடுத்த இன, மத, பிரதேச பின்னணி கொண்ட அரசியல் சக்திகள் தங்களின் வரலாற்று ரீதியான இன, மத, கலாச்சார, பிரதேச, சாதிய ஆதிக்கங்-களை, கருத்துக்களை முன்வைத்து கொலனிய எதிர்ப்பு தேசிய இயக்கத்தை கட்டியமைத்-தனர். கொலனிய எதிர்ப்பு தேசிய இயக்கத்-துடன் இருந்த வேறுபாடுகளை இன, மத பூசல்களை வல்லரசுகள் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு பயன்படுத்தின. (அன்று இந்தியாவில் கொலனிய எதிர்ப்பில் நின்ற இந்து முசுலீம் மக்களின் அய்கியத்தை எத்தகைய வழிகளில் சூழ்ச்சி மூலம் பிரித்து பிளவுபடுத்தினர் என்பது சிறந்த உ+ம்) கொலனிய எதிர்ப்பு தேசியப் போராட்டம் உக்கிரம் அடைந்ததாலும், அவ்வியக்கங்கள் சமூகப் புரட்சியை (சோசலிச, புதிய சன பாதையில்) நோக்கி திரும்புவதை தடுக்கவும், முதலாளித்துவ பாதையா - சோசலிசப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாதையா என்பது உலகப் போக்காக மோதிக் கொண்டிருந்த உலக நிலைமையும், வல்லரசு-களுக்கு இடையிலான முரண்பாடுகளும், 2-வது உலக யுத்தமும், யுத்த அழிவின் சீரமைப்பு தேவையும் வல்லரசியத்தை தனது கொலனிய முறையில் மாற்றத்தை கொண்டு வர நிர்பந்தித்தது. வல்லரசு நாடுகள் தங்களுக்கு இடையில், முரண்பாட்டை தணித்து உலகக் கொலனிய முறையை தொடரும் வகையில், கொலனிய எதிர்ப்பு தேசிய இயக்கங்களில் இருந்த நம்பகமான வல்லரசியச் சார்பு சக்திகளுடன் சேர்ந்து ஒரு அதிகார மாற்றத்தை உருவாக்கின. **கொலனிய அரசுகள், நாடுகள், நவகொலனிய அரசுகளாக, நாடுகளாக மாறின.** ஆசிய, ஆபிரிக்க லத்தின் அமெரிக்க கொலனிய நாடுகள், ஒரு வல்லரசிய கொலனிக்கு பதிலாக உலக வல்லரசிய நாடுகளின் நவகொலனிகளாக மாறியது. எனவே நவகொலனி என்பது தனி ஒரு வல்லரசு பற்றிய பிரச்சனையோ, தனி ஒரு நவகொலனிய நாடு பற்றிய பிரச்சனையோ அல்ல. வல்லரசியத்தின் உலக கொலனிய சமூக பொருளாதார, அரசியல், அரசு கட்டமைப்பில் ஏற்பட்ட புதிய மாற்றமே நவகொலனியல் முறை ஆகும். இதன் அர்த்தம் வல்லரசியங்களுக்கு இடையிலான முரண்பாடு மறைந்து விட்டது என்பதல்ல. மாறாக உலக அரசுகள் முழுவதும் நேரடியாக வல்லரசிய உள்முரண்பாட்டுடன் இணைக்கப்பட்டிருக்கிறது என்பதேயாகும். இன்றைய பகுதி யுத்தமும் 3-வது உலக யுத்தம் இதை தெளிவாக வெளிப்படுத்தும்.

நவகொலனித்துவ நாடுகளின் அரசியல் அதிகார உள் மாற்றம் என்பது, அந்நாடுகளின் குறிப்பான தன்மைகளில் பார்க்க வேண்டும், நவகொலனித்துவ அரசுகளில் அரசியல் அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தி பெற்ற இன, மத, சாதி, பிரதேச பின்னணி கொண்ட அரசியல் சக்திகள். தங்களை ஆட்சி அதிகாரத்தில் படிப்படியாக பலப்படுத்தி கொண்டன. **நவகொலனித்துவ பொருளா-தாரம், அரசியல் அதிகாரம் என்பது** வல்லரசுகளுக்கும், பல் தேசிய நிறுவனங்-களுக்கும், உள்நாட்டு தரகு முதலாளி, அதிகார வர்க்கத்துக்கும், பெரும் நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்கும் சேவை செய்யும் முறையி-லேயே உள்ளது. நவகொலனிய அரசை அது கட்டப்பட்ட முறையிலே தக்கவைக்கும் நோக்கில் இன, மத, மொழி, சாதி, பிரதேச வேறுபாடுகள் ஒடுக்குமுறைகள் கைக் கொள்ளப்பட்டது. நவகொலனிய பொருளியல் சுரண்டலுக்கு உகந்த முறையில், ஆளும் வர்க்க அரசியல் கட்சிகள், இன, மத, சாதிய, பிரதேச வேறுபாடுகளை பேணி வளர்க்கும் வகையில், அரசு அதிகாரத்தை மாறி, மாறி கைப்பற்றி தக்கவைத்தன. இதற்கு இராணுவ ஆட்சிகளும் விதிவிக்கல்ல.

நவகொலனிய நாடுகளின் பொருளாதாரம், உள்நாட்டிலுள்ள வேறுபட்ட சமூகப் பின்னணி கொண்ட மக்கள் மத்தியில் மிகவும். ஏற்றத் தாழ்வான நிலையைத் தொடர்ந்து பேணியது, அரசியல் அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருந்தது. வளர்ச்சி அடைந்த தேசிய இனங்கள் முதல் பழங்குடி மக்கள் வரை நவகொலனிய பொருளாதார சுரண்டலுக்கும், பொருளாதார போட்டிக்கும் முகங் கொடுத்தனர். அரசின் இன, மத, மொழி, கல்வி, வேலை வாய்ப்பு, பிரதேச பொருளாதார ஒடுக்குமுறைக்கும் புறக்-கணிப்புக்கும் உள்ளாக்கப்பட்டனர். தங்களின் நில எல்லைக்குள் குடியேறியவர்களால், குடியேற்றப்பட்டவர்களால் தங்களின் பூர்வீக மண், மொழி, மதம், கலாச்சாரம் வேலை வாய்ப்பு, தமது இனப் பொருளாதாரம் அழிக்கப்படுவதாக கருதினர், தங்களின் அடிப்படை உரிமைகளுக்கான சனநாயக இயக்கத்தை அரசு புறக்கணித்து நசுக்கியதால் தம்மை தேசிய சுதந்திர இயக்கங்களாக வெளிப்படுத்தி போராடத் தொடங்கினர்,

தாங்கள் தேசிய இனமா? இல்லையா, தேசிய சுயநிர்ணய உரிமை உண்டா? இல்லையா? நவகொலனிய கட்டத்தில் தங்களால் தேசிய அரசை எப்படி அமைக்க முடியும் என்ற கேள்விகளுக்கு விடை கண்டு விட்டு தேசிய சுதந்திர இயக்கங்களை ஆரம்பிக்கவில்லை. தங்களை ஒன்றிணைக்கக் கூடிய இன, மத, மொழி, பிரதேச உணர்வு-களை மையப்படுத்தி தேசிய சுதந்திர இயக்கத்தை முன்வைக்கின்றனர். இம்மக்கள் சமூகத்தில் இருக்கின்ற முதலாளிய குட்டி முதலாளிய வர்க்கங்களும், அரசியல் சக்திகளும் பெரும்பாலும் தேசிய சுதந்திர இயக்கத்தை உள்நாட்டு அரசுடன் அல்லது திட்டவட்டமாக வல்லரசுகளுடன் நேரடியாக சமரசம் செய்து தங்களது நலனை அடைவதற்-கான ஒரு இயக்கமாகவே அணுகி வருகிறது. பழங்குடி மக்கள் முதல் தேசிய இனங்களின்

www.tamilarangam.net



அரசியல் போராட்ட வரலாற்றை எடுத்து நோக்கினால் இது புலப்படும்.

இங்கேதான் நவகொலனி நாட்டு தொழிலாளி வர்க்கமும், புரட்சிகர் சக்திகளும் எதன் அடிப்படையில் **தேசிய இனம்** என வரையறுப்பது, தேசிய சுயநிர்ணய உரிமையை தேசிய அரசுக்கான போராட்டத்தை எப்போது முன்னேடுப்பது, ஆதரிப்பது, 'தேசியக் கோரிக்கை எல்லாம் முதாலளித்துவ கோரிக்கைகே ஒழிய பாட்டாளி வர்க்க கோரிக்கை அல்ல' என பார்த்து நவகொலனிய தேசியப் பிரச்சனையை குறிப்பாக புரிந்து கொண்டு தெளிவான நிலைப்பாட்டை எடுக்காது அன்னியப்படுகின்றனர். மறுபக்கம் **தமிழீழக் கட்சி** போல் இனம், தேசம், தேசிய அரசு என சமநிலைப்படுத்தி விடும் தவறுக்கு செல்கின்றனர். நவகொலனித்துவ நாடுகளின் சமூகப் புரட்சி என்பது தேசிய இன அரசுகளின் உருவாக்கத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே தனித்தனி தேசிய இனங்களுக்கு ஒரு தனிக்கட்சி என்ற நிலைப்பாட்டையும் தாண்டி **ஒவ்வொரு இனங்களும், தேசங்களே, தேசிய அரசுகளை உருவாக்க** தனித்தனிக் கட்சி வேண்டும் என்கின்றது. **'தமிழீழ மக்கள் கட்சி'** தேசிய இனம் என்ற வரையறுப்பை திட்டவட்டமாக கோட்பாட்டு ரீதியாக கைவிட்டுள்ளது.

சுதந்திர தேசிய அரசை அமைப்பதற்கான சமூக அகநிலைப்பலம் என்பது **தேசிய இனமாக** வளர்ந்து இருக்கக் கூடிய ஒரு இனத்துக்கே காரிய சாத்தியமானது. உள்நாட்டு அரசுடன், வல்லரசுகளுடன் சமரசப்படாது ஒரு **'சுதந்திரமான தேசிய அரசு'** என்பது வல்லரசிய நவகொலனிய கட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஒரு சோசலிச அரசாகவோ, புதிய சனநாயக அரசாகவோ மட்டும்தான் இருக்க முடியும். அப்படி அமையாத எந்த தேசமும், தேசிய அரசும் வல்லரசிய நவகொலனிய தேசிய அரசாகவே இருக்க முடியும், என 50 ஆண்டு நவகொலனிய தேசியப் போராட்ட வரலாறு காட்டுகிறது.

**நவகொலனிய பொருளாதார முறையானது** பாரம்பரிய பிரதேசங்களில் வாழ்ந்த மக்களை நவகொலனிய நாட்டுக்குள்ளும், உலகம் முழுவதும் வேலை தேடி ஓட வைத்திருக்கிறது, இடம் பெயர்ந்து நிரந்தரமாக வாழ தூண்டியுள்ளது. மாகாண, மாநில பிரிப்புக்கள் பாரம்பரிய பிரதேசங்களை துண்டாடியிருக்கிறது. உள்நாட்டு யுத்தம், உள்நாட்டுக்குள்ளும் உலகம் முழுவதும் புலம் பெயர்ந்து, தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் மக்களை வாழ துண்டியுள்ளது. **இனம், தேசம், தேசிய அரசு** என்ற கோட்பாட்டு எங்கு வரை பாயப் போகிறது.

வல்லரசிய நவகொலனித்து பொருளாதார சுரண்டலுக்கும், இன, மத, மொழி ஒடுக்கு முறைக்கும் எதிரான போராட்டங்கள், தேசிய சுதந்திர இயக்கங்கள் இன ரீதியில், மத ரீதியில் நாடுகளின் எல்லையைத் தாண்டி சர்வதேச ரீதியான போக்காக இன்று வெளிப்படுகிறது, தனித்தனியான தேசிய சுதந்திர இயக்கங்களின் பரஸ்பர உறவும் சர்வதேச ரீதியான போக்காக வெளி வருகிறது. இவ்இயக்கங்கள் பெரும்பாலும் இன, மத, பிரதேச அடிப்படை வாதத்தை நோக்கியும், குறிப்பான இனங்கள், மதங்கள் மேலான தேசிய வெறிப் போக்கையும் வெளிப்படுத்துகிறது. கூடவே குறிப்பான ஒரு சில வல்லரசுகளுக்கு எதிரான போராட்டமாக அல்லது ஒரு நாட்டு அரசுக்கு எதிரான போராட்டமாக மட்டும் பிரகடனப்படுத்துகின்றன. இப்போக்குகளை புரிந்து கொள்ள முடியாத தொழிலாளி வர்க்கமும், அரசியல் இயக்கங்கள் கூட இத்தகைய சர்வதேச பார்வைக்கு இழுபட்டு செல்கிறது.

வல்லரசியம் கொலனிய காலத்தில் பேணிய பொருளாதார ஆதிக்க முறையை தொடர்ந்து பாதுகாத்ததுடன், நவகொலனிய கட்டத்தில் சர்வதேச நிறுவனங்களையும், நிதி மூலதனத்தையும், அனைத்து துறைகளிலுமான அறிவியல் தொழில் நுட்பத்தை கொண்டு இன்று உலகைக் கட்டிப் போட்டுள்ளது.

வல்லரசியம், நவகொலனிய கட்டத்தில் என்றும் இல்லாதவாறு உலக மயமாகி வருகிறது. வல்லரசிய எதிர்ப்பு கொண்ட தேசிய இயக்கங்களை நசுக்குவதுடன், தனது உலகமயமாதலுக்கு இசைந்த முறையில் மொழி, இன, மத, பிரதேச வழி மகாணாங்களை, மாநிலங்களை ஏற்கனவேயுள்ள நவகொலனிய அரசுக் கட்டமைப்புக்குள் அனுமதிக்கிறது, உருவாக்குகிறது. அல்லது புதிய நவகொலனிய தேசிய அரசுகளையும், அங்கீகரிக்கிறது. உ+ம் பங்களாதேசம், பாலஸ்தீனம், எரித்திரியா, கிழக்கு திமோர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிலாளி வர்க்கம் தனது உலகப் பார்வையை ஆழப்படுத்துவதுடன் குறிப்பான நாடுகளில் நவகொலனிய அரசுகளின் குறிப்பான ஒடுக்குமுறைகளை அடையாளம் காண வேண்டும், பொருளாதார சுரண்டலுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதுடன், மொழி, இன, மத, சாதி, பெண், சுற்றுச்சூழல், பிரதேச ஒடுக்கு முறைகளுக்கு எதிரான பாதிக்கப்பட்ட மக்களின் சனநாயகப் போராட்டங்களை உறுதியாக முன்னெடுக்க வேண்டும், தேசிய இனங்களின் தேசிய சுயநிர்ணயப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும், தேசிய இன எல்லைக்குள், தேசியச் சிறுபான்மை, மொழிச் சிறுபான்மை, மதச் சிறுபான்மை, பழங்குடி மக்களின் எல்லா நிலைகளிலுமான சனநாயக உரிமைகளுக்காகவும் போராட வேண்டும். இவற்றுக்கு எதிரான போக்குகளை வர்க்க, தேசிய சமரசம் இன்றி எதிர்க்க வேண்டும். சிறுபான்மை இன மக்கள் தங்களின் நீடித்த சனநாயக உரிமைக்கான **சுயாட்சி** போராட்டத்தின் மூலம், தமது அகசமூக வளர்ச்சியில் ஏற்படும் மாற்றத்தின் வழியாக தேசிய இனமாக வளர்ந்த நிலையில் அவற்றின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் முன்னெடுக்க தயராக வேண்டும்.

புதிய சனநாயகப் புரட்சி திட்டத்தில், ஒவ்வொரு சமூகப் பிரச்சனையிலும் தொழிலாளி வர்க்க சர்வ தேசியத்தையும் - தேசியத்தையும் ஆழமாக புரிந்து இணைக்க வேண்டும்.

இலங்கையில் நவகொலனித்துவ சிறீலங்கா அரசால் முசுலீம் மக்களும், ஈழத் தமிழர்களும் மலைய மக்களும் மொழி, இன, மத, சமூக பொருளாதார ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றார்கள் என்பது உண்மைதான். தங்களின் நீடித்த சிறுபான்மை இனத்தின் உரிமைக்கான அரசியல் அதிகார போராட்டத்தின் மூலம், அகசமூக வளர்ச்சியின் மூலம் ஈழத்தமிழர்கள் மட்டும் தேசிய இனமாக வளர்ந்து, தேசிய சுயநிர்ணய உரிமைக்கான தேசிய அரசு அமைப்பதற்காக போராட்டத்தை நடத்துகிறார்கள். முசுலீம், மலையக மக்கள் தங்களது சிறுபான்மை இன உரிமைகளுக்கான அரசியல் அதிகார போராட்டங்களை நடத்துகிறபோதும், அகசமூக வளர்ச்சியின் எல்லைப்படுத்தல்களால், 1913-ஆம் ஆண்டில் சிங்கள இனவெறியை எதிர்கொள்ளத் தொடங்கிய முசுலீம்கள் தனித் தேசியத்தை உருவாக்காமல் தமிழீழக் கோரிக்கைக்குள் உள்ளடங்கியே தமது தேசிய அபிலாசைகளை வெளிப்படுத்தினார்கள். இன்று தமிழீழத் தலைமைகளாலும் புறக்கணிக்கப்பட்ட நிலைமையில் (இப்புற நிலைமை மட்டுமே உடனடியாக அகசமூக வளர்ச்சியை ஏற்படுத்தாது.) சிறுபான்மை இன உரிமைகளுக்கான போராட்டங்களை மீண்டும் தாமே தலைமை தாங்கி போராடி வருகின்றனர். தமது போராட்டங்களையும் தேசியப் போராட்டங்களாக வெளிப்படுத்த முயல்கின்றனர். இவர்கள் தேசிய இனங்களாக வளரவில்லை என்பதை கவனிக்கும் அதேவேளை (தேசிய இன வரையறுப்பு கோட்பாடுகளை நெகிழ்விக்க சிலர் முற்படுகின்றனர்) தேசியப் போராட்டத்தை முன்தள்ளப் புறப்படுவதால் இனங்கள், தேசங்கள் உருப் பெற்றுவிட்டன. (தேசிய இனமல்ல) தேசங்கள், தேசிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய அரசுகளுக்காக போராடுவது என்ற கோட்பாட்டை **'தமிழீழ மக்கள் கட்சி'** முன்தள்ளியுள்ளது. நவகொலனிய நாடுகளில் சிறுபான்மை இனங்களின், தேசிய இனங்களின் வாழ்வில் உள்ள, ஏற்றத் தாழ்வான சமூக பொருளாதார, அரசியல் பண்பாட்டு வளர்ச்சிகளை 50 ஆண்டுப் போராட்ட வரலாறுகளை அப்படியே பார்க்காது, தேசிய உணர்வில் இருந்து மட்டும் சமநிலைப்படுத்தி பார்ப்பதால், மூன்று தேசங்கள் உருவாகிவிட்டது. மூன்று தேசிய அரசுகள் உருவானால் தேசிய ஒடுக்குமுறை பிரச்சனை தீர்ந்து விடும் என தவறான ஒரு பார்வையை முன்வைத்துள்ளது. (இக்கோட்பாட்டின்படி அந்த அந்த இனப்பின்னணி கொண்ட புரட்சியாளர்கள், தத்தமது தேசிய அரசுகளை உருவாக்குவதற்கான போராட்டத்தில் நேரடியாக உடனடியாக ஈடுபடுவதே சரியானது அல்லவா? மீண்டும் முசுலீம், மலையக பின்னணியில் உருவான புரட்சிகர சக்திகளை ஈழத் தமிழர்களின் தமிழீழ புரட்சிகர தேசிய இயக்கத்தில் உணர்வு பூர்வமாக அய்க்கியப்படுத்தி முசுலீம், மலையக இனங்களுக்கு தீங்கு இழைக்கக் கூடாது அல்லவா?)

எங்களின் பார்வையில், சிங்கள இனம் கொலனிய எதிர்ப்பு போராட்டத்துடாகவும்,



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆட்சி அதிகாரத்தில் தீர்மானகரமான பங்கை எடுத்ததன் மூலமும் சிங்களத் தேசிய இனமாக வளர்ந்து விட்டது நவகொலனித்துவ இலங்கை, S.W.R.D.-இன் தேசியவாத அரசியலுடன் நவகொலனித்துவ சிறீலங்கா-வாக மாற்றியமைத்ததுடன் தனது தேசிய உருவாக்கத்தை திடப்படுத்திக் கொண்டது; நவகொலனிய முறைக்குள் இயல்பாகவே வெளிவந்த சிறீலங்கா அரசு, நவகொலனிய அரசியல் அதிகார மாற்றத்தில் இருந்து தொடர்ச்சியாக சிறுபான்மை இனங்கள் மீது இன, மத, மொழி, பிரதேச பொருளாதார ஒடுக்குமுறையை நடத்தி வந்தது. இதற்கு எதிரான சிறுபான்மை இன மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈழத் தமிழர்கள் தேசிய இனமாக பரிணமித்து தேசிய சுயநிர்ணய உரிமைக்காக **தமிழீழ தேசிய அரசுக்காக** போராடுகிறார்கள், முசுலீம் மக்கள் தமிழீழத்திலும் சிறீலங்காவிலும் பரந்தும் செறிந்தும் வாழ்கிறார்கள்; இரண்டு தேசங்களிலும் தேசியச் சிறுபான்மை இன மக்களாக உள்ளனர். தமிழீழத்தில் தேசியச் சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் செறிந்து வாழும் பகுதியில் **''சுயாட்சி அமைப்பை''** ஏற்படுத்த தமிழீழ தொழிலாளி வர்க்கமும், புரட்சிகர சக்திகளும் போராட வேண்டும். தமிழீழத் தேசிய இயக்கத்தில் சனநாயக பூர்வமாக இணைக்க வேண்டும். புலிகள் உட்பட எல்லாத் தமிழீழ இயக்கங்களின், முசுலீம் புறக்கணிப்பை உறுதியுடன் எதிர்ப்போம். குறுந்தேசிய பிளவுகளை அம்பலப்படுத்தி அன்னியப்-படுத்த வேண்டும்.

தமிழீத்தில் உள்ள மலையக மக்களை, தமிழீழத்தின் நிரந்தர பிரஜைகளாக அங்கீகரித்து ஒன்றிணைத்து தமிழீழ தேசிய இயக்கத்தில் போராடுவது. 99% தமிழ் மலையக மக்கள் சிறீலங்காவிலேயே வாழ்கிறார்கள், சிறீலங்காவின் தேசியச் சிறுபான்மை இனமாக விளங்குகிறார்கள். செறிந்து வாழும் பகுதியில் சிறீலங்காவில் 'சுயாட்சி அமைப்பை' ஏற்படுத்த சிறீலங்காவின் தொழிலாளி வர்க்க புரட்சிகர சக்திகள் போராட வேண்டும்.

கொலனியல் கட்டத்தில், வல்லரசிய எதிர்ப்பு கொண்ட முதலாளித்துவ நாடுகளின் சோசலிசப் புரட்சியும், கொலனி நாடுகளின் தேசிய விடுதலைப் புரட்சியும் ஒன்றுபட்டு நிற்க வேண்டியிருந்தது. நவகொலனியக் கட்டத்தில் முதலாளித்துவ நாடுகளின் சோசலிசப் புரட்சியும் நவகொலனி நாடுகளின் ஒடுக்கும் தேசிய இனங்களின் புதிய சனநாயகப் புரட்சியும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய விடுதலைப் புரட்சியும் வல்லரசிய எதிர்ப்பில் ஒன்றுபட்டு நிற்க வேண்டி இருக்கிறது.

திட்டம் (ஆ) இன் 4-வது பத்தியில் **'தமிழீழ மக்கள் கட்சி'** தெளிவாக தன்னை ஈழத்தமிழரது அரசியல் இயக்கமாகவே வெளிப்படுத்தி இருக்கிறது. முசுலீம் மக்களும், தொழிலாளி வர்க்க புரட்சிகர சக்திகளுக்கும் கூட அத்திட்டத்திட் அய்க்கியப்பட முடியாத நிலைமை கவனிக்கத்தக்கது. சிறீலங்கா அரசு தமிழீழ தேசிய இயக்கத்தை, தேசிய அரசு உருவாக்கத்தை நசுக்கும் வகையில் வடக்கு கிழக்கு பாரம்பரிய பிரதேசத்தை துண்டாட முயல்கிறது. வடக்கு கிழக்கு இணைப்பு முக்கியமான பிரச்சனையாக இருக்கிறது. திட்டம் மேலோட்டமாக **'தமிழீழம்'** பாரம்பரிய தாயகம் என்கிறது. புதிய சனநாயக அரசியல் திட்டத்தை, புதிய சனநாயக குடியரசை, புதிய சனநாயக சர்வாதிகாரத்தை முன்னிறுத்தாத எந்த அரசியல் இயக்கமும் நவகொலனிய அரசை, தோற்கடித்து சுதந்திரமான தேசிய அரசை, மக்கள் அரசை நிறுவ முடியாது என வரலாறு காட்டுகிறது. திட்டம் **'தமிழீழ சனநாயக குடியரசு'** குறைந்தபட்ச திட்டம் என்கிறது.

திட்டம் (இ) பகுதி **'நவகொலனித்துவ சகாப்தம்'** என்கிறது. நவகொலனியல் கட்டம் என்பதற்கும் நவகொலனிய சகாப்தம் என்பதற்கும் ஆழமான வேறுபாடு இருக்-கின்றது. மனித வரலாற்றை உற்பத்தியிலும், உற்பத்தி உறவுகளிலும் பங்கு கொள்கின்ற நேரேதிரான நலன்களை கொண்ட வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டமே அந்த சகாப்தத்தில் அடிப்படையை மாற்றி சமூகப் புரட்சிகள் மூலம் புதிய உற்பத்தி-களையும் உற்பத்தி உறவுகளை ஏற்படுத்தி வந்திருக்கிறது. வரலாற்றில் முதலாளித்துவம் வல்லரசியமாக மாறியபின், வல்லரசியத்-துக்கும் - பாட்டாளி வர்க்கத்துக்கும் இடை-யிலான போராட்டமே சமூகத்தை புதிய கட்டத்துக்கு மாற்றியமைத்தது. சோசலிசப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சியிலும், புதிய சனநாயகப் புரட்சியிலும் இதுதான் நடந்தது. வல்லரசியமும் - பாட்டாளி வர்க்க புரட்சியுமான சகாப்தம்-தான் இன்று வரை நிலவுகிறது.

வல்லரசியம், உலகை சுரண்டி ஆள முதலில் கொலனிய முறையை பின்பற்றியது. கொலனிய எதிர்ப்பு போராட்டத்தை தோற்கடித்து நவகொலனிய முறையில் உலகை சுரண்டி ஆட்சி செய்கிறது. வல்லரசியத்தின் கொலனிய முகத்தை விட, நவகொலனிய முகம் மிகமிக நவீனமயமானது, கொடூரமானது, நவகொலனிய சமூக பொருளாதாரம், அரசியல், பண்பாடு, அரசு கட்டமைப்பு முறை குறித்து மிக ஆழமாக புரிந்து கொள்ளப்பட வேண்டியுள்ளது. 2-வது உலக யுத்தத்திற்கு பின் வல்லரசியம், நவகொலனிய முறையை உருவக்கிய பின்னும், சோசலிச, புதிய சனநாயக அரசுகளுடன் கணக்கு தீர்ப்பதில் அக்கறை காட்டியது, தன்னை மீண்டும் புனரமைத்து கொண்டது நவகொலனிய நாடுகள் மீது 70-களின் பிற்பகுதியில் இருந்து திறந்த பொருளாதாரக் கொள்கை, நவீனமயம், உலகமயம் கொள்கைகள் மூலம் தனது கோர முகத்தை வெளிப்படுத்த தொடங்கியுள்ளது.

வல்லரசியத்தின் புதிய முகத்தை அதன் உட்சாரத்தில் புரிந்து கொள்வதில் தொழிலாளி வர்க்க அரசியல் இயக்கம் கூட கோட்பாட்டு முன்முயற்சி எடுக்க தவறியது. இதனால் இன்றும் கூட நவகொலனியமாக அல்லது புதுக் கொலனியமாக மாறிக் கொண்டிருப்பதாகவே சில தொழிலாளி வர்க்க இயக்கங்கள் பார்க்கின்றன. மீண்டும் ஒரு வல்லரசியத்தின் கையில் நாடு விழும் போதுதான் நவகொலனியமாக மாறும் எனப் பார்க்கின்றன. அல்லது **'தமிழீழ மக்கள் கட்சி'** போல், ஜப்பானை மட்டுமே நவகொலனிய அரசாக பார்க்கின்றன. தொழிலாளி வர்க்க இயக்கத்திலும், புரட்சிகர சக்திகள் மத்தியிலும் நடக்கும் வாத - விவாதங்கள் மூலம் இப்பார்வைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். நவகொல-னியம் பற்றிய கோட்பாட்டு புரிதலின் பலவீனம் அல்லது தவறு கொலனிய நாடுகளின் 'அதிகார மாற்றத்தை' **அரசியல் சுதந்திரம்** என பார்க்க வைத்தது. பொருளாதாரத்துக்கும் - அரசியலுக்கும் இடையிலான உறவை, கீழ்கட்டுமான - மேல் கட்டுமான உறவை, ஒன்றில் இருந்து ஒன்றை பிரித்து பார்க்காமல், இணைத்து சமூக ஆய்வு செய்யும் முறையும், நவகொலனியம் குறித்த கோட்பாட்டு புரிதல் வரும் போதுதான் 'அரசியல் சுதந்திரம்' பற்றிய தவறான பார்வையை திருத்த முடியும். **தமிழீழ மக்கள் கட்சி** இத்தவறை திருத்தும் போதுதான் வல்லரசிய எதிர்ப்பையும், நவகொலனிய எதிர்ப்பையும் தனித்தனியாக பார்க்காத நிலைப்பாட்டை, குறித்த ஒரு வல்லரசு எதிர்ப்பை விட்டுவிட்டு ஒட்டு மொத்தமாக வல்லரசிய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுக்க முடியும்.

திட்டம் (ஈ) பகுதியில் தமிழீழ மக்கள் கட்சி மிக சூசகமாக பேசுகிறது, 'ஆ' பகுதியில்

ஈழத்தமிழர்களின் அரசியல் இயக்கமாக **'தமிழீழ மக்கள் கட்சியை'** பிரகடனப்-படுத்தியது. (ஈ) பகுதியில் ஈழத்தமிழர்களின் மத்தியிலுள்ள எந்த வர்க்கத்தின் அரசியல் இயக்கமாகத்தான் வெளிவருகிறது என்பதையும், எந்த வர்க்கங்களின் போராட்டமும் அரசாட்சியும் உண்மையான மக்களின் தேசிய விடுதலையை (பொருளாதார சுரண்டல், சாதிய, ஆணாதிக்க, மத, பிரதேச அடக்குமுறைக்கு முடிவு கட்டும்) பெற்றுத்தரும் என்பதையும் சூசகமாக மறைக்கிறது. ஒவ்வொரு வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதிகளும், ஏன் அரசியல் விழிப்புணர்வு பெற்ற மக்கள் திரளும் கூட இந்தத் திட்டத்தை பார்த்து புரிந்து கொள்ள முடியும்.

''**அன்னிய எசமானர்களுக்கு** பதிலாக **சுதேசிய எசமானர்கள்** ஆட்சியில் அமர்ந்து தேசிய விடுதலை ஆகாது'' சிங்களவர்களும், வல்லரசுகளும் **அன்னிய எசமானர்களா?** தமிழீழ தரகு, அதிகார வர்க்க முதலாளிகளும், பெரும் நிலப்பிரபுத்துவ விவசாய முதலாளிகளுமா அல்லது தமிழீழ தேசிய முதலாளிகளும், குட்டி முதலாளிகளுமா **சுதேசிய எசமானர்கள்.** இந்த வர்க்கங்களின் அரசியல் பொருளாதார நலனை முதன்மைப்-படுத்தி தலைமை தாங்கும் அரசியல் - இராணுவ இயக்கங்கள் வல்லரசியத்தை தூக்கி எறிந்துவிட்டு தேசிய விடுதலையை, தேசிய அரசை நிறுவுவது நவகொலனிய கட்டத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடந்திருக்கிறதா? நடக்குமா? ஒருவரை ஒருவர் சுரண்டாத பொருளாதார முறையை பெண்ணை - ஆண், ஒரு சாதியை - மதத்தை, இனத்தை இன்னோர் சாதி, மதம், இனம் ஆதிக்கம் செய்யாத அரசியலை, சமூக அமைப்பை எந்த வர்க்க பிரதிநிதிகள் அல்ல, **வர்க்க அரசியல் முன்வைக்கிறது?** புரட்சிகர தொழிலாளி வர்க்க அரசியல், அரசியல் இயக்கம் என வெளிப்படுத்த தயங்குவது ஏன்?

ஈழத்தமிழரில் பெரும்பான்மையாக **அடக்கப்படுகின்ற - விளிம்பு நிலை மக்களின் பிரதிநிதியாக 'தமிழீழ மக்கள் கட்சி'** வெளிப்படுகிறது. சோசலிசசமூகத்தை படைப்பதை உயர்ந்த பட்ச திட்டமாக பிரகடனம் செய்கிறது.

நல்லது சோவியத்திலும், கிழக்கு அய்ரோப்பிய நாடுகளிலும் சோசலிசம் படைக்கப்ட முடியாமல் போனதற்கும், முதலாளித்துவ பாதை மீண்டும் எதிர்ப்புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றியதற்கும் காரணம்? சுரண்டப்படுகின்ற அடக்கப்படுகின்ற தொழிலாளி வர்க்கத்தின் பாட்டாளி வர்க்க அரசியல் பிரதிநிதியாக **'கொம்யூனிசக் கட்சி'** இருந்ததால்தான் என நினைக்கிறீர்களா? நல்ல வேடிக்கை. சீனாவில் கொம்யூனிசக் கட்சி ஆள்கிறது. சீனா சோசலிசத்தை படைப்பதை நோக்கி முன்னேறுகிறதா? கொம்யூனிஸ்ட் கட்சி என்றும் தொழிலாளி வர்க்க கட்சி என்றும் பிரகடனப்படுத்தாமல் **''சனநாயகம், சோசலிசம்''** எனக் கூறி போராடிய ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ், பாலஸ்தீன விடுதலை இயக்கம் சோசலிசத்தை படைக்கவா போராடிக் கொண்டிருக்கின்றன? விளிம்பு நிலை மக்களை பிரதிநிதித்துவப்டுத்ததால்தான் மக்களின் தேசிய அரசை, சோசலிசத்தை படைக்க முடியாமல் போகிறதா?

சோவியத்திலும், சீனத்திலும் கிழக்கு அய்ரோப்பாவிலும் கொம்யூனிஸ்ட் கட்சி தலைமையை ஏற்றுக் கொண்டு கட்சிக்குள் இருந்த குட்டி முதலாளிய, முதலாளிய பாதையாளர்கள்தான் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றி, கோட்பாட்டை மாற்றி அரசியலை மாற்றி சோசலிசத்தை படைப்பதை எதிர்த்து நிறுத்தி, முதலாளித்துவத்தை மீண்டும் படைத்துள்ளனர் (இவை குறித்த மேலதிக கோட்பாட்டு தர்க்கங்கள் இங்கு தேவை இல்லை) வல்லரசுகள் துணை புரிந்துள்ளன.

கொம்யூனிஸ்ட் கட்சியின், சோசலிசத்தின் பெயரில் சோசலிசத்துக்கு எதிரான மிக முன்னேறிய எதிர்ப் புரட்சிக் கோட்பாடுகள் எங்கிருந்து வெளிப்படுகிறது?

விளிம்பு நிலை மக்கள் என்பது யாரை. ஆணாதிக்கத்துக்கு எதிராக போராடுகின்ற பெண்கள், சாதிய அடக்குமுறைக்கு எதிராக போராடுகின்ற தலித்துக்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அகதிகள், நிலவுகின்ற பொருளாதார முறையால் நசுக்கப்பட்ட அனைத்து பிரிவினரும்....

பெண்களுக்குள்ளும், தலித்துக்களுக்குள்ளும், அகதிகளுக்குள்ளும் நசுக்கப்பட்ட பிரிவுக்குள்ளும் இருக்கின்ற எதார்த்தமான பொருளாதார வர்க்க வாழ்நிலை வேறுபாடுகளை மறைத்து, (அம்மக்கள் மறக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது) ஒட்டுமொத்தமாக தங்களின் பிரிவுக்கு எதிரான, ஆதிக்கங்களுக்கு எதிராக போராட வேண்டும். போராடுகின்ற தனிப் பிரிவுகளுக்கு இடையில் (பெண்கள், தலித்துக்கள், அகதிகள்...) உறவு இருக்க வேண்டும்.

ஒவ்வொரு தனிப்பிரிவுக்குள்ளும் இருக்கின்ற வர்க்கப் பிரிவுகள் (உ+ம் தொழிலாளி வர்க்க, விவசாய வர்க்க பெண்கள், குட்டி முதலாளி, தேசிய முதலாளி வர்க்க பெண்கள்...) ஆணாதிக்கத்துக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்க வேண்டும். வர்க்க வேறுபாடுகளை நலன்களை முன்னிறுத்தக் கூடாது. தத்தமது வர்க்க நலன்களுக்கான போராட்டத்தையும், ஆணாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தையும் ஒன்றிணைத்து முன்னெடுக்க கூடாது. (தலித்துக்கள், அகதிகள்... பிரச்சனை எல்லாம் இப்படித்தான் அணுக வேண்டும்.)

இத்தனிப்பிரிவுகளுக்குள் உள்ள குட்டி முதலாளிய, தேசிய முதலாளிய (வர்க்கப் பின்னணி மற்றும் அரசியல்) வர்க்கங்களில் இருந்து வரும் விழிப்படைந்த அரசியல் சக்திகள் இத்தனிப் பிரிவுகளுக்கு தலைமை தாங்குவார்கள்; தங்களின் வர்க்க நலன்களை இலட்சியங்கள் அடையும் வரை சனநாயகத்தையும், சோசலிசத்தையும் படைப்பதாக கூறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிலாளி வர்க்கத்தையும், விவசாயி-களையும் தங்களின் பின்னால் திரட்டுவார்கள். இயக்க தலைமையின் அல்லது குட்டி முதலாளிய, தேசிய முதலாளிய பிரிவுகளின் இலட்சியம் நிறைவேறும் போது முதலாளித்துவ சனநாயக பாதைக்கு இயக்கத்தை திருப்பி விடுவார்கள்.

குட்டி முதலாளித்துவ, தேசிய முதலாளித்துவ நலன்களுக்கு உகந்த முறையில், ரசிய, சீன புரட்சிகளின் பாடங்-களில் இருந்து எவ்வளவு முன்னோக்கிய கோட்பாட்டை உருவாக்கி விட்டிருக்-கிறார்கள். தனிப்பிரிவுகள் ஒவ்வொன்றையும் சேர்த்து **'விளிம்பு நிலை மக்கள்'** என்ற கோட்பாட்டையும், கொம்யூனிஸ்ட் கட்சியின் பெயரில், வர்க்கங்களின் பெயரில் கட்சி இருக்க கூடாது என்பதற்காக **'புரட்சிகர கட்சி'** என்ற கோட்பாட்டையும் முன்-வைக்கிறார்கள்.

சிறீலங்கா அரசுக்கு எதிராக தமிழீழ மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும், தமிழீழ மக்களுக்குள் உள்ள வர்க்கங்கள், சாதிகள், மதங்கள், ஆண் - பெண் வேறுபாடு எதையும் இப்போது பேசாதீர்கள், முதலில் தேசிய விடுதலை, அப்புறம் வர்க்க விடுதலை இந்த மோசடிக்கு பின்னால், ஏமாற்றுக்கு பின் எந்த வர்க்கம் ஒளிந்து இருந்தது.

தேசிய விடுதலைதான் முக்கியம். ஆனால் சாதி, மத, பெண் விடுதலை பற்றியும் பேசுங்கள், நடைமுறைக்கு வராதீர்கள் எனப் பேசிய PLOT, TELO, EROS, EPRLF, சனநாயகத்தையும், சோசலிசத்தை படைக்கப் போவதாகத்தானே கூறினார்கள். எங்கே போய்ச் சேர்ந்தார்கள்? இந்த பழைய இயக்கங்களின் கோட்பாடுகள். திட்டங்களை விட முன்னேறிய கோட்பாடுதான் 'தமிழீழ மக்கள் கட்சியின்' கோட்பாடு.

கொம்யூனிஸ்ட் கட்சியை கட்டி, புரட்சியை நடத்தி, சோசலிசப் பாதைக்கு சென்று மீண்டும் முதலாளித்துவ பாதைக்கு வரவேண்டியதில்லை. நேரடியாக **'புரட்சிகர கட்சியை'** கட்டி புரட்சியை நடத்தி முதலாளித்துவ பாதைக்கு செல்வதற்கான வழியை தொழிலாளி வர்க்க பிரபு குலத்தின், குட்டி முதலாளிய தேசிய முதலாளிய வர்க்கத்தின் பிரக்ஞை பூர்வமான அசியல் தலைமை உருவாக்கிவிட்டது. (இதன் அர்த்தம். தொழிலாளி வர்க்க இயக்கத்திலும், கொம்யூனிஸ்ட் கட்சியிலும் ஒரே ஒரு பாதைதான் இருக்கும் என்பதல்ல). விழிப்படைந்த தொழிலாளி வர்க்க அரசியல் சக்திகள் ஓர் உறுதியான - தெளிவான சித்தாந்த போராட்டத்தை உள்ளிலும், வெளியிலும் நடத்தியாக வேண்டும்.

EROS, EPRLF, PLOT, NLFT, PLFT, TMPP மற்றும் இயக்கங்கள், கொம்யூனிஸ்ட், ட்ரொஸ்கிய கட்சிகளில் இருந்து வெளியேறி, தங்கள் இயக்கங்களின் தலைமைகளின், தவறுகளுக்கும், தோல்விகளுக்கும் ஆன காரணங்களை, சோவியத், சீன புரட்சிகளின் பின் நடந்த முதலாளித்துவ மீட்சிக்கான காரணங்களை கோட்பாட்டு ரீதியாக, அரசியல் திட்டங்கள் மேல் ஆய்வு செய்து கொண்டிருப்பவர்கள். இந்த புதிய நவீன கோட்பாடுகளை ('விழிம்பு நிலை மக்கள்', 'புரட்சிகர கட்சி', 'புரட்சிகர கூட்டு', 'ஆளும் வர்க்க கூட்டு'...)யும் கணக்கில் கொள்ள வேண்டும்.

நவகொலனித்துவ பொருளாதர முறையும், தமிழீழத் தொழிலாளி வர்க்கத்தின் புலம் பெயர்வும், தொழிலாளி வர்க்க பிரபுகுலத்தை கணிசமான அளவுக்கு வளர்த்து விட்டுள்ளது. சனநாயகம், சோசலிசம் என்று முன்வைத்தபடி புரட்சிகர தொழிலாளி வர்க்கத்தை மீண்டும் மீண்டும் திசை திருப்ப முயல்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.

திட்டத்தின் (உ) பிரிவு மிகத் தெளிவாக தான் யார் என்பதை வெளிக்காட்டியுள்ளது.

**''கொழும்புத் தரகு முதலாளி வர்க்கம் (தமிழ்த் தரகு முதலாளிகளா?) உயர் அதிகார மேட்டுக்குடி பிரிவு தவிர்ந்த அனைத்து வர்க்கங்களும் முழுமையான தேசிய விடுதலை வேண்டி நிற்பதாகவும், இச்சக்திகள் அனைத்தையும் இணைக்கும் விதத்தில் கட்சியின் குறைந்த பட்ச திட்டம்''** இருக்கும் என்கிறது.

நல்லது. ஈழத்தமிழர்கள் மத்தியிலுள்ள அனைத்து வர்க்கங்கள், சமூக சக்திகள் முழுமையான தேசிய விடுதலையை வேண்டி நிற்கின்றன எனில் கொழும்பில் உள்ள தமிழ்த் துரோக தலைமைகளை விட்டுத் தள்ளுங்கள். உக்கிரமாக போராடிக் கொண்டிருக்கின்ற புலிகளுக்கும், புரட்சிகரசக்திகளுக்கும் என்ன வேறுபாடு ஏன் தனியான திட்டம், இயக்கம்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிகள் குறைந்தபட்ச திட்டம், உயர்ந்த பட்ச திட்டம் என ஒன்றையும் வைக்கவில்லை; தமிழீழ சமூகத்துக்குள் அக ஒடுக்குமுறைகளை, அதற்காகவே போராடுவதை பற்றி எங்களைப் போல் பேசவில்லை அவ்வளவுதானா? புலிகளும், **சனநாயகம், சோசலிசம்** பற்றி பேசுகிறார்கள், தேசிய விடுதலையை வேண்டி நிற்கும் அனைத்து சக்திகளையும் திட்டம் இன்றியா இணைக்கிறார்கள்? தமிழீழ முதலாளி வர்க்கத்தின் அடிப்படை இருப்புக்கு எவ்விதத்திலும் குந்தகம் ஏற்படாமல் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து செல்கிறார்கள் அல்லவா?

புலிகள், தேசிய விடுதலையை மட்டும் பேசுகிறார்கள், **சமூக விடுதலையை** அதிகாரத்தை கைப்பற்றியபின் ஏற்படுத்த-லாம் என்கிறார்கள். யாழ், கட்டுப்பாட்டு பகுதியில் என்ன நடந்தது. வன்னியில் என்ன நடக்கிறது. கட்டுப்பாட்டு பகுதியில் எதுவும் செய்ய முடியாது தேசிய அரசை அமைத்தபின்தான் செய்வார்கள் என நம்புகிறோமா? போராட்ட காலத்திலேயே அரசியல் அதிகாரம் யார் கைக்கு போகப் போகிறது என்பது தெளிவாக மக்களுக்கு தெரிகிறது. தாங்கள் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு யாரும் வருவதில்லை. மக்களின், தேசத்தின் பிரதிநிதிகள் என கூறிக் கொண்டு முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளாக நடைமுறையில் செயல்படுவார்கள்.

வடக்கு கிழக்கு ஈழத் தமிழர்களின் அனைத்து வர்க்கங்களையும், சமூக சக்திகளையும் இணைத்துக் கொள்கின்ற ஒரு திட்டத்தினை வைத்து இணைத்து போராடும் போதும், தேசிய அரசை நிறுவும் போதும், அதற்குள்ளாகவே சுரண்டப்படுகின்ற வர்க்கங்களின், அடக்கப்படுகின்ற மக்களின் சமூக விடுதலைப் போராட்டத்தை திட்டத்திலும், கட்சியிலும், கட்டுப்பாட்டு பகுதியிலும், தேசிய அரசிலும், திட்டத்தில் இணைக்கப்பட்ட முதலாளிய, குட்டி முதலாளி வர்க்கமும் அதன் பிரதிநிதிகளும் அனுமதிப்பார்களா? மிகமிக சாதுரியமாக அவர்களை ஏமாற்றிவிட்டு சோசலிசத்தை நாம் படைக்க முடியுமா? முதலாளிய குட்டி முதலாளிய வர்க்கம் ஒன்றும் ஏமாளிகள் அல்ல (வல்லரசிய எதிர்ப்பு, சோசலிசத் தமிழீழம் என திட்டம் வைத்து இருந்த EPRLF, EROS, PLOT ல் நடந்த உட்போராட்டங்கள் என்ன பாடத்தை தந்தது) தொழிலாளி வர்க்கத்தின், புரட்சிகர சக்திகளின் நப்பாசையும், கோட்பாட்டு, அரசியல் பலவீனம் என்னவானது?

கடந்த காலப் போராட்டத்தில் இருந்து **விழிப்படைந்த** மக்களை, அரசியல் **சக்திகளை** மீண்டும் திசைதிருப்பத் **தவறாகவழிகாட்ட** முதலாளிய, குட்டி முதலாளிய வர்க்கம், அடக்கப்படுகின்ற - **விழிம்பு நிலை மக்கள்**, அவர்களின் கட்சி என்ற கோட்பாட்டை முன்தள்ளி இருக்கிறது. புலிகள், **தேசிய விடுதலை, தமிழீழ தாகம்** என்பதை மட்டும் முன்வைத்து தமிழீழத் தொழிலாளர்களை இணைத்து தமிழீழ முதலாளி வர்க்க அரசியல் அதிகாரத்தை நிறுவப் போராடுகிறது.

**தமிழீழ மக்கள் கட்சி**, தேசிய விடுதலை, விழிம்பு நிலை மக்கள் விடுதலை, சனநாயகம், சோசலிசம் **எனக்கூறி விளிம்பு நிலைப்** பிரிவுக்குள் இருக்கும் முதலாளிய, குட்டி முதலாளிய வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை நிறுவ போராட தொடங்கியுள்ளது. மீண்டும் தமிழீழ தொழிலாளி வர்க்கத்தை முதலாளித்துவ நலனுக்குப் பலியிடத் தயாராகியுள்ளது.

சோசலிச சமுதாயமாக மாறுவதற்கு தேவையான சமூக அகவளர்ச்சி நிலையை ஈழத்தமிழர்கள் பெற வேண்டியுள்ளது. இதனை வளர்த்துக் கொள்வதற்காக ஒரு கட்டத்துக்கூடாக பயணம் செய்ய வேண்டி-யுள்ளது. இதனால் தேசிய விடுதலை சாராம்சத்தில் சனநாயகப் புரட்சியாக இருக்கிறது.

வல்லரசிய சகாப்தத்தில் கொலனிய நாடுகளில் சனநாயகப் புரட்சி நடைபெறாமல் சோசலிசத்தை கட்டியமைக்க முடியாது என்பதை புரிந்து கொண்டுதான், தொழிலாளி வர்க்க அரசியல் இயக்கம். முதலாளிகளின் தலைமையில் ஒரு சனநாயகப் புரட்சியை நடத்தி அரசியல் அதிகாரத்தை கொடுத்துவிட்டு பின்னர் இன்னோர் உள்நாட்டு யுத்தம் மூலம் சோசலிசப் புரட்சியை நடத்த வேண்டிய வழிமுறையை நிராகரித்தது. தொழிலாளி வர்க்கத்தின்

www.tamilarangam.net



தலைமையில் புதிய ஜனநாயகப் புரட்சித் திட்டத்தை முன்வைத்து, புரட்சி மூலம் புதிய சனநாயக அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றி, புதிய சனநாயக சர்வாதிகாரத்தின் வழியாக சோசலிசத்தை கட்டியமைக்கும் கோட்பாட்டை முன்- வைத்தது. சீனத்தில் நடத்தியும் காட்டியது. (சீனத்தில் முதலாளித்துவ பாதை மீண்டும் எப்படி வென்றது என்பது அடுத்த கட்ட பிரச்சனை) **தேசிய விடுதலையா, வர்க்க விடுதலையா** என்பதல்ல பிரச்சனை. தொழிலாளி வர்க்கமும், பெரும்பான்மை மக்களும் **இரண்டு உள்நாட்டு யுத்தத்தை சந்திக்க வேண்டுமா, இல்லையா என்பதே.** சீனத்தின் புரட்சிக்கு பின்பான முதலாளித்துவ மீட்சியின் படிப்பினை இக்கோட்பாட்டை நிராகரிக்க முடியாது. நவகொலனிய கட்டத்தில் புதிய சனநாயக திட்டம், புரட்சி, சர்வாதிகாரம் ஆழப்- படுத்தப்பட வேண்டியுள்ளது. தேசிய விடுதலையும், வர்க்க விடுதலையும் பிரித்து பார்க்க முடியாத ஒன்றாகவுள்ளது. பெண்களின், தலித்துக்களின், அகதிகளின், .... பிரச்சனையும் வர்க்கப் பிரச்சனையும் பிரித்துப் பார்க்க முடியாத ஒன்றாகவுள்ளது.

தேசிய இன விடுதலைக் கோட்பாட்டை தனியாக வைத்து, தொழிலாளி வர்க் கத்தையும், பெரும்பான்மை மக்களையும் ஏமாற்றி வந்த முதலாளிய குட்டி முதலாளிய வர்க்கம் தேசிய இன விடுதலைக் கோட்பாட்டுடன், விழிம்பு நிலை மக்கள் கோட்பாட்டையும் தனியாக வைத்து தொழிலாளி வர்க்கத்தை, பெரும்பான்மை மக்களை புதிய வழியில் ஏமாற்ற முன்வந்துள்ளது.

திட்டம் (உ) பகுதியின் 3-வது பத்தியின் கடைசி வரிகளை பாருங்கள்.

**''சனநாயகப் புரட்சி காலகட்டம் என்பது. முரண்பட்ட வர்க்க, சமூக, சக்திகளுக்கு இடையேயான போராட்- டத்திற்கான கால கட்டமாகும்.''** சுரண்டப்படும், அடக்கப்படும் மக்களுடன் இணைந்து விழிப்புணர்- வூட்டி அமைப்பாக்கி போராடுவதும், அதனூடாக சோலிச சமூகத்தை படைக்கும் **'தமிழீழ மக்கள்கட்சி'** என்கிறது.

சனநாயகப் புரட்சிக்கால கட்டத்தில் அரசியல் அதிகாரம் யாரின், எந்த வர்க்கத்தின் கைகளில் இருக்கப் போகிறது. ஆளுகின்ற வர்க்கத்திற்கும், ஆளப்படுகின்ற வர்க்கத்- திற்கும் இடையில் அரசியல் அதிகாரம் ஊசல் ஆடிக் கொண்டிருக்க முடியுமா? அரசும், அரசியல் அதிகாரமும் ஒருக்காலும் அப்படி இருக்கப் போவதில்லை. சுரண்டப்படும் அடக்கப்படும் மக்களுடன் இணைந்து அவர்களை அணி திரட்டி, விழிப்புணர்வூட்டி, அமைப்பாக்கி போராட்டத்துக்கு தலைமை தாங்க விரும்புகின்ற நேர்மையான புரட்சிகர சக்திகள் சனநாயகப் புரட்சிகால கட்டத்திற்கு முன்பே **தமிழீழ மக்கள் கட்சிக்குள் உள்ள முதலாளித்துவ பாதையாளர்களால்** நசுக்கப்படுவார்கள். அழிக்கப்படுவார்கள், அல்லது வெளியேற்றப்படுவார்கள், என்பதற்கு கடந்த கால இயக்க வரலாறுகள் நல்ல உதாரணங்- களாகும்.

திட்டத்தின் (ஏ) பகுதியில் 2-வது பத்தியில் முசுலீம் மக்கள் பற்றி முன்வைத்துள்ள நிலைப்பாடு திட்டத்தின் (ஆ) பகுதியின் தீர்மானத்துக்கு முரண்பாடாக வெளிப்- படுகிறது. முசுலீம் மக்கள், ஈழத்தமிழர், மலையகத் தமிழர் தனியாக இனமாக, தனியான தேசமாக உருவாகிவிட்டார்கள். சமூகளவில் நடந்தேறி விட்ட பிளவானது அரசியல் ரீதியில் முற்றுப் பெறாமையே தேசிய ஒடுக்குமுறையின் சாராம்சம் என (ஆ) பகுதியில் கூறப்படுகிறது. **''ஈழத்தமிழர் தனியான தேசம், தமிழீழம் பாரம்பரிய தாயகம்** தனியான தேசிய அரசு அமைப்பதே தமிழீழ மக்கள் கட்சியின் குறைந்தபட்ச திட்டம்'' என்கிறது.

(ஏ) பகுதயில் **''தமிழீழமானது இங்கு வாழ்ந்து வரும் ஈழத்தமிழருக்கும் முசுலீம் மக்களுக்கும் பொதுவான தாயகமாகும்.** முசுலீம் மக்கள் தனித்துவமான சமூகம். தேசம், என்றும், தனியான அரசை அமைப்பதோ, தமிழீழ அரசை உள்ளடக்கிய கூட்டமைப்பில் இணைந்து கொள்வதோ, விரும்பினால் சிறிலங்கா அரசின் கட்டமைப்புள் தம்மை உட்படுத்திக் கொள்வதோ அத்தேசத்தின் சுயநிர்ணய உரிமை என்று மிக மிக சனநாயகமாக வெளிப்படுத்தியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசிய சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டுக்கு ஒரு நவீன விளக்கம் கொடுத்து, **இனம், தேசம், தேசிய அரசு** என வெளிவந்த கோட்பாடு.

முசுலீம் மக்கள் பற்றிய தீர்வை கொடுக்கும்போது மிக குழப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது. முசுலீம் மக்கள் இனம், முசுலீம் தேசம் உருவாகிவிட்டது என வெளிப்படுத்தி சமூக அளவில் நடந்தேறி-விட்ட பிளவை தேசிய அரசு அமைப்பதன் மூலம் தீர்பப்து பற்றி கூறிவிட்டு, முசுலீம் மக்களுக்கும், ஈழத்தமிழருக்கும் தமிழீழ பொதுவான தாயகம் எனப் பேசுவது எப்படி?

ஒரு இனம் தேசிய இனமாக வளர்ந்துவிட்ட நிலையில் தேசிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தனியரசு அமைப்பதற்கான அத்தனை உரிமைகளையும் அத்தேசியமானது பெற்றிருக்கிறது. தேசிய இனத்தின் மக்கள் பலம், உலகப் பொருளாதாரத்தின் சங்கிலி இணைப்பு, பொருளாதாரப் பலவீனம், நிலத் தொடர்ச்சிப் பலவீனம், மொழி வளர்ச்சி இன்மை, கலாச்சார வளர்ச்சி போதாமை எனக் காரணம் காட்டி, அத்தேசிய இனத்தின் அரசியல் உரிமையான **தேசிய சுயநிர்ணய உரிமையை, தேசிய அரசு அமைக்கும் உரிமையை** நிராரிக்க முடியாது. (முதலில் தேசிய இனமாக வரையறை செய்வதில் தவறிழைக்க கூடாது என்கிறது தொழிலாளி வர்க்க இயக்கம்.) அதேவேளை குறிப்பிட்ட தேசிய இனத்தின் எல்லைக்குள், தாயகத்தில் வாழும் தேசியச் சிறுபான்மை, மதச்சிறுபான்மை மொழிச் சிறுபான்மை மக்களை, அவர்களது அடிப்படை சனநாயக உரிமைகளுடன் அய்க்கியப்படுத்தவும், சக தேசிய இனங்களின், புரட்சிகர வர்க்கங்களுடன் சகோதரத்துவ உறவை சிறந்த முறையில் பேணுவதன் மூலமும் பொது எதிரிகளை இலகுவில் தோற்கடிக்க முடியும் என்பதை தொழிலாளி வர்க்க சித்தாந்தம் உறுதியாக முன்வைத்து அமுல்படுத்துகிறது.

தேசிய இனம், தேசம் என அங்கீகரித்துவிட்டு அதன் அரசியல் உரிமை **'சுயாட்சி', 'கலாச்சார சுயாட்சி'** பற்றி பேசுகின்ற கோட்பாட்டை எதிர்க்கிறது. தொழிலாளி வர்க்க சித்தாந்தம், அதேவேளை தேசிய சுயநிர்ணய உரிமைக்காக தேசிய அரசு அமைக்கும் உரிமைக்காக போராடுகிறது. நவகொலனிய கட்டத்தில் தேசிய இனப்பிரச்சனையை மேம்போக்காக பார்த்து பழங்குடிகள், இனம், தேசியச் சிறுபான்மை, மதச்சிறுபான்மைக்கு கூட, தேசிய சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை பொருத்து-வதையும், (தனது தேசிய இன விடுதலைக்காக போராடிக் கொண்டு, பழங்குடிகள், தேசியச் சிறுபான்மை மதச்சிறுபான்மை மக்கள் மீது ஒடுக்கு-முறையை கட்டவிழ்த்துவிடும் தேசிய இன முதலாளிய, குட்டி முதலாளிய இயக்கங்களின் போக்கை காட்டி) தேசிய அரச அமைப்பதை பற்றிய கோட்பாட்டை முன்னிறுத்து- வதையும் எதிர்க்க வேண்டியுள்ளது.

ஈழத்தமிழர்களின் முதலாளிய, குட்டி முதலாளிய வர்க்கங்களும், புலிகள் உட்பட எல்லா இயக்கங்களும் முசுலீம் மக்கள் மீது நடத்திய ஒடுக்குமுறைகளுக்கும், மலையக மக்களை ஏமாற்றியதற்கும் எதிராக உறுதியாக போராடுவதுடன், ஈழத்தமிழ் தொழிலாளர் வர்க்கத்தையும், புரட்சிகர வர்க்கத்தையும் ஏமாற்றி தங்களின் பின்னால் அணிதிரட்டி நசுக்குவதை எதிர்த்தும், தொழிலாளி வர்க்க இயக்கம் தனது தனித்துவமான பாதையில் இருந்து போராட வேண்டும். தேசிய விடுதலைப் போரை முன்னெடுக்க வேண்டும். **தமிழீழ மக்கள் கட்சி'** ஈழத்தமிழர்களின், அரசியல் இயக்கமாக தன்னை வெளிப்படுத்தியுள்ள போதும், கட்சிக்குள் ஈழத்தமிழர்கள் மட்டுமல்லாது, முசுலீம்களையும் ஒன்றிணைப்பது பற்றிய சர்ச்சை இருப்பதை வெளிப்படுத்துகிறது, வல்லரசிய சகாப்தத்தில் தேசிய வழிக்கும் சர்வதேசிய வழிக்கும் இடையில் ஒரு புதிய வழி இருக்க முடியாது.

(ஏ) பகுதியின் கடைசிப் பத்தியை பாருங்கள். **தமிழீழப் பகுதியில் உள்ள முசுலீம்கள் மட்டுமே தேசமாக உருவாகி இருக்கின்றார்கள்** என்ற நிலைப்பாடு வெளிப்படுகிறது. அதனால்தான் சிறீலங்-காவில் உள்ள முசுலீம்கள் விரும்பும் பட்சத்தில் முசுலீம் தேசத்துடன் அடையாளப் படுத்தலாம் என்கிறது திட்டம்.

www.tamilarangam.net



**1981 குடிசன மதிப்பீடு**

**சிறீலங்கா**

| மாவட்டம் | முசுலீம்கள் | |
|---|---|---|
| கண்டி | 1,25,646 | |
| கொழும்பு | 1,68,956 | |
| கேகாலை | 36,548 | |
| குருநாகல் | 64,231 | |
| களுத்துறை | 62,781 | |
| பதுளை | 28.759 | |
| கம்பகா | 47.850 | |
| நுவரெலியா | 15,791 | |
| இரத்தினபுரி | 15,441 | (9.9%) |
| காலி | 26,350 | |
| பொலனறுவை | 17,621 | |
| மொனறாகலை | 5,750 | |
| அம்பாந்தோட்டை | 9,333 | |
| மாத்தறை | 16,853 | |
| மாத்தளை | 26,603 | |
| **மொத்தம்** | **7,62,550** | |

**தமிழீழம்**

| மாவட்டம் | முசுலீம்கள் | |
|---|---|---|
| புத்தளம் | 50,246 | (9.7%) |
| அம்பாறை | 1,61,754 | (41.6%) |
| மட்டக்களப்பு | 79,662 | (24.0%) |
| திருகோணமலை | 75,761 | (29.0%) |
| மன்னார் | 36,079 | (26.1%) |
| யாழ்ப்பாணம் | 14,169 | |
| வவுனியா | 6,765 | |
| முல்லைத்தீவு | 3,816 | |
| **மொத்தம்** | **3,78,005** | |

முசுலீம் மக்கள் தமிழீழத்தின் சில மாவட்டங்களில் செறிந்தும், சிதறியும் வாழ்கிறார்கள். சிறீலங்காவில் பரவலாக சிதறி வாழ்கிறார்கள். தமிழீழத்திலும், சிறீலங்காவிலும் முசுலீம் மக்கள் தேசியச் சிறுபான்மையினராக உள்ளனர் என்ற அடிப்படையில் தமிழீழத்தில் அம்பாறையை மையப்படுத்தி சுயாட்சி பகுதியை ஏற்படுத்த போராட வேண்டும்.

மலையகத் தமிழர் விடயத்திலும் இத்தகையதொரு தெளிவின்மை காணப்படுகிறது. திட்டம் மலையகத் தமிழர் தனியான தேசம், இவர்களது தாயகம் மலையகமாகும் என உறுதியாக கூறுகிறது. அதேவேளை பழைய இயக்கங்களின் பார்வை தொடர்கிறது. தமிழீழத்தை தாயகமாக கருதி இடம் பெயர்ந்து வருகின்ற மலையகத் தமிழரும் தமிழீழத்தின் பிரஜைகளாவர் என்கிறது. இப்போது தமிழீழத்தில் வாழ்கின்ற மலையகத் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை கொடுப்பது சரியானது. தேசமாக உருவாகிவிட்ட **மலையகத் தமிழர்கள் ஏன் தமிழீழம் தாயகம் என கருதி வர வேண்டும்?** சிறீலங்காவில் பிரஜாவுரிமை பெறாத, வாக்குரிமை இல்லாத மலையகத் தமிழருக்கு விசேட உரிமையா? தமிழ்நாடு தாயகம் என இருந்தது போல் தமிழீழம் தாயகம் என இருக்க வேண்டுமா? இது தவறான பார்வை மலையக மக்கள் தங்களின் அடிப்படை உரிமைக்காகவும், **சுயாட்சி** பகுதிக்காகவும் மலையகத்தில் வாழ்ந்த படி சிறீலங்கா அரசையும் வல்லரசியத்தையும் எதிர்த்துப் போராடுவதே சரியானது.

(ஐ) பகுதியில் சிங்களத் தேசம் என்ற பகுதியில் சிறீலங்கா அரசும், ஆளும் வர்க்கமும் இன, மத வெறி சிந்தனைகளை கொண்டு சிங்கள மக்களை தன் பின் அணிதிரட்டி இருக்கிறது **''பேரினவாத சித்தாந்தம் சிங்கள தேசத்தை ஆளும் குழுமத்துடன் (ஆளும் வர்க்கம், அரசுடன்) இணைத்து வருகிறது''** என்கிறது. சிங்கள மக்கள் நவகொலனிய சிறீலங்கா அரசுக்கு எதிராக தன்னேழுச்சியாக தொடர்ந்து போராடி வருகிறார்கள். ஆளும் வர்க்கம் இன மத வெறியை, சிங்களப் பெருந்தேசிய வெறியை காட்டி திசை திருப்பி வருகிறது. தமிழீழ மக்களின் தேசிய விடுதலை யுத்தத்தைக் கூட ஆக்கிரமிப்பு யுத்தமாக காட்ட முயல்கிறது. சிறீலங்காவிலுள்ள தொழிலாளி வர்க்க இயக்கமும், புரட்சிகர சக்திகளும், தலைமையும் கூட சிறீலங்கா சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்துடன்



தமிழத தேசிய ஆவணச சுவடிகள்

www.tamilarangam.net



தெளிவாக கணக்கு தீர்த்துக் கொள்ளாமல் சமரசம் செய்து கொள்வதால் சிங்கள மக்களின் தன்னெழுச்சிக்கு பின்னால் வால்பிடிக்கிறார்கள். சிறீலங்காவின் புதிய சனநாயகப் புரட்சி திட்டத்தை தெளிவாக முன்வைத்து இயங்குவார்களானால் சிங்கள மக்களையும், மலையக மக்களையும் புரட்சிகர போராட்டத்தில் இணைக்க முடியும். சிங்கள மக்கள் பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கு பலியகாவில்லை. பலியாக்கப்பட்டிருக்கிறார்கள். சிறீலங்காவில் புரட்சிகர இயக்கம் எவ்வளவு பலவீனமாக இருக்கிறதோ அதைவிட தமிழகத்தில் புரட்சிகர இயக்கம் பலமாக இல்லை.

**''தமிழீழத்திலுள்ள சிங்கள மக்கள் தேசிய சிறுபான்மையினர், எனவும் சிங்கள மொழி தேசிய மொழியாக்கப்படும்''** என திட்டம் முடிவில் கூறுகின்றது. தேசிய இனம், தேசியச் சிறுபான்மை, மதச்சிறுபான்மை, மொழிச் சிறுபான்மை இவற்றை கோட்பாட்டு ரீதியில் புரிந்து கொள்வோமாயின், தமிழீழத்திலுள்ள சிங்கள மக்கள் **மொழிச் சிறுபான்மையினர்** என்பதும் சிங்கள மக்கள் தாங்கள வாழுகின்ற பகுதிகளில் அரசுடனான **தொடர்பு மொழியாக** சிங்களம் இருக்கும், முசுலீம் மக்கள் தமிழீழத்தில் தேசியச் சிறுபான்மையினராகவும், மதச்சிறுபான்மையினராகவும் உள்ளனர். தமிழீழத்திலுள்ள கிறிஸ்தவர்கள் மதச்சிறுபான்மையினராக மட்டுமே உள்ளனர். மதவழிபாட்டு உரிமைகள் எல்லா மதத்தவர்களுக்கும் உண்டு. தமிழீழ அரசு மதச்சார்பற்ற அரசாக, மதவழிபாட்டுக்கு தடை விதிக்காத, மதவளர்ச்சிக்கு உதவிபுரியாத அரசாக புதிய சனநாயக அரசு இருக்கும்.

திட்டம் (ஓ) பகுதி இந்தியரசு பற்றிய நிலைப்பாட்டை முன்வைக்கிறது.

**''ஏகாதிபத்திய மற்றும் நவகொலனிய சக்திகளுக்கும், தென்னாசியாவின் பிராந்திய வல்லரசான இந்திய அரசுக்கும் இடையில் நடைபெறும் பலப்பாட்சை எமது அரசியலில் கலப்பதே புவிசார் அரசியலின் சாரம்சமாகும்''** என்கிறது.

தமிழீழ மக்கள் கட்சியுடன் நடத்திய திட்டம் பற்றிய நேரடிப் பேச்சு வார்த்தையில் இந்தியாவை பிராந்திய வல்லரசாகப் பார்ப்பதா? பிராந்திய விரிவாதிக்க அரசாக பார்ப்பதா என்ற உரையாடலில் பிராந்திய விரிவாதிக்க அரசாக பார்ப்பது என்ற நிலைப்பாட்டை அங்கீகரித்துள்ளனர்.

வல்லரசியத்தையும் நவகொலனியத்தையும் பிரித்து பார்க்க முடியாது என்பதை முற்பகுதியில் பார்த்துள்ளோம். இந்தியாவும் ஒரு நவகொலனிய நாடே என்பதையும் கவனிப்போம், கவனிப்போம். நவ கொலனிய ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்கா நாடுகளில், சில பலம் பொருந்திய பிராந்திய அரசுகள், நவகொலனிய சமூக பொருளாதார அரசியல், அதிகார முறைகளின் நிமித்திமும், இரு உலக மேல்நிலை வல்லரசுகளாக ரசியாவும், அமெரிக்காவும் உலகை **'பனி யுத்தத்தில்'** ஈடுபடுத்திக் கொண்டிருந்த காலங்களில், பிராந்திய ஆதிக்கங்களுக்காக நடந்த போட்டியில் பிராந்திய அரசுகளை பயன்படுத்தின. பிராந்திய அரசுகளும் தங்களை பலப்படுத்திக் கொண்டன; ரசிய மேல்நிலை வல்லரசு நிலை தகர்ந்தபின் (ரசிய மேல்நிலை உலக வல்லரசு நேரடி யுத்தம் இன்றி தகர்ந்த சமூகக் காரணங்களை வேறு ஓர் இடத்தில் ஆய்வு செய்வோம்) அமெரிக்காவின் ஒற்றை மேல்நிலை வல்லரசு நிலை தொடர்கிறது; பிராந்தியத்தில் பலம் பொருந்திய அரசுகள் வல்லரசுகளுடன் சில விடயங்களில் முரண்பட்டுக் கொள்கின்றனர். தெற்காசியாவில் இந்தியா, மத்திய கிழக்கில் ஈராக், ஆபிரிக்காவில் - தென்னாபிரிக்கா..... குறிப்பாக வல்லரசுகளுடன் முரண்பட்டுக் கொண்டு அண்டை நாடுகளில் நேரடியாக தலையிடுவது, அணு ஆயுத தயாரிப்பு நீண்ட தூர ஏவுகணை தயாரிப்பு... விடயங்களில் வெளிப்படையாக முரண்பட்டுக் கொள்கின்றன. அதேவேளை இப்பிராந்திய விரிவாதிக்க நாடுகள் வல்லரசிய நவகொலனிய முறைக்கு உட்பட்டே இயங்குகின்றன. வல்லரசுகளுக்கும், பிராந்திய விரிவாதிக்க அரசுகளுக்குமான இம்முரண்பாடு பகை முரண்படு அல்ல. வல்லரசிய நவகொலனியத்துவள் நடக்கும் உள் முரண்பாடு என்பதை புரிந்து கொள்வோம். வல்லரசுகளுக்கும், இப்பிராந்திய விரிவாதிக்க அரசுகளுக்கும் இடையில் நடக்கும், மறைமுக வெளிப்படை

www.tamilarangam.net



மோதல்களையும், அண்டை நாடுகள் மேலான விரிவாதிக்க மோதல்களையும், விரிவாதிக்க நாட்டுக்குள் நடக்கும் தேசிய இனப் போராட்டங்களை, வர்க்கப் போராட்டங்- களை நசுக்கும் யுத்தங்களையும் மட்டும் கவனத்தில் கொண்டு **பிராந்திய வல்லரசாக, அணு ஆயுத வல்லரசாக,** பிராந்திய **பொருளாதார வல்லரசாக** பார்க்கும் பார்வை, வல்லரசிய நவகொலனிய முறை பற்றிய புரிதலில் உள்ள தவறுகளின் விளைவாகும்.

எனவே வல்லரசுகளுக்கும், பிராந்திய விரிவாதிக்க அரசுக்கும் இடையிலான பலப்பரீட்சையில் இருந்து மட்டும் புவிசார் அரசியலை பார்க்க கூடாது. விரிவாதிக்க அரசுகளுக்குள்ள வரலாற்று ரீதியான சமூக பொருளாதார, இன, மத, மொழி, நிலத்தொடர்புகளின். தனி விசேட குண இயல்புகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புதிய தமிழீழ அரச ஒன்றை அமைப்பதற்கு வல்லரசுகளுக்கும், இந்திய அரசுக்கும் இடையில் உடன்பாடு வருமானால் **நாம் ஆதரிப்போமோ?** வல்லரசுகளுடன் முரண்பட்டுக் கொண்டு இந்திய விரிவாதிக்க அரசு தமிழீழ அரசு உருவாக உதவ முன் வருமானால் **நாம் ஏற்றுக் கொள்வோமா?** இங்கேதான் வல்லரசு எதிர்ப்பு, விரிவாதிக்க எதிர்ப்பு பற்றிய ஆழமான பிரச்சனை எழுகிறது.

சுதந்திரமும், இறையான்மையும், (மண்ணின் விடுதலை மட்டுமல்ல) மக்களின் விடுதலையையும் முன்னிறுத்தும், சோசலிசத்தை படைக்கக் கூடிய தமிழீழ அரசு, எத்தகைய சமரசமும் இல்லாத ஒட்டுமொத்த வல்லரசு எதிர்ப்பு, விரிவாதிக்க எதிர்ப்பு போராட்டத்தில்தான் நிறுவப்பட முடியும். மற்றைய தேசிய அரசுகள் எல்லாம் மண்ணின் விடுதலையை மட்டுமே ஏற்படுத்தும். அல்லது மாகாண, மாநில அதிகாரத்துடன் திசை திரும்பி விடும். இந்திய அரசு பற்றிய பார்வையில் தமிழீழ முதலாளிய - குட்டி முதலாளிய இயக்கங்களின் பார்வை, அணுகு முறையுடன், புரட்சிகர சக்திகள் தெளிவாக கோட்பாட்டு ரீதியில் கணக்கு தீர்த்துக் கொள்ள வேண்டும்.

திட்டம் (ஓ) பகுதி ஏகாதிபத்திய நவகொலனிய சக்திகள் பற்றி பார்க்கிறது. **அமெரிக்க, அய்ரோப்பிய வல்லரசுகளை ஏகாதிபத்திய முகாமாகவும், ஜப்பானிய வல்லரசை நவகொலனிய முகாமாகவும்** பார்க்கிறது (வல்லரசியம் நவகொலனியம் பற்றி நாம் பார்த்துள்ளோம்.)

**''வல்லரசியங்கள் மூன்றாம் உலக நாடுகளை அரசியல் ரீதியில் கட்டுப்படுத்தாதது போல தோன்றினாலும், பொருளாதார, கலாச்சார வடிவங்களூடாக சுரண்டி கட்டுப்படுத்தி வருகின்றன''** என்கிறது இதனால்தான் மூன்றாம் உலக நாடுகள் **'அரசியல் சுதந்திரம்'** பெற்றன என தவறாக பார்க்கப்படுகிறது. பொருளாதாரத்துக்கும் - அரசியலுக்கும் கலாச்சாரத்துக்கும் இடையிலான உறவை, கீழ்க்கட்டுமான - மேல்க்கட்டுமான உறவை. தனித்தனியான சுயேட்சையான தன்மைகளாக பார்க்கின்ற, **'ஆளும் சூழும'** நவீன கோட்பாட்டுப் பார்வைதான் இதற்கு காரணம்.

பொருளாதாரத்துக்கும் - அரசியலுக்கும் கீழ்கட்டுமான - மேல்கட்டுமான உறவை, கீழ்கட்டுமானத்தின் தீர்மானகரமான பங்கை, வர்க்கங்களின் ஆதிக்கத்தையும், அணி சேர்க்கையும் 'அரசியல் அதிகாரத்துடன்' மிக துணுக்கமாக தனித்தும் இணைத்தும் பார்க்க வேண்டியுள்ளது. வல்லரசியம், நவ கொலனித்துவம் பற்றிய குறிப்பான கவனம் எமக்கு தேவை.

திட்டத்தின் (ஓ) பகுதியின் கடைசி மூன்று பத்திகளும் மிகவும் கவனத்துக்குரியவை. 'மூன்றுலக கோட்பாடு' பற்றிய தெளிவுடன் இது எழுதப்பட்டிருக்கும் எனில் இதை தெளிவாக்கி கொண்டால், அதிலிருந்து வெளிப்படும் அரசியல் நிலைப்பாடுகளும் தெளிவுபடும்.

**''ஏகாதிபத்திய - நவகொலனித்து போட்டா போட்டிகளில் இருந்து எமது தேசிய நலனை பாதுகாக்கும் வகையில் அவற்றுக்கு இடையேயான முரண்பாடுகளை எமது கட்சி பயன்படுத்தும்.''**

**''ஏகாதிபத்திய - நவகொலனித்துவத்துக்கு எதிரான சக்திகளான மூன்றாம்**

www.tamilarangam.net



**உலக நாடுகளுடன் (அரசுகளுடன்) அடக்கப்படுகின்ற - விளிம்பு நிலை தேசங்கள் மக்களுடன் எதிர்ப்பு இயக்கங்களுடன் எமது கட்சி இணைந்து போராடும்.''**

தமிழீழத் தேசிய நலனுக்காக, வல்லரசுகளுக்கு இடையிலான போட்டா போட்டியை பயன்படுத்தித்தான் புலிகள் போராடிக் கொண்டு இருக்கின்றனர், புலிகளின் சர்வதேசியக் கொள்கை அதுதான், சரி எதற்காக வல்லரசுகளுக்கு இடையிலான போட்டா போட்டியை பயன்படுத்துவது? ஆயுதம், பணம், பயிற்சி, பெறுவதற்கு வெளிப்படையான சர்வதேசச் செயலகங்கள் இயக்குவதற்கு. இல்லையா? வல்லரசிய சமூ பொருளாதாரம், அரசியல், அதிகாரம், தேசிய ஒடுக்குமுறை, வல்லரசிய எதிர்ப்பு எனப் பேசிவிட்டு, எழுதிவிட்டு, பின் தேசிய விடுதலை இயக்கத்தை எப்படி கட்டப் போகிறோம், அதற்கான வளங்கள் எவை என்பது பற்றி தீர்மானம் எடுக்கும் போது, வல்லரசுகளின் உதவிகளை அண்டைநாட்டு உதவிகள் பெறுவது பற்றியும் சர்ச்சை ஏற்பட்டது. வல்லரசு எதிர்ப்பு, பிராந்திய ஆதிக்க எதிர்ப்பு, முதலாளித்துவ அரசு எதிர்ப்பு (வங்கம் தந்த பாடம்) இவற்றைப் பற்றி தீர்மானம் போட்டுவிட்ட படியால், வல்லரசுகள், அண்டை நாடுகள் நேரடியாக தலையிட அனுமதிக்க மாட்டோம், தமிழீழ மக்களுக்கும், போராளிகளுக்கும் உதவினால் போதும் எனத் தீர்மானித்தனர் இறுதியில் வல்லரசுகளை இந்தியாவை பயன் படுத்துவது பற்றி முடிவு தீர்மானம் செய்தனர். PLOT, EPRLF, EROS, TELO, LTTE இவ்வியக்கங்கள் வல்லரசுகளை, இந்தியாவைப் பயன்படுத்தினார்களா? பயன்படுத்தப்பட்டார்களா? என்ன நடந்தது, என்ன நடக்கிறது.

**'இன்று புலிகள்'** எல்லாவற்றையும் பயன்படுத்திக் கொண்டு உள்ளனர். அவர்கள் தேசிய அரசு அமைத்தால் 'அந்தத் தமிழீழம்' இன்னொரு **நவகொலனிய தமிழீழமாக இருக்கும்'** என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை, சந்தேகப்படுபவர்கள் புரட்சி, புரட்சிகர இயக்கம் என இனியும் தமிழீழ மக்களையும், தேசத்தையும் ஏமாற்றக் கூடாது.

உருவாகின்ற புரட்சிகர தேசிய விடுதலை இயக்கம் ஒன்று தேசிய நலன்களை பாதுகாக்கும் வகையில், வல்லரசுகளுக்கு இடையிலான போட்டியை, வல்லரசு களுக்கும் மூன்றாம் உலகநாட்ட அரசுகளுக்கும் இடையிலான முரண்பாட்டைப் பயன்படுத்தி தேசிய அரசை அமைப்பது பற்றி சர்வதேசப் பிரகடனம் செய்கிறது எனில் அது நடைமுறையில் **நவகொலனிய தேசிய அரசை** அமைக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

உலகில் ரசிய, அமெரிக்க மேல்நிலை வல்லரசுகள் மோதிக் கொண்டிருந்தபோது, வல்லரசு முகாம்கள் இருந்த வேளை, மூன்றாவது உலக நாட்டு அரசுகள் ஆளும் வர்க்கங்கள் உலக முகாமுக்குள், பிரிந்து இருந்த சமயம், சீனாவில் ஒரு கோட்பாட்டு முன்வந்தது. அதுவும் மாஓவின் பெயரில் வந்தது. **'புதிய ஜனநாயக சீனக்குடியரசு'** தனது வெளியுறவுக் கொள்கையாக கடைப்பிடித்த ஒரு கொள்கையை உலகப் புரட்சி இயக்கத்தின் கோட்பாடாக 'மாஓ'வின் மறைவின்பின் மாஓவின் கோட்பாடாக சீன முதலாளித்துவ பாதை யாளர்களால் முன்வைக்கப்பட்டது.

ரசியா. அமெரிக்க மேல்நிலை வல்லரசுகளை **முதல்** உலகமாகவும், மற்றைய முதைலாளித்துவ வல்லரசு நாடுகளை **இரண்டாவது** உலகமாகவும், சீனாவும் மற்றைய ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க (நவகொலனிய) நாடுகளை **மூன்றாவது** உலகமாகவும் முன்வைத்து, சீன சோசலிச அரசும், உலகப் புரட்சி இயக்கங்களும் தங்களது சர்வதேசக் கொள்கை அடிப்படையில், சோசலிசத்தை காக்கவும், விரிவுபடுத்தவும், புரட்சியை ஏற்படுத்தவும், இந்த மூன்று உலகங்களுக்கு இடையிலான முரண்பாட்டை பயன் படுத்துவது. மேல்நிலை வல்லரசுகள் உலகத்தின் முதல் பொது எதிரி என்பதால் இரண்டாவது, மூன்றாவது உலகத்துடன் கூட்டணி அமைத்து போராடுவது, அதிலும் மூன்றாவது உலகத்தை மிக நம்பகமான (ஏனெனில் வல்லரசுகளுக்கு எதிரானது என்பதால்) கூட்டணியாக காண்பது என முன்வைத்தது மேலும் ஒருபடி சென்று ரசியாதான் மிகக் கொடூரமான யுத்த வெறி கொண்டது. எனவே அமெரிக்க வல்லரசுடன்

www.tamilarangam.net



கூட கூட்டணி அமைத்து, வல்லரசிய போட்டா போட்டியை, முரண்பாட்டை பயன்படுத்தி உலகில் புரட்சியை நடத்துவது, சீன சோசலிசத்தை காப்பாற்றுவது, விரிவுபடுத்துவது பற்றி முன்வைத்தது. சீன முதலாளித்துவ மீட்பாளர்கள் எவ்வளவு நவீன கோட்பாடுகளை முன்வைத்து சீனத்தை 'கொம்யூனிசத்தின் பேரில்' முதலாளித்துவ வல்லரசாக மாற்றி இருக்கிறார்கள். இதை இன்றைய எதார்த்தம் காட்டுகிறது.

மூன்றுலகக் கோட்பாடு முன்வந்த போதே உலகப் புரட்சி இயக்கத்தில் இக்கோட்பாட்டின் அடிப்படையில் பிளவு ஏற்பட்டது. மூன்றுலகக் கோட்பாட்டின் முதலாளித்துவ சமரசப் பாதை பற்றி விவாதிக்கப்பட்டது. நிராகரிக்கப்பட்டது. இன்று ரசியா மேல் நிலை வல்லரசு நிலையை இழந்து விட்டது, உலகத்தில் மேல்நிலை வல்லரசு மோதல் இல்லை என்பதால் மூன்றுலகக் கோட்பாட்டை நிராகரிப்பவர்கள் உண்டு. அதே- வேளை அமெரிக்க வல்லரசுக்கு எதிராக மூன்றுலகக் கோட்பாட்டை முன்னிறுத்து- பவர்களும் உண்டு.

மூன்றுலக கோட்பாட்டை ஆழமாகப் புரிந்து நிராகரிக்காமல் தமிழீழ புதிய சனநாயக குடியரசை நிறுவ முடியாது. வல்லரசுகளுக்கும், நவகொலனிய அரசுகளுக்கும் எதிரான புரட்சிகர தேசிய விடுதலை, வர்க்க விடுதலை இயக்கங்கள், மக்களுடன் இணைந்து போராடுவதே எமது சர்வதேசக் கொள்கையாக இருக்க வேண்டும்.

நசீர் - தமிழரசன்

# தியாகிகளை நினைவில் நிறுத்துவோம்



தமிழீழ தேசத்தின் - மக்களின் விடுதலைக்காக, போராடிய ஆயிரக்கணக்கான போராளிகள் வீரமரணம் அடைந்திருக்கிறார்கள், சிறீலங்கா அரசின் சிறைகளில் படுகொலை செய்யப்பட்டவர்கள், அரசு படைகளால் வீதிகளில், வீடுகளில் அழிக்கப்பட்டவர்கள், அரசு படைகளுடனான நேரடி மோதலில் தரையிலும், கடலிலும் சமரில் இறந்தவர்கள், இராணுவ தயாரிப்புகளில் ஈடுபட்டிருக்கும்போது இறந்த போராளிகள், இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போரில் உயிர் இழந்தவர்கள் மாவீரர்களாக ஒருபுறம்.

சிறீலங்கா அரசை எதிர்த்து போராடிய, போராடுகின்ற இயக்கங்களுக்கு இடையிலான அழித்தொழிப்பில், சண்டையில் பலியானவர்கள், எதிரிகளுக்கு காட்டிக் கொடுக்கப்பட்டு அழிக்கப்பட்டவர்கள், இயக்க தலைமைகளால் இயக்க சிறைகளில், முகாம்களில் வீடுகளில், அரசு படைகளுடனான மோதலில் பின்னிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுகொலை செய்யப்பட்டவர்கள். கடலில் வீசப்பட்டவர்கள் தமிழீழத்திலும், தமிழ்நாட்டிலும், தரையிலும் - கடலிலும் தலைமைகளின் கொலை வெறிக்கு இரையானவர்கள் இன்னொரு வகையான தமிழீழ தியாகிகள் மறுபுறம்.

புலிகள் தங்கள் போராளிகளையும், தலைவர்களையும் **மாவீரர் தினத்தில்** நினைவு கூர்கிறார்கள், துரோக இயக்க தலைமைகள் கூட தங்கள் தலைவர்களை போராளிகளை நின்னைவு கொள்கின்றனர்.

இயக்கத் தலைமைகளுக்கு அடிபணிய மறுத்ததற்காக படுகொலை செய்யப்பட்ட போராளிகள் தலைவர்கள், புரட்சிகர அரசியலுக்கும் நடைமுறைக்கும், புரட்சிகர இயக்கத்தை கட்டுவதற்கும் முயன்ற ஒரே காதணத்துக்காக இயக்க தலைமைகளால் சிறைவைக்கப்பட்டு, அழிக்கப்பட்ட புரட்சிகர இயக்க முன்னோடிகளை, தியாகிகளை நாம் நினைவு கொள்ள வேண்டும், புலிகளால் சிறைப் பிடிக்கப்பட்டவர்களின் நிலை என்னவெனத் தெரியவில்லை. அரசு படைகளால் அழிக்கப்பட்ட, சிறைப் பிடிக்கப்பட்ட புரட்சியாளர்கள் பற்றி தெளிவான செய்திகள் இன்றுவரை இல்லை. தமது இறுதி மூச்சுவரை தமிழீழ தேச சுதந்திரத்துக்காக மக்களின் விடுதலைக்காக போராடிய தோழர்களை நினைவில் நிறுத்துவோம். புரட்சிகர இயக்கத்தை கட்ட முனைந்த விசுவானந்த தேவா, நெப்போலியன், சந்ததியார், விறீதரன் போன்ற முன்னோடிகளுக்கு 'தேசபக்தன்' தனியான அஞ்சலி செய்தி வெளியிட்டது. புரட்சிகர அரசியலில், புரட்சிகர நடைமுறையில் அவர்களின் ஒட்டுமொத்த பார்வைக்கும் 'தேசபக்தனுக்கும்' முரண்பாடுகள் இருந்த போதும், புரட்சிகர இயக்கத்தை தமிழீழத்தில் கட்டுவதற்காக மரணம் வரை போராடிய முன்னோடித் தியாகிகள் அவர்கள், எனப் பார்க்கிறோம்.

விசுவானந்த தேவாவை தேசபக்தன் நினைவு கூர்ந்தபோது அவர் சிறையில் இருக்கிறாரா? இறந்து விட்டாரா? எனக் கேட்டு 'தியாகி' எனக் கூறலாமா எனச் சிலர் கேள்வி கேட்டனர். சிறையில் இருந்தாலும், இறந்து விட்டலும் அவர் '**தியாகி**' என்பதில் சந்தேகம் இல்லை சிறைப்பிடிக்கப்பட்டவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதைக்கூட வெளியிட மறுக்கும் அரசும், புலிகளும் ஆளும் தேசத்தில் இன்னும் எத்தனை காலம் மறைப்பது. இழப்பை மறுப்பது.

'தீப்பொறி' குழுவை உருவாக்கிய-வர்களில் ஒருவரும் புதியதோர் உலகம் நாவலின் ஆசிரியரான தோழர் கோவிந்தனை அவருடன் சிறைப் பிடிக்கப்பட்ட தோழர்களை தேசபக்தன் நினைவு கூர்கிறது.

ஒருபக்கம் தியாகிகளான தலைவர் களையும் போராளிகளையும் நினைவு கூர்வதென்பது கல்லறைகளை வைப்பது, சிலைவைப்பது, மாலை மரியாதையுடன் பூஜிப்பது என்ற சடங்குமுறை சம்பிரதாயங்களுடன் திருப்திப்படுவது மறுபக்கம் தியாகிகளை நினைவு கூர்வது என்பது தனிநபர் வழிபாட்டு முறைக்கு இட்டுச் செல்லும் எனக் கூறி முன்னோடிகளின் தியாகங்களை மறக்கடிப்பதும் இன்று நம்மிடையே காணப்படுகிறது. மக்களின் விடுதலைக்கும் தேசத்தின் சுதந்திரத்திற்கும் என போராட்டத்தில் இறுதிவரை திசை விலகாது உயிர் நீத்த தோழர்களை நினைவு கூர்வுவது என்பது வரலாற்றுத் தேவை ஆகும்.

புதியதோர் உலகம் இரண்டாவது பதிப்பில் வெளிவந்த விபரங்களை அப்படியே வெளியிடுகிறோம்.

- **தேசபக்தன்**

www.tamilarangam.net



# புதியதோர் உலகம் நூலாசிரியர் கோவிந்தன் குறித்த விபரங்கள்

சொந்தப் பெயர் : சூசைப்பிள்ளை நோபேட்

புனைபெயர்கள் : டொமினிக், ஜீவன், கேசவன்

பிறப்பு : 1948.5.02 பாலையூற்று, திருகோணமலை

தந்தையின் பெயர் : மைக்கல் சூசைப்பிள்ளை

தாயின் பெயர் : நிக்கொலஸ் அன்னம்மா

**கல்வியும் தொழிலும்:**

இவர் தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை புனிதவளனார் தமிழ் வித்தியாலயத்தில் முடித்தார். இடைநிலைக் கல்வியை திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியிலும், உயர்கல்வியை திருகோணமலை இந்துக் கல்லூரியிலும் முடித்தார். கொழும்பு பல்கலைக் கழகத்தில் கலைப் பிரிவில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். அக்காலத்தில் மாணவர் அமைப்புகளில் தீவிரமாக பங்கெடுத்தார். மார்க்சியக் கருத்துகளில் ஈடுபாடு செலுத்தினார். பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு கொழும்பு நில அளவையாளர் திணைக்களத்தில் எழுதுவினைஞராக (குமாஸ்தா) பணியாற்றினார். பின்பு திருமலை மாவட்ட கல்விக் கந்தோரில் பணியாற்றினார்.

**அரசியல்:**

பல்கலைக்கழக வாழ்வில் பல்வேறு இடதுசாரிக் குழுக்கள். அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டார். பின்னர் மலையகத்திலிருந்து வெளியான **'தீர்த்தக்கரை'** எனும் அரசியல், இலக்கிய காலண்டிதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் அதன் வெளியீட்டாளராகவும் இருந்தார். அப்போது பிரான்சில் சேவியர் எனும் பெயரில் சிறுகதைகள் எழுதியுள்ளார்.

1980 -களின் தொடக்கத்தில் சங்கப் பலகை' எனும் குழுவை அமைத்து, மாதாந்தம் முக்கிய சமூக, அரசியல், பொருளாதார, கலை இலக்கிய விடயங்கள் தொடர்பான கருத்தரங்குகளை தொடர்ச்சியாக நடத்தி வந்தார்.

1982 இல் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் (PLOT) இணைந்து கொண்டார்.

1983 இல் முழுநேர உறுப்பினரானதுடன் கழகத்தின் மத்திய குழுவிற்கும் தெரிவானார்.

1985 இல் (PLOT) அமைப்பிலிருந்து வெளியேறினார். **'தீப்பொறி'** ஈழ விடுதலைப் போராட்டக் குழுவை நிறுவிய ஸ்தாபக உறுப்பினர்களில் இவரும் ஒருவர். இக் காலகட்டத்தில் (PLOT) இனால் தேடப்பட்டு தலைமறைவாக இருந்து செயற்பட்டார். இக்காலத்தில் தான் **'புதியதோர் உலகம்'** என்ற நாவல் எழுதப்பட்டது.

1986 இல் விடுதலைப் புலிகள் ஏனைய அமைப்புகளை தடைசெய்தமையால் இவர் தொடர்ந்தும் தலைமறைவாகவே செயற்பட்டார்.

1991 இல் யாழ்ப்பாணத்தில் அமைப்புப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மே மாதம் 17 - ம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பினால் கைது செய்யப்பட்டார். மேற்கொண்டு அவர் பற்றிய எந்த விபரமும் இன்றுவரை கிடைக்க வில்லை.

www.tamilarangam.net



# தொடரும் தனிநபர் அழித்தொழிப்பு

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் புத்தாயிரம் ஆண்டு முதல் அழித்தொழிப்பு தை 5-ம் தேதி இனந்தெரியாதவர்களால் தமிழ்க் கொங்கிரசின் தலைவர் குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அதே தினத்தில் பிரதமர் சிறீமா இல்லத்தின் முன் ஒரு தற்கொலைப் பெண்ணின் குண்டு வெடிப்பில் பாதுகாப்பு படையினர் உட்பட பலர் இறந்தனர்.

சிறீலங்கா அரசு கொழும்பில் ஊரடங்கு உத்தரவைப் போட்டு ஆயிரக் கணக்கான தமிழர்களைக் கைது செய்து துன்புறுதி புத்தாயிரம் ஆண்டைத் தொடக்கியுள்ளது. சிறீலங்காவில் இருந்து தமிழீழப் போராட்டத்தை, புலிகளை ஆதரிப்பவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. 1944-ஆம் ஆண்டில் உருவான தமிழ்க் கொங்கிரஸ்சும், அதன் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலமும் பல துரோகங்களை, சமரசங்களை செய்திருக்கின்றனர். குறிப்பாக மலையக தமிழ் மக்களின் வாக்குரிமை, பிரஜாவுரிமை பறிப்புக்கு 1948-இல் சிறீலங்கா அரசுக்கு உடந்தையாக இருந்தது. 1977-ல் தேர்தல் இலாபத்துக்காக தமிழ்க் கொங்கிரஸ் **'வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மூலம்' தமிழீழக் கோரிக்கையை** ஏற்றுக் கொண்டது. 1982 சனாதிபதி தேர்தலில் குமார் பொன்னம்பலம் நின்றதன் மூலம் (1999 சனாதிபதி தேர்தலிலும் போட்டியிட தீர்மானித்து இறுதியில் தவிர்த்தது) சிறீலங்கா சனாதிபதி தேர்தலில் நின்ற ஒரே ஒரு தமிழன் என பெருமை பேசப்படுகிறது. தமிழீழ தரகு ஆளும் வர்க்கத்தின் அரசியல் கட்சியாக செயல்பட்டு வந்ததை மறைக்க முயல்கினறனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், இலங்கை தொழிலாளர் காங்கிரசும், வட்டுக்கோட்டை தீர்மானத்தை கைவிட்ட போதும், முன்னாள் ஆயுதப் போராட்ட இயக்க தலைமைகளும் தமிழீழப் போராட்டத்தை கைவிட்டு, சிறீலங்கா அரசுடன் சமரசம் செய்து கொண்டன. ஆனால் தமிழ்க் கொங்கிரசும், குமார் பொன்னம்பலமும் சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் இருந்தபடியே தமிழீழ தேசியப் போராட்டத்தை - புலிகளை வெளிப்படையாக ஆதரித்து வந்தனர். பேச்சு வார்த்தைக்காக **'திம்புக் கோரிக்கையை'** இறுதிவரை முன்னிறுத்தியது வரவேற்கதக்கது. சந்திரிகா அரசின் ஏமாற்றுக்களை தொடர்ந்து அம்பலப்படுத்தினார். சிறீலங்காவில் தமிழர்கள் மீது நடந்து வந்த கொடுமைகளுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்தார், அரசு படைகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் தமிழர்கள் சார்பாக முக்கிய வழக்குகளில் இலவசமாக வாதிட்டு வந்தார். பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மரணம் வரை செயல்பட்டார், தமிழீழ தேசியப் போராட்டத்தின் பக்கம் நின்றவர். புலிகளை வெளிப்படையாக ஆதரித்தது. சந்திரிகா அரசை எல்லா வழிகளிலும் சர்வதேச சமூகத்தின் முன் அம்பலப்படுத்தியதால் எதிரிகளால் கோழைத்தனமாக படுகெலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ போராட்ட வரலாற்றில் புலிகளால் தொடக்கி வைக்கப்பட்டு தற்கொலைத் தாக்குதல் என்ற அளவுக்கு வளர்த்தெடுக்கப்பட்டுள்ள தனிநபர் அழிப்பு அரசியல் படுகொலைகள் உலக பிரசித்தமாகியுள்ளது; பிரதான எதிரிகளுக்கு எதிராக மட்டுமல்ல சக இயக்க அரசியல் முரண்பாடுகளை, உள்ளியக்க அரசியல் முரண்பாடுகளை எதிர்கொள்ளவும், தீர்க்கவும் கூட தனிநபர் அழித்தொழிப்பு வழியை தமிழீழ அராஜக தலைமைகள் பின்பற்றின.

ஒரு இயக்கத்தை முளையில் அழிப்பதற்கும், அரசியல் கட்சிகளை, அரசை



தமிழத தேசிய ஆவணச சுவடிகள

www.tamilarangam.net



நிலைகுலையச் செய்யவும் தனிநபர் அழித்தொழிப்பு சதியை வல்லரசுகளின் உளவு நிறுவனங்கள் செய்து வந்தன. இந்த அரசு பயங்கரவாத வழிக்கு எதிராக தனிநபர் அழித்தொழிப்பு வழியை குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் முன்னிறுத்தின.

தமிழீழ போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் புலிகளின் தனிநபர் அழித்தொழிப்பை சக இயக்கங்கள் எதிர்கொண்டன. பின்னாளில் அதே புலிகளின் வழியை மற்றய குட்டி முதலாளிய அராஜக தலைமைகளும் பின்பற்றின. ஆனால் புலிகள் தற்கொலைப் படையை உருவாக்கி, தனிநபர் அழித்தொழிப்பை உயர்ந்த கட்டத்துக்கு வளர்த்துள்ளனர்.

அரசியல் இராணுவத் தலைவர்களை அழிப்பதன் மூலம் போராட்டத்தில் காய் நகர்த்தப்படுகிறது. 1999 PLOT-இன் இராணுவ தளபதி மாணிக்கதாசன், EPRLF-இன் (வரதராஜப் பெருமாள் பிரிவு) இராணுவத் தளபதி ராசிக், கொழும்பில் நீலன் திருச்செல்வம் என தனிநபர் அழித்தொழிப்பு நடந்தேறியது. புலிகளின் ஆதரவாளர் எனக் கருதப்பட்ட EPDP-இன் ரமேஷ், 2000-த்தில் குமார் பொன்னம்பலம் என பதிலடியான அழித்தொழிப்புக்கள் நடந்திருக்கிறது. தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல சிங்களவர்கள் மத்தியிலும் தனிநபர் அழித்தொழிப்பு நடக்கிறது. U.N.P., S.L.F.P. கட்சிக்குள் இராணுவத்துள் நடக்கும் அதிகாரப் போட்டியில் ஆட்சி கவிழ்ப்புக்கும் கூட தற்கொலைத் தாக்குதல், தனிநபர் அழித்தொழிப்பு நடக்கிறது, தங்களின் அதிகாரப் போட்டியை தீர்க்கின்ற இனவாதிகள், புலிகளின் தற்கொலைத் தாக்குதல் வழியை வெளிப்படுத்தி புலிகளுக்கு எதிரான இனவாதத் 'தீ'யையும் வளர்க்கின்றனர். தமிழீழ மக்கள் போராட்டத்தை பலவீனப்படுத்தும் தனிநபர் அழித்தொழிப்பு வழியை புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள் நிராகரிக்க வேண்டும்.

- சோபா -

# தமிழீழத்தில் நேற்று கிருஷாந்தி இன்று சாரதாம்பாள் நாளை..........

புத்தாயிரம் ஆண்டு, புங்குடு தீவில் புதிய மக்கள் அலையை உருவாக்கியுள்ளது. சிறீலங்கா கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டு பனை ஓலையால் மூடப்பட்ட **சாரதாம்பாளின்** மரணச் செய்தியுடன் அந்த அலை வெளிப்பட்டுள்ளது. 500-க்கும் மேற்பட்ட மக்கள் தன்னெழுச்சியுடன் கடற்படை தலைமையகம்முன்பு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். நியாயம் கோருகின்றனர். விசாரணை வேண்டுகின்றனர். யாழில் கண்டனக் கூட்டம் நடந்தது. கொழும்பில் நாவலர் மண்டபத்தில், சுவிசில் புங்குடு தீவு விழிப்புணர்வுக் குழு, சர்வதேச இந்து ஒற்றுமை அமைப்பு என்பன ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளன.

புங்குடு தீவு கண்ணகி அம்மன் கோயில் குருக்களின் 20 வயது மகள் குதறப்பட்ட சாரதாம்பளின் உடல். கொழும்பில் பிரேத பரிசோதனைக்கு பின், களுத்துறை சிறையில் உள்ள அவரது சகோதரரின் பங்கு பற்றலுடன் இறுதிக் கிரிகைகளுடன் முடிக்கப்பட்டுள்ளது. புங்குரடு தீவு கடற்படை கட்டளை அதிகாரி கூட இப்பாலியல் வல்லுறவில், படுகொலையில் கடற்படை

www.tamilarangam.net



யினர் சம்பந்தப்பட்டிருப்பதை ஒப்புக் கொண்டுள்ளார். அரசின் (C.I.D.) உளவுப் பிரிவு விசாரணை முதல் அறிக்கை தயாரித்த போதும், இன்னமும் ஒருவர் கூட கைது செய்யப்படவில்லை.

அரசு கட்டுப்பாட்டு பகுதியும், EPDP-இன் கோட்டையுமான புங்குடு தீவில் நடந்த இக்கொடூரம் தமிழீழப் பெண்களுக்கு மீண்டும் மீண்டும் எச்சரிக்கை செய்கிறது. தந்தையை, கணவனை துப்பாக்கி குண்டுக்கு பலி கொடுத்த, தன் கண்ணிழந்த சந்திரிகா பெண்மணியால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின், மக்களின் கண்ணீரை அவலத்தை புரிந்து கொள்ள முடியும். சமாதானத்தை ஏற்படுத்துவார் எனப் பிரச்சாரப்படுத்தி 94-ல், 99-ல் சனாதிபதி-யாகியவர்களுக்கு, EPDP-யினர் இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? பெண்களின், மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களே பதிலைத் தேட முடியும்.

புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான யாழை 95-ல் சிறீலங்காப் படை ஆக்கிரமித்த-பின் 96-ல் சுண்டுக்குளி மாணவி. **கிருஷாந்தி** இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்-பட்டாள், பெண்களின், மக்களின் தொடர் போராட்டங்களே விசாரணையில், அடை-யாள அணி வகுப்பில், 5 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர். மரண தண்டனை வழங்கப்பட்டபோது, குற்றவாளிகள் **செம்மணி புதை குழியை** நோக்கி கை காட்டினர், **செம்மணி, யாழ் விளையாட்-டரங்கு,** புதைகுழிச் சடலங்கள் தோண்டி, எலும்புக் கூடுகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், அறிக்கைகள் வெளி வருகிறது. மீண்டும் புங்குடு தீவிலும், புதை குளிகள் இருக்கும் என்பதை **'சாரதாம்பாள் படுகொலை'** வெளிச்சத்துக்கு கொண்டு வரலாம். பெண்களின் மக்களின் தொடர் போராட்டங்கள் மட்டுமே இதை தீர்மானிக்கும்.

சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறையை தமிழீழப் பெண்கள்தான் அதிகளவில் முகங் கொண்டு வருகின்றனர். விசாரணையில், தேடுதலில், சுற்றி வளைப்பில், ஆக்கிர-மிப்பில் வீட்டிலும், தெருவிலும், முகாமிலும் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கும், பாலியல் வசைமொழிகளுக்கும், பாலியல் பலாத்காரத்துக்கும் அன்று முதல் இன்று வரை முகங் கொள்கின்றனர். இனக்கலவரங்களில், சிங்கள காடையர்களால், படையினரால் தமிழீழப் பெண்கள் சந்தித்த பாலியல் கொடூரங்கள், பெண்களின் உடல் அங்கங்-களின் ஒவ்வொரு பகுதியையும் கடித்து குதறி இருக்கிறது. பெண்குறி குண்டு வைத்து, தகர்க்கப்பட்டிருக்கிறது. மனதாலும், உடலாலும் பெண்கள் சிதைக்கப்பட்டிருப்-பதை எழுதி மாளாது. பொறுக்க முடியாமல்-தான் பெண் ஆயுதம் ஏந்தினாள். ஆணாதிக்-கத்தின் கொடூரம் கருத்தியல் தளத்தில் முகங் கொள்வது வேறு, வன்முறை தளத்தில் எதிர் கொள்வது வேறு.

சிறீலங்காப் படைகளின் பாலியல் வன்முறைக்கு, பாலியல் பலாத்காரத்துக்கு பல ஆயிரம் தமிழீழப் பெண்கள் பலியாக்கப்-பட்டுள்ளனர். பல பத்துச் செய்திகளே வெளியுலகுக்கு வந்துள்ளன. யாழ் அரசு கட்டுப்பாட்டுக்கு வந்தபின் வட்டுக் கோட்டை சாவகச்சேரி, நெல்லியடிச் சம்பவங்கள் சில மாதங்களுக்கு முன் புங்குடு தீவில் ஊமைப் பெண் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டாள். யாழில் கிருஷாந்தி மட்டக்களப்பில் கோணேஸ்வரி. இன்று சாரதாம்பாள். நாளை ....., சிறீலங்காவில் சந்திரிகா மீதான கொலை முயற்சிக்கு பின் கொழும்பில் / கிழக்கில் பல நூறு தமிழ்ப் பெண்கள் தேடுதலில், விசாரணையில் சுற்றி வளைப்பில் பாலியல் துன்புறுத்தலால் தினம் தினம் உளக்கொலைக்கு உட்பட்டு வருகின்றனர். படைகளில் உள்ள ஆண்கள் மட்டுமல்ல. பெண்களும், தமிழீழ பெண்-களை, சித்திரவதை செய்கின்றனர். ஆண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்குவது தனி விசேட கொடூரம்.

சிறீலங்கா அரசின் சிங்கள படைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் தமிழீழ பெண்களும், ஆண்களும் தமிழீழச் சமூகத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் ஆண்களால், தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு, பலாத்காரத்துக்க உள்ளாக்கப்- படும் நடவடிக்கைகளுக்கும் எதிராக குரல் கொடுக்க போராட வேண்டும். சுவிசின் 'சூரிச்' சம்பவம் கவனத்தை ஈர்த்தது.

தமிழீழப் பெண்கள் மீதான ஒடுக்குமுறை சமூகத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் வெளிப்படுகிறது. தெருச் சண்டை, சாதி, மத இனக் கலவரம், யுத்தம்... என எல்லா அரங்கிலும் பெண்தான் முதல்குறி வைக்கப்படுகிறாள். பெண்கள் தங்கள் மீதான சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு, ஒடுக்குமுறைக்கும், ஆணாதிக்கத்துக்கும் எதிரான போராட்டத்தை முரண்இன்றி இணைத்து முன்னெடுக்க வேண்டும். தமிழீழ தேசிய இன விடுதலை போருக்கும், பெண் விடுதலைப் போராட்டத்துக்குமான உறவை, தனித்தனியாக, முன்பின்னாக, முரண்பாடாகப் பார்ப்பதை அணுகுவதை விட்டு, புதிய சனநாயக முறையில் பார்த்து, அணுக வேண்டும். ஆயுதம் தாங்கிய தமிழீழப் பெண்கள் ஆணாதிக்க கருத்தியலுக்கு எதிராகவும் போராட வேண்டும். ஆணாதிக்க கருத்தியலுக்கு எதிராக நிற்கும் பெண்கள் போராட தயாராக வேண்டும்.

— சோபா

# விளம்பரங்களில் பெண்கள்

இன்றைய தினம் விற்பனையாளர்கள் தங்களின் பொருட்களை விற்பதற்கு 84% பெண்களைத்தான் உபயோகப்படுத்துகின்-றனர். அது உளவு இயந்திரம், டயர், ஷேவிங் கிறீம், ஆகட்டும் பெட்ரோலியப் பொருட்-களாகட்டும். ஏன் இப்படி நேரடியாக சம்பந்தமில்லாத, பெண்களுக்கு தொடர்பற்ற (அ) ஆண்கள் உபயோகப்படுத்தும் பொருட்-களுக்கு கூட பெண்ணை ஏன் உபயோகப்-படுத்த வேண்டும்? இதன் அடிப்படைக் காரணங்கள் யாது? சிலர் இதை எப்படி நியாயப்படுத்துகின்றனர் என்பதையும் பார்ப்போம்.!

(1) பைபிளில் கூட உள்ளது, முதல் மனிதன் என்று கூறப்படும் ஆதாம், ஏவாள் மூலமாகத்-தான் சாத்தானை வென்றானாம். அந்த நடைமுறைதான் இன்று பயன்பாட்டில் உள்ளது என்கின்றனர். (பெண்புத்தி பின்புத்தி என்ற பழமொழி இதற்கு பொருந்தாதோ!)

(2) விளம்பரதாரர்களுக்குத் தெரியும் நாம் வாழ்வது ஆணாதிக்க சமுதாயத்தில் என்று அதன் விளைவு குடும்பத்தில் பெரும்பாலும் முடிவெடுக்கும் உரிமை ஆண் / கணவன் கையில் உள்ளதால் அவனைச் சார்ந்திருக்கும் மனைவியும், குழந்தைகளும்தாம் விரும்பும் பொருட்களை வாங்க வேண்டுமானால் அது அவன் கையில் விருப்பத்தில் அடங்கி உள்ளது. தாம் விளம்பரம் கொடுக்கும் பொருட்கள் வாங்கப்பட வேண்டுமானால், அவளை வசீகரமான அழகான, கவர்ச்சியான, பாலியல் உணர்வு தூண்டும் விதமாக காட்டி அவன் மனதில் இடம்பிடித்து அப் பொருட்களின் முக்கியத்துவத்தை அவன் மூலமாக தெரிவிப்பார்கள். (இது ஆண்களை மறைமுகமாக மாங்காய் மடையர்களாக நினைக்கவே தோன்று மல்லவா) கொஞ்சம் அறிவுடன் சிந்திப்பவர்களுக்கு எதை எப்படி வாங்க வேண்டும் என்பதைவிட, எப்படித் தூண்டப்பட்டால் அவள் மனம் வெல்லும் என்பது ஒருபக்கம்.

(2) ஊமையானதையும், வலிமையற்றதை-யும், அமைதியனதையும் எப்படி முன்னுக்கு கொண்டு வரமுடியும் / முன்னேற்ற முடியும்? சக்தி வாய்ந்ததைக் கொண்டு தானே முன்னேற்ற முடியும். அப்படித்தான் (பெண் பலவீனமானவள் என்று ஒருபக்கம் சித்தரித்துவிட்டு) பொருட்களை விற்பதற்கு பெண்ணை பயன்படுத்துகின்றனர் என்கிறார்கள் ஒரு சிலர்.

www.tamilarangam.net



(3) இன்று நிறைய பொருட்களை விற்பதும் பெண்கள்தான். அதனால் வரவேற்பாளராகவும், விற்பனைப் பெண்களாகவும், மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் நிறைய நிறுவனங்கள் பெண்களைத்தான் வேலைக்கு அமர்த்துகின்றனர்.

(4) விளம்பரங்கள் எப்படி விளையாடுகின்றன என்றால் ''வசீகரி, வெற்றிக் கொள்''. யார் இதற்கு உகந்தவர்கள் ஆண்களை காட்டிலும் பெண்கள்தான் என்கின்றனர்?

(5) பெரும்பாலான விளம்பர நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் ஆண்கள். அவர்கள் மூளைகளில் சதா நேரமும் பெண்களுடன் இருப்பதை இன்பமாக கருதுகின்றார்களோ. மேலும் ஆண்களை ஒரு பெண் மூலமாகத்தான் எந்த முடிவுக்கும் வசியப்படுத்த முடியும் என்று நினைக்கின்றார்களோ அதனால் அதனை விளம்பரங்களிலும் பிரதிபலிக்கின்றார்கள்.

(6) பெண்கள், ஆண்களைவிட ஆடை இருந்தாலும் / இல்லாமலிருந்தாலும் அழகானவர்களாம். அதனாலேயே விளம்பரங்கள் தங்களின் பொருட்களை விற்பதற்கு அழகானவர்களைத்தான் பயன்படுத்துவார்களாம்.

(ஆண்களில் யாரும் அழகானவர்கள் இல்லையா? பெண்கள்தான் அழகானவர்கள் என்று சொல்லும் குரல் யாருடையது?)

இப்படியான பல மேலோட்டமான காரணங்கள் கூறப்பட்டாலும், சில விளம்பரங்களை சற்றே கூர்ந்து நோக்குவோமாக

**ஆணென்ன, பெண்ணென்ன எல்லாம் ஓரினம்தான்** என்று நாம் பாடினாலும், எழுதினாலும், மேடைகளில் முழங்கினாலும் ஏனோ பற்பல நுகர் பொருட்களின் விளம்பரங்களில் சித்தரிக்கப்படும் பெண்களின் குணச்சித்திரங்களும் அவைகளில் சொல்லப்படும் கருத்துக்களும் என்றும் பெண்ணை ஒரு சராசரி அடுப்படி அரசியாகவே அலங்காரப் பாவையாகவே வீட்டையும் குடும்பத்தையுமே எண்ணி சதா சர்வ காலமும் வாழும் ஒரு ஆதர்ஷ மனுஷியாக சித்தரிக்கிறது என்பது ஒரு கசப்பான உண்மை.

(1) பெண்ணின் தலையாய கடமை சமையலில் சிறந்து விளங்க வேண்டியது என்பதை பார்வையாளர்கள் மனதில் பசுமரத்தாணியாய் பதிய வைக்கும் விளம்பரங்கள் எத்தனை எத்தனை.

பெண்ணுக்கு சமையல் தெரியுமா? என்ற வருங்கால மாமியாரின் கேள்வியில் கலங்கி நிற்கும் பெண்ணுக்கு கை கொடுக்கிறது ஒரு குறிப்பிட்ட பிராண்ட் சமையல் பொடி வகைகள்.

(2) புதிதாய் வரும் மருமகள் கையோடு கொண்டு வந்த டீத்தூளால் கணவர், மைத்துனர், மாமியார், மாமனார் ஆகியவர்களின் ருசிக்கேற்ப ஸ்ட்ராங்காகவும், சுவையாகவும், மனம் நிறைந்த டீயை நொடியில் தயாரித்து தந்து அவர்கள் மனதில் இடம் பிடிக்கிறாள். ஒரு வேளை இவளுக்கு அந்த பிராண்டு டீ பொடி கைவசம் இல்லாவிட்டால் அவளது நிலை? யோசியுங்கள்!

(3) எத்தனை வாஷிங் மிஷின்களும், சலவை சோப்புக்களும், விளம்பரப்படுத்தட்டுமே ஏதாவது ஒன்றில்கூட ஆண் துணி துவைக்கிறானா? உதவுகிறானா? ஏன்? துணி துவைப்பது பெண்களே செய்ய வேண்டிய செயல் என்பது எழுதாத சட்டமா? என்ன? எதார்த்த வாழ்வில் ஆண்கள் துணி துவைப்பதில்லையா?

(4) இன்றைய பெண்களும் ஆண்களுக்கு சமமாக எல்லா வேலைகளிலும் ஈடுபட்டு சிறந்து விளங்கும் போதும் ஏனோ அவளது **'புத்திசாலித்தனம்'** சோப்பு வாங்குவதிலும் சமையல் எண்ணை வழங்குவதிலும் தான் விளம்பரத்தில் வெளிப்பட வேண்டுமா என்ன?

(5) எத்தனை வகை குளியல் சோப்புகளில், மேனியை அழகுறச் செய்யும் சோப்புகளுக்கும், பொன்னாய் ஜொலிக்க வைக்கும் சோப்புகளுக்கும் என்றுமே பெண் முகங்கள்தான் விளம்பரங்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால், காலங்காலமாக,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆரோக்ய வாழ்வு தரும் சோப்புக்கு கைப்பந்து விளையாடும் துடிப்புள்ள இளைஞர்கள். ஏனிந்த பாரபட்சக் கருத்து? பெண்ணுக்கு அழகில்தான் நாட்டமா? ஆரோக்கியத்தில் அக்கறை இல்லையா என்ன?

(6) எத்தனை பெண்கள் ஸ்கூட்டர்களையும், கார்களையும் ஓட்டட்டுமே, பெண் வாகன-மோட்டுவது ஒரு ஜோக்கிற்குரிய விடய-மாகவே பத்திரிக்கையிலும் சினிமாக்களிலும் காட்டப்படுகின்றன. ஏன் மோசமாய் ஓட்டும் ஆண்களே இல்லையா.

(7) தாம் பிறப்பிலேயே மாநிறமானவர்கள். இது இயற்கை, இதை மாற்றவே முடியாது. ஆனால் மேனியை சிவப்பாக மாற்ற உத்தர-வாதம் தரும் சிவப்பழகு கிறிம்களும், பேர்னஸ் க்ரீம்களும் ஏன் பெண்களையே குறி வைக்கின்றன? ஆண் கறுப்பாக இருந்தால் அது மட்டும் பரவாயில்லையா? இப்படி **'சிவந்த நிறம் அழகு'** எழுதி வைப்பானாம் சினிமாக்காரன் என்ற எண்ணத்தை ஏற்படுத்தக் கூடிய விளம்பரங்கள், கருப்பர்கள் வாழும் மேலை நாடுகளில் கூட காணப்படுவதே இல்லை. காரணம் அவர்கள் தங்களின் தோலின் நிறத்தை மனதார ஏற்றுக் கொள்கின்றார்கள். விளம்பரங்களில் வரும் சராசரி பெண்கள்தான் இப்படி என்றால், நம் விளம்பரங்கள் நாளைய பெண் இன்றைய சிறுமியை எப்படி சித்தரிக்கின்றது.

(1) உங்கள் மகள் வளர்ந்துக் கொண்டே போகிறாள். சேமியுங்கள். அவள் திருமணத்-திற்கு என்ற ரீதியில் பயமுறுத்துகின்றன. நாம் சேமிப்பு நிறுவனங்களின் விளம்பரங்கள்.

(2) ஓடியாடி விஷமம் செய்து துணிகளை அழுக்காக்கி படிகளின் கைப்பிடிகளில் சறுக்கி வரும் பையன்களுக்கிடையே, பெண் குழந்தையோ, ஒரு இளம் தாயின் பிரதி பிம்பமாய் வளர்கிறாள். குறும்பும் துள்ளலும் ஆண் குழந்தைகளுக்கே பிறப்புரிமையா என்ன? இன்றிலிருந்தே நம் விளம்பரங்களால் நாளைய பெண்ணும் அவள் தாயைப் போலவே சோப்பு, சமையல், நகை, புடவை என்ற வட்டத்திலேயே உழன்று வர தயார் படுத்தப்படுகிறாள்.)

விளம்பரச் சிறுவன் Global net பற்றிப் பேசுகிறான். அடுத்த நூற்றாண்டுகான முதலீட்டைப் பற்றிப் பேசும் உலகம் தெரிந்த அறிவாளி அவன். ஆனால் இந்த விளம்பர சிறுமி சமர்த்தியமாக அப்பளத்தின் பெருமையைப் பாடுகிறாள். குட்டிப் பாப்பாவின் படுக்கையை புகழ்கிறாள்.

இவர்கள் இதோடு மட்டுமா நின்றார்கள். டயர் விளம்பரத்திற்கு அவர்கள் கொடுக்கும் வாசகம். டயருக்கும் பெண்ணுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா அப்படியே முகமழிக்கும் கிறீமுக்கும் பெண்ணுக்கும் ஏதாவது வகையில் தொடர்பு உண்டா? அப்படி-யிருந்தும் ஏன் இந்த விளம்பரங்களில் பெண்கள் பயன்படுத்தப்படுகின்றனர்? எவ்வளவு பெரிய இழிவு பெண்களுக்கு. கோழி தொடைக்கறிக்கும் - பெண்ணுக்கும் என்ன சம்பந்தம். சாலையில் போகும் பெண்ணைப் பார்த்து 'கமெண்ட்' அடிப்பது மட்டுமே பெண்களை கிண்டல் செய்வது என்பதல்ல. இதில் பல்வேறு வடிவங்கள் உள்ளன. தொடர்புச் சாதனங்களில் குறிப்பாக பத்திரிகைகளில் இந்தக் கிண்டல் ஜோக்குகள்

(1) பெண்கள் ஓட்டை வாயர்கள் எப்போதும் சளசளவென்று பேசிக் கொண்டிருப்பவர்கள் என்ற கருத்து உள்ளது. அதையொட்டின ஜோக்குகள்

(2) பெண்ணின் குணநலன்களைப் பற்றிய ஜோக்குகள், கணவனை அடிப்பவள், வேலை வாங்குபவள்

(3) மாமியார் மருமகள் சண்டையினை வைத்து அமைக்கப்பட்ட ஜோக்குகள்

(4) வேலைக்காரிகள் பற்றிய ஜோக்குகள்

(1) ஒரு குக்கர் வாங்கி கொடுத்து விடுவதாலேயே பெண்ணின் வாழ்வில் திருப்புமுனை ஏற்பட்டு விட்டதாம்! ஒரு குரல் அலறுகிறது T.V. குக்கர் விளம்பரத்திற்கு

(2) மெத்தை விளம்பரம் தூங்குவதற்காக என்றில்லாமல் வேறெதற்கோ மாதிரி சித்தரிக்கப்படுகிறது.

மேலே கூறினது / தொட்டுக் காட்டியது வெறும் சில விளம்பரங்களைத்தான். அதுவும்

www.tamilarangam.net



தொலைக்காட்சி / மின்னனுவியல் விளம்பரங்கள். இது ஏற்படுத்தியிருக்கும் சில எதிர்மறை விளைவுகளை பார்ப்போமா.

(1) விளம்பரங்கள் பெண்களை ஒரே மாதிரியாக (Stereo-type) சித்தரிக்கின்றன. ஆண்களும் விதிவிலக்கில்லை. விளம்பரங்களில் வரும் பெண்கள்தான் அனைத்திற்கும் முன்மாதிரியாகிவிட்டன. அவர்கள் மூலமாகத்தான் இச்சமூகத்தில் இருக்கும் பெண்களும் தங்களை எடை போட வேண்டும் - பெண்மை என்று கூறுவதிலிருந்து, அழகு, நிறம், ரசனை எல்லாமே.

(எங்காவது பார்த்திருப்பீர்களா பட்டுசேலை கட்டிய பெண் சமையலறையில் சமைத்துக் கொண்டிருப்பதை?)

(2) கொஞ்சம் தொலைக்காட்சி விளம்பரங்களைப் பார்த்தோமானால் 'சர்ப்' சலவை தூகளுக்கு, குடும்பத் தலைவி என்பவர் வருவார். எந்தவொரு மறுப்பும் இல்லாமல் அதுதான் சிறந்தது என்று முடிவெடுத்து வாங்கிச் சென்று விடுவாள். ஆனால் அதேநேரம் Pressure Cooker தேர்ந்தெடுக்க, வாங்க ஆண் - கணவன் வருவான்.. பெண் - மனைவி வெறும் துணையாக அவனின் நிழலாக வருவான். ரூ. 15-30 மதிப்புள்ள 'சர்ப்' வாங்க பெண் முடிவெடுப்பாள். ஆனால் விலை அதிகமுள்ள பொருட்களை வாங்கும் முடிவு கணவனிடம் இவர். அதை வாங்கிக் கொடுத்தவிட்டு **'நல்ல கணவர்'** என்ற கூடுதலாக ஒரு பட்டமும் பெற்று சென்று விடுவார்.

(3) விளம்பரத்தில் பெண்ணின் ஒரே கவலை ஆண் தன்னைக் கவர வேண்டும் என்பதே விளைவு - எவ்வளவு அறிவுள்ள பெண்களாக இருந்தாலும் அவர்களின் கவனமும் / சக்தியும் வெறும் தம் உடம்பை அலங்கரிப்பதிலேயே செலவழித்து வருகிறார்கள். சினிமா நடிகர்கள் உபயோகப்படுத்துவதாக கூறப்படும் சோப்பு வாங்குவதிலிருந்து, சோப்பு, முகப்பவுடர், கிறீம்கள், அழகு சாதனங்கள் / பொருட்கள், நகைகள், பற்பசை உட்பட கவனமாக தேர்ந்தெடுக்கிறார்கள்.

(4) பர்தா போட்டு பெண்களின் உடலை முழுதும் மூடிவிட்டால் பாதுகாப்பு கிடைத்து விடும் என்று உருவாக்கியுள்ள நம்பிக்கை எவ்வளவு அபாயகரமானது என்றால் அது அவளின் மனதைரியத்தையும் ஆளுமையையும் வெளிப்படுத்துவதாக இல்லை. வெறும் 4(அ)5 மீட்டர் துணி மீது வைத்த நம்பிக்கையைத்தான் வெளிப்படுத்துகிறது. இந்த வக்கிரமான தோற்றம் அடிக்கடி அவளின் ஆளுமையின் மீது விழும் அடியாகவே விழுந்து அவளை அமுக்கி எதிர்மறையான விளைவை ஏற்படுத்துகிறது.

(5) விளம்பரங்கள் எந்தளவிற்கு பெண்ணை தள்ளி விட்டுள்ளது என்றால் வளரும் பெண்களின் முக்கிய கவலையும், கவனமும் தன்னை அழகுபடுத்துவதிலேதான். முகப்பருவிற்கு வரும் **'Life Boy Gold'** விளம்பரம் இப்பொழுதுதான் பெண்களை ஏதோ படிக்க வைக்க வேண்டும் என்று நாற்று நடவு செய்துகொண்டிருக்கும் போதே **'I do not worry'** கவலைப்பட்டு கல்லூரிக்கு போக மாட்டேன் என்ற விளம்பரங்கள் மொய்த்துக் கொண்டே வருவது எவ்வளவு பெரிய கொடுமை. அவர்களின் கல்விப்பற்றி அக்கறையில்லை, சீரழித்து, நம்மையும் சீரழித்து வருகிறது.

(6) எத்தனை விளம்பரங்கள் வருகிறதோ அத்தனையும் மேல் / நடுதட்டு / நகர மக்களை மையப்படுத்தியும் / நோக்கியுமே உள்ளது. யார் யார் எப்படி உடை உடுத்த வேண்டும் என்ற Code-யையும் நிலை நிறுத்தி உள்ளது. சொல்லும் மொழியிலும் நடையிலும் வெளிப்படுத்துகின்றனர். (ஏன் அடித்தட்டு வர்க்க மக்கள் நன்றாக உடுத்த மாட்டார்களா?

இறுதியாக விளம்பரங்கள் பெண்களை குடும்பத் தலைவியாக / தாயாக / ஆண்களின் பாலியல் பண்டமாகவே சித்தரிக்கின்றது. அவள் ஆணுக்காகவே உயிர் வாழ்வதாகவும், அவளுடைய கடமை 24 மணி நேரமும் அவனை சந்தோஷப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அன்றைய சந்தைக்கு

www.tamilarangam.net



வந்துள்ள அழகுப் பொருட்களைவைத்து தன் முகத்தையும், உடலையும் அலங்கரித்துக் கொண்டே (விளம்பரங்கள் மனிதனை அஃறிணைக்கு இறக்கிவிட்டு பொருட்களுக்கு உயர்திணை அந்தஸ்தை கொடுத்துள்ளது) இருக்க வேண்டும்.

(2) நுகர்வோர் பண்பாடு பெண்கள் எதைச் செய்ய வேண்டும். எப்படி இருக்க வேண்டும் என்ற வரையறைகளை பெண்களின் மீது திணித்துவிட்டு அவளை ஒரு ஆளுமை அற்றவளாகவும், ஏன் மனித உயிராகக் கூட பார்க்க மறுத்து விட்டுள்ளது, அவளை இவ்வாணாதிக்க சமூகத்தின் விருப்புக்களை பிரதிபலிக்கும் பாலியல் பண்டமாக மாற்றியுள்ளது.

(3) பெண்களுக்கான இடம் வீடுதான் என்பதை நிலை நிறுத்த விளையும் விதை நெல்லாக மனதில் பதிய வைக்கிறது. இது எங்கு கொண்டு வந்து விடுகிறது என்றால் ஏற்கனவே முடிவெடுக்கும் அதிகாரம் நிராகரிக்கப்பட்டுள்ள சூழலில், நாளாக நாளாக அவள் தன் ஆளுமையை மூலதனமாக நம்புவதைவிட்டு, வெறும் உடற்கட்டை மட்டும் மூலதனமாக நம்பி விடுகிறாள்.

(4) ஆண், பெண்களுக்கு அழகு சாதனங்களையும், ஆடைகளையும் வடிவமைத்து அவளை கவர்ச்சியாக காட்டுகிறான். விளம்பரதாரர்கள் பெண்களின் உடல் மீது முதலீடு செய்தவர்கள் அவளின் மூளையை பார்க்க மறந்து விட்டனர் / சமூகத்திற்கும் பார்க்கும் பார்வையை மறுத்து மழுங்கடித்து விட்டனர். சமூகத்தில் அவளின் வெளித்தோற்றம்தான் அவளின் இடத்தை முடிவு செய்கிறது. (எவ்வளவு பெரிய மோசடி - ஒட்டு மொத்த மனித நாகரீக சமுதாயத்திற்கு)

(5) பெண்களை தன் பொருட்கள் வசம் கவருவதற்கு உலக அழகு சாதனப் பொருட்களின், முதலாளிகளின் சந்தையின், புதிய நுணுக்கம்தான் 'MissWorld', 'Miss Universal' போட்டிகள் பெண்ணின் உடலை வைத்து வியாபாரம் செய்யும் முதலாளித்துவம். 21-ம் நூற்றாண்டு நாட்காட்டி ஒன்றை அவுஸ்ரேலிய உதை பந்தாட்டப் பெண்கள் 11 பேரை அம்மணமாகப் போட்டுள்ளது. 12-வது மாதத்துக்கு 11 பெண்கள் கூட்டாக அம்மணமாக நிற்கும் போட்டோவை போட்டுள்ளது.

இங்கு ஒன்றை நினைவுபடுத்த வேண்டும் அழகுப் போட்டிகள், வெளிநாட்டின் அழகு சாதனங்கள் எல்லாம் நமது பண்பாட்டை சீரழிப்பதாக ஒரு கீறல் விழுந்த ரெக்கார்ட் போல விவாதம் நடைபெறுவதை நாம் கேட்டுக் கொண்டே உள்ளோம். இதில் எந்த அடிப்படையும் இல்லை. காலங்காலமாக - எல்லா மதமும், பண்பாடுகளும் பெண்களை ஒடுக்கியும், குழப்பியுமே வந்துள்ளது. பெண்ணை, வெளிநாட்டு பண்பாட்டு படையெடுப்பல் அழிக்கப்படுகிறது என்ற இந்துத்துவாவின் அழுகை வெறும் வெளித்தோற்றம்தான். காரணம், நாம் என்ன வளமான மொழி, மத, இன, வரலாற்றுப் பண்பாடு என்று போதிக்கப்பட்டுள்ளோமோ அவை எப்பொழுதும் பெண்களை, ஆண்களின் தனிச் சொத்தாகவும், அவளின் ஒவ்வொரு உணர்வையும் / ஆளுமையையும் நிராகரித்து வளர்ச்சியையும் மறுத்து வந்துள்ளது.

சீதை, சாவித்திரி, லீலாவதியைத் தொடர்ந்து எவ்வளவுதான் திருப்பி திருப்பி காண்பித்து வந்தாலும் உலகப் பண்பாட்டு நிறுவனங்கள் இந்தப் பழம் பஞ்சாங்கங்களை நன்றாகவே குழிக்குள் தள்ளிக் கொண்டே வருகின்றன. அவர்களின் விளம்பர உலகில், பெண்களின் உடல் மீது நடத்தப்படும் பேரங்களின் கொள்ளை அதிகரித்துள்ளது. ஆனால் உள்நாட்டு முதலாளிகள், நிறுவனங்கள் ஒன்றும் தெரியாதவர்களுமல்ல, சளைத்தவர்களல்ல / குறைந்தவர்களுமல்ல! விளைவு பெண்களே அவர்களின் உடலைக் கண்டு பயப்படும் புதிய நிலையும் உருவாகியுள்ளது இந்த நவீன விளம்பர யுகம். தன் அறிவின் மீது ஆளுமை மீது நம்பிக்கை கொண்ட பெண்கள் ஆணாதிக்க சுரண்டல் விளம்பர உலகத்துக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டும்.

— கலை

www.tamilarangam.net



## கனடாவில் இருந்து....

# சாதியம் இங்கேயும் தொடர்கிறது...

சில வாரங்களுக்கு முன்பு இரண்டு தமிழ்ப் பெண்கள் அவர்களது நெருங்கிய ஆண் உறவினர்களால் மிகுந்த சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டிருந்தனர். கொடுமையான இச்சித்திர வதைக்கு அவர்கள் உள்ளாக்கப் பட்டமைக்கான காரணம் தமது ஆண் நண்பர்களுடன் அவர்கள் உரையாடியது தான் என்றும் இளம் பெண்களின் உடலெங்கும் ஸ்தி'ரிகைப் பெட்டியால் சுட்ட காயங்கள் இரு னா என்றும் ரொறன்ரோ பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ரொறன்ரோ தமிழ்ச் சமூகத்தையும், ஏனைய சமூகங்களையும் உலுப்பி விட்டது. ரொறன்ரோவிலிருந்து வெளியாகும் செய்திப் பத்திரிகைகளும் இச்சம்பவத்துக்கு முக்கியத்துவம் அளித்திருந்தன.

மிக அண்மைக் காலம் வரை பெண்களை அடிப்பதற்கான உரிமை சட்ட ரீதியாக ஆண்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. உலகின் பல நாடுகளில் - இலங்கை உட்பட - இன்று வரை பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக உரிய சட்டங்கள் அமுல் படுத்தப் படவில்லை. இச்சம்பவம் தொடர்பாக எமது சமூகம் ஒட்டு மொத்தமாகவே வெட்கித் தலைகுனிய வேண்டியது தான். எனினும் இங்குள்ள பண்பாட்டுக் காவலர்கள் சிலரும் பெண்கள் அமைப்புக்களை பிரதிநிதிப் படுத்துவதாக ஆங்கில மொழியில் (தமிழ் மொழியில் அல்ல) தம்பட்டம் அடிப்பவர்களும் இந்தச்சம்பவத்தைத் தட்டிக் கழித்து விட முயல்கிறார்கள்.

திருமதி கரீனா மகேந்திரா எனும் அம்மணி இச்சம்பவங்கள் தொடர்பாக National Post தினசரிக்கு தெரிவித்துள்ள சில கருத்துக்கள் ஆபத்தானவையும் நச்சுத் தன்மை பொருந்தியவையும் ஆகும். அவருடைய கருத்துக்களை நாம் தட்டிக் கேட்காமல் விட முடியாது. இந்த அம்மணி ஒரு சாதாரண பெண்மணியும் அல்லர். கனடியத் தமிழ்ப் பெண்கள் சமூக சேவைகள் அமைப்பின் (Canadian Tamil Women Community Services) பிரதான பணிப்பாளராகப் பணிபுரிபவர். இந்த நிறுவனம் மாநில அரசிடமும், வேறு நிதி நிறுவனங்களிடமும் உதவி பெறுகிற ஒரு 'பொது நல' நிறுவனமாகும்.

திருமதி. க. மகேந்திரா National Post தினசரி க்கு தெரிவித்த அபிப்பிராயங்களில் சாரம் பின்வருமாறு.

பெண்கள் மீது இத்தகய கொடுமைகளைச் செய்பவர்கள் கல்வி அறிவு குறைந்த, வறிய கீழ்சாதித் தமிழர்கள் ஆவர். கனடாவின் வளர்ச்சியடைந்த நிலமைக்கு அவர்களால் ஈடு கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். இத்தகைய ''படிப்பறிவற்ற'', ''குறைந்த சாதி'' ஆண்களைத் திருத்தும் முகமாகவே தனது நிறுவனம் ஆலோசனை வழங்குவதாக அவர் மேலும் திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்.

அவருடைய அபிப்பிராயம் அப்பட்டமான சாதிவாதம் நிறைந்ததாகும். என்பது மட்டுமல்லாமல் எந்தத் திரையாலும் மூடி மறைக்கப்படாத அப்பழுக்கற்ற தூய பொய் ஆகும்.

கனடாவில் குற்றச் செயல்கள் புரிபவர்கள் புதிதாகக் குடியேறியவர்கள் அல்லது கறுப்பு மக்கள் என்று யாராவது தெரிவித்தால் அது பயங்கரமான இனவாதமாகவே இங்கு கருதப்படும். ஒரு சில தமிழர்கள் புரிகிற கோஷ்டிச் சண்டைகளுக்காக முழுத் தமிழ்ச் சமூகத்தையுமே வன்முறையாளர்களாக எழுதுகிற ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு எதிராக நாம் கொதித்து எழுந்ததை நாங்கள் நினைவு கொள்ள வேண்டும். இந்த வகையான முத்திரை குத்தல்களையும் (Stereoscoping) இனவாதம் என்றுதான் நாங்கள் அழைக்கிறோம்.

அம்மணி மகேந்திரா சொல்வது போன்ற அப்பிராயங்களை அவருடைய சாதித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திமிரை, இவளவு 'திறந்த மனதோடு' எவருமே வெளிப்படுத்துவது இல்லை. சாதி என்பது பேசாப் பொருளாகவே எமது சமூகத்துள் உறைந்த கிடக்கிறது. கருத்தளவில் சாதியமைப்பை நிராகரிப்பவர்களில் பலரும் உளப்பூர்வமாகத் தூய்மையானவர்களா என்று சந்தேகம் இருக்கக் கூடும். எனினும் பத்திரிகை மூலம் இத்தகைய சாதித் திமிரை வெளிக்காட்டும் துணிவு அம்மணி மகேந்திராவுக்கே வாய்த்திருக்கிறது.

இவரும் இவர்போன்றவர்களும் எவ்வாறு நியாயமான சமூக சேவை வழங்க முடியும்? முட்டாள்தனமான முறையில் தனது சாதித் தடிப்பை வெளிப்படுத்திய பின்னரும் தனது தவறைப் புரிந்து கொண்டிருந்தால் தனது, முட்டாள் தனத்தையும், அறியாமையையும் ஏற்றுக் கொண்டு தமிழ்மக்களிடம் மன்னிப்பு கேட்டிருப்பார்.

நிறையப் பேர் இவருடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்த போதும் அவர் தொடர்ந்தும் மறுத்து வருகிறார். ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று வள்ளுவர் கூற்றை மறுத்து, இதன் மூலம் எமது பண்பாட்டின் மையத்தையே நொறுக்கி பிறப்பு அடிப்படையில் மக்களைத் தீண்டத் தகாதவர்களாகவும், 'கீழ்' சாதிகளாகவும் பிரிக்கும் சாதியம் இன்னும் தொடர்வது எமக்கும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும் பெருத்த அவமானம் அல்லவா?

இது பற்றி இங்குள்ள தமிழ்ப் பத்திரிகைகளும் மற்றைய தொடர்பு சாதனங்களும், வானொலி, தொலைக்காட்சி போன்றனவும், மெத்தனமாக இருப்பது ஏன்?

மறக்க வேண்டாம்!! திருமதி மகேந்திரா ஒரு வெறும் உதாரணமும் குறியீடும் மட்டுமே. எமக்குள்ளேயும் பல மகேந்திராக்கள் உள்ளனர்.

★ பெண்கள் மீது வன்செயல்கள் புரிபவர்களைக் கண்டால் காறி உமிழுங்கள்!

★ திருமதி கரீனா மகேந்திராவுக்கு உங்கள் எதிர்ப்பைத் தெரிவியுங்கள் (தொலைபேசி - (416) 289 - 2099) அவருடைய நிறுவனத்தைப் பகிஷ்கரியுங்கள்!

★ பகிரங்க மன்னிப்புக் கேட்கும்படி அவரை வலியுறுத்துங்கள்!

தொடர்புகளுக்கு (416) 429 - 8854

# தொடரும் மரச்சிணி....

இன்று கொடுங்குளிர்
நேற்று முழுவதும் உலாவித்திரிந்த
காற்று
உருக் கொண்டு எழுந்ததில்
குலையும் உறைகிறது

துருவேறிக் கனக்கிறது
மனது

அன்று ஆடி மாதம்
நானும் விடலை
சோவகமும் விடலை
பேய்க் காற்றில்
சதிராட்டம் போடுகின்றன
உயரிப்பனைகள்

காற்றுக்கு அஞ்சி
வீட்டினுள் கிடந்தால்
உடலினைப் பற்றாதோ பஞ்சி?

இறுகக் கட்டிய கொடுக்குக்
கச்சைமேல்
இறுகிக் கிடக்கிறது
இயனக் கூடு
மாரிலே ஏறுபட்டி
தடநார் வளையத்துள் கால் நுழைத்து
உதைத்து
ஏறி
வகுத்து
வட்டுள் நுழைந்து
சீவி வருகிறேன்
நொடிப் பொழுதுள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுரைக் கடுவையை நிறைத்திருக்கிறது
புதுக் கள்ளு
அத்தனையும் தித்திப்பு!

எத்தி குவவி நுரை தள்ளி
பிளாவில் நிறைத்த
ஒற்றைப் பனைக் கள்ளின் சுவையில்
கிறுகிறுதுப் போகிறேன்

அங்கு:
முற்றத்துக் கிளுவையிலே கொளுவி
விட்ட
முட்டி
நார் இற்று வீழ்ந்து
நொருங்கிப் போயிருத்தல் கூடும்
தலைவாசல் தாழ்வாரத்தில் விட்டு
வந்த
இபனக் கூட்டுன்
துருவேறி
முனை மழுங்கிக் கிடக்கும்
பாளைக் கத்தி

எல்லாம் இழந்தோம்
எல்லோரும் இழந்தோம்
இழப்பில் மறந்திருந்தேன்

மீவத் தொடர்ந்து
மரச்சிணி போல நாறி
கனன்று எரிகிறது

துருவேறிக் கனக்கிறது
மனது

தீட்டுக்கட்டையிலே
சட்டியோட்டை நொருக்கி
துகளாக்கி
பாளைக் கத்தி
பளபளக்கத்தீட்டி
கூர்பார்க்க அரிப்பெடுக்கிறது
கை

பனையில்லை என்றால்
என்ன...

— திருமாவளவன்

# அரசியல் தீர்வின் எதிர்காலம்

## மூலம் - காமினிவியன்கொட
## தமிழாக்கம் - லோகநாதன்

நாட்டில் நிலவிய கோர நிலைமையை இல்லாதொழிப்பது, இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பது ஆகிய இரு வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே இவ்அரசாங்கம் பதவிக்கு வந்தது. குறிப்பிடத்தக்க அளவில் கோர நிலைமை இன்று தெற்கில் இல்லை, ஆனால் இனப்பிரச்சனை, இன்றைக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர், அதாவது இவ்அரசாங்கம் பதவிக்கு வரமுன் இருந்ததையும்விட நெருக்கடியான நிலைமையை நோக்கி பயணம் செய்துள்ள-தாக தெரிகிறது. மேலெழுந்தவாரியாக நோக்கும் போது, இனப்பிரச்சனை தொடர்பாக இதற்கு முன்னர் பதவி வகித்த எந்தவொரு ஆட்சியாளருக்கும், அரசியல் கட்சிக்கும் இல்லாத அர்ப்பணிப்பும் தெளிவும் இவ்வரசாங்கத்திற்கு உண்டு என்னும் நிலைமையிலேயே இவ்வாறு நெருக்கடி அதிகரித்துள்ளது. இதுவே ஆச்சரியமானதாகும்.

இப்பிரச்சனை தொடர்பாக சிங்கள சமூகம், இன்று ஒரு அம்சத்தில் முன்னேற்றத்தை தெளிவாகக் காண்பிக்கிறது. இது பயங்கரவாதப் பிரச்சனை, அல்லது புலி அமைப்புத் தொடர்பான பிரச்சனை எனக் கண்ட அரசியல் கட்சிகள், இன்று வட கிழக்கில் **இனப்பிரச்சனை** உண்டு என்பதை ஏற்றுக் கொண்டுள்ளன. இனவெறி கொண்ட சிங்கள துறவற இல்லற சிறிய தொகையினர்

www.tamilarangam.net



தவிர்த்து, பொதுவான சிங்கள மக்களும், தமிழ் மக்களுக்கு இனம் என்ற ரீதியில் பல பிரச்சனைகள் உண்டு என்பதை ஏற்று வருகின்றனர். இது நாம் பத்து வருடங்களுக்கு முன்னர் காணாத நிலைமையாகும். கருத்தியல் ரீதியாக இவ்விடத்தை அடைய நாம் எவ்வளவு அர்ப்பணிப்புகளையும் அழிவுகளையும் சந்தித்தோம்.

பிரச்சனையை அடையாளங் கண்டால் மட்டும் அது தீர்ந்துவிட மாட்டாது. தீர்வு முறை மட்டுமல்ல, தீர்வுக்கான அணுகு முறையும் தவறற்றதாக இருக்க வேண்டும். பிரச்சனையை அடையாளங் கண்டு கொண்டதாக காண்பிக்கும் இன்றைய அரசாங்கம், தீர்வு முறையையும் முன் வைத்துள்ளது. ஆனால் அதற்கான அணுகு முறை, பல்வேறுபட்ட காரணங்களால், அதன் தலைவிதி குறுகியது என்பதைக் காட்டுகின்றது.

இதற்கான காரணம் என்ன? ஒருவருட காலத்தின் முன்னர் என்னால் ''லக்பிம'' வாராந்த செய்திப் பத்திரிகைகக்கு எழுதிய கட்டுரையின் தலைப்பு **''முன்னறிவிக்கப்பட்ட மரணத்தின் கதை''** என்பதாகும். நோபல் விருது பெற்ற உலகப் புகழ் நாவலாசிரியரான 'கப்பிரியேல் கார்சியா மார்கேஸ்' என்பவரின் நாவலொன்று இன்றைக்கு ஒரு வருட காலத்தின் முன் என்னால் மொழி பெயர்க்கப்பட்டது. மார்கேஸ் தனது நாவலுக்கு ''முன்னறிவிக்கப்பட்ட மரணத்தின் கதை'' எனப் பெயரிட்டார். லத்தீன் அமெரிக்காவின் சிறுநகரம் ஒன்றின் மாமிசக் கடைக்காரர் இருவர், தமது தங்கையை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியவன் எனச் சந்தேகிக்கும் ஒரு இளைஞனைக் கொலை செய்ய முற்படுகின்றனர். இத்திட்டத்தை முழு நகரமுமே அறிந்து கொள்கிறது. அவ்வாறே இக்கொலையை நிறுத்த முழுநகரமே பல்வேறு வழிகளில் முயற்சிக்கின்றது. கொலை செய்ய திட்டமிட்ட இருவர் கூட கொலை செய்யாமலிருக்க ஏதாவது வழி உண்டா என பின் இழுக்கின்றனர். ஆனாலும் இறுதியில் திட்டமிட்டவாறு கொலை நடைபெறுகிறது. ''முன்னறிவிக்கப்பட்ட மரத்தின் கதை''யின் மார்கேஸ் பெயரிட்டதும் இதனாலேயாகும். அரசாங்கத்தின் அரசியல் தீர்வுத் திட்டமும் அவ்வாறே ''முன்னறிவிக்கப்பட்ட மரணம்'' போன்று தலைவிதி காலம் குறுகியது என ''லக்பிம'' செய்திப் பத்திரிகையில் எழுதினேன். நான் அவ்வாறான முடிவுக்கு வருவதற்கு சில காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, சிங்கள சமூகம் பொதுவாக இனவாதம் உடையதாகும். ஆதலால் உண்மையான அதிகாரப் பரவலாக்கத்திற்காக எவராவது எத்தனித்தால், இச்சமூகத்தில் உள்ள ஒரு சில இனவெறியர்கள் (இல்லற துறவற இருபகுதியினரையும் அடக்கும்) சிங்கள சமூகதில் உள்ள இனவாத உணர்வை தூண்ட முயற்சிப்பர். இது சமகால இலங்கை வரலாற்றில் பல தடவைகள் இடம்பெற்ற நிகழ்வாகும். அண்மைக்கால உதாரணத்தைக் காட்டுவதாயின், **இந்திய - இலங்கை** உடன்படிக்கைக்கு எதிராக உருவாகிய சமூகக் கிளர்ச்சியாகும்.

இரண்டாவதாக இலங்கைக் கட்சி அரசியலின் பிரதான தாரைகளான இரண்டும், தாம் இருந்த அரசியல் ஸ்தானத்தைக் கருத்தில் கொண்டே இப்பிரச்சனை தொடர்பாக நோக்கின. 1957-ம் ஆண்டு **பண்டார நாயக - செல்வநாயகம் உடன்படிக்கை** அன்றைய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பு காரணமாக கிழித்தெறியப்பட்டது. அதன்பின்னர் 1966-ல் ஏற்பட்ட **டட்லி - செல்வநாயகம் உடன்படிக்கையை** அன்று எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்து அதனை சீர்குலைத்தது. இதன் பின்னர் மீண்டும் 1987-ன் **இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு** எதிராக அன்று எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயல்பட்டது. இவ்வொவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவ்வப் போது பதவியிலிருந்த கட்சி பதவியில் நீடிப்பதற்காக ஏதோ ஒரு உடன்பாட்டிற்கு வரும்போது, ஆட்சி அதிகாரத்தில் இல்லாத கட்சி பதவிக்கு வருவதற்காக அவ்வுடன்பாட்டை சீர்குலைக்கவே செயல்பட்டுள்ளது. சுதந்திரத்திற்கு பின்னர் இனப்பிரச்சினை தொடர்பான இலங்கையின் சிங்கள அரசியல் சம்பிரதாயம் இதுவேயாகும்.

www.tamilarangam.net



மூன்றாவதாக, தேசத்தை அடகு வைத்த இவ்வரசியல் பித்தலாட்டத்தை சிங்கள அரசியல் தலைமையால் ஆட முடிந்தற்கு தமிழ்ப் பாராளுமன்றவாத தலைமை காரணம் என்பதையும் வலியுறுத்த வேண்டியுள்ளது. அரசியல் சீர்திருத்த மூலம் சிங்கள அரசியல் தலைமையுடன் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய இடைநடு இணக்கத்தைப் பற்றியே இவர்கள் இறுதிவரை நம்பிக்கை வைத்தனர். இதில் தவறில்லை. ஆனால், இதற்கான அவர்களது அணுகுமுறையே தவறானது. இவர்கள் கூட்டுக்குச் சென்ற அரசாங்கம், தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாத நிலையிலும் அவ்அரசாங்கம் பதவியில் நீடிக்க இவர்கள் தோள் கொடுத்தனர். பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் இரண்டும் ஆட்சிக்கு வருவதற்கும் பதவியை தக்க வைத்துக் கொள்ளவும் இனப்பிரச்சனையை பாவித்தவாறே இப்பாராளுமன்றவாத தமிழ் அரசியல் தலைமைகள் தமது அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக இன நெருக்கடியை கருவியாக பாவித்துள்ளது என்றே தெரிகிறது. இவர்களது இந்நடவடிக்கையால் நேர்ந்தது என்ன? இவர்களிடமிருந்த அதிகாரத்தைப் பறித்துக் கொண்ட இளைஞர் அரசியல் கலாச்சாரம் தமிழ் சமூகத்துள் தோன்றியது மட்டுமின்றி அது மிகவும் வன்முறையானதாகவும் காணப்பட்டது. இன்று பயங்கரவாதம் அல்லது பாசிஸம் எனப் பல்வேறுபட்டோரால் அழைக்கப்படுகின்ற இளைஞர் தமிழ் அரசியலுக்கு, சிங்கள தலைமையை போன்று தமிழ் பாராளுமன்றவாத தலைமையும் பொறுப்பேற்க வேண்டியது இதனாலேயாகும்.

நான்காவதாக புலிகளின் அரசியலும் சமாதான அரசியலுக்கு எதிராக உள்ளதாகவே தெரிகிறது. ஒருபுறம் சுதந்திரம் கிடைத்த நாள் தொடக்கம் சிங்கள அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டதும், விசேடமாக கடந்த தசாப்தத்தில் தமிழ் மக்களுக்கும் தேசத்திற்கும் ஏற்பட்ட அழிவு காரணமாகவும் சமாதான அரசியலுக்கு இடமில்லை என புலி அமைப்பு விவாதிக்கலாம். ஆதலால் ஈழத்திற்கு குறைந்த எதுவும் இதுவரை செய்த அர்ப்பணிப்பு தியாகங்களுக்கு போதுமானாக அமையாது என அவர்கள் எண்ணவும் கூடும்.

ஆனாலும் உண்மையான பிரச்சனை இதுவல்ல. புலி அமைப்பின் தோற்றம் இராணுவத்தன்மை கொண்ட ஒன்றாகும். அன்று தொடக்கம் இன்றுவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் சாதாரணமாக சனநாயக நடவடிக்கைகளில் ஈடுபட்ட இயக்கம் அல்ல, மிகவும் முக்கிய காரணம் என்னவெனில் இன்று புலிகள் அமைப்பின் பலம். அதிகாரம், அங்கீகாரம் அனைத்தும் நேரடியாகவே இராணுவ ரீதியான வரலாற்றின் பெறுபேறு என்பதாகும். ஆதலால் இராணுவச் சூழல் அற்ற சாதாரண அரசியல் சூழலில் எவ்வளவு தூரத்திற்கு தமது அதிகார கீர்த்தியை தக்கவைத்துக் கொள்ள முடியும் எனபது சந்தேகத்திற்குரியதாகும். விடுதலைப் புலிகள் இதனை அறியாதவர்களாக இருக்க முடியாது. சமகால உலக வரலாற்றில் இதற்கு பொருத்தமான இரு நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டலாம். இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஆங்கிலேயரின் வீரநாயகனாக இருந்தவர் வின்சன்ட் சேர்ச்சில், யுத்தத்தின் பின்னர் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலின் போது பிரித்தானிய மக்கள் அவரை நிராகரித்தனர். இக்காலகட்டத்தில் பிரான்ஸ் நாட்டின் மகத்தான தேசபக்தனாகத் திகழ்ந்தவர் சார்ல்ஸ் டு/து கோல். இப்புகழ் காரணமாக சேர்ச்சிலையும்விட அதிககாலம் சாதாரண அரசியல் உலகத்துள் துகோலல் பிரகாசிக்க முடிந்த போதிலு 1968-ல் பிரான்ஸ் நாட்டு மக்கள் இவரைக் குப்பைத் தொட்டிக்குள் தூக்கி எறிந்னர். ஆதலால் புலி அமைப்பு தொடர்பாகப் பார்க்கும்பொழுது எந்தவொரு அரசியல் தீர்வாக இருந்தாலும் அத்தீர்வு திட்டவட்டமாக ஒரு காலத்திற்கு அசைக்க முடியாததாக இருக்கும்.

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள சமாதானப் பொதி எனப்படும் அதிகாரத்தை பரவலாக்கும் அரசியல் தீர்வுத் திட்டத்தின் எதிர்கால தலைவிதியை ''முன்னறிவிக்கப்பட்ட மரணத்தின் கதை'' என நான் குறிப்பிட்டதற்கு மேலே காட்டப் பட்டவையே காரணங்களாகும்.

இக்கருத்தை உறுதி செய்யக்கூடிய புதிய காரணியொன்று தற்போது தோன்றியுள்ளது. இவ்இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கென நீண்ட காலமாக சகல அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சிகளையும் உள்ளடக்கிய பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றிருந்தது. தற்போதைய அரசாங்கம் புதிய அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தும் ஒரு வருடத்திற்கும் மேலாகி- விட்டது. இக்காலகட்டம் பூராவும் இப்பிரச்- சனைக்கு தீர்வு காண்பதற்காக எவ்விதமான திட்டவட்டமான நிலைப்பாட்டையும் நாட்டுக்கு வெளிக்காட்டது காலத்தைக் கடத்தி வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் (ரனில் விக்கரம சிங்க) அண்மை- யிலே தனது இந்திய சுற்றுப் பயணத்தின் பின்னர் திடீரென தனது கருத்தை வெளியிட தீர்மானித்தார். அதாவது 13-வது அரசியல் திருத்தத்தை தாண்டிய எந்தவொரு வேலைத் திட்டத்தையும் தாம் ஏற்கப் போவதில்லை என்பதாகும். இந்த 13-வது அரசியல் திருத்தம் இந்திய தலையீடு காரணமாக கொண்டு வரப்பட்ட ஒன்றாகும். இது அதிகாரப் பரவலாக்கத்தை ஒன்றாகும். இது அதிகாரப் பரவலாக்கத்தை செய்யக் கூடியதாகவிருந்த முதலாவது அரசியல் பயிற்சியாக இருந்தது. ஆனால் அன்று அதிகாரத்தில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அதை செயல்படுததாமல் இருப்பதிலேயே கண்ணும் கருத்து- மாயிருந்தது. இனநெருக்கடி மென்மேலும் உக்கிரமடைந்து மேலும் கூடிய அழிவை நோக்கித் தள்ளப்பட இதுவும் ஒரு காரணமாகும். ஆதலால் இன்றைக்கு 13-வது அரசியல் திருத்தம் எவ்விதத்திலும் போதுமானதல்ல என்பது மிகத் தெளிவாகும். அதைவிட பரந்த அளவிலான அதிகாரம் தமிழ் மக்களுக்கு இன்று அவசியமாகும். நிலைமை இவ்வாறிருக்கும்போது திரும்பவும் 13-வது அரசியல் திருத்தத்தில் இருந்து தொடங்குவது என்பது அரசியல் கபடத்தனமாகும். இன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் இக்குத்துக்காரணத்தின் பின்னணியில் இந்தியா இருப்பதும் தெளிவாகும். இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கான எந்தவொரு தீர்விலும் இந்தியாவின் பாத்திரம் முக்கியமான ஒன்றென்பதும் உண்மையே. இந்தியத் தலையீடு சிற்சில நிலைமையின் கீழ் அவசியப்படவும் கூடும். இது கடந்த காலங்களைப் போன்று இந்திய அரசின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அல்ல.

இலங்கையின் அரசியல் தலைவிதியை தீர்க்கமான ரீதியில் நிர்ணயிக்கவிருக்கும் கட்டத்தை நாம் அடைந்துள்ளோம். சிங்கள, தமிழ் மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒன்றாக இந்நாட்டில் வாழ்ந்துள்ளார்கள். இனரீதியாகப் பிளவுபட்டு இதற்கு முன்னர் நாம் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ள- வில்லை. **எல்லாளன் - துட்டகைமுனு யுத்தம்.** இரு அரசர்களுக்கிடையேயான யுத்தம் தவிர இரு இனங்களுக்கிடையேயான யுத்தமே அல்ல, இலங்கை ஒரு நாடாக (ஒற்றையாட்சி அல்ல) நிலவ வேண்டு- மானால் சிங்கள இனம் அனுபவிக்கும் அனைத்து இன, மத கலாச்சார அரசியல் சுதந்திரமும் தமிழ் மக்களுக்கும் இருக்க வேண்டும். இது தமிழ் இனத்தைச் சார்ந்த ஒருவர் இருவருக்கு அமைச்சர் பதவி, இன்னும் சிலர் பொலிஸ், நீதித்துறை அல்லது வெளிநாட்டுத் தூதுவர் சேவையில் உயர்பதவி வகிப்பதன்மூலம் காண்பிக்கக் கூடியதல்ல. தமிழ் இனத்தின் இனத்வ அடையாளங்களை பூரணமாக உறுதிப்படுத்தக் கூடிய, அவர்களுக்கே உரித்தான சுதந்திர அரசியலுக்கு அவர்கள் உரிமைக்காரர்களாக வேண்டும். அப்பொழுது மட்டுமே அவர்கள் சுதந்திரமான இனமாவர். அவ்வாறே தமிழ் போராளி இயக்கமும் ''ஷைலொக்கின் ஒரு இறாத்தல் இறைச்சி- தான்'' வேண்டும் என்னும் கொள்கையில் தொங்கிக் கொண்டிருக்காமல் அதற்கு இங்கால் உள்ள நியாயமான அரசியல் தீர்வில் நம்பிக்கை வைக்க வேண்டும். இதன்மூலம் மட்டுமே ஒரு நாட்டை, ஒரு தேசத்தை கட்டி எழுப்ப முடியும்.

**- வியன்கொட -**

**'இருள் வெளியில்'** வெளிவந்த இம்மொழி பெயர்ப்பு கட்டுரையை இங்கு மீண்டும் பிரசுரிக்கிறோம். சிறீலங்கா அரசின் இன, மதவெறிக் கொள்கைக்கு சிங்கள முழுச்சமூகமும், சமூக பிரக்ஞை உள்ள அரசியல் சக்திகளும் ஒட்டு மொத்தமாக பலியாகி- விடவில்லை என்பதற்கு இது ஓர் உ+ம். அதேவேளை தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை, சிங்கள மக்கள் ஆரோக்கியமான முறையில் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதற்கு, அரசியல் பிரக்ஞை கொண்ட சக்திகள் (சிறீலங்கா - தமிழீழம்) தங்களது அரசியல் பார்வையை, போராட்ட



தமிழழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அணுகுமுறைகளை வளர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக சிங்கள பெருந்தேசிய இனவெறி அரசையும், தமிழ்க் குறுந்தேசிய இயக்க நடவடிக்கைகளையும் சமப்படுத்தி அணுகி விடமுடியாது. அரசுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்த வண்ணம், குறுந்தேசிய இயக்க அரசியலை, போராட்ட அணுகுமுறைகளை விமர்சிப்பதுடன் புரட்சிகர தேசிய அரசியலில், போராட்ட அணுகுமுறைகளில் நாம் மக்களை அணி திரட்ட வேண்டும். போராட வேண்டும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் ஒவ்வொன்றையும் அதற்குரிய தளங்களில் அய்க்கியப்படுத்த வேண்டும்.

வியன் கொடவின் கட்டுரையில் இந்தியாவின் தலையீடு பற்றிய பார்வை மிகவும் விமர்சனத்துக்குரியது. தெற்காசிய நாடுகளில் இந்தியரசின் தலையீடு இருந்து வருவது கண் கூடு. பிற்போக்கு அரசியரோ, அரசோ, முற்போக்கு அரசியலோ, அரசோ ஒரு நாட்டின் உள்விவகாரத்தில் மற்றைய நாடு தலையிடக்கூடாது. நாம் அனுமதிக்கக் கூடாது. ஒரு நாட்டின், தேசத்தின் சுதந்திரத்தில் இறையாண்மையில மற்றயது சர்வதேசிய சகோரத்துவத்தின் அடிப்படையில் தான் உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் வலியுறுத்த வேண்டும்.

உலக மயமான பொருளாதாரம், அரசியல், பண்பாடு வளர்ந்து வருவது உண்மை என்பதற்காக, உலகத்தில், பிராந்தியத்தில், பூகோள அரசியல் இராணுவ நலன்களில் இருந்து ஆதிக்க நோக்கில், இலாப நட்ட கணக்கில்தான் அமெரிக்காவும் சரி, இந்தியாவும் சரி தலையிடுகிறது, போராடுகின்ற மக்களின் அரசியல் கோரிக்கைகளை, போராட்டங்களை, சர்வதேச நாடுகள் **அங்கீகரிக்க கோருவது வேறு, தமக்காக தலையிடக் கோருவது வேறு அங்கீகரிப்பது வேறு. ஆக்கிரமிப்பது வேறு.** நாம் **தலையிடாக் கொள்கை** ''மூலமே தேசியத்தையும் - சர்வ தேசியத்தையும் ஒன்றிணைக்க வேண்டும். எனவே ''சிற்சில சூழ்நிலைமைகளில் மட்டுமல்ல'' எத்தகைய சூழ்நிலையிலும் எந்த மூன்றாவது நாடும் சர்வதேச நிறுவனங்களும் தலையிடுவதை சுதந்திர இயக்கம் ஏற்றுக் கொள்ள முடியாது. இன்று தமிழீழ மக்களுக்கு நல்லதற்காக தலையிட அனுமதிக்கும் கொள்கை, நாளை தமிழீழ மக்களுக்கு எதிரனவற்றில் தலையிடவும் தார்மீகமாக அனுமதித்து விடும் அல்லவா?

''தமிழீழ மக்கள் ஒரு இறாத்தல் இறைச்சிக்கு தொங்கவில்லை'' நியாயமான அரசியல் தீர்வு என்ற வார்த்தையுடன் நமது குறிப்பான அரசியல் கோரிக்கைகளை சிறீலங்கா மக்கள் அங்கீகரிக்க வேண்டும் என்பதே அடிப்படையானது.

**— ஆசிரியர் குழு**

# புலம் பெயர்ந்த தமிழர்களும் அவர்களின் அடையாளங்களும்

ஈழத்தமிழர்களின் புலம் பெயர்வு கடந்த 15 வருடங்களாக நடந்து வரும் விடயமாக உள்ளது. இது காலத்துக்குக் காலம் சில நிகழ்வுகளுடன் வேறுபட்டதுடன் முடிவற்ற விடயமாக உள்ளது. இத்தமிழ்ப் புலம் பெயர்வு கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிஸ், டென்மார்க், நோர்வே, சுவிடன், கொலண்ட், இத்தாலி, அவுஸ்திரேலியா என மேற்கு நாடுகள் நோக்கி மையமிட்டு உள்ளது. இதைவிட இந்தியாவுக்கு புலம் பெயர்ந்தோர் முன்னையவர்களை விட பெருளாதார அடிப்படையில் பின் தங்கியவர்கள். இதைவிட மேற்கு நாடுகளுக்கும் புறப்பட்டு இடைநாடுகள் பலவற்றில் ஆயிரக்கணக்கில் தேங்கியுள்ளனர். இவைகள் நாட்டுக்கு வெளியில் நடைபெற, நாட்டுக்குள் கொழும்பை நோக்கியும் தமிழ்ப்



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதேசங்களுக்குள்ளும் இடப்பெயர்வு நடந்த வண்ணம் உள்ளது.

இவைகளைவிட எல்லைப்புற மற்றைய சிறுபான்மை இனம், மற்றும் யாழ்குடா நாட்டு முஸ்லீம்கள், மலையக மக்களின் ஒரு பகுதியினரும் இடம் பெயர்ந்து உள்ளனர்.

இலங்கையில் தேசிய முரண்பாடு விரிவடைந்ததைத் தொடர்ந்து கெடுபிடி யுத்தம் ஆரம்பமாகியதன் பின்னும், இனக்கலவரத்தை இனவாதிகள் நடத்தியதன் பின்னும், இயக்க உள் அராஜகம், வெளி அராஜக அழித்தொழிப்புகளின் தொடர்ச்சியில் பலவகையில் புலம் பெயர்வு அதிகரித்துள்ளது.

இலங்கையில் சிங்கள இனவாத அரசு நாட்டை அடகு வைத்ததன் தொடர்ச்சியில், அடுத்து எழும் மக்கள் கொந்தளிப்பை மூடி மறைக்கவும் அதை திசை திருப்பவும், அன்னிய நாடுகளின் தீவிர ஆதரவுடன் இனவாதத்தை தமிழ் மக்கள் மீது திணித்தது.

நாட்டிலுள்ள எல்லா இனத்தையும் விட அதிக சலுகையை சிங்கள இனம் கோரியதன் தொடர்ச்சியில், தமிழினம் தனக்கான உரிமையை அனுபவிக்கும் ஒரே ஓர் சனநாயகக் கோரிக்கையை முன்வைத்தே போராட்டத்தை முன்னெடுத்தனர். எடுக்கின்றனர். சில வேளைகளில் அரசியல் ரீதியில் சில அமைப்புக்கள் மீறிய போதும் தமிழ் மக்கள் அன்றும் இன்றும் கோருவது இலங்கைத் தேசிய இனங்களின் சமமான வாழ்வுரிமையைத்தான். இதை சுய-நிர்ணயத்தின் ஊடாக அடையமுடியும் என தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

தமிழ், முஸ்லீம், மலையக மக்கள் எல்லோரும் இலங்கையில் சமமான ஓர் இன உரிமையைப் பெற இன்றைய ஆட்சியாளர்-களை நோக்கி கோருகின்ற போராட்டம், எப்போதும் சனநாயகத்தை மீறியது அல்ல. அதாவது சுவீடனில் இருந்து நோர்வே எப்படிப் பிரிந்ததோ, அதேபோல் தமிழ் மக்களாகிய நாம் கோரினோம், கோருகின்றோம். இன்று சிங்கள இனவாத யுத்தம் தமிழ் மக்களை இரண்டாம் தரப்பிரஜைகளாக்கியுள்ளது. இலங்கையில் அவர்கள் நாயிலும் கீழான ஒரு வாழ்வை சந்திக்கின்றனர், வாழ்கின்றனர்.

அதாவது இலங்கை அரசின் கீழ் உள்ள ஆட்சிச்சட்ட அமைப்புக்களால் தமிழ் பேசும் மக்கள் சட்டத்தால் பாதுகாப்பைப் பெற முடியாத ஒரு நிலையை அடைந்துள்ளோம். ஒரு நாட்டில் வாழ்தல் என்றால் அனைத்தும் அந்த அரசால் உருவாக்கப்பட்ட சட்ட அமைவுக்குள் வாழுகின்றபோது தான் சாத்தியம். இன்று இலங்கையில் தமிழ்மக்கள் இலங்கைச் சட்டத்தால் பாதுகாப்பைப் பெறமுடியாத வகையில் மிருகமாக வாழ கோரப்படுகிறது.

இந்த மனித உரிமை மீறலின் தொடர்ச்சியில் தமிழ் பேசும் மக்கள் புலம்பெயர்வு ஆரம்பமானது. இந்தப் புலம்பெயர்வு என்பது அவர்களின் வசதியுடன் வாழ்நிலையுடன் அதை யொட்டிய சிந்தனைகளுடன் நாட்டை விட்டு வெளியேறினர்.

மேற்கு நாட்டு புலம்பெயர்வு, தமிழ் பேசும் மக்களின் ஓரளவுக்கு வசதியான பிரிவுக்கு மேல்தான் நடைபெற்றது. நடைபெறுகிறது. இலங்கையின் சிங்கள இனத்துக்கு எதிராகப் போராட முடியாது. தப்பிப் பிழைத்தவர்களும், தமது சொந்தச் செல்வத்தை பெருக்கிக் கொள்ள நடந்த புலம்பெயர்வுதான் அதிகமானது. இவர்கள் உண்மையில் மண்ணின் நேரடி இராணுவ நெருக்கடியை சந்திக்காதவர்கள்.

மறுபுறம் உள் இயக்க வன்முறை, சகஇயக்க வன்முறை, இராணுவ வன்முறையைச்சந்தித்தவர்கள் புலம்பெயர்வு (நேரடியாக) கட்டாயமாக நாட்டைவிட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டனர். இப்பிரிவு புலம்பெயர்வின் பின் ஒரே நிலைக்குள் மற்றவர்கள்போல் வந்து அடைந்துள்ளது. இவர்களுக்கிடையில் நோக்கங்களுக்கு இடையில் எந்த வேறுபாடும் அற்ற நிலையை புலம்பெயர்வின் பின் இன்று அடைந்துள்ளனர்.

இலங்கையில் இருந்து 'பொருளாதாரப் புலம்பெயர்வு' என்பதுக்கு, அந்த மக்கள் காரணம் என்ற மேற்கு நாட்டு கருத்து நிலை நிறவாதத்துடன் கூடிய ஆதிக்க நிலையாக

www.tamilarangam.net



உள்ளது. இலங்கை ஒரு காலத்தில் எல்லா மூன்றாம் உலகநாடுகளைப்போல தன்னிறைவு பொருளாதாரத்தை கொண்டு இருந்தன. இதன் மீதான கொலனியாதிக்கம், பின் நவகொலனியாதிக்கம் இன்று உலகமயமாதல் இலங்கைப் பொருளாதாரத்தை சிதைத்து, அதன் செல்வத்தை மேற்கு நாடுகள் நேரடியாக, மறைமுகமாக பெற்றுவரும் இந்நிலையில் இலங்கைத் தமிழர்களின் பொருளாதாரப் புலம் பெயர்வுக்கு மேற்கு நாடுகளே காரணம். இதை மறைக்கவே யுத்தத்தை எம்மண்ணில் மேற்கு நாடுகள் மறைமுகமாக திணித்து பின் உதவி என்ற பெயரில் ஆயுதம் வழங்கியும், ஆயுத ஏற்றுமதி செய்து யபாருளாதார புனர்வினை ஊக்குவிக்கின்றன.

மேற்கு நாட்டுப் புலம் பெயர்வு ஈழத்தமிழர்களின் பூர்சுவா பிரிவுக்குள்ளும், அதன் சிந்தனை தனத்துக்குள்ளும் நடைபெற்றதால், இந்தப்பிரிவு புலம் பெயர்வின் பின் தனது சொந்த முகத்தை வேகமாக இழக்கின்றனர்.

வெவ்வேறு நாடுகளில் இவர்களின் தன்மைகளில் வேறுபாடு காணப்பட்டது என்பது, அந்த நாட்டு மக்களின் பூர்சுவா இயல்புடன்தான் நடைபெறுகிறது. ஆனால் பொதுவாக அடிப்படைக்கூறுகள் அப்படியே பொதுவாக உள்ளது. புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் மேற்குலக நாடுகளில் ஆகக் குறைந்த **'தராதரமற்ற கூலியாக தொழிலாளியாக'** உள்ள அதேநேரம் இவர்களின் சிந்தனை பூர்சுவா கண்ணோட்டத்துடன் உள்ளது.

இரட்டை வாழ்க்கை முறையில் சிக்கியுள்ள புலம்பெயர்வு சமூகம், இதனால் தனது சொந்த அடையாளத்தைத் தொலைக்கத் தொடங்கியுள்ளது.

தமிழ் மக்களின் பொதுவான, மனித நேயம் கொண்ட பண்பாடுகள், கலாச்சாரங்களை எல்லாம் தொலைத்துச் செல்லுகின்ற நிலையில் அதி பிற்போக்கான மனித நேயமற்ற விடயங்களைத் தூக்கிப் பிடித்து பாதுகாக்கின்றனர்.

கலாச்சாரம் என்ற பெயரில் பெண்கள் மீதான வன்முறையை பாதுகாக்கவும் செயல்படுத்தவும், செய்யும் இச்சமூகம் பெண்கள் மீது நிலப்பிரபுத்துவ ஒழுக்கத்தை கட்டாயப்படுத்தி நடைமுறைப்படுத்துகிறது. இங்கு பிறக்கும் தமது பெண் குழந்தை மீதும் இதைக் கோரும் சமூகம் அக் குழந்தைகளை இச் சமூகத்திலிருந்தும் தனது சமூகத்திலிருந்தும் அன்னியப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் மொத்த சமூகம் மீது வெறுப்புற்ற வன்முறை மனிதனாகக் குழந்தைகள் உருவாக இன்று வித்திடப்படுகின்றது. இனவெறியில் இருந்து தப்பி வந்த இடத்தில் நிறவெறிக்கு எதிராக போராட வேண்டியது ஒரு யதார்த்தமாக இருக்க, அதைப்பற்றிக் கவலையின்றி நிறவாதிகளாக இவர்கள் உள்ளனர். தமது குழந்தைகளை கறுப்பு - வெள்ளை என தொலைபேசியிலும், காணும் இடம் எங்கும் உப்புச் சப்பு இன்றி கதைத்து நிறவாத்துடன் இணையும் இவர்களுக்கும், பிள்ளைக்கும் இடையில் தீவிர முரண்பாடு வளர்கிறது. ஏனெனில் இந்தப் பெற்றோர் தமக்குள் தாமே வாழும் மூடிய வட்டத்துக்கு, வெளியில் வாழும் குழந்தை நிஜமாகவே இனவெறியை சந்திக்கும்போது, பெற்றோரின் நிறவாதத்தை கண்டு சினக்கின்றது. மேற்கு நாடுகள் தமது சொந்த நலனுடன் அரபு, கறுப்பு இனம் மீது செய்யும் பிரசாரத்தையே, அதே பாணியில் ஈழத்தமிழர் மீள தமக்குள்ளும், பிள்ளைகளுக்குள்ளும் கூறுவதன் மூலம் ஒரு நிறவாத சமூகத்தில் இயங்குகின்றனர்.

இன்னுமொரு புறம் ஆட்டம், பாட்டம், டிஸ்கோ என ஆடம்பரக் களியாட்டங்களில் ஈடுபடுகின்றது.

காலநேரமின்றி மிகமோசமான நிலையில் உழைக்கும் இந்தப் பிரிவுகள் புலம்பெயர் நாட்டில் அதிகுறைந்த சம்பளத்தை பெறும் இந்தப் பிரிவுதான், மிகக் குறுகிய கணத்தில் ஒரு வருட சம்பளத்தை வீண் விரயம் செய்கிறது.

ஒரு திருமணத்தை எடுப்பின் அத் திருமணம் சராசரியாக ஒரு தொழிலாளியின் ஒரு வருடச் சம்பளத்தைக் கொண்டு நடத்தப் படுகிறது. திருமணம் என்பது எம்மண்ணில் இருந்த நிலையை தாண்டி இந்திய கவர்ச்சி சினிமாப் படம் என்ற ஒரு காட்சியை மீளப் படமாக்குகின்றனர். இங்கு தமிழரின் காலச்சாரம் என்பது எதை - எதை கமராக்காரன் தீர்மானிக்கின்றாரோ அவைகளை எல்லாம் திருமணத்தின் பெயரில் சினிமா ஆகின்றது.

www.tamilarangam.net



திருமணம் என்பது பணம் வாங்கும் கொடுக்கும் வியாபாரமாக முன்பு இருந்ததை விட, மேற்கு நாட்டு பண்பாட்டுடன் மிக வேகமாக சீரழிந்து, சிதைந்து உள்ளது. குடும்பம் என்பது ஒரு வியாபார நிறுவனமாக உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லாம் வாங்கும் விற்கும் நடைமுறையில் ஈடுபடும் நிலைக்கு சென்று உள்ளது. இப்படி பல பலவாக விடயங்கள் நீள்கின்றன. அதாவது இச்சமூகம் தன்னுடைய சுய அடையாளத்தை இழக்கிறது. சுய அடையாளத்தின் பெயரால் வியாபாரம் நடக்கும் மையங்களாக சீரழிந்துள்ளது.

அதிகுறைந்த கல்வியுடன் தொழில் அனுபவ அறிவு இன்றி புறப்பட்ட இந்தப் புலம்பெயர் சமூகம், பணத்தை வைத்திருக்கும் நிலையில், இந்த வியாபார உலகம் அவர்களை அதற்கு வேகமாக எமது பண்பாடு, கலாச்சாரத்தை தாண்டி உள்ளிழுத்துக் கொண்டது. புலம் பெயர் சமூகம் தனது சொந்த அடையாளத்திற்குப் பதில் அதை விற்கின்றது. குழந்தைக் கல்வி முதல் அனைத்தும் வியாபாரமாக செய்யும் அளவிற்கு இச்சமூகம் மாறியுள்ளது. மாறிவிட்டது. சுய அடையாளம் பேணுவது என்பது எப்படி? என்ற கேள்வி எழுவது இயல்பே. சுய அடையாளம் எங்கள் தேசத்தின் விடுதலைப் போராட்டத்தின் மீதும், இங்கு நிறவெறியை எதிர்த்தும் முதலாளித்துவ சீரழிவுக் கலாச்சாரத்தை எதிர்த்தும் போராடுவதிலும்தான் மைய மிட்டுள்ளது.

எல்லா நடவடிக்கையும், எல்லா செயலும் இவை இரண்டையும் முன்னெடுக்கின்ற போக்கில்தான், சுய அடையாளத்தின் முக்கியத்துவம் மையமிட்டுள்ளது. அதாவது எம்மக்களின் தேசிய விடுதலைப் போர் சனநாயகத்தை தனக்குள் கொண்டும் அங்கீகரித்தும் எல்லாவற்றிலும் இதற்கு இசைவாக கவனத்தில் எடுக்க வேண்டும். புலம்பெயர் நாட்டில் நிறைவாதத்திற்கு எதிராக போராட வேண்டும்.

நாம் சனநாயகத்திற்காக எமக்குள்ளும் சமூகத்திற்குள்ளும் போராட வேண்டும். இந்தப் போராட்டம்தான் எமது சுய அடையாளத்தை பேண முன் தள்ளும். இதுதான் புலம்பெயர் சமூகத்திற்குள்ளும், பின் ஒரு குடும்பத்திற்கும், பின் மனைவிக்கும், பின் குழந்தைக்கும் சுய அடையாளத்தைப் பேண சனநாயகத்தை முன் வைக்கின்ற வழியை முன்வைக்கிறது.

எம் எல்லாவகை சுய அடையாளம் பேணுவது என்பது இவ் விடயத்துடன் தான் சாத்தியம். ஆனால் இன்று சுய அடையாளத்தை சமூகம் தொலைக்கின்றது. தொலைத்து வருகின்றது. எம் மக்களை மறந்து எம் மண்ணை மறந்து, வாழும் நாட்டை மறந்து போய் உள்ள ஈழத்தமிழர் சமூகம் ஆடம்பரங்களிலும், களியாட்டங் களிலும், காலத்தைத் தள்ளுவதுடன், தமக்குள் தாமே பேசிக் கொண்டுள்ளது. புலம்பெயர் நாட்டு மக்கள் பற்றிய பொய்யான அவதூறான கற்பனைப் புனைவுகளைப் பேசியபடி, தனது சொந்த பிற்போக்கு, சனநாயகமற்ற வன்முறை நியமங்களை நியாயப்படுத்தியபடி கிணற்றுத் தவளையாக இச்சமூகம் சீரழிகிறது. நல்ல விடயங்களைப் படிக்க, தேடமுடியாத சமூகம் உலகச் சீரழிவு பண்பாட்டு கலாச்சாரங்களை முன்தள்ளும் தமிழ்ச் சினிமா, வம்பளக்கும் இந்திய குப்பைகள் உடன் தமது அறிவுத்தனத்தை மெச்சுகின்ற முட்டாள் சமூகமாக சீரழிகின்றது. பரந்த தளத்தில் படிப்பு, அறிவை வளர்ப்பதற்குப் பதில் தமது குறுகிய தனத்திற்குள் குந்தியிருக்கிறது.

புலம்பெயர் சமூகம் இன்றைய ஈழத் தமிழரின் அரசியல் போக்குடன் பின்னிலைக்கு தள்ளப்பட்டு கிணற்று தவளையாக இருந்தபடி, தமது சொந்த அடையாளத்தை வியாபார நிலையில் நின்று இழக்கிறது.

இந்தத் தலைமுறையின் பிள்ளைகள் இதனால் இந்தச் சமூகத்தில் இருந்தும், வாழும் சமூகத்தில் இருந்தும் அன்னியப் பட்ட ஒரு சமூகமாக வளர்கின்றது.

தேவை இன்று இவை கடந்த ஒரு நல்ல சமூகத்தை எம் புலம் பெயர் நிலையிலும் நின்றும், வாழும் நாட்டுச் சமூகத்தில் இருந்தும் தேடுவதினூடாக கண்டறிய முடியும்.

— நயாகரன் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசபக்தன் ஆசிரியருக்கு 'அகதிகள்' என்ற சொற்பத்தை பயன்படுத்தியிருப்பதை யிட்டு மகிழ்ச்சி கொள்கிறேன். இது ஏதாவது கொள்கை அடிப்படையானதா அல்லது மரபு வழியாக பயன்படுத்தி வந்த வார்த்தையை அப்படியே ஒரு பழக்க தோஷமாக பயன்படுத்துகிறீர்களா? 'தூய தமிழ் அலை' **ஏதிலிகள்** என்றோர் சொல்லை அறிமுகப்படுத்துகிறது. **'அகதி'** ஒரு சமஸ்கிருத திசைச் சொல் என்பதால் அது நிராகரிக்கப்படுகிறது. மறுபுறத்தில் அய்ரோப்பிய 'தமிழ் அறிவாளிகள்' **புலம் பெயர்ந்தோர்** என்ற சொல்லை அறிமுகப்படுத்துகின்றனர். இவை இரண்டையும் நீங்கள் நிராகரித்து விட்டீர்கள்.

தூயதமிழ் சொற் பிரயோகம் என்பது காரண காரியமின்றி அனைத்து, தினசச் சொற்களையும் நிராகரிப்பதாக மாறக் கூடாது. இவ்விதம் பார்க்கும்போது **அகதி** என்ற சொல் தொடர்ந்து பயன்படுத்தக் கூடாது என்றே எண்ணுகிறேன். சில வேளைகளில் இது ஒரு கௌவரப் பிரச்சனையாக கருதப்படலாம். பள்ளர் தம்மை தெய்வேந்திர குலவேளாளர் என்றும், பறையர் தம்மை அருந்ததியர் என்றும், நட்டுவர் தம்மை இசைகுல வேளாளர் என்றும் பயன்படுத்துவதைப் போல் இதுவும் ஒரு தாழ்வுச் சிக்கல் பிரச்சனையாக இருக்கலாம். சாதிகளைப் பொறுத்தவரை இது ஒருவகை அடிமைப்புத்தி. 'அகதி' - எதிலியாக வேண்டும் என்பது அடிமைப்புத்தியல்ல, ஆனால் தாழ்வுச் சிக்கலாக இருக்கக் கூடும். **'அநாதை' 'விதவை', 'மலடி'** என்பவை சமூக அந்தஸ்துக் குறைந்த குடும்ப உறவு நிலையாக கருதப்படுவது, போலவே **'அகதி'** என்பது சமூக அந்தஸ்தும், தேசிய அந்தஸ்தும் குறைந்த தேசிய உறவுநிலைப் பதமாக நோக்கப்படுகின்றது. **''தேசத்தை இழந்தவர்கள்'', ''பண்பாட்டுச் சீரழிவுக்கு உள்ளானவர்கள்''** என்பதே அகதி பற்றிய பொதுவான கருத்து. இந்த நிலைமையின் காரணத்தால் **'ஏதிலிகள்'** என்ற புதிய சொல்லால் தாம் அழைக்கப்படுவதை விரும்பியிருக்கலாம். இது சரியல்ல. 'அகதி' என்ற பதமே இருக்கட்டும்.

**'புலம் பெயர்ந்தோர்'** என்பது வேறு விடயம். இது ஒரு மொழிப் பிரச்சனையல்ல. இது ஒரு சமூக, வர்க்க உள்ளடக்கப் பிரச்சனை. **புலப்பெயர்தல்** என்பது இருக்கும் இடத்தைக் கைவிட்டு பிற இடத்தில் தற்காலிகமாக குடியேறுவது. காரணம் என்னவாகவும் இருக்கலாம். ஆனால் **அகதியாதல்** என்பது, ஒடுக்குமுறை, இயற்கை அழிவு, சித்திரவதை, இனஒழிப்பு போன்ற குறிப்பிட்ட காரணங்களுக்காக நடக்கும் திட்டமிடப்படாத இடப் பெயர்வாகும். புலம் பெயர்தல் குறிப்பிட்ட காரணம் இல்லாதது. ஆனால் திட்டமிடப்பட்டது. அதுமட்டுமல்ல தக்கவைத்தலை அல்லது சமூக, வர்க்க மேல்நிலை வசைவுப் பெயர்ச்சியை நோக்கமாகக் கொண்டது. பறவைகள் தக்கவைத்தலை நோக்கமாய்க் கொண்டவை. மனிதர்கள் மேல்நிலை வசைவுப் பெயர்ச்சியை நோக்கமாகக் கொண்டவர்கள்.

இன்று **தமிழீழ அகதிகள்** என்று தம்மை கூறிக் கொள்பவர்கள் எல்லோரும் உண்மையிலேயே அகதிளா? இல்லை. முதலாளித்துவ நாடுகளில் உள்ள ஒரு குறிப்பிட்ட விகிதத்தைத் தவிர்த்து மீதம் உள்ளவர்களே அகதிளாகும். இந்த குறிப்பிட்ட வீதத்தினர் சிறுபான்மையினராக இருந்தாலும் சமூக, அரசியல், பொருளாதார செல்வாக்கு மிக்கவர்கள். இவர்கள் உண்மையிலேயே அகதிகள் அல்ல. இவர்கள் **புலம் பெயர்ந்தோர்களே,** இடப்பெயர்வு நிலை இவர்களின் புலப்பெயர்வுக்கு சாதகமானதாய் உள்ளது. உள்ளூர இவர்கள் அகதிகளில் இருந்து, தம்மைப் பிரித்து வைப்பதில் மிகவும் உணர்வு பூர்வமானவர்களாக இருக்கிறார்கள். அகதிகளை தீண்டத்தகாதவர்கள் என்ற எண்ணுபவர்களும் இவர்களுள் உள்ளார்கள். ஆனால் வெளி உலகிற்கு இவர்கள் தாம்தான் உண்மையான அகதிகளாக தம்மைத் தாமே காட்டிக் கொள்ளுகிறார்கள். தமது பிரச்சனைகளை அதிகளின் பிரச்சனையாக்கப் பார்க்க வைக்கிறார்கள். இதனால் அகதிகளின் உண்மையான பிரச்சனைகளைப் புறந்தள்ளி விடுகிறார்கள். தமிழ் நாட்டிலேயே நகர்புறங்களுக்கு முகாமைவிட்டு வெளியேறிச்சென்றவர்கள். தம்மை **'மேலோங்கிய அகதிகள்'** என்று எண்ணிக் கொள்கிறார்கள். 'வெளிநாடும்பாக காத்திருப்பவர்கள்' ஆகவேதான் 'அகதி' என்ற மிாற்பதம் கொள்கைப், பிரச்சனையாக உள்ளது.

**— சச்சி —**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்காவிலிருந்து 'தேசபக்தன்' ஆசிரியர் குழுவுக்கு 99ல் வந்த செய்தி

ஒரு தசாப்தத்திற்கு மேலாக நடைபெறும் யுத்தத்தினால் வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் மிகவும் மோசமாக ஒடுக்கப்பட்டு வருகின்றனர். நாடெங்கும் வாழும் உரிமை உட்பட சனநாயக உரிமைகள் அனைத்தும் யுத்தத்தின் காரணமாக மறுக்கப்படுகின்றன. இதற்கு நாடெங்கும் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி மாகாண சபை தேர்தலை ஒத்திவைத்தமை மிகவும் அண்மைக்கால உதாரணமாகும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற மின்சார, அஞ்சல் வேலை நிறுத்தங்கள் யுத்தத்தை காரணம் காட்டப்பட்டே அடக்கப்பட்டன. மக்களின் வாழ்க்கையின் எல்லா மட்டங்களிலும் யுத்தம் அதன் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கல்வி, சுகாதார வசதிகளுக்கான மானியங்களும் குறைக்கப் பட்டுள்ளன. யுத்த செலவை ஈடுசெய்ய ஒவ்வொருவரும் பாதுகாப்பு வரியை செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஒவ்வொரு பொருளுக்கும் ஜீ.எஸ்.டி என்ற வரிக்கு மேலதிகமாக 4.5 வீதம் பாதுகாப்பு வரியை செலுத்த வேண்டியவர்களாகிறோம். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் எம்மை அழிக்கும் யுத்தத்திற்கு ஆதரவளிக்க நிர்பந்திக்கப்பட்டுள்ளோம். ஆயிரக்கணக்கான தமிழ், சிங்கள இளைஞர் யுவதிகளை இந்த யுத்தம் பலியெடுக்கிறது. கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. எமது வாழ்க்கைக்கு ஆதாரமான சுற்றுச்சூழல் நாசமாக்கப் படுகிறது. இந்த யுத்தத்தில் முழு மக்களுக்கும் அழிவு ஏற்படுகின்ற அதேவேளை விரல்விட்டு எண்ணக்கூடிய ஆயுத வியாபாரிகள் கோடிக் கணக்கான ரூபாய்களை சம்பாதிக்கின்றனர். அதிகார வெறிப் பிடித்தவர்கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்காக யுத்தத்தை கைவிட மாட்டார்கள். இவ்வாறான அழிவு பூர்வமான யுத்தத்திற்கு நாம் ஆதரவளிக்க வேண்டுமா? ஆதரவளிப்பதில்லை என்றால் எதிர்காலத்தில் நாம் செய்ய வேண்டியது என்ன?

தேசிய இனப்பிரச்சினை அரசியல் ரீதியாக தீர்க்கப்படாததால் யுத்தம் தொடர்ந்து நடைபெறுகின்றது. யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதால் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட முடியாததாக தெரிகின்றது. எவ்வளவு தான் யுத்தத்தை நடத்தினாலும் பிரச்சினையை தீர்க்க முடியாது என்று தெரிந்துகொண்டும் ஆளும் வர்க்கம் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கும் நோக்கில் யுத்தத்தை தொடர்ந்து நடத்துகிறது.

நாட்டின் வளங்களான தொழிற்சாலைகள், விவசாயம் மட்டுமன்றி நீர்வளத்தையும் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு விற்று யுத்தத்திற்காகவே செலவிடப்படுகின்றது. அவ்வளங்களை விற்பதற்கு எதிரான மக்கள் போராட்டங்களும் யுத்தத்தின் பேரால் அடக்கப்படுகின்றன, யுத்த செய்திகளுக்கு தணிக்கை விதிக்கப்பட்டுள்ளதால் யுத்தத்தின் விபரங்களை மக்களால் அறிந்து கொள்ள முடிவதில்லை.

இவ்வாறு தொடர்ந்து யுத்தம் முன்னெடுக்கப்பட்டால் 18 - 30 வயதுடைய இளைஞர் யுவதிகளை கட்டாய இராணுவ சேவைக்கு அனுப்பிவைக்கும் நிர்ப்பந்தம் ஏற்படும். ஏற்கனவே பாடசாலை மாணவர்கள் மத்தியில் யுத்த மனோநிலையை ஏற்படுத்தும் பல திட்டங்கள் தொடங்கப் பட்டுள்ளன.

ஆகவேதான் சகலமக்கள் பிரிவினது உரிமைகளை பாதுகாக்கவும், நாட்டின் சொத்துக்களையும், வளங்களையும் பாதுகாக்கவும், மனித உரிமைகள், சனநாயக உரிமைகளை பாதுகாக்கவும் நாம் மேற்கொள்ளும் போராட்டங்கள் யாவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யுத்தத்தை எதிர்க்கும் போராட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று சிந்திக்கின்றோம்.

இந்த அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், வெகுசன அமைப்புகளாலும் தனிநபர்களாலும் இங்கு விபரிக்கப்பட்டுள்ள நோக்கத்தின் அடிப்படையை மக்களுக்கு உணர்த்தி ஆளும் வர்க்கத்திற்கு எதிராக மக்களின் குரல் ஓங்கி ஒலிப்பதற்காக நாடெங்கும் மக்கள் இயக்கங்களை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

மக்களின் சக்தியை கூடியமட்டும் ஒன்று திரட்டி நாடெங்கும் சத்தியாக்கிரகங்களுடன், வீதி [illegible] கங்கள், பாட்டு நிகழ்ச்சிகள், புகைப்படக் கண்காட்சி, ஓவியக் கண்காட்சி போன்றவற்றையும் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**உத்தே வேலைத்திட்டத்தின் நீண்டகால நோக்கம்.**

யுத்தத்தினாலும், ஏகாதிபத்திய கொள்ளை உட்பட எல்லாவிதமான அழிவுகளிலிருந்தும் நாட்டை மீட்டு எல்லாம் தேசிய இனங்களுக்கும் விஷேடமாக அடக்கப் படுகின்ற தேசிய இனங்களுக்கு இழைக்கப் படுகின்ற அநீதிகளை நீக்குவதன் மூலம் எல்லா தேசிய இனங்களும் சமமாக சமாதானமாக வாழும் முன்னேற்றமான சமூகத்தை கட்டி வளர்ப்பதாகும்.

**இடைக்கால நோக்கம்:**

1. இலங்கையில் வாழும் எல்லா தேசிய இனங்களின் மீதும் குறிப்பாக அடக்கப்படுகின்ற தேசிய இனங்களின் மீதான தேசிய அடக்கு முறைகளைப் பற்றி எல்லாம் தேசிய இனங்களிடையேயும் புரிந்துணர்வை ஏற்படுத்தி வளர்த்தல்.

2. ஏகாதிபத்தியத்தினதும், அதனுடன் கூட்டிணைந்துள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களினதும் அழிவு பூர்வமான பொருளாதார, அரசியல் திட்டங்களை தோல்வியடைய செய்வதற்குத் தேவையான புரிதலை மக்களிடையே ஏற்படுத்துதல்.

3. யுத்தத்தை பாவித்து விசேடமாக வடக்குக் கிழக்கு தமிழ் மக்களினதும், பொதுவாக சிங்கள, தமிழ், முஸ்லீம் மலையகத் தமிழ் மக்களின் சனநாயக மனித உரிமைகளை மறுப்பதற்கு எதிராக பரந்துபட்ட மக்கள் இயக்கங்களை சக்திமிக்கதாக கட்டி வளர்த்து யுத்தத்தை எதிர்த்து மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

4. யுத்தத்தின் காரணமாக மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வரி உட்பட சகலவிதமான வரிச் சுமைகளுக்கும் எதிர்ப்பை காட்டுவது.

5. ஒரு தேசிய இனத்தின் மேலாண்மையை நிலைநாட்ட ஏனைய தேசிய இனங்களை அடக்கி தேசிய இனங்களிடையேயான முரண்பாடுகளை கூர்மையடையச் செய்யும், இனங்களுக்கிடையே சமத்துவத்தை நிலைநாட்டும் அடிப்படையை கொண்ட எந்தவொரு தீர்வையும் எதிர்க்கும் இனவாத சக்திகளின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி, அச்சக்திகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவது.

6. தேசிய இனப்பிரச்சினை பற்றியும், அதற்கான தீர்வு பற்றியும் நிலவும், பல்வேறுபட்ட கருத்தியல்களை கலந்துரையாடலுக்குட்படுத்தி அவை பற்றிய சரியான நிலைப்பாட்டை ஏற்படுத்தல்.

**இந்நடவடிக்கையின் பிரதான சுலோகங்கள்:**

- ★ **யுத்தத்தையும், ஏகாதிபத்திய கொள்ளையையும் எதிர்ப்போம்.**
- ★ **தனியார்மயமாக்கல் கொள்ளையை எதிர்ப்போம்.**
- ★ **யுத்தத்திற்காக பிள்ளைகளை பலியிடுவதை நிறுத்து.**
- ★ **தேசிய வளங்களைப் பாதுகாப்போம்.**
- ★ **யுத்தவாதம், இனவாதம் என்பவற்றை தோல்வியடையச் செய்வோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**★ யுத்தத்தின் பேரால் மக்களின் சனநாயக உரிமைகளை மறுப்பதனை எதிர்ப்போம்.**

**★ யுத்தத்தினால் மக்கள் மீது வரிகளை சுமத்தாதே.**

இப்படிக்கு,

- புதிய ஜனநாயகக் கட்சி
- ஐக்கிய சோஷலிஸக் கட்சி
- தியேச கல்வி வட்டம்
- தேசிய ஜனநாயக இயக்கம்
- புதிய இடது சாரி முன்னணி
- சனநாயக பொதுசன இயக்கம்.
- ஐக்கிய அரச சேவையாளர்கள் சங்கம்
- இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்.
- நன்மக்கள் குரல்
- இலங்கை தேசிய ஆசிரியர் சங்கம்
- இலங்கை ஆசிரியர் சங்கம்.
- மக்கள் மேடை, வீதி நாடகக் குழு
- மனித உரிமைகள் நடவடிக்கைக் குழு
- அரச ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்
- அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
- ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்
- அரச அச்சக தொழிலாளர் சங்கம்
- உலக ஒத்துழைப்பு பேரவை
- வலயத்தில் நாம்
- மக்கள் விவாத கேந்திரம்
- தேசிய காணி, விவசாய சீர்திருத்த இயக்கம்
- ரஜரட்ட நிர்மாண அமைப்பு.
- வறிரு சஞ்சிகை
- ஆரஞ்சி செய்தி நிறுவனம்.

தொடர்புகளுக்கு:

குருமெதுர

இல: 65 / 4, சிற்றம்பலம் ககார்டினர் மாவத்தை,

கொழும்பு - 2.

தொலைபேசி : 337227.

# கிழக்கு திமோர், கொசவோ, நோபல் பரிசு? 1999

1999-ம் ஆண்டிற்கான சமாதான நோபல் பரிசு Medicins sans frontiers என்ற வைத்திய உதவி நிறுவனத்திற்கு கிடைத்துள்ளது. இவர்கள் 2500 சர்வதேச ஊழியர்களையும் 15,000 உள்ளூர் ஊழியர்களையும் கொண்டு 50 நாடுகளில் சேவை செய்கின்றனர். இவர்கள் இன்னல்படுகின்ற மக்களிடையே விரைந்து சென்று சேவை புரிகின்றனர். இவர்கள் சம்பளத்தை அடையாளத்திற்கு பெறும் இவர்கள், தமது உயிரைத் துச்சமென மதித்து வேலை செய்கின்றனர். இந்த அமைப்பினர் இலங்கையிலும் இருந்து வேலை செய்கின்றனர். வைத்தியக் குழுவிற்கு கொடுக்கப்பட்ட பரிசினை பல சக்திகள் வரவேற்றுள்ளன. இந்தப் பரிசு சமூக சேவை செய்ய முன்வருபவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற அங்கீகாரம் எனவும், இதன் மூலம் பலர் இணைந்து கொள்வர் எனவும் கருத்துக் கூறப்படுகின்றது. பரிசுத் தொகையாக 7.6 மில்லியன் (சுவீடன் குறொணர்) கொடுக்கப்படுகின்றது. நோபல் பரிசுக் குழுவானது பிரச்சினைக்கான காரணத்தையும், பொறுப்பானவர்களை அம்பலப்படுத்துவதிலும், கருத்து உருவாக்குவதிலும், தேவையான போது உடன் களத்தில் நிற்பவர்கள் இவர்களே என்ற காரணத்தினால் இப்பரிசு கொடுக்கப்பட்டதாக காரணம் கூறினர்.

இது அல்பீரட் நோபல் நினைவாக கொடுக்கப்படும் பரிசானது அவரின் முதலீட்டில் இருந்து பெறப்படும் லாபத்தில் இருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றது. நோபல் பரிசுக் குழுவானது ஆயுதம் தயாரிக்கும் தொழிலியே முதலீடு செய்துள்ளனர். இதில் இருந்து பெறப்படும் வட்டியில் இருந்தும், லாபத்தில் இருந்தும் தான் நிதி பெறப்படுகின்றது. இந்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரிசிற்கு நிதி, ஆயுத விற்பனையால் பெறப்படுவதாக இருந்த போதிலும், இது நீதிக்கு முரணாக இருப்பினும் இது இன்றைய உலகில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகி விட்டது. இதனை விமர்சிப்பவர்களே எதிரிகளாக கணிக்கப்படுகின்றது.

நோபல் பரிசு சமாதானத்திற்காகப் பாடுபடுபவர்களுக்கு மாத்திரம் அல்ல, விஞ்ஞானம், அறிவியல், பொருளாதாரம், இலக்கியம் போன்றவற்றிற்கும் கொடுக்கப்படுகின்றது. கடந்த பல வருடங்களாக அரசியல் கருத்தைக் கொண்டவர்களை பிரசித்தப்படுத்தும் பொருட்டே சமாதானப் பரிசு வழங்கப்பட்டு வந்தது. முதலில் 1901-இல் செஞ்சிலுவைச் சங்கத்தின் **ICRC.** ஸ்தாபகரான (Henri Dunant) கென்றி என்பவருக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் பல வருடங்களுக்குப் பின்னர் இம்முறை பொது அமைப்பு ஒன்றிற்கு பரிசு கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் சமாதானத்திற்கான நோபல் பரிசு சர்ச்சைக்குரியதாகவும், பிரசித்தி பெற்றதாகவும் இருக்கின்றது. இந்த ஆண்டும் சீனர்களுக்கு கொடுக்க முனைவதை தடுக்கும் பொருட்டு, சீன அதிகார வர்க்கம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டது. இரண்டு எதிர்ப்புரட்சி உறுப்பினர்களை சனநாயகத்திற்காக போராடுவதாகவும் அவர்களை பிரசித்தி பெறவைப்பதற்கும், அவர்களின் கருத்துக்கு ஆதரவான கருத்து கணிப்பை மேற்கொள்ளவும் கூடும் என சீனா எதிர்ப்புத் தெரிவித்து இருந்தது. எனினும் இம்முறை எந்தவித சிக்கல்களும் ஏற்படுத்தப்படவில்லை எனக் கூறப்பட்டாலும் மிக ஆபத்தான கருத்தை ஆளப்படுத்த இதன் மூலம் பாதை வழிவகுத்துள்ளனர்.

**MSF** ஆனது 1971-இல் வைத்தியர்களாலும் பத்திரிகையாளர்களாலும் உருவாக்கப்பட்டதாகும். அன்றைய நேரத்தில் சோவியத், அமெரிக்க வல்லரசுகளுக்கு இடையில் நடைபெற்ற ஆதிக்கப் போட்டியில் அய். நா. மக்களின் உரிமைகளைக் கவனிக்கத் தவறியது என்ற முறைப்பாட்டிலும் எவ்வித அரசியல் கருத்து பேதம் பார்க்காமல் தேவையான போது அல்லல்படும் நிலையில் இருக்கின்ற மக்களுக்கு சேவை புரிய வேண்டும் என்ற நோக்கத்தோடு பிரான்சில் உருவாக்கப்பட்டதாகும். இந்த அமைப்பை உருவாக்கிய வேளை (Biafra, Nigiria) பயாபிராவில் ஏற்பட்ட பட்டினியால் வாடிய மக்களிடையே உதவி வேலை செய்தவர்கள் பலரும் இதில் அடங்கியிருந்தனர். அன்றைய காலத்தில் இவ்வாறான நோக்கத்தைக் கொண்ட அமைப்புக்கள் இல்லாத வேளையில் பேனாட் (Bernard Kouchner) என்பவரால் நிறுவப்பட்டதாகும். பிற்காலத்தில் பிரான்ஸ் சுகாதார மந்திரியாக இருந்த இவர் தற்பொழுது கொசோவோவிற்கான (Kosovo) அய்.நா.வின் தலைமை நிர்வாகியாக பணிபுரிகின்றனர்.

MSF நடுநிலையானது, சுயாதீனமான அமைப்பு எனக் கூறப்பட்டாலும், இவர்கள் தேவையானபோது சம்பந்தப்பட்ட இடத்தில் கருத்து உருவாக்கத்தையும், கொடுமைகளை வெளிக்கொணர தொடர்புச் சாதனங்களைப் பாவிக்கத் தவறுவதில்லை எனக் கருத்துக் கூறப்படுகின்றது. பிரச்சினைக்குரிய நாட்டில் இறங்கும் போது ஆட்சியாளர்களுடன் எவ்வித பேச்சுவார்த்தை மேற்கொள்ளாமலே களத்தில் இறங்கிவிடுவர், மற்றைய அமைப்புகளைப் போல் அல்லாமல் உயிருக்கு உத்தரவாதம், மற்றும் செயற்பாட்டில் தடையின்மை போன்றவற்றை முன்னிறுத்தி பேச்சு வார்த்தை நடத்தி நேரத்தை செலவளிக்க மாட்டார்கள். மற்றைய உதவி நிறுவனங்கள் விலையுயர்ந்த வாகனங்கள் உட்பட வசதி பெற்ற நிலையில் இருக்கின்ற போது இவர்கள் துவிச்சக்கர வண்டியயைப் பாவித்தே தேவையான இடங்களுக்கு செல்வதாக செய்திகள் தெரிவிக்கின்றது. இந்த அமைப்பினர் மற்றைய நிறுவனங்கள் சர்ச்சைக்குரிய இடங்களுக்கு செல்ல முன்னர் MSF-இனர் வெள்ளைநிறச் சீருடையுடன் களத்தில் பிரசன்னமாயிடுவர். இவை மாத்திரம் அல்ல மற்றைய அமைப்பைச் சேர்ந்த வைத்தியர்கள் குளீர் காற்று பெறும் அறையில் இருந்து தான் தமது கடமைகளைச் செய்வர் இவர்கள் அவ்வாறு அல்ல எவ்வித வசதியையும் பாராமல் சாதாரண நிழல் தட்டிகளில் இருந்து கொண்டே வேலை செய்வர். இவ்வாறான நடவடிக்கைகள் மற்றைய உதவி நிறுவனங்களுக்கு ஆத்திரத்தையும்,



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எரிச்சலையும் உண்டாக்கியுள்ளதாக இவர்களைப் பற்றி செய்திகள் புகழ்ந்து எழுதுகின்றன.

இம்முறை பாதிக்கப்படும் மக்களுக்கு சேவை செய்யும் அமைப்பிற்கு பரிசு வழங்கப்பட்டதாக பலராலும் பாராட்டப் பெறுகின்றது. ஏன் பாராட்டப்படுகின்றது என்பது பற்றியும், பரிசுகள் ஏன் வழங்கப்படுகின்றது என்பது பற்றி நோக்குவது அவசியமாகின்றது.

**பரிசு யாருக்கு வழங்கப்படுகின்றது?**

பொது வேலை செய்கின்ற அமைப்புக்கள், மற்றும் மக்களின் விமோசனத்திற்காக போராடுகின்ற மக்கள் சக்திகளை எடுத்துக் கொண்டால் பல தரத்தில் தமது உயிரை துச்சமென மதித்துப் போராடிக் கொண்டுதான் இருக்கின்றனர். இந்த அமைப்புக்களின் தியாகத்தை ஒரு பரிசு கொடுப்பதன் மூலம் தான் இவர்கள் செய்கின்ற தியாகம் அங்கீகரிக்கப்படும் என்றால், அத்துடன் பரிசு கிடைக்கவில்லை என போராட்டங்கள் நடத்துவதில் இருந்து விலகிவிட்டால் உலகில் ஒரு போராட்டங்கள் நடை பெற்றிருக்க மாட்டா. எந்தப் போராட் டங்களும் நோபல் பரிசு கிடைக்கும் என்ற காரணத்திற்காக போராடுவது இல்லை. எந்தச் சக்தியும் தனது ஒடுக்குமுறை. தனது தேவை என்ன என்பதைப் புரிந்து கொண்டு போராடி வெற்றி பெற முனைகின்றது. இவ்வகையான போராட்டங்கள் பல வழிமுறைகளைக் கொண்டு அமைந்து விடுகின்றது.

போராட்டங்கள் தனிமனித பயங்கர வாதம். ஆட்கடத்தல், விமானங்கள் கடத்தல் போன்றும், வெகுசன எழுச்சிப் போராட் டங்களான கயைடைப்பு, கர்த்தால், பகிஸ்கரிப்பு என்பனவும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அடக்க முற்படும் கருவியாலேயே ஒடுக்குமுறையை எதிர்க்கும் ஆயுதத்தினை எதிர்த்தும் போராட்டம் நடைபெறுகின்றது. போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போது பல போராளிகள் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் தமது சமூகக் கடமையை முடித்துக் கொள்ள போராட்ட களத்தில் இறங்கிப் போராடுகின்றனர்.

உலகில் பெரும்பான்மையான நாடுகளில் பொதுவுடமைவாதிகளும், தேச பக்தர்களும் உண்மையாக தமது விடுதலைக்காக போராடி வந்துள்ளனர். இவர்கள் போராடும் காலத்தில் மழையிலும், வெய்யிலிலும், தம் உயிரைப் பாராமல் போராடுகின்றனர். இவர்கள் ஒருவரையாவது அங்கீகரித்தது கிடையாது. இவர்களை **'பயங்கரவாதிகள்'** என்றுதான் அழைத்துக் கொள்கின்றனர். இவர்களோ தம்முயிரை துச்சமென மதித்துப் போராடுபவர்கள். இவர்களை பயங்கர வாதிகள் எனக் கூறி ஒடுக்குகின்றனர். கொலம்பியாவில் போராடுகின்ற போராளிகளை ஒடுக்க அமெரிக்க இராணுவம் உதவுகின்றது. இலங்கையில் தேசிய இனத்தின் போராட்டத்தை ஒடுக்க ஆயுதங்கள், பயிற்சிகள் கொடுத்து உதவுகின்றன, அன்னிய நாடுகள். ஆனால் பணம் படைத்த நாடுகளுக்கு திடீரென பாசம் போராடும் போராளிகள் மீது வரும், வரும்பொழுது அவர்களை அங்கீகரித்து உதவிகள் கொடுப்பர். **கொசோவோவில்** அந்த மக்கள் மீது திடீரென பாசம் வந்தபோது அந்த மக்களைப் பாதுகாக்கவென யூக்கோஸ்லாவிய மீது குண்டு மழை பொழிந்ததுடன், கொசோவோவில் விடுதலைப் படையை (UCK) அங்கீகரித்தனர். அவர்களுக்கு ஆயுதமும், நிதி உதவியும் செய்தனர். போராட வேண்டுமா? போராடக் கூடாதா என்று கூட இவர்களிடம் கேட்டுத்தான் போராட வேண்டும் என்ற நிலையை உருவாக்குவது போல நடந்து கொண்டனர்.

இவற்றிகு நேர் எதிரே போராட்ட களத்தில் போராடிய பல போராளிகள் அவமானப் படுத்தப்பட்டனர். அவர்களைநீதி மன்றத்தில் நிறுத்தியுள்ளனர். தேவையான நபர்களுக்கு பரிசுகளை கொடுத்து விட்டு மற்றவர்களை தமது (Club) கழகத்தில் சேராதவர்கள் என்ற நிலையில் அவர்களை ஒதுக்கி வைத்தனர். இவற்றை நிரூபிக்க வரலாற்றில் பல சம்பவங்கள் நடைபெற்றுத்தான் இருக்கின்றது. அரபாத், மண்டேலா, கார்லோஸ் பேலோ, ராமோஸ் கோர்த்தா, கியூம், ரிம்பிள் போன்றவர்களுக்கு பரிசுகளை கொடுத்துவிட்டு போராளிகளை அவமதித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலஸ்தீனத்தின் விடுதலைக்கான விமானக் கடத்தலை மேற்கொண்ட அந்திரா சுகைலாவினை சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற விமானக் கடத்தலில் குற்றவாளி எனக் கைது செய்து அவரை ஜெர்மன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அவருக்கு சிறைத் தண்டனை கொடுத்தனர். அந்த நேரத்தில் அவரின் விடுதலை செய்ய வேண்டும் என்ற முனைப்பில் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அவர் பாலஸ்தீன அரசினால் கைவிடப்பட்ட ஒரு போராளியாக ஆக்கப்பட்டார்.

அயர்லாந்தில் சமாதானத்திற்காக போராடிய சக்திகளுக்கு பரிசு என 1995-இல் கொடுக்கப்பட்டது. அப்போது (Terry Adams) அடம்சிற்கு பரிசு கொடுக்கப்படவில்லை. இவர்கள் திட்டமிட்டே அடம்ஸினை ஒதுக்கினர். ஆடம்ஸ் சமாதானத்திற்கு ஒத்துழைக்காவிடின் இன்று அயர்லாந்தில் சமாதான ஒப்பந்தத்தைக் கொண்டு வந்திருக்க முடியாது. இவரை ஒதுக்கியதை பலர் கண்டிருத்தனர். அத்துடன் பரிசளிப்புக் குழு அயர்லாந்துப் பிரச்சனையின் தாற்பரியத்தை புரிந்து கொள்ளாதவர்கள் என விமர்சிக்கப்பட்டது. இது ஒருபுறமிருக்க இவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுபவர்களை அங்கீகரிக்கக் கூடாது என்ற ஏகாதி பத்தியங்களின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டுதான் பரிசு கொடுக்கப்படவில்லை. நவகொலனிய நாடுகளில் இவர்களில் இருப்பதைப் போலவே ஏகாதிபத்திய நாடுகளிலும் தேசிய இனப்பிரச்சனையை தீர்த்துக் கொள்ளும் பொருட்டு போராளிகள் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். (ETA) இவ்வாறான போராட்டங்கள் தம்மிடத்தில் வளர்ந்து விடும் என்ற பயமும் ஒரு காரணம் எனலாம்.

மண்டேலாவிற்கு பரிச கொடுக்கப் பட்டது. ஆனால் தீவிரவாதியான வின்னி மண்டேலாவை, ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட கறுப்பின அரசு ஆட்சியில் விசாரிக்க உண்மைக் கமிசன் உருவாக்கப் பட்டது. அந்தக் கமிசனில் கடந்த காலத்தில் குற்றம் செய்தவர்களை மன்னிக்கும் படியான முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வின்னி மண்டேலாவை தென் ஆபிரிக்க அரசியல் அரங்கில் இருந்து ஒதுக்க வேண்டும் என்ற செயற்பாட்டை நடத்தி முடித்தனர். அவர் மீது பல குற்றங்கள் சாட்டப்பட்டன. அவர் கடந்த காலத்தில் குற்றம் செய்வது பற்றி பல பிரச்சார முனைப்புக்களும் சர்வதேசம் எங்கும் நடைபெற்றது. இறுதியில் வெற்றியும் பெற்று மேற்குலகம் தமக்கு இசைவான ஆட்சியாளர்களை உருவாக்கிக் கொண்டது.

அண்மையில் **கிழக்கு திமோரில்** இறங்கிய அன்னியப் படையினர் போராளிகளின் ஆயுதங்களை களைய வேண்டும் என அழைத்துக் கொண்ட 'சர்வதேச சமூகம்' இன்று அவர்களின் தியாகங்களை கொச்சைப்படுத்துவது போல் அவர்களின் ஆயுதங்களை களைவதில் மாத்திரம் அக்கறைப்படுகின்றனர். அந்தப் போராளிகள் போராடிய படியால் தான் சமாதானப் படையை அனுப்பி நோபல் பரிசைக் கொடுத்து வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு நேரடி வழி திறக்கப்பட்டது. இந்த வாதத்தை ஏகாதிபத்தியவாதிகள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இவர்கள் போராடிய படியாலும், இனத்தின் சுயநிர்ணய உரிமையை வாக்கெடுப்பின் மூலம் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதன் மூலமுமே பெற்றுக் கொண்டதாகவும் இதை இலங்கை போன்ற தேசத்தில் பின்பற்ற வேண்டும் என்றும் இலங்கைச் சக்திகள் சில விரும்பவும் கூடும். சர்வதேச சமாதானப் படையைக் கூட அனுப்ப வேண்டும் என்று விரும்பவும் கூடும் இவைகள் ஆபத்தானவை என்பதை அந்தச் சக்திகள் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக அவுஸ்ரேலியா தலைமை தாங்கி சமாதானப்படை KOSOVOல் இறங்கியதை ஏகாதிபத்தியங்கள் தாம் உலக பிரஜைகளுக்கு அணிவிக்க முற்படும் (Uniform) சீருடையை சிறப்பாக அணிவிக்கக் கூடிய பிரதிநிதி அவுஸ்ரேலியா என்பதனால் ஆகும்.

## புதிய போக்கு

1999ம் ஆண்டு கொசாவோ மக்களை மிலோசவிச்சிடம் இருந்து காப்பாற்றும் பொருட்டு (NATO) நேட்டே இராணுவ ரீதியாக தலையிட்டது. உலகின் பல பாகங்களில் மக்கள் அழிக்கப்படுகின்றார்கள். வெவ்வேறு இரக ஆட்சியாளர்களால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலங்காலமாக மக்கள் இன்னல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் புதிதாக அமெரிக்காவின் தலைமையிலான அய்ரோப்பிய பண வலிமை கொண்ட நாடுகள் கொசவோவில் மாத்திரம் தான் அதுவும் 1999-இல்தான் தேசிய இனப்பிரச்சனையும், இன அழிவும் மேற் கொள்ளப்படுவதாக கண்டு பிடித்தவர்கள் என்பது போல் நேட்டோவானது அய்க்கிய நாடுகளின் ஒப்புதல் இன்றியே சுதந்திர நாட்டின் மீது தாக்குதல் நடத்தினர். இதன் பின்னர் வரலாற்றில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

அதாவது ஒரு நாட்டின் இறைமையை விட, மக்களின் அழிவைப் பாதுகாப்பதும், அவர்களின் உரிமையைப் பாதுகாப்பது முக்கியமானதாக கருத்து முன்வைக்கப் பட்டது. இவ்வாறே அமெரிக்காவும், சகக்கூட்டாளி ஏகாதிபத்திய நாடுகளும் கூறிக் கொண்டாலும் உண்மையில் ஏகாதி பத்தியங்களின் பொருளாதார, அரசியல் நலனின் அடிப்படையில் அமைந்து விடுகின்ற சதித் திட்டத்தின் வகையைச் சார்ந்ததே கொசவோவின் நலன்பால் கொண்ட அக்கறையாகும். பொருளாதார நலனானது யுக்கோஸ்லாவியாவில் ஏற்பட்ட பல மிருகத்தனமான சம்பவங்களின் பின்னால் இவர்களின் சதி மறைக்கப் பட்டுள்ளது. மாறாக பழைய மற்றும் எஞ்சிய யூக்கோஸ்லாவியாவில் ஏற்படுகின்ற குழப்ப நிலையில் பணம் படைத்த நாடுகளின் முகமூடி கழராமல் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் அய்.நாவின் ஒப்புதல் இல்லாமல் செய்ததை நியாயமும் கற்பிக்க இலகுவாக முடிகின்றது.

இவ்வாறு நியாயம் கற்பிப்பதன் ஒரு பகுதியாகவும் முன்னர் இருந்த எதிர்ப்புக்களை தனக்கு இன்னும் சாதகமாக மாற்றும் பொருட்டும், கொசவோ அல்ல எந்த பிராந்தியத்திலும் இந்த பணபலம் பொருந்திய ஏகாதிபத்திய நாடுகளுக்கு அரசியல் பொருளாதார இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகப்படுகின்றது. அந்தப் பிராந்தியத்தில், தேசத்தில் எவ்வித இடைஞ்சலும், ஏற்படக் கூடாது' என்பதற்கான ஒரு கருத்துருவாக்கத்தை மேற்கொள்ள வேண்டியது அவசிய மாகின்றது. இந்த நிகழ்ச்சியின் தொடர்ச்சியாகவே MSF அமைப்பினருக்கு கொடுக்கப்பட்ட நோபல் பரிசும் அங்கீகாரமும் ஆகும்.

MSF அமைப்பினர் சிறிய உதவி நிறுவனமாக இருக்கின்றபோது, எந்த நாட்டு அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடாமல் பிரச்சனை நடைபெறுகின்ற நாடுகளில் அரசாங்கத்துடன் எவ்வித பேச்சு வார்த்தையிலும் ஈடுபடாமல் ஒரு நாட்டினுள் நுழைகின்றது. (எவ்வகையில் சாத்திய மாகின்றது?) இந்த உதாரணத்தைக் காட்டி பணக்கார நாடுகளின் சந்தையைப் பாதுகாக்கும் உபகரணமாகச் செயற்படுகின்ற UN, NATO இராணுவ அணி சுதந்திர தேசத்தில் நுழைவதை ஏற்றுக் கொள்ளவோ, வரவேற்கவோ முடியாது. கூடாது.

இன்று சர்வதேச நாடுகள் பலவற்றில் அய்.நாவின் போர்வையில் சமாதானத்தை நிலைநாட்டுவது என்ற பெயரிலும் இன்னொரு நாட்டில் படைகளை அனுப்பி நுழைந்திருக்கின்றன. ஏகாதிபத்தியங்களைத் தவிர அண்டைய நாடுகளே அயல் நாடுகள் மீது நுழைந்திருக்கின்றன. இந்தியா - பங்களாதேசத்தில், இலங்கையில், மாலை தீவிலும் - தன்சானியா - உகண்டாவிலும், வியட்னாம் - கம்பூச்சியாவிலும் நுழைந் திருக்கின்றன. இவைகள் ஒரு வகையான படையெடுப்பாக இருக்கிறது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது உலகின் அழிவைக் காப்பாற்ற சோவியத் மற்றைய முதலாளித்துவ நாடுகளுடன் நேச அணியில் இணைந்து கிட்லரின் மனிதகுல அழிவிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இவைகள் வேறு அரசியல் சூழ்நிலையைக் கொண்டதாகும். அதேபோல் எண்ணை வளத்தைப் பாதுகாக்க ஏகாதிபத்தியங்களினால் தொடுக்கப்பட்ட ஈராக் மீதான யுத்தத்தை கிட்லருக்கு எதிரான யுத்தத்துடன் சமன்படுத்த முடியாது. ஈராக்கிற்கு எதிரான யுத்தம் சந்தையை பலப்படுத்தவே மேற்கொள்ளப்பட்டது. படுகிறது.

கிழக்கு திமோருக்கு 'தேசிய சுதந்திரம்' என அவுஸ்ரேலியா சமாதானப்படை என்ற போர்வையில் நுழைந்திருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவுஸ்ரேலியா தனது சொந்த மண்ணிலே அழிகிறது. பூர்வீகக் குடிகளான 'அப்ரோயின்ஸ்' சொந்த மண்ணிலே முழுமையான உரிமையற்று இருக்கின்றனர். ஆனால் அயல் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட படையை மனித உரிமையை நிலைநாட்ட அனுப்பியது முரண்பாடாக தோன்றினாலும் இதுவேதான் சர்வதேச நியதியாக இருக்கின்றது. இதற்கு அய்.நாவின் கையாலாகாத நிலை காரணமாகும்.

அமெரிக்கா, பிரிட்டன் நாடுகள் பல ஈராக்கிற்கு எதிராக ஒன்று சேர்ந்து தாக்குதல் நடத்தினர். பின்னர் அய்.நாவின் ஒப்புதல் இன்றி இராணுவத்தை அனுப்பி தலையீடு செய்தனர். இதனை இலகுபடுத்தும் முயற்சியில் பணக்கார வலிமைபடைத்த நாடுகள் தமக்கு முக்கியத்துவம் உள்ள பிரதேசங்களில் தலையிடுவதற்கு இலகுவாக கருத்தை உருவாக்கும் பொருட்டு இவ்வாறான அமைப்புக்களுக்குப் பரிசு கொடுத்து தமது செயற்பாட்டை நியாயப்படுத்துவதற்காக விவாதத்தை தொடங்கி வைத்திருக்கின்றது. இன்று பல நாடுகளில் யுத்தம் ஒரு தீர்விற்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றுபாடுகின்றன. ஆனால் அந்த நாடுகளில் இருக்கும் சக்திகள் இதற்கு இடைஞ்சலாக இருக்கின்றன. இவர்கள்கள் பல முறை முயற்சி செய்தும் ஒரு முடிவிற்கு வரமுடியாத நிலையில் இருக்கின்ற வேளையில் இவர்களை உதறித் தள்ளிவிட்டு தீர்வைத் திணிக்க வேண்டும் என்றால் **சமாதானம், மனித உரிமை** என்ற போர்வையில் சுதந்திர நாடுகள் மீது நுழைய வேண்டியது அவசியமாகின்றது. இவர்கள் தமது நாடுகளில் அகதிகள் வருகையையும், குறிப்பாக கறுப்பர்கள் வருவதையும் தடுக்க பல முயற்சிகள் செய்கின்றனர். இதன் தொடர்ச்சியாக, முக்கியமாக தமது பொருளாதார நலனை பேணிக் கொள்ளவும். இவ்வாறு நுழைய வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்கு முதல் கட்டமாக பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். இன்றைய சமுதாயம் தொலைத் தொடர்பை நம்பியே வாழ்கின்ற சமுதாயம் என்ற காரணத்தினால் இவர்களின் கருத்தை பரப்பிக் கொள்ள இலகுவாக இருக்கின்றது.

இதே போல் யூக்கோஸ்லாவியா மீது செலவினையும் பார்ப்போம்.

| இலக்குகள் மீது ஏற்பட்டு **செலவுகள்** | இந்திய **ரூபாயில்** |
|---|---|
| வீசப்பட்ட குண்டுகள் | 170 Billion |
| மனிதாபிமான உதவிகள் | 160 Billion |
| KFOR | 385 Billion |
| மீள் அமைப்புக்கு | 1310 Billion |
| மொத்த செலவு | 2025 Billion |

Donau என்ற நதி றொமானியா, பல்காரியா, செர்பியா, பொஸ்னியா, சிலோவேனியா போன்ற நாடுகள் உட்பட அய்ரோப்பாவின் ஊடே ஓடும் நதியாகும். இந்நீண்ட நதியில் அமைக்கப்பட்டிருந்த பாலம் ஒன்றினைத் தகர்ப்பதற்கு 385 மில்லியன் தேவையாகும். ஆனால் அதனை திருத்திக் கொள்ள 640 மில்லியன் செலவாகும். 24 மணித்தியாலத்திற்கு செலவு 1.850 பில்லியன் ஒரு வாரத்திற்கான பெற்றோல் லெசவு 10 பில்லியன் ரூபாய்.

78 நாட்களுக்கும் செலவளிக்கப்பட்ட பாவிக்கப்பட்ட குண்டுகள் 23,000.

44 வித தொழிற்சாலைகள் சேதம்

5000 000 கண்ணிவெடி

10000 வெடிக்காத கண்ணிவெடிகள்

10000 கொசவோ மக்கள் கொலை

600 செர்பிய இராணுவம்

2000 செர்பிய மக்கள்

200000 செர்பிய கொசவோ அகதிகள்

1 மில்லியன் உள்ளூர் அகதிகள்

500000 கொசவோ அகதிகள் எனக் கணிப்பிடப்படுகின்றது.

யூக்கோஸ்லாவியா மீது நடத்தப்பட்ட தாக்குதலின் காரணமாக உட்கட்டுமானங்களான புகையிரதப் பாதை, பெருந்தெருக்கள், பாலங்கள் தகர்க்கப்பட்டன. மின்சார நிலையங்கள், எண்ணைக் கிணறுகள், தொழிற்சாலைகள் தாக்குதலுக்கு உள்ளாகியது. இங்கே ஒரு நிலையில் தாக்குதலைத் தொடுக்கிற போது அது நாட்டின் பல பாகங்களிலும் பாதிப்பினை உருவாக்கியிருபபதை அவதானிக்கக்

www.tamilarangam.net



கூடியதாக இருக்கின்றது. மின்சக்தி நிலையத்தில் 1,00,000 பேர் வேலை இழந்தனர். முன்னர் 4,00,000 பேர் வேலையில்லாதவர்களாக இருந்தனர். இதில் குறிப்பாக Zastava என்ற தொழிற்சாலை Kragujevae அமைந்திருக்கின்றது. இது லொறி தயாரிக்கும் தொழிற்சாலையாகும். இதில் 15,000 பேர் வேலை செய்தனர். இது 120 வினியோகநிலைகளை கொண்டதாகும். இதில் 40,000 பேர் வேலையிழந்திருக்கின்றனர். இது மசடேனியா (Maccdonia). பல்கேரியா ஆகிய நாடுகளிலும் இதன் கிளைக்கள் உண்டு. இவ்வாறு ஒரு பெரும் தொழிற்சாலை தாக்குதலுக்கு உரித்தானதை வேறு கண் கொண்டும் பார்க்க வேண்டியிருக்கின்றது.

மிலோசவிச்சின் நம்பக வட்டமாக மகள் இவர் தொலைத் தொடர்பக் காட்சி நிலையம் வைத்திருந்தார். (Marija), மகன் (Marco), மனைவி (Mira Markovic), சகோதரர் Boris Milosevic) நிலச்சுரங்க மந்திரி அத்துடன் தனி முதலாளியாகவும் இருக்கின்றார். (Zivota Kosiv, Durvanka industrija Nis south Serbia), Dejan Kovacevic குடியிருப்பு மந்திரி இவர்களுடன் செர்பிய Micro Marjanovic பிரதமர் என்பவர் எரிவாயு ஏற்றுமதி திணைக்களத்தின் தலைவராகவும் இருக்கின்றார். தாக்குதலின் போது இவர்களின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தியாக பிரச்சாரம் செய்தனர்.

முதலில் யூக்கோ மீதான தாக்குதலின் காரணத்தைப் பார்ப்போம். யூக்கோ மீதான தாக்குதலின் வருவாய்க்கு உறுதுணையாக இருக்கும் உறவினர் நிலைகளை அழித்தனர். மிலேசவிச்சை பணிய வைக்க முடியும் என நேட்டோவனால் நம்பப்பட்டது. இதனால் பல முக்கிய நிலைகள் தாக்குதலுக்கு உள்ளாகியது. இதே போன்ற கருத்தை முன் வைத்து ஈராக் மீதும் தாக்குதல் நடத்தினர்.

**பரிசு கொடுக்கப்படுவது யாருக்கு?**

இதுவரை காலமும் தனி நபர்கள், சில தன்னார்வ அரசுசாரா அமைப்புக்கள், போன்றவற்றிற்கு கொடுக்கப்பட்டது. பரிசு கொடுப்பதற்குப் பின்னால் மிகவும் தந்திரமாக பலம் படைத்த நாடுகளின் நோக்கம் அடங்கியிருக்கின்றது. இந்தப் பரிசுகளின் மூலமாக தனிநபர்கள் எவ்வித தியாகம் செய்தவர்களாக இருக்க வேண்டிய அவசிய மில்லை. இவர்களை முன்னுக்கு நிறுத்துவதன் மூலம் போராட்டங்களின் திசையை மாற்றிக் கொள்ள நிர்ப்பந்திக்கின்றது. அத்துடன் இவ்வாறான தனி நபர்களை விட்டால் மக்களுக்காக பேராட எவரும் இல்லை என்ற கருத்துப் போக்கையும் உருவாக்கிக் கொள்கின்றது. போராடுகின்ற தேசங்களில் தனி நபர்கள் முக்கிய இடத்தைப் பெருகின்றனர் தான். ஆனால் இவர்கள் மக்கள் திரள், போராளிகள் இல்லாமல் எந்த விடிவையும் தனிநபர்கள் கண்டு கொள்ள முடியாது. இவ்வாறான கருத்தை மறைப்பதற்கு முக்கிய நோக்கமாக இருக்கின்றது.

இதுவரை தனிநபர்களுக்குப் பின்னால் நடைபெற்ற போக்குக்களைப் பார்ப்போம். அன் சுன் சுசீ (பர்மா), நெல்சன் மண்டேலா, அரபாக், இக்சாத், ரபின், ராமோஸ், கோர்த்தா, கார்லோஸ், பேலோ போன்ற ஆட்சியாளர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் ஏகாதிபத்தியத்திய பிரதிநிதியாக இருந்த கீசிங்கர். (Hendry, Kissinger, Le, Dic, Tho), வீ. டிக். கோ. என்பவர்களுக்கு 1973, இல் நோபல் பரிசு கொடுக்கப்பட்டது. இவர் வியட்னாம் யுத்தத்தின் முடிவிற்கு கொண்டு வரும் கால கட்டத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு, தலைமை தாங்கியவர்கள். ஆனால் தற்பொழுது, வெளிவந்துள்ள ஆவணங்கள் அமெரிக்க நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள் ராணுவ நடவடிக்கைகள், பற்றி செய்திகள், வரலாற்றை, மீளவும், எழுதத் தூண்டுகிறது. சமாதானம், பேசுகின்ற இந்தச் சக்திகளின் உண்மை முகத்தை மீளவும் அறிந்து கொள்ள இவைகள் உதவுகின்றன.

இந்த அறிக்கையில் 22.1.93 அன்று கென்னடி சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னதாக விட்னாமில் இருந்து, படைகளை, முற்றாக, வாபஸ் வாங்க தமது ஆலோசகரான Maxell, Traker என்பவரிடம் இரண்டு நாட்களுக்கு முன்னர் தெரிவித்ததாக தெரிவிக்கின்றது. இந்த திட்டம் 1965 இற்கு முன்னர் படைகளை முற்றாக விலக்குவது தொடர்பாக தென் வியட்னாம் ஜனாதிபதி Ngo Dinh Diem என்பருடன் கலந்துரையாடுவது பற்றியதாகும். இவரைப் போல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தென்னாபிரிக்க இன வெறி அரசாங்கத்தின் ஜனாதிபதியாக இருந்த கிளார்க்கிற்கு கொடுக்கப்பட்டது. அத்துடன் இஸ்ரேலிய இக்சாத் ரபீனுக்குக் கொடுக்கப்பட்டது. இதில் இருந்து யுத்தத்தை உருவாக்குபவர்கள் மக்களை அழித்தவர்களுக்கும் சமாதானப் பரிசு கொடுக்கப்பட்டது.

கண்ணி வெடி தடுப்பு அமைப்பு, அன்னைத் தெரேசா போன்ற அமைப்புக் களுக்கு கொடுக்கப்பட்டது. அத்துடன் அரசியல் முரண்பாடு கொண்டவர்களுக்கு கொடுக்கப் பட்டது. முன்னர் சோவியத் ஒன்றியத்தில் சிறை இருந்த கைதிக்கு கொடுக்கப்பட்டது. இத்துடன் இம்முறை இரண்டு சீனர்களுக்கு கொக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இவர்களின் இந்தப் போக்கு நேரடியாக உழைக்கும் மக்களுக்கு எதிரான சித்தாந்தத்தைக் கொண்டவர்களுக்கும் கொடுக்கப்படு கின்றது. இதன் கருத்து சீனா, இறுதிக் கால சோவியத் ஒன்றியம் சோசலிச அரசுகளாக மாட்டாது. இருந்தாலும் சமாதானப் பரிசு வாங்குபவர்கள் எதிர்ப்புரட்சிகர அமைப்பைச் சேர்ந்தவர்களாகவும், மேற்கு உலகத்தின் ஊதுகுழலாக இருப்பவர் களேயாகும்.

இந்தப் போக்கிற்கு பின்னால் பொதுவான நோக்கம் இருக்கின்றது. முதலாளித்துவ-வாதிகள் தாம் அநியாயத்தை, பிழையான-வற்றை எதிர்ப்பதாகக் கூறிக் கொள்கின்ற போதும் பொதுவாக உழைக்கும் வர்க்க அமைப்புக்களும், உழைக்கும் வர்க்க அரசு களும் உருவாகக் கூடாது என்பதில் கவனம் கொண்டும், அவ்வாறான போக்கை சிதைக்கும் நோக்கம் கொண்டதாகும். இந்த நோக்கங்களை பல வழிகளில் செயற்படுத்து-கின்றனர். இவ்வகையான பரிசுகளும் ஒரு வகை லஞ்சமேயாகும். இவ்வகையான நிதியளிப்பை விடுதலை இயக்கங்களுக்கும் கொடுக்கின்றன. இந்த நிதியை உதவி நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப் படுகின்றது. இவர்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக கொண்டுள்ள எதிர்ப்பு அலையை பயன்படுத்தி அவர்களை வளர்த்து பின்னர் நேரம் வரும் போது அவர்களை அப்படியே கவிழ்த்து விடுவார்கள். இதனை கொசவோ

## கிழக்கு திமோரின் தலையை குறிபார்க்கும்



அவுஸ்ரேலிய அமைதிப்படையின் துப்பாக்கி



தமிழத தேசிய ஆவணச சுவடிகள

www.tamilarangam.net



விடுதலை இராணுவத்தினைப் பயன் படுத்தியது. அண்மைக்கால வரலாற்றில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

திடீரென அக்கறை கொண்ட அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நோபல் பரிசும், சர்வசன வாக்கெடுப்பும் ஆகும். முதலாளித்துவ உலக ஒழுங்கை சிறப்பாக மேற்கொள்ளக் கூடிய பிரதிநிதியான அவுஸ்ரேலியா தலைமையில் சமாதானப் படையை அனுப்பியது. கவனிக்கத்தக்கதாகும். இவர்கள் மக்களை ஒடுக்கியவர்களுக்கு பரிசுகளைக் கொடுப்பதும் மக்களுக்காக உண்மையாகப் போராடுபவர்களுக்கு பரிசு கொடுக்காமல் விடுவதில் சுரண்டும் வர்க்க நலன் அடங்கியிருக்கின்றது. இவர்கள் மக்கள் விரோத சக்திகளுக்கு கொடுப்பதன் மூலம் இருக்கின்ற சித்தாந்தங்களை மறைத்துக் கொள்ளவும், கறுப்பு என்றால் பேய் என்பது போல வெள்ளை என்றால் (Engel) என்பது போல் சரி பிழை என்பதைத் தவிர வேறு எந்த சித்தாந்தமும் இல்லை என்று (முதலாளித்துவ) சித்தாந்தப் போக்கை நிலைநிறுத்துவதுமாகும். மேல் பார்த்த நிகழ்வில் இருந்து பின்வரும் பார்வையைப் பெற முடிகின்றனது.

★ அரசு வன்முறை பிரயோகிக்கும் போது, அதனை எதிர்த்து தம்மைப் பாதுகாக்கும் முறையில் அமைந்த மக்கள் போராட்டங்களை எதிர்ப்பது.

★ தனி நபர்களை வளர்ப்பது இதன் மூலமாக அவர்களை உதாரண புருசர்களாகக் காட்டி தமக்காக இவ்வாறான தனிநபர்கள் போராடுவார்கள் என்ற கருத்தாக்கத்தை மக்களிடம் உருவாக்குவது.

★ தாம் சமாதனத்தின் நண்பர்களாக காட்டிக் கொள்வதுடன், இவர்கள் ஆயுதங்களை விற்பனை செய்வதையும், சமாதான பரிசுப்பணம், ஆயுதம் விற்றுப் பெற்ற பணம் சமாதானப் பரிசாக கொடுப்பது இவர்களின் சிந்தனையோட்டத்தில் நியாயம் என கற்பிப்பது.

★ திட்டமிட்ட பிரச்சாரத்தை வளர்த்துக் கொள்ள சர்வதேச அங்கீகாரம் பெற்றது என்ற மாயையை ஏற்படுத்துவது.

★ எதிர்கால ஆட்சியாளர்களை உருவாக்கிக் கொள்வது. தீவிரவாதிகளை அகற்றி வீட்டு மிதவாதிகளை உருவாக்கிக் கொள்கின்றன. இவர்களுக்கு ''அங்கீகாரம் பெற்ற பரிசு'' மூலம் அவர்களை மிதவாதிகளாக்கி விடுகின்றது. இவ்வாறான பல செயற்பாடுகளைக் கொண்டது, நோபல் பரிசு திட்டமானது.

**செய்ய வேண்டியது என்ன?**

நடக்கின்ற போராட்டங்கள் எல்லாம் சர்வாதிகாரத்தின் தோற்றத்தாலும் தேசிய இனங்களின் மோதுவதாலும் மட்டும் ஏற்படுவதில்லை. பொருளாதார அமைப்பில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற நிச்சயம் அற்ற தன்மை காரணமாக ஒவ்வொரு வர்க்கமும் ஒவ்வொரு இடத்தை பெறுவதற்காக போராடுகின்றது. இதில் ஒரு முதலாளித்துவ வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை பாவித்து தனது நலனை பாதுகாக்கும் பொருட்டு போராடுகிறது அதேபோல் பெரும் தேசிய இனத்தின் முதலாளித்துவ வர்க்கம் தனது வளத்தைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு முழு இனத்தையே ஒடுக்கின்றது. தனது இனத்திற்கு சில சலுகைகளை வழங்குகின்ற போதும் அதே இனத்தைச் சேர்ந்த தொழிலாளர் வர்க்கம் தனது வாழ்க்கையை இழந்து கொண்டு தான் இருக்கின்றது. இது புரிந்து கொள்ளவைக்கக் கூடிய சக்திகள் பலம் இல்லாத காரணத்தினால் தொடர்ந்தும் சுரண்டும் வர்க்கத்தின் பித்தலாட்டத்திற்கு பலியாகின்றனர்.

இலங்கை போன்ற நாடுகளில் உள்ள எல்லா மக்களும் ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர். இந்தச் சுரண்டலுக்கு எந்த இனமும் தப்பித்துக் கொள்ள முடியாது. அடுத்தது இனங்களும் ஒடுக்கப்படுகின்றன. இவைகள் இரண்டு இனங்களுக்கு இடையில் சண்டையிட்டுக் கொள்வதால் ஒரே நேரத்தில் எல்லா இனத்தின் தொழிலாளர் வர்க்கம் சுரண்டப்படுவது மறைக்கப்படுகின்றது. ஒவ்வொரு இனமும் தன் இனத்து முதலாளித்துவ சக்திகளுக்கு எதிராக போர் தொடுப்பதன் மூலம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போரை தொடர முடியும். இதுவே வெவ்வேறு இனத்தின் கடமையாகும். இல்லாவிடின் ஏகாதிபத்திய சூழ்ச்சியினை முடியடிக்க முடியாது.

— இளங்கோவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'சார்க்' பயங்கரவாதத்துக்கு எதிராக

''வங்கதேசப் பிரகடனத்துடன்'' உருவான **'சார்க்'** அமைப்பின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகியுள்ளது. தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான பொருளாதார, கலாச்சார, அரசியல் உறவுகளை மையப்படுத்த தொடங்கிய அமைப்பு பல இடர்பாடுகள். மோதல்கள் மத்தியில் நிற்கிறது. உலகப் பொருளாதாரத்தில் ஏகாதிபத்தியங்களின் நலனுக்கான அமைப்புக்கள் பல உண்டு (IMF, W.B. WTO...) உலகப் பொருளாதார முறைக்கு உகந்த முறையில் பிராந்தியப் பொருளாதார முறைகளும், அமைப்புக்களும் பிராந்திய ஆதிக்க நாடுகளின் நலனுக்கான முறையில் உருவாகியுள்ளன. (அய்ரோப்பிய ஒன்றியம், ஆசியன், ஒபக் சார்க்...) உலக தொழில், நிதி, வணிக போட்டிக்குள் நடக்கும் மோதலை எதிர்கொள்ளவும், தங்கள் நலனை பாதுகாக்கவும், இவ்அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

தெற்காசியாவில் **'சுதந்திர வர்த்தக வலையம்'** ஏற்றுமதி - இறக்குமதி தடை நீக்கம், 'ஒரே நாணயம்', 'சமச்சீரான வரிக் கொள்கை' .... என சார்க் அமைப்பு தன்னை தயார்படுத்த தொடங்கியது. ஆனால் சார்க் நாடுகளுக்கு இடையில் நிலவுகின்ற அரசியல் அதிகார உறவு நிலையும், வெளியுறவு நடவடிக்கைகளும், இந்திய விரிவாதிக்க நலன் சார்ந்த அணுகுமுறைகளும், சார்க் அமைப்பின் செயல் பாட்டை தேக்கமடையச் செய்துள்ளது. இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையிலான **தேசிய வெறிக் கொள்கை** 50 ஆண்டுகளாக தொடர்ந்து வரும் ஒரு விடயம். இத்தேசிய வெறிக் கொள்கையும், செயற் பாடுகளும், கடந்த சில ஆண்டுகளில் வெளிப்படையாக எல்லை தாண்டிய **அரசு பயங்கரவாதமாக** வெளிப்படுகிறது.

சார்க் நாட்டு அரசுகள் தங்கள் தங்கள் நாட்டுக்குள், மக்களின் புரட்சிகர இயக்கங்களை, தேசிய விடுதலைப் போராட்டங்களை மூர்க்கமாக நசுக்கி வருகின்றன. அதேவேளை உள்நாட்டுப் போராட்டங்களை திசை திருப்பவும், நசுக்கவும் தேசிய வெறியை உள்நாட்டில் வளர்க்கிறது. தேசிய வெறியை வளர்க்க, மத, இன உணர்வுகளை பயன்படுத்துகிறது. எல்லை தாண்டி மற்றய நாட்டுக்குள் **அரசு பயங்கரவாத** உளவு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. அண்டை நாட்டுக்குள் உள்ள தனிநபர் பயங்கரவாத வழியை முன்னிறுத்தும் போராட்ட இயக்கங்களை தங்களின் அரசு பயங்கரவாதத்துக்கு பணம், ஆயுதம், பயிற்சி கொடுத்து பயன்படுத்துகின்றன. பிரச்சாரம் செய்ய அனுமதிக்கின்றன. உண்மையான புரட்சிகர மக்கள் இயக்கங்களை, மக்கள் யுத்த வழிமுறையை கொண்டுள்ள கட்சிகளை, போராளிகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் அழிக்கின்றன.

அமெரிக்காவும், ரசியாவும் உலகை பிளக்கும் ஏகாதிபத்தியங்களாக இருந்தபோது அமெரிக்கா பாகிஸ்தானையும், ரசியா இந்தியாவையும் இந்து சமுத்திர அரசியல் - இராணுவ, பொருளாதார போட்டிக்கு பயன்படுத்தின. ரசியா உருக்குலைந்த பின் அமெரிக்காவின், அய்ரோப்பாவின் தெற்காசிய பிராந்திய கொள்கையில், அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. 1998-இல் இந்தியாவும் - பாகிஸ்தானும் அனுகுண்டு வெடிப்பு சோதனை நடத்திய பின் ஏகாதிபத்தியங்களின் தெற்காசியக் கொள்கை, நிதி தொழில், வணிக, அறிவியல் தடைகளுடன் வெளிவந்தது. கவனிக்கத் தக்கது.

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் **உலக அரசு பயங்கரவாதத்தை** நடத்தி வருகின்றன. ரசியாவுக்கு எதிராக அமெரிக்கா பயன்படுத்திய தனிநபர் பயங்கரவாத வழி இயக்கங்கள், உளவு அமைப்புக்கள், தலைவர்கள் இப்போது அமெரிக்காவுக்கு எதிராக திரும்பி இருக்கின்றன. **ஓசாமா பின்லாடன்** போன்ற

www.tamilarangam.net



தனிநபர் பயங்கரவாத தலைவர்களை அமெரிக்கா தனது தேவை முடிந்து விட்டதால் அழிக்க துடிக்கிறது. சூடான், ஆப்கான் நிலைகளை ஏவுகணை மூலம் தாக்கியது. **பின்லாடன் அமெரிக்க, ரசிய, இந்திய எதிர்ப்பு** கொள்கையை முன்வைத்து முசுலீம் மத அடிப்படைவாதத்தில் உலக முசுலீம் போராளிகளை, தேச பக்தர்களை திசை திருப்ப தொடங்கி இருக்கிறான். முசுலீம் தனிநபர் பயங்கரவாத இயக்கத்தை, தலைவர்களை காட்டி, நியாயமான முசுலீம் மக்களின் மதவுரிமைக்கான, தேசிய இன உரிமைக்கான புரட்சிகர போராட்டங்கள் நசுக்கப்படுகின்றன. செச்சினிய தேசிய விடுதலைப் போராட்டத்தை, காஸ்மீர் தேசிய விடுதலைப் போராட்டத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதில் ரசியா, இந்தியா, அமெரிக்கா கூட்டாக செயல்படுகினறன. Nesi Program உலக தனிநபர் பயங்கரவாத வழிக்கும், உலக அரசு பயங்கரவாத வழிக்கும் இடையிலான மோதல் நடந்து கொண்டிருக்கிறது.

சிறீலங்கா இராணுவத்தின் 50-வது ஆண்டு நினைவு விழாவில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பிய பாகிஸ்தான் இராணுவ ஜெனரல் அகமட் மூசாரம் விமானத்தில் கொலை செய்யப்படவிருந்தார். தப்பியவர் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தி முடித்தார். பாகிஸ்தானின் ஆட்சிக் கவிழ்ப்பை ஏகாதிபத்தியங்கள் கண்டித்தன. இந்தியா **'சார்க்'** மாநாட்டை நிறுத்தியது. நிர்ணயிக்கப்பட்ட கால அளவில் பாகிஸ்தான் சனநாயக ஆட்சிக்கு திரும்ப வேண்டும் என உலக அரசுகள் முழங்கின. பாகிஸ்தான் இராணுவ ஆட்சியுடன் அதிகாரபூர்வ உறவை மேலும் சீனா, பாகிஸ்தானுடன் தனது அரசியல், பொருளாதார, இராணுவ, அறிவியல் ஒப்பந்தங்களை பலப்படுத்துகிறது. நிதிக் கடன்களை நீடித்த காலத்துக்கு, வழங்கியுள்ளது. அதேவேளை முசுலீம் அடிப்படைவாதம் சீனாவுக்குள் தடுக்கப்பட வேண்டும் என கூறுகிறது. காசுமீர் கொள்கையில் முரண்படுகிறது.

சிறீலங்காவில் நடைபெறவிருந்த இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு சந்திரிகாவின் ஒரு கண் இழப்புடன் தப்பிப் பிழைத்தது. கிறிஸ்மஸ் அன்று இந்திய விமானம் நேபாளத்தில் கடத்தப்பட்டு புது வருடத்தில் மூன்று முசுலீம் மதப் போராளிகள் விடுதலையுடன் விமானப் பயணிகள் விடுவிக்கப்பட்டனர். இந்திய - வங்களாதேஷ் எல்லையில் இரண்டு நாட்டு எல்லைப் பாதுகாப்பு படைகளுக்கு இடையில் மோதல் அடிக்கடி நடக்கிறது. பூட்டானில், இந்திய வடகிழக்கு மாநில தேசிய இன விடுதலை இயக்க முகாம்கள் மீது தாக்குதல் பற்றி இந்தியரசு ஆலோசிக்கிறது. **கார்க்கில் யுத்தம்** எப்போது மீண்டும் வெடிக்கும் என கேட்கப்படுகிறது. அனு ஆயுதங்களை முதலில் பயன்படுத்த மாட்டோம். எனவும், அனுநிலைகள் பற்றிய விபரத்தையும் பாகிஸ்தானும் - இந்தியாவும் பரிமாறிக் கொண்டு நாடகம் ஆடுகின்றன. இந்தியா **'பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக'** உலகம் அறிவிக்க கோருகிறது.

இந்திய அரசு **'வரதராஜப் பெருமாளுக்கு'** மாதமாதம் 50,000/- கொடுப்பதாக EPRLF சுரேஷ் கூறியுள்ளார். அதற்கு கணக்கு காட்டும்படி கேட்டுள்ளார். இதே இந்தியாவின் அகதி முகாமில் உணவுக்கு, மின்சாரத்துக்கு, கல்விக்கு இந்திரா காந்தி பள்ளியில் ஏங்கும் அகதி சிறுவர்கள் 400 பேர்.

சிறீலங்காவும் - அமெரிக்காவும் தேவைப்படுவோரை ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில் மிக அண்மையில் கையெழுது இட்டுள்ளன, பயங்கரவாதிகளுக்கு, இயக்கங்களுக்கு நிதி கொடுப்பதில்லை என்ற அய்நாவின் உலக ஒப்பந்தத்தில் சிறீலங்கா 21-வது நாடாக ஒப்பம் வைத்துள்ளது. 1980-களில் **குட்டிமணியை** சிறீலங்கா அரசிடம் ஒப்படைத்துள்ளது. 1999-ல் ஏரிக் சவுந்தரநாயகத்தை தமிழக அரசு மீண்டும் ஒப்படைத்துள்ளது. **'சார்க்'** நாடுகளின் அரசுகள் தங்களுக்கு இடையிலான அரச முரண்பாடுகளால், அண்டை நாடுகளில் தனிநபர் பயங்கர- வாதத்தை ஊக்குவித்து பயன்படுத்துவதால் எழும் முரண்பாடுகளால் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன.

சார்க் நாடுகளின் மக்கள் இயக்கங்கள், தேசிய இன விடுதலை இயக்கங்கள், அரசுகளின் அரசு பயங்கரவாதத்தை எதிர்த்து ஒன்றுபட வேண்டும், தனிநபர் பயங்கரவாத வழியை நிராகரிக்க வேண்டும், மக்கள் போர்ப்பாதையில் அய்க்கியப்பட வேண்டும்.

— மரியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புத்தாயிரம் (2000) ஆண்டில் உலகம் அழியுமா? மாறுமா?

மனித வரலாறு 60 லட்சம் வருடத்துக்குப்பட்டது. ஆனால் மனித வரலாற்றை 2000 ஆண்டுகளாக காட்டுவது கிறிஸ்துவ ஆதிக்க பண்பாட்டு தொடர்ச்சியாகும். இயற்கையின் வரலாற்றை மறுத்த மனிதன், மனித வரலாற்றை இயற்கை வரலாறாக காட்டுவது போல் மனிதவரலாற்றை மறுத்து, மேற்கின் கிறிஸ்துவ ஆதிக்கத்தை மனித வரலாறாக கட்டுவதே இந்தப் புதுவருட கூத்துகள். கிறிஸ்து பிறந்ததை அடிப்படையாக கொண்டு வரையறை செய்யும் இந்த வரைமுறை, மேற்கின் பொருளாதால ஆதிக்கத்தால் உலகமயமாகிறது. மனித வராற்றில் எத்தனையோ பண்பாடுகள் எத்தனையோ கலாச்சாரங்கள் *(ஒவ்வொரு மக்கள் பிரிவுக்கும் வேறுபட்ட புதுவருடம் உண்டு)* இருந்த போதும் அவைகளை மேற்க்கின் கொலனித்துவம் தொடங்கி இன்றைய ஏகாதிபத்திய ஆதிக்க பண்பாட்டு வழிகளில் மறுத்து கொண்டப்படுவதே புதுவருட கூத்துக்கள்.

இந்த கிறிஸ்துவம் புதுவருடத்தை வரையறுத்து அடையாளப்படுத்திய 2000 ஆண்டு *உலகம் அழிந்து போகும்* என்று மதப்பிரச்சரத்தை அதன் கொண்டாட்டத்தின் ஊடாக செய்தனர். இதையே பன்னாட்டு நிறுவனம் தனது வர்த்தக நலன் சார்ந்து *கொம்யூட்டர் ஊடாக அழிவை பிரமிக்க வைத்தனர்.* 1999 க்கு அடுத்தது 2000 என்பது வெறும் எண் என்பதை மறுத்து இந்த மாற்றம் மனிதனுக்கு புறம்பான (கற்பனையான) சக்திகளுக்கு உட்பட்டதாக பிரமிக்கவைத்தே இதை அரங்கேற்றினார். இதை சாதித்தன. இதன் மூலம் மதப்பிரச்சாரத்தை மதவாதிகளும், பன்நாட்டு நிறுவனங்கள் வர்த்தக விளம்பரத்தையும் இந்த அழிவு மிரட்டல் ஊடாக சாதித்தன. இதன் போது வர்த்தக சூறையாடலுக்கு உருவாக்கிய சொந்தக் கண்டுபிடிப்புகளையே கேலிசெய்த படியேதான் இந்த விளம்பரத்தை மெருகேற்றினர்.

மேற்கு நாடுகளிலும், மற்றை நாடுகளின் முன்னணித் தலைநகலத்திலும் பணத்தை கோடிகோடியாக வாரியிறைத்து புதுவருட கொண்டாட்டத்தை ஏகாதிபத்திய பண்பாடாக்கினர். பொருளாதாரரீதியாக வசதியான பிரிவுகளின் கொண்டாட்டம் உலகெங்கும் பண்பாடகிப் போன வக்கிரத்தின் பின்னால் *இன்னொரு உலகம் இரத்த கண்ணீர் வடிக்கின்றது.*

ஒவ்வொரு நாட்டிலும் ஏகாதிபத்திய பண்பாட்டு நடிகர்/நடிகைகள் தொடங்கி வைக்க பண்பாட்டு கலைஞர்கள் முன்னிற்க அந்நாட்டு தலைவர்கள் இரண்டாவது வரிசையில் நின்று புதுவருட வாழ்த்துக்கள் கூறிக் கொண்டபோது பன்னாட்டு நிறவனங்கள் தமது சந்தைக்கான விளம்பரத்தை இலவசமாக சர்வதேசமயமாக்கியது. இந்த வக்கிரத்தின் பின்னால் ஒரு உலகம் முச்சுவிட நேரமின்றி அழுகின்றது.

புதுவருட கிறிஸ்தவ பொருளாதார ஆதிக்க பண்பாடு இன்று ஏகாதிபத்திய பண்பாட்டால் கொண்டாடப்படுகின்ற போது, இந்த புதுவருடம் பிறந்தையே தெரியாது போன மக்கள் கோடிக்காணக்கில் வாழும் சூனியமான உலகமிது. கொண்டாட்டத்தின் போது கோடிக்கணக்கில் மிதமிஞ்சிய வகையில் உண்டும் குடித்தும் வீணாக நாசமாக்கிய இரவு, *150 கோடி மக்கள்* இரவு பட்டினியுடன் இந்த கொண்டாட்டத்துக்காக கொண்டாடும் ஜனநாயகவாதிகளுக்காக (?) தமது வயிற்றை வழமைபோல் சுருக்கி கொண்டனர்.

ஏகாதிபத்திய புதுவருடம் பிறந்த அந்த வினாடிக்கு முன்பின்னாக 48 மணி நேரத்தில்; உலகில் *3332 பச்சிளம் குழந்தைகள்* தமது முதல் ஏழு நாட்களுக்குள்ளாகவே பட்டினியில் துடித்து சாகின்ற போது, அவர்கள் இந்த கொண்டாட்டத்துக்கு தமது பாலையே தியாகம் செய்தனர். அதே நேரம் *ஒருலட்சம் பேர்* 48 மணித்தியாலத்தில் பட்டினியில் செத்து போகின்றனர். நோய்க்காரணமாக மருந்து வாங்க பணமின்றி உலகில் இந்த 48 மணித்தியாலத்தில் *2.9 லட்சம் பேர்* இறந்து போகின்றனர். *50 கோடி பேர்* குறைந்த பட்சம் தண்ணீரைக்கூட குடிக்க முடியாது தாகத்தால் தவித்த போது; இதை பார்க்க மறுத்தவர்கள் வில்லங்கமாக வயிற்றை நிரப்பிய போதையில் வக்கிரத்தை வெளிப்படுத்தினர். உலகின் எல்லா தலைநகரத்திலும் ஏகாபத்திய புதுவருடம் தொடங்கிய போது வாணவேடிக்கைக்கு இடையே, பெண் அரைகுறை நிர்வாண ஆட்டத்தை ஆடவைத்து ஆணாதிக்கத்தை உலகமயமாக்கினர். ஆனால் புது வருடத்துக்கு முதல் நாளும் அடுத்த நாளும் இந்த வக்கிரத்தால் உருப்பெற்றவர்கள் பெண்களை கற்பழிக்கின்றனர். *அமெரிக்காவில்* ஒன்றரை நிமிடத்துக்கு ஒரு கற்பழிக்கப்படுக்கின்றனர் எனின், *1920 பெண்கள்* இந்த புதுவருடத்துக்கு முன் பின் 48 மணித்தியாலத்தில் கற்பழிக்கப்பட்ட போது புதுவருடம் அப்பெண்ணுக்கு ஆணாதிக்கமாகவே பிறந்திருக்கும். உலகில் எத்தனை? பெண்கள் இந்த ஆணாதிக்க புதுவருடத்தை சொந்த அனுபவத்தின் ஊடாக கண்டிருப்பார்.

முதல்குழந்தை பிறப்பது பற்றிய பிரமிப்புகளும், அதற்கு அள்ளிக் கொடுக்கும் பரிசுகளும், பரிசுசீட்டை சுரண்டிப் பார்க்கும் சுரண்டும் வக்கிரத்தை கொட்டியது. முதல் குழந்தை பற்றிய வருணைகள், பின் பட்டினியில் பிறந்தவுடன் செத்து போன எந்தக் குழந்தையையும் காட்டிவிடுவதில்லை. புதுவருடம் பிறந்த அந்த நிமிடமே; இரண்டு குழந்தைகள் தமது முதல் ஏழு நாட்களுக்குள் இதை கொண்டாடுபவர்களின் நல்வாழ்வுக்காக தம்மை அந்த நிமிடம் தியாகம் செய்தனர். இதில் பிறந்தவுடன் தியாகம் செய்தவர்களும் உள்ளடங்கும். அதே நேரம் புதுவருடம் பிறந்த அந்த நிமிடம் தொடங்கி ஒவ்வொரு நிமிடமும் கொண்டாட்ட முழுக்ககத்துகிடையே ஒரு தாய் இந்த புதிய ஏகாபத்திய நுகர்வு வருடத்துகாக தனது பிரசவத்தின் போதே செத்து போகின்றாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புது வருடத்தில் *முதல் கறிபழிப்பு, முதல் பட்டினிச் சாவு, முதல் குடிக்க தண்ணீர் இன்மையின் அவலம், முதல் தாய் பிரசவ இறப்பு, முதல் குழந்தையின் பிரசவ இறப்பு* என்ற மனித அவலமும்; முதல் ஏகாபத்திய புதுவருடம் முதல் நிமிடத்தில் நிகழத்தான் செய்தது. இது தொடர்ந்து ஒவ்வொரு நிமிடமும் தொடர்ந்த வண்ணம் தான் இந்த புதிய வருடம் நகருகின்றது. இதே போல் நிற, சாதி, இன, மத ஆதிக்கத்தால் *முதல் படுகொலையும், முதல் அவமானமும்* தொடரத்தான் செய்கின்றது. இந்த இரத்த கண்ணீர், இந்தக் கொட்டும் வக்கீர இசை மழையில் ஆடிக்காட்டும் நிர்வாண ஆட்டத்தில் வெடித்து அதிர்ந்து செல்லும் ஓசையில் புதைந்து போகின்றது. இந்தக் கொண்டாட்ட வெளிறிப் போன வெளிச்சத்தில் வெளிறிப் போகின்றது. இந்த ஏகாதிபத்திய சமுதாயத்தின் தொடர்ச்சியை போற்றித்தான் புதுவருடம் கொண்டாடப்படுகின்றது. உலகில் எந்த மனிதனும் புதுவருட மகிழ்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் வடித்ததில்லை. எந்த மனிதனுக்கும் (சுரண்டுபவர்களைத் தவிர) புதிய வாழ்வும், நம்பிக்கையையும் புதுவருடம் கொடுத்துவிடுவதில்லை. மாறாக மேலும் அவலம் காத்திருப்பதையே யதார்த்த வாழ்வாக கொள்கின்றான்.

இந்த வெம்பிப் போன கொண்டாட்டத்தை சந்தைப்படுத்தியதில் பன்நாட்டு நிறுவனங்கள் வெற்றி பெறுகின்றன. ஆடம்பரமாக தின்னவும், குடிக்கவும், பரிசளிக்கவும், கூத்தடிக்கவும் கற்றுக் கொடுத்த இப்புதுவருடம்; பல ஆயிரம் கோடிகளை கோடிஸ்வரர்களுக்கு அள்ளிக் கொடுத்தது. இந்தப் பண்பாடு அடுத்த நூற்றாண்டில் மக்களை சுரண்டி கோடிகளை திரட்ட கதவை திறந்துள்ளதை இந்த பன்னாட்டு நிறுவனங்கள் தமது கொண்டாட்டத்தினூடாக வெளிப்படுத்துகின்றன. இதற்காக கோடிக்கான மக்கள் தம்மை தியாகம் செய்வதன் ஊடாக, இந்தக் கொண்டாட்டம் அழகுபடுத்தி கவர்ச்சி காட்டுகின்றது. ஆனால் புகைந்து கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தின் தீ பற்றும் போது, இந்த ஏகாபத்திய புதுவருத்தின் பொய்மை பொய்த்து போகும். இந்த ஏகாபத்திய புதியவருடத்துக்காக தியாகம் செய்யும் கோடிக்கணக்கான மக்கள் புதியவாழ்வை அந்த புதிய வராலாற்றில் புதிய புதுவருடமாக்குவர். அதுவரை இந்த கேளிக்கை புதுவருடங்கள் அழகு காட்டும், கவர்ச்சி காட்டும். இதை ஒடுக்கப்படுகின்ற கிறிஸ்தவ மத மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் இதை கண்டு மயங்கி விடாது தேசபத்த சனநாயக சக்திகள் விழித்துக் கொள்ள வேண்டும்.

- பிரபாகரன்



**சிறிலங்காவில் அப்பாவி மக்களை குறிவைக்கும் குண்டுவைப்புக்களின் கோரம்**

www.tamilarangam.net

# தேசபக்தன்

## தமிழீழ புதிய சனநாயக கட்சி

http:/home.C2i.net.thesam
patriot_editor@yahoo.com




## NEW DEMOCRATIC PARTY OF THAMIZLEELAM

# N.D.P.T

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# NEW DEMOCRATIC PARTY OF THAMIZLEELAM (N.D.P.T.)

RGSD. ISSN - 07647 2262 RNI 04512 / 1999 CANADA




சிறீலங்கா சிங்கள இன பௌத்த மதவெறி ஆட்சிக்கு பலியான மக்கள்/தமிழீழம் – 55.000 சிறீலங்கா – 83.000

## தமிழீழ புதிய சனநாயக கட்சி தி.பி. 2031 (2000)

NEW DEMOCRATIC PARTY OF THAMILE ELAM (NDPT) NEW DEMOCRATIC PARTY OF THAMILE ELAM (NDPT) NEW DEMO-CRAT... TIC PART... TY OF T... OF THAM... OF THAM... LE ELAM... AM (NDPT... OF THAMIL EELAM (NDPT) NEW DEMOCRATIC PARTY OF THAMIL EELAM (NDPT) NEW DEMOCRATIC PARTY NEW DEMOCRATIC

# தேசபக்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்